ஸ்ரீ:.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

பெரிய திருமொழி.

[பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
அருளிச்செய்த திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

பத்தாம்பத்து—முதல் திருமொழி,

ஒரு நல் சுற்றம்.

உரையவதாரிகை:—இவ்விருள் தருமா ஞாலத்தைத் திருத்திப் பணிகொள்ள
விரும்பிய ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களுள் மாறன்
பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வார் வழிபறிக்
கப் போனவிடத்தே யாத்ருச்சிகமாக எம்பெருமானிடத்தில் மந்த்ரோபதேசம்
பெற்றதனாலும் அவனது திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவித்ததனாலும், அப்
பெருமானது காலாழியைப் பற்களால் கழற்ற நேர்ந்தபோது பகவத் பாதாரவிந்
தத்தில் வாய் வைத்ததனாலும் அஜ்ஞானவிருள் நீங்கித் தத் ... த்தாலுண்
டெழுந்து எம்பெருமானைப் பரிபூரணமாக அநுபவித்து ... சித்திரக்கவி
டான ஆநந்தாதிசயத்தை வெளியிடுமாறு, ஆசுகவி ம... டித்யமுடையவ
விஸ்தாரக்கவி என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்ல பா...றா மந்திரத்தின்
ராய், தாம் உஜ்ஜீவந ஹேதுவாகப்பெற்ற திருவஷ்டாக்ஷர ம... திருமொழியிலே
வைபவத்தை வாடினேன்வாடி யென்று தொடங்கி முதல் ...வே ஆராய்ச்சி
பண்ணியுரைத்து, அந்தத் திருமந்திரத்தின் அர்த்தத்தையும் கூட...தசங்களிலே
செய்தருளித் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லைநிலமான திவ்ய ..., திருமந்
சென்று எம்பெருமானை ஸேவிக்கவேணுமென்று மநோரதங்கொண் ...மான ஸ்ரீ
திரத்தை வெளியிட்டருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் ...ரி தி' என்
பதரிகாச்ரமத்தைத் தேடி வடக்கே யெழுந்தருளினவளவில் 'திரு... யநுபவித்து,
...னும் திவ்யதேசம் நேர்பட, இரண்டாந்திருமொழியால் அதனை...த்தில் ஸந்நிதி
அதன்பிறகு வதரியை வணங்கி, அதற்குப்பிறகு ஸ்ரீ பதரிகாச்... கை தொழுது,
கொண் டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயண மூர்த்தி...ருவேங்கடம் என்
பிறகு சாளக்கிராமம் நைமிசாரணியம் சிங்கவேள்குன்றம் ...து அவ்வளவோடு
...னும் திருப்பதிகளை யாத்திரையடைவே மங்களாசாஸநஞ்செ
வடநாட்டுத் திருப்பதிகளின் அநுபவத்தைத் தலைக்கட்டி

http://acharya.org

அதன் பிறகு இரண்டாம்பத்தின் இரண்டாந்திருமொழி முதலாகத் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் சிலவற்றை யநுபவிக்கத் தொடங்கி, திருவெவ்வுள் திருவல்லிக்கேணி திருநீர்மலை திருக்கடன்மல்லை திருவிடவெந்தை திருவட்டபுயகரம் திருப்பரமேச்சுரவிண்ணகரம் ஆகிய இத்திருப்பதிகளை யநுபவித்து,

அதன்பிறகு, திருக்கோவலூர் திருவயிந்திரபுரம் என்னும் நடுநாட்டுத் திருப்பதிகளிரண்டையும் இரண்டு திருமொழிகளாலநுபவித்து,

அதன்மேல் மூன்றாம்பத்தின் இரண்டாந்திருமொழி முதலாகச் சோழநாட்டுத் திருப்பதிகளை யநுபவிக்கத் தொடங்கித் தில்லைத் திருச்சித்திரகூடம், காழிச்சீராமவிண்ணகரம், திருவாலி திருநகரி, திருநாங்கூர்ப்பதினொரு திருப்பதிகள், திருவிந்தளூர், திருவெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, கூடலூர், திருவெள்ளறை, திருவரங்கம், திருப்பேர்நகர் (அப்பக்குடத்தான் ஸந்நிதி), நந்திபுரவிண்ணகரம் (நாதன் கோவில்), திருவிண்ணகர், திருநறையூர், திருச்சேறை, தேரழுந்தூர், சிறுபுலியூர், திருக்கண்ணமங்கை திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகை ஆகிய இத்திருப்பதிகளை யநுபவித்து ஒன்பதாம் பத்தின் இரண்டாந்திருமொழியோடே சோழநாட்டுத்திருப்பதிகளின் அநுபவத்தைத் தலைக்கட்டி,

அதற்குப்பிறகு பாண்டிநாட்டுத் திருப்பதிகளை யநுபவிக்க விரும்பித் திருப்புல்லாணியையும் திருக்குறுங்குடியையும் அநுபவித்தவளவிலே மலைநாட்டுத் [illegible]ன்றுன திருவல்லவாழிலே திருவுள்ளஞ் சென்றுபுக அதனை [illegible] பாண்டிநாட்டிலே புகுந்து திருமாலிருஞ் சோலையையும் [illegible] அநுபவித்து இவ்வளவோடே பாண்டிநாட்டுத் திருப்[illegible]த்தைத் தலைக்கட்டி ஒன்பதாம் பத்தையும் முடித்தாராய் நின்றார் கீழ்.

இவ்விருள்தரு மா ஞாலத்தில் இவ்வாழ்வார்க்கு இருப்பு அ[illegible] எத்தனை[illegible] திருநாடு செல்ல விரைவு உண்டான வளவில் எம்பெருமான் இவர்[illegible]ஹ்யமாக இவ்விபூதியிலே சில திருப்பதிகளைக் காட்டி இவருடைய ஆசையை மறைத்திருக்க, இவரும் திவ்ய தேசாநுபவத்தாலே களித்துப் போதுபோக்கி நின்றார். இனி, பழைய ஆசையே இவர்க்குத் தலையெடுத்ததாயிற்று; அதாவது, இக்கொடு வு[illegible]லகத்தினின்றும் § நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்திற்குச் செல்லவேணு[illegible]மென்னும் விருப்பம் கிளர்ந்தது. 'எம்பெருமான் இனி நம்முடைய அபி[illegible]த்தைத் தலைக்கட்டியல்லது நில்லான்' என்கிற நிச்சயமுந் தோன்றிற்று. பய[illegible]ணம் புறப்படுவதாகவே பாரித்துக்கொண்டார். பிறந்தகத்தில் நின்றும் புக்ககம் பு[illegible]புறப்படுகின்ற பெண்பிள்ளை தான் நெடுநாள் வஸித்தவிடத்திலே தன்னோடு மி[illegible]கவும் முகம்பழகியிருந்த பரம ப்ரேமாஸ்பதமான சில பெண்

§ நலமந்தமில்லதோர் நாடு — ஆநந்தத்திற்கு முடிவு இல்லாத நாடு.

http://acharya.org

பிள்ளைகளைச் சென்று பணிந்து 'தங்காய்! நான் போய்வருகிறேன்; மாதே! நான் போய்வருகிறேன்' என்று சொல்லிவைச் சில குமரிகள் ஏறியிறங்குமா போலே, இவ்வாழ்வாரும் தம் புக்ககமாகிய பரமபதத்தின் பயணத்திற்குப் பூர்வாங்கமாகத் தமது மிக்க ஈடுபாட்டிற் கிடமான சில திருப்பதிகளிலே சொல்லிக்கொள்வதாக நுழைந்து நுழைந்து புறப்படுகிறார் இத்திருமொழியில்.

மற்றைத் திருமொழிகளெல்லாவற்றிற் காட்டிலும் இத்திருமொழி பரம விலக்ஷணமாயிருக்கும்; ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டிரண்டு திருப்பதிகளாக (நிகமனப் பாசுரந்தவிர்த்த) ஒன்பது பாசுரங்களிலே பதினெண் திருப்பதிகளை அநுபவிக்குமழகு மற்றைத் திருமொழியொன்றுக்குமில்லை கிடீர். .... *

ஒருநல் சுற்றம் எனக்குயி ரொண்பொருள் *
வருநல் தொல்கதி ஆகிய மைந்தனை *
நெருநல் கண்டது நீர்மலை * இன்றுபோய்க்
கருநெல்சூழ் கண்ணமங்கையுட் காண்டுமே. (க)

ஒரு நல் சுற்றம்	அத்விதீய விலக்ஷண பந்துவாய்	கண்டது	ஸேவித்தது
எனக்கு உயிர்	எனக்கு ஆத்மாவாய்	நீர்மலை	திருநீர்மலையிலே;
ஒண் பொருள்	சிறந்த பொருளாயிருப்பவனாய்	இன்று	இன்றைக்கோவென்னில்,
வரு நல் தொல் கதி ஆகிய	மேல்வரப் போகிற நல்ல ப்ராப்ய பூமியும் தானேயாயிருப்பவனை	கரு நெல் சூழ்	கருவடைந்த பயிர்களால் சூழப்பட்ட
மைந்தனை	நித்யயுவாவான பெருமானை	கண்ணமங்கையுள்	திருக்கண்ணமங்கையிலே
நெருநல்	நேற்று	சென்று காண்டும்	சென்று ஸேவிப்போம்.

* * *—எம்பெருமானை நேற்று திருநீர்மலையிலே கண்டோம், இன்று திருக்கண்ணமங்கையிலே காண்போமென்கிறார். திருநீர்மலை நீர்வண்ணப் பெருமாள் பக்கலிலும் திருக்கண்ணமங்கைப் பத்தராவிப் பெருமாள் பக்கலிலும் பரமபத ப்ரயாணத்திற்கு விடைபெற்றுக் கொள்ளுகிறேனென்பது உட்கருத்து.

ஒருநல் சுற்றம்—"பிதா ச ரக்ஷகஶ்ஶேஷீ பர்தா ஜ்ஞேயோ ரமாபதி: ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்ய மநூதித: = பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:—ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தாசாத்ய மநூதித:—" என்கிறபடியே திருமந்திரத்தில் சொல்லுகின்ற ஒன்பதுவகையான உறவுகளையுடையவன் எம்பெருமான் என்பது அறியத்தக்கது. உடன் பிறந்தவர்கள், வயிற்றில் பிறந்தவர்கள், தாய் தந்தையர், பிரமன் ருத்ரன் முதலானவர்கள் ஆகிய இவர்களை பந்துக்களாகக் கொள்வாருடைய கொள்கைகளைப் பூர்வபக்ஷமாக்கி எம்பெருமானொருவனை உற்றநல்லுறவு எனத் தெளியவுரைக்கிறார் ஒரு நல் சுற்றம் என்று. உடன்பிறந்தவர்கள் பந்துக்களல்லர் என்பதை

http://acharya.org

வாலியிடத்திலும் இராவணனிடத்திலுங் காணலாம். தாய் தந்தையர் பந்துக்களல்லர் என்பதைக் கைகேயியிடத்திலும் ஹிரண்யகசிபுவிடத்திலுங் காணலாம். மாதாபிதாக்கள் தங்கள் புத்திரர்களை யௌவநகிசோரதிசையென்று உபேக்ஷித்தல், க்ஷாமகாலம் வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலேபோடுதல், விலைகூறி விற்பனை செய்தல், மரணஸமயத்திலாவது எம்பெருமானை நினைத்துக் கரைசேர வொட்டாதபடி 1. "சோர்வினால் பொருள் வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து" என்கிறபடியே அலைத்தல் முடித்தல் செய்யாநிற்பர்கள். ஸ்த்ரீகளுக்குக் கணவன் பந்துவல்லன் என்பது தருமபுத்திராதிகளிடத்திலும் நளனிடத்திலும் காணலாம்.

இவர்களெல்லாம் பந்துக்களல்லரேயாகிலும் காட்டுக்குக் கண்காட்டியாய்ப் போருகிற சந்திரன் ஸூரியன் முதலானோர் ரக்ஷிக்கவல்ல பந்துக்களாகக் குறையென்? என்னில்; அவர்களும் ஸர்வேச்வரனுடைய ஆணைக்கு அஞ்சித் தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப் பெறாமல் நாழிகை கூறிட்டு உதிப்பதும் அஸ்தமிப்பதுமாய்ப் போருகையாலும், இரணியன் இராவணன் முதலானோருடைய கையில் அகப்பட்டு இழிதொழில் செய்து திரிபவர்களாகையாலும் ரக்ஷகபந்துக்களாக மாட்டார்கள். த்ரிலோகபாலகனென்று பேர்சுமக்குமிந்திரனும் 'நம்முடைய பதவி எப்போது நழுவப்போகிறதோ!' என்று அஞ்சியிருப்பவனும் இந்திரஜித்தின் கையிலே அகப்பட்டுக் கொண்டு கட்டுண்டவனும் மஹாபலி போல்வார் கையிலே செல்வத்தைப் பறிகொடுத்துக் கண்ணுங்கண்ணீருமாய்த் திரிபவனுமாகையாலே பந்துவாகமாட்டான். நான்முகனும் மதுகைடபர்கையிலே வேதங்களைப் பறிகொடுத்து 'கண் இழந்தேன், தனமிழந்தேன்' என்று சிலந்தழுதவனாகையாலே ரக்ஷகபந்துவாகமாட்டான். ருத்ரனும் ஸகல ப்ராணிகளையும் ஸம்ஹரிப்பதையே தொழிலாகவுடையனாய் $ விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாற்போலே கழல்நிற வண்ணனாய்; — தன்னை ஆச்ரயித்தவர்களை 'அறுத்துத் தா, பொரித்துத் தா' என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக் கொள்ளுகையாலும், தன்னையடுத்த பாணாஸுரனை 'தலையில்பூவாடாதே ரக்ஷிக்கிறேன்' என்று பிரதிஜ்ஞைபண்ணிவைத்து, தன்னைத் தொழுதகைகளைக் கள்ளிக்காடு செய்தாற்போலே தீய்க்கக் கண்டு 'உயிருண்டாகில் உப்புமாறி யுண்ணலாம்' என்று நெற்றிக்கண்ணை மறைத்துக்கொண்டு நழுவினவனாகையாலும், லோககுருவாய்த் தனக்குப் பிதாவான பிரமனது தலையைக் கிள்ளிப் பாதகியாய்க் கையுங் கபாலமுமாய்த் திரிந்து கிடந்த வாசல்தோறும் புகுந்து தன்னை வெளியிட்டுக்கொண்டு திரிந்தவனாகையாலும் பந்துவாக மாட்டான்; ஸ்ரீமந்நாராயணனொருவனே மாதாபிதாக்கள் கைவிட்ட நிலைமையிலும் தன்னருகிலிருந்து வேற்றுருக்கொண்டு தாய்முகங்காட்டியும் இன்சொற்கள் சொல்லியும் அக

---

1. பெரியாழ்வார் திருமொழி 4—5—3.

$ விடாயர்—தாஹித்தவர்கள்.

http://acharya.org

வாயிலே நின்று ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டு போரும் பரமபந்து— என்கிற ஸகலசாஸ்த்ர ஸாரப்பொருள் தோன்ற 'ஒருநல் சுற்றம்' என்றாராயிற்று.

எனக்கு உயிர்—எம்பெருமான் ஸகல ஆத்மாக்களுக்கும் உயிராயிருக்கச் செய்தேயும் இவர் 'எனக்கு உயிர்' என்றதற்குக் கருத்து யாதெனில்; உயிரை விட்டுப்பிரிந்த வஸ்து ஒரு நொடிப்பொழுதும் தரித்திருக்கமாட்டாதாப்போலே * அவனைவிட்டகன்று உயிராற்றகில்லாத தம்முடைய உறைப்பைச் சொல்லுகிறபடி.

ஒண்பொருள்—உலகத்தில் பொருளானது மரணத்தையுண்டாக்கும்; அதாவது—த்ரவ்ய நிமித்தமாகப் பிராணனை விடுவார் பலருண்டே; எம்பெருமானாகிற பொருள் அப்படி அநர்த்த ஹேதுவன்றியே ஸத்தையை யுண்டாக்கும் பொருள் என்றபடி. [வருநல்தொல்கதி] முடிவாக ப்ராப்ய பூமியும் தானே யென்கை: ஆக இப்படிப்பட்ட எம்பெருமானைத் திருநீர்மலையிற் சென்று பணிந்தோம் நேற்று; இன்று திருக்கண்ணமங்கையிற் சென்று பணிவோம் என்றாராயிற்று. (க)

பொன்னை மாமணியை அணியார்ந்ததோர்
மின்னை * வேங்கடத் துச்சியிற் கண்டுபோய் *
என்னை யாளுடை யீசனை யெம்பிரான்
றன்னை * யாம்சென்று காண்டும் தண்காவிலே. (உ)

பொன்னை	பொன்போல விரும்பத் தகுந்தவனும்	யாம்	அடியோம்
மா மணியை	நீலமணிபோன்றவனும்	(நெருநல்)	நேற்று
அணி ஆர்ந்தது ஓர் மின்னை	அழகுமிக்கதொரு மின்னற் கொடிபோன்று உஜ்ஜ்வல ஸ்வரூபியானவனும்	வேங்கடத்து உச்சியில்	திருவேங்கடமலையின் சிகரத்தில்
என்னை ஆளுடை ஈசனை	என்னை அடிமைகொண்ட ஸ்வாமியுமான	கண்டு	ஸேவித்து,
எம்பிரான் தன்னை	ஸர்வேச்வரனை	(இன்று)	இன்றைக்கு
		தண்காவிலே சென்று காண்டும்	திருத்தண்காவிலே போய் ஸேவிப்போம்.

* * *—முதற்பாட்டிலுள்ள 'நெருநல்' 'இன்று' என்னுஞ் சொற்கள் பாசுரந்தோறும் அந்வயிக்கவுரியன. நெருநல் வேங்கடத்துச்சியில்கண்டு இன்று தண்காவில்காண்டும் என்றவாறு. இங்ஙனமே மேற்பாசுரங்களிலும் காண்க.

இப்பாசுரங்களில் எம்பெருமானுக்கு இடுகிற விசேஷணங்களை யெல்லாம் ஒருசேர அந்வயித்துக் கொண்டு முடிவில் 'அத்தலத்தில்கண்டோம், இத்தலத்தில் காண்போம்' என்பதாக அந்வயித்துக்கொள்க. அன்றி, பாசுரப்போக்கு உள்ளபடியே அந்வயித்துக் கொள்வதும் தகும்.

பொன்னை—எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது—"ஹேம்நஃ பேஷா நதா ஹேந ஹேமநிகஷேண

http://acharya.org

நவா। வநததைவஸஹஸ்ரேஷ்வபி ஸுவர்ணஸ்யைதாவத் துலநம்-ஹேம்ந: ச்சேதோ ந தாஹோ ந ச்சேதந கஷணைர்வா—ஏததேவ மஹத்துக்கம் யத் குஞ்ஜாஸமதோலநம்.” என்றார் ஒருமஹாகவி; பொன்னைத்தீயிலிட்டுச் சுடுகிறோம்; உளியையிட்டு வெட்டுகிறோம்; உரைகல்லிலேயிட்டுக் கனக்கவுரைக்கிறோம்; இன்னமெத்தனை ஹிம்ஸைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது; வருத்தமில்லையென்பது மாத்திரமேயன்று; அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்யமே யென்பது தோன்ற ஒளியைமிகுத்துக்காட்டும்; பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும் உளியிட்டு வெட்டும்போதும் உரைகல்லிலுரைக்கும்போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கிறோமன்றோ; ஆனால் அந்தப் பொன்னுக்கு ஒருவருத்தம் மாத்திரம் சாலவுண்டு; அஃது என்னென்னில்; ‘மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மைநிறுப்பதே!’ என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒருதிராசில் குன்றுமணியையும் மற்றொருதிராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக் காண்கிறோமன்றோ. ‘பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணிதானோ ஈடாகவேணும்’ என்று வருந்தி மிகவும் குன்றிப்போகாநின்றதாம். அதுபோல எம்பெருமானும், தூதனுப்பப் பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும்வருந்தான்; வருந்தாமைமாத்திரமேயன்று, அவற்றால் மிக்க முகமலர்ச்சி பெற்றிடுவான்; அப்படியுண்டோவென்னில்; [$ இன்னார் தூதனென நின்றான்] என்றது கண்டீரே; ‘இன்னார் தூதனெனப்பட்டான்’ என்னாமல் ‘இன்னார் தூதனென நின்றான்’ என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர்பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையா? இனி, தாம்பால் கட்டுண்கையினால் முகமலர்ச்சியுண்டானமை அறிந்தபடி யெங்ஙனே யென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும்போது ஒரு ஸ்வாமி வந்து அடியேனுக்கு ஒருரு திருவிருத்தம் பொருளருளிச் செய்யவேணும்’ என்று பிரார்த்திக்க, ‘நம் பெருமானைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப் போகிறதில்லை; நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக்கொள்ளும்’ என்று சொல்லி நஞ்சியர்க்கு நியமிக்க, ஜீயரும் பொருளருளிச் செய்து வருகையில் “அடைக்கலத்தோங்கு கமலத்து” (86) என்ற பாசுரத்தில் “வெண்ணெய்க்கன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்கலந்தானை” என்றவிடத்திலே ‘புடைக்க அலந்தானை’ என்கிற பாடப்படியே (தாம்புகளால் கட்டியடிக்க வருத்தப்பட்டவனை என்று) நஞ்சியர் பொருளுரைக்க, பட்டர் அது கேட்டு ‘ஜீயா! ‘அலந்தானை’ என்றபாடத்திற் காட்டிலும் ‘அலர்ந்தானை’ என்றபாடம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகப்பொருந்துமபோலே இன்று தோன்றுகின்றது.’ என்றருளிச் செய்தாராம்; எங்ஙனேயென்னில்; கண்ணபிரான், வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாளென்று வீட்டிலுள்ள கயிறு

$ பெரிய திருமொழி 2-2-3.

களைத் துண்டு துண்டாக அறுத்து வைத்திட்டபின்பே களவு செய்யப்புகுவான்; அவள் இவனை ஒருகையிலே பிடித்துக்கொண்டு கயிறு தேட, அவை துண்டு துண்டாக இருப்பது கண்டு அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதுகொண்டு கண்ணபிரானைக் கட்டும்போது, இவன் தன் உடம்புக்கு எட்டம் போராதபடியான அக்கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்ட முடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக் கொள்ளவல்லவனாயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரிதபாரதந்த்ரியம் முதலிய சிலவற்றை வெளியிடுவதற் கென்றே பரத்வநிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிறதான் உரலோடு கட்டுண்டு அடிபுண்டிருக்கை முதலான இவ்வகைகளால் தான் அக்குணங்களை விளங்கச் செய்து கொள்ளவேணுமென்றுகொண்டு, ஒருசுற்றுக்கும் போராததாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் $ சுருக்கி அமைத்துக் கொண்டு 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்' என்னும்படி ஆவன்; 'இங்ஙனே நம்முடைய ஸௌசீல்ய ஸௌலப்யகுணங்கள் விளங்கப்பெற்றோமே; அவதாரப்ரயோஜநம் நன்கு நிறைவேறப்பெற்றதன்றோ' என்று முகமலர்ச்சியடைந்திடுவன் என்க. ஆகவே தூது அனுப்பப்படுதல் தாம்பாலாப்புண்டிருத்தல் முதலிய இழிவான காரியங்களில் எம்பெருமானுக்குச் சிறிதும் வருத்தமில்லாதிருத்தலோடு மிக்க மகிழ்ச்சியுமுண்டென்பது விளங்கிற்று. பின்னை எதனால் வருத்தமுண்டாமென்னில்; பொன்னுக்குத் தன்னைக் குன்றிமணியோடொக்க நிறுத்தல் எப்படி துக்கஹேதுவோ, அப்படியே * ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயனாகிய எம்பெருமானுக்கும் அதிக்ஷுத்ரவஸ்துக்களான சிலவற்றோடே தன்னை ஒப்பிட்டுப்பெறுதலே துக்கஹேதுவாமென்பது "ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" இத்யாதிகளாலுணரத்தக்கது. இவ்வகையாலே பொன்னோடொக்கச் சொல்லலாம் எம்பெருமானை.

மாமணியை = கீழ் பொன்னுக்குச் சொன்னதுபோலே மணிக்கும் எம்பெருமானோடு ஒப்புமை பலபடிகளாலே சொல்லத்தகுதியுண்டு; மணியாவது ரத்னம், அது, தன்னைப் பெற்றவர்களையும் பெற விருப்பமுடையாரையும் இரவும் பகலும் கண்ணுறங்கவொட்டாது; எம்பெருமான் படியும் அப்படியே "கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடியே காண்பதற்கு முன்பு முமுக்ஷுக்களையுறங்கவொட்டான்; கண்டபின்பும் * ஸதாபச்யந்தியாகையாலே நித்யமுக்தர்களை உறங்கவொட்டான்.

$ "ஆநீதபூர்வை நிஜபாசநாய தாம்நாம் ஸம்ஹிதைர்வ்யங்குலநூநம் | நிரீக்ஷ்ய நிர்விண்ணதியோ ஜநந்யா: ஸங்கோசமங்கஸ்ய ஸ பஹுமேநே வயஸ்யை:" என்ற யாதவாப்யுதய ஸூக்தி இங்கு ஸ்மரிக்கத்தகும்.

1. திருவாய்மொழி 8—1—2.

ரத்னம் எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படியிருக்கும்; எம்பெருமானும் பரத்வத்தை மறைத்து ஸௌலப்யத்தைக் காட்டுவனிறே.

ரத்னம், கடல் மலை முதலிய இடங்களில் உள்ளது; எம்பெருமானும் திருப்பாற்கடல் திருமலை முதலான இடங்களில். “மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்.”

ரத்னமானது தன்னையுடையவனை மார்பு நெறிக்கப்பண்ணும்; எம்பெருமானுமப்படியே; “எனக்காரும் நிகரில்லையே” “மாறுளதோவிம்மண்ணின்மிசையே” “எனக்கென்னினி வேண்டுவதே” “இல்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரில்லையெனக் கெதிரே” என்று செருக்கிப் பேசுவர்களிறே எம்பெருமானையுடையார்.

ரத்னமானது தன்னைக் கைக்கொண்டவனை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும்படி பண்ணும்; எம்பெருமானுமப்படியே; “[illegible] பரிப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச” இத்யாதி காண்க.

[ரத்ன]மானது இடையில் ஒருபுருஷனைக் கொண்டே வாங்கப்படும்; எம்பெரு[மானுமப்படி]யே; புருஷகாரமின்றிப் பெறமுடியாதிறே எம்பெருமானை; “வேதம் [...]கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம்பணிந்து” இத்யாதி.

[ரத்னமா]னது சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப் பெறும்; எம்பெருமானுமப்படியே, ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலேயிறே எம்பெருமானுக்குமதிப்பு அதிகம்.

ரத்னம் ஒளியைவிட்டு இராது; எம்பெருமானும் பிராட்டியைவிட்டு இரான்; “தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ=தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ” இத்யாதிகள் காண்க.

ரத்னமானது ஒளியால் மேன்மைபெறும்; எம்பெருமானும் பிராட்டியால் ஏற்றமுடையான்; “ஸ்ரியா தேவோ தேவத்வமச்நுதே” என்றான் வேதபுருஷன். இராவணன் மாரீசனிடம் வந்து ‘இராமனை அடர்க்க நீ துணைநிற்க வேணும்’ என்று இரக்க, “அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா=அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா” என்றன்றோ விடைகூறினது; ‘ஸீதாபிராட்டியைக் கைப்பிடித்தவனன்றோ இராமபிரான்; அவனை அடர்க்கலாகுமோ?’ என்றான்.

ரத்னமானது தன்னை யிழந்தவனைக் கதறிக்கதறியழப் பண்ணும்; எம்பெருமானுமப்படியே; ஸ்ரீராமரத்னத்தை யிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறியழுதமை ஸ்ரீராமாயணாதி ப்ரஸித்தம். “பழுதே பலபகலும் போயின” வென்று கதறியழுவர் விவேகமுடையார்; 1. “இன்பத்தையிழந்த பாவியேனெனது

1. பெருமான் திருமொழி.

http://acharya.org

தாவி நில்லாதே" 1. "எழில்கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந் தன்னொடு மிழந்தேனிழந்தேனே". 2. "உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்" என்றிப்படி யெல்லாம் கதறுவர்கள்.—இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க.

இப்படிப்பட்ட எம்பெருமானை திருவேங்கடமலையிலே நேற்று ஸேவித்து இன்று திருத்தண்காவிலே ஸேவிக்கப் பெறுமேவனென்றாராயிற்று.

திருத்தண்கா—காஞ்சீபுரத்திலுள்ள விளக்கொளியெம்பெருமான் ஸந்நிதி. திருத்தண்கால் வேறு; அது பாண்டிநாட்டிலுள்ளது. .... (உ)

வேலை யாலிலைப் பள்ளி விரும்பிய *
பாலையாரமுதத்தினைப் பைந்துழாய் *
மாலை யாலியில் கண்டு மகிழ்ந்துபோய் *
ஞால முன்னியைக் காண்டும் நாங்கூரிலே. (ங)

வேலை	(ப்ரளயக்) கடலிலே ....
ஆல் இலை	ஆலந்தளிரிலே
பள்ளி விரும்பிய	திருக்கண் துயில்வதை உகந்தருளினவனும்
பாலை	பால்போன்றவனும்
ஆர் அமுதத்தினை	அருமையான அமிருதம் போன்றவனும்
பைந்துழாய்	பசுமைதங்கிய திருத் துழாயை யுடையவனும்
ஞாலம் உன்னியை	உலகத்தவர்களெல்லாராலும் தியானிக்கப்படுபவனுமான
மாலை	ஸர்வேச்வரனை
ஆலியில் கண்டு மகிழ்ந்து	திருவாலியில் ஸேவித்து ஆநந்தித்து
நாங்கூரிலே போய் காண்டும்	திருநாங்கூரிலே சென்று ஸேவிப்போம்.

* * *—பிரளயப் பெருங்கடலில் உலகமனைத்தையும் உட்கொண்டு ஆலந் தளிரில் திருக்கண் துயில்கொண்ட பெருமானைத் திருவாலியிலே கண்டோம், இனித் திருநாங்கூரிலே சென்று காணக் கடவோமென்கிறார்.

வேலை—'வேலா' என்னும் வடசொல் விகாரம்; கடற்கரையை உணர்த்தும் இச்சொல் இலக்கணையால் கடலை உணர்த்துகின்றது.

ஞாலமுன்னி—இதற்கு இரண்டுவகையாகப் பொருள் கொள்ளலாம்; உலகத்தைச் சிந்திப்பவன்; உலகத்தால் சிந்திக்கப்படுபவன் என்று. உலகத்தைச் சிந்திப்பவன் என்றது—உலகத்துக்கு ரக்ஷணம் செய்யும்படிகளையே சிந்தித்திருப்பவன் என்றபடி. .... (ங)

துளக்கமில் சுடரை அவுணனுடல்
பிளக்கும் மைந்தனைப் பேரில் வணங்கிப்போய் *
அளப்பி லாரமுதை அமரர்க்கருள்
விளக்கினை * சென்று வெள்ளறைக் காண்டுமே. (ச)

---

1. பெருமாள் திருமொழி. 2. திருவாய்மொழி 5—8—4.

http://acharya.org

துளக்கம் இல் சுடரை	ஒன்றாலும் அழிதலில்லாத ஒளியையுடையவனும்
அவுணன்	(இரணியனென்னும்) அஸுரனுடைய
உடல்	உடம்பை
பிளக்கும்	பிளந்தொழித்த
மைந்தனை	மிடுக்கையுடையவனும்
அளப்பு இல் ஆர் அமுதை	அளவிடுதலில்லாத போக்யதையை யுடைத்தான அமிருதம்போன்றவனும்

அமரர்க்கு அருள் விளக்கினை	நித்யஸூரிகளுக்கு அருள் செய்கின்ற விளக்குப் போன்றவனுமான பெருமானை
பேரில்	திருப்பேர் நகரில்
வணங்கிப்போய்	ஸேவித்து
வெள்ளறை	திருவெள்ளறையிலே
சென்று காண்டும்	சென்று தொழுவோம்.

* * *—ப்ரஹ்லாதாழ்வானுக்கு விரோதியைப் போக்கின பரமோஜ்ஜ்வலனாய்ப் பரம க்ருபாளுவான பெருமானைத் திருப்பேர் நகரிலேகண்டோம்; இனிச் சென்று திருவெள்ளறையிலே காணக்கடவோமென்கிறார்.

[துளக்கமில்சுடரை] காற்றாலும் மற்றொன்றாலும் அணைக்கமுடியாத விலக்ஷண ப்ரகாசயுக்தன் என்றபடி. .... (௪)

சுடலையிற் சுடுநீற னமர்ந்ததோர் *
நடலை தீர்த்தவனை நறையூர்க்கண்டு * என்
உடலை யுள்புகுந்து உள்ளமுருக்கியுண் *
விடலையைச்சென்று காண்டும் மெய்யத்துளே. (௫)

சுடலையில்	சுடுகாட்டில்
சுடுநீறன்	சுட்ட சாம்பலைப் பூசுமவனான ருத்ரனுக்கு
அமர்ந்தது	சேர்ந்ததான
ஓர் நடலை	ஒரு கஷ்டத்தை
தீர்த்தவனை	போக்கியருளினவனும்
என் உடலை உள் புகுந்து	எனது சரீரத்தினுள்ளே புகுந்து

உள்ளம்	நெஞ்சை
உருக்கி உண்	உருக்கி உண்கின்ற
விடலையை	யுவாவுமான ஸர்வேச்வரனை
நறையூர் கண்டு	திருநறையூரிலே ஸேவித்து
மெய்யத்துள்ளே சென்று காண்டும்	திருமெய்யத்திலே சென்று ஸேவிப்போம்.

* * *—ருத்ரனுடைய சாபத்தைப்போக்கின பெருமானைத் திருநறையூரிலேகண்டோம்; இனிச் சென்று திருமெய்யத்திலே காணக்கடவோமென்கிறார்.

'சுடலையில் சுடுநீறன்' என்றது அவனுடைய இழிவுதோற்றுதற்காக. நடலையாவது துன்பம்; ("என் நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே" என்றாள் சூடிக்கொடுத்தசுடர்க்கொடியும்.) ருத்ரனுடைய துன்பமாவது—பிரமனுடைய சிரமொன்றைக் கிள்ளியெறிந்ததனாலுண்டான கஷ்டம்.

'உடலையுள்' என்றவிடத்து ஐகாரம்—சாரியை. 'இப்படிப்பட்ட குணசாலியுண்டோ!' என்று நெஞ்சுபாய்போரும் ஈடுபட்டிருக்கும்படி செய்ததிலே உடலுள்புகுந்து உள்ளமுருக்கியுண்பதாமென்க.

http://acharya.org

விடலை=இச்சொல்லுக்குப் பலபொருள்களுண்டு;—ஆண்மகன், திண்ணியன், பாலைநிலத்தலைவன், மணவாளன், மூப்பதுவயதுக்குட்பட்டவன். இப்பொருள்களுள் 'பாலைநிலத்தலைவன்' என்னும்பொருள் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற் கொள்ளப்பட்டது. "இப்பாலையான பூமியைத் தனக்கு இருப்பிடமாக்கினபடியாலே பாலைநிலமான ஸம்ஸாரத்துக்குத் தலைவனானவனை." என்று விவரணமும் செய்தருளினர். "தம்முடைய ஹ்ருதயத்திற் காட்டில் பாலைநிலமில்லை யென்றிருக்கிறார்" என்ற ஸ்ரீஸூக்தியுங்காண்க. .... (௫)

வானையா ரமுதந்தந்த வள்ளலை *
தேனை நீள்வயல் சேறையிற் கண்டுபோய் *
ஆனை வாட்டி யருளும் அமரர்தம்
கோனை * யாம் குடந்தைச்சென்று காண்டுமே. (௬)

வானையார்	வானுலகத்திலுள்ளார்க்கு
அமுதம் தந்த	அமுதமெடுத்தளித்த
வள்ளலை	உதாரனும்,
தேனை	தேன்போல இனியவனும்
ஆனை	(குவலயாபீடமென்கிற) யானையை
வாட்டி அருளும்	கொன்றொழித்தவனும்
அமரர்தம் கோனை	நித்யஸூரிகளுக்கு நியாமகனுமான எம்பெருமானை
யாம்	அடியோம்
நீள் வயல் சேறையில்	நீண்டவயல்களை யுடைத்தான திருச்சேறையில்
கண்டுபோய்	ஸேவித்து
குடந்தை	திருக்குடந்தையிலே
	சென்று காண்டும்—.

* * *—தன்னைவிரும்பாதே ப்ரயோஜநாந்தரத்தை விரும்பினவர்கட்கும் திருமேனியைப் பேணாதே கடல்கடைந்து அமுதளித்த பரமோதாரனைத் திருச்சேறையிலே ஸேவித்தோம், இனித் திருக்குடந்தையிலே ஸேவிப்போமென்கிறார்.

வானையார்—வானுலகத்தை (இருப்பிடமாக) உடையார் என்றபடி.

ஆனைவாட்டியருளும்='ஆன்' என்று எருதுக்குப் பேராதலால் அதனை வலியடக்கினவன் என்று உரைக்கவுமாம். கம்ஸனாலேவப்பட்ட அசுரர்களில் அரிஷ்டனென்பவன் எருதுவடிவங்கொண்டு பசுக்களையெல்லாம் முட்டி இடைச்சேரியைப் பயப்படுத்திக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணனது திருவயிற்றின்மேற் கண்வைத்துக் கொம்புகளைநீட்டிப் பாய்ந்துவர, கண்ணபிரான் அவனைக்கொம்புகளிற் பிடித்து அசையவொட்டாமற் செய்து தன்காலினால் அவன் வயிற்றில் ஓரடி இடித்து அவன் கழுத்தைப் பிடித்துக்கசக்கி அவனுடைய கொம்புகளில் ஒன்றைப்பறித்து அதனாலேயே அவனையடித்துக் கொன்றனன் என்ற வரலாற்றைக் கொள்ளவுமாம்; நப்பின்னைப்பிராட்டியை மணம்புணர்தற்காக ஏழ்விடை செற்ற வரலாற்றைக் கொள்ளவுமாம். .... (௬)

http://acharya.org

கூந்தலார் மகிழ் கோவலனாய் * வெண்ணெய்
மாந்தழுந்தையில் கண்டு மகிழ்ந்துபோய் *
பாந்தட் பாழியில் பள்ளி விரும்பிய *
வேந்தனைச்சென்று காண்டும் வெஃகாவுளே. (எ)

கூந்தலார் மகிழ் கோவலன் ஆய்	சிறந்த கூந்தலையுடையரான ஸ்த்ரீகள் உகக்கும்படியான கோபாலகிருஷ்ணனாய்த் திருவவதரித்து
வெண்ணெய்	வெண்ணெயை
மாந்த	அமுதுசெய்யாநிற்க
அழுந்தையில்	தேரழுந்தூரிலே
கண்டு மகிழ்ந்து போய்—;	

பாந்தள் பாழியில்	திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே
பள்ளி	திருக்கண்வளர்தலை
விரும்பிய	விரும்பிக் கைக்கொண்ட
வேந்தனை	ஸர்வேச்வரனை
வெஃகாவுள்	திருவெஃகாவில்
சென்றுகாண்டும்	போய்ஸேவிப்போம்.

* * *—கண்ணபிரானாய்த் திருவவதரித்து வெண்ணெய்விழுங்கின திருமாலைத் திருவழுந்தூரிலே கண்டோம்; இனிப்போய்த் திருவெஃகாவிலே காணக்கடவோமென்கிறார்.

திருவழுந்தூரிலெழுந்தருளியுள்ள பெருமானுடைய திருநாமம் 'ஆமருவியப்பன்' ஆதலால் கூந்தலார்மகிழ்கோவலனாய் என்றது. கூந்தலார் என்பது பெண்டிர்க்கு இயற்கைபற்றிய பெயர். அவர்கள் மகிழும்படியான கோவலன்; 1. "பெண்டிர்வாழ்வார் நின்னொப்பாரைப் பெறுதுமென்னு மாசையாலே, கண்டவர்கள் போக்கொழிந்தார் கண்ணிணையால் கலக்கநோக்கி, வண்டுலாம் பூங்குழலினார் உன்வாயமுத முண்ணவேண்டிக் கொண்டு போவான் வந்துநின்றார்" 2. "முந்தைநன்முறை அன்புடைமகளிர் முறைமுறை தந்தம் குறங்கிடையிருத்தி, எந்தையே! என்றன் குலப்பெருஞ்சுடரே! எழுமுகிற்கணத் தெழில் கவரேறே!, உந்தையாவனென் றுரைப்ப." என்றவைமுதலான பாசுரங்களில் கூந்தலார்மகிழ்ச்சி விளங்கக் காண்க.

மாந்த + அழுந்தையில், மாந்தழுந்தையில்; தொகுத்தல்விகாரம். பாந்தள்—பாம்பு. பாழி—படுக்கை. திருவெஃகாவில் ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் சேஷசாயியிறே. வெஃகா=இந்தலத்து எம்பெருமான், பிரமன்செய்த வேள்வியை அழிக்கவந்த வேகவதிநதியைத் தடுக்கும் பொருட்டு அதற்கு அணையாகக் குறுக்கில் பள்ளிகொண்டருளினவனாதலால் அப்பிரானுக்கு வடமொழியில் 'வேகாஸேது' என்றுபெயர்; அது தமிழில் 'வேகவணை' என்று மொழிபெயர்ந்து அதுபின் (நாகவணையென்பது நாகணையென விகாரப்படுதல்போல) வேகணை என விகாரப்பட்டு, அதுபின்னை 'வெஃகணை' எனத்திரிந்து, தானியாகுபெயராய்த் தலத்தைக்குறித்து, அது பின்பு 'வெஃகா' என மருவிவழங்கிற்றென நுண்ணிதின் உணர்க. .... (எ)

1. பெரியாழ்வார்திருமொழி 2—2—7.
2. பெருமாள் திருமொழி 7—3.

http://acharya.org

பத்தராவியைப் பான்மதியை * அணித்
தொத்தை மாலிருஞ்சோலைத் தொழுதுபோய்*
முத்தினை மணியை மணிமாணிக்க
வித்தினை * சென்று விண்ணகர்க் காண்டுமே. (அ)

பத்தர் ஆவியை	பக்தர்களுக்கு ஆத்மாவாக வுள்ளவனும்
பால் மதியை	களங்கமற்ற சந்திரனைப் போல அழகியவனும்
அணி தொத்தை	ஆபரணமாலைபோன்றவனும்
முத்தினை	முத்துப்போன்றவனும்
மணியை	நீலமணிபோன்றவனும்
மணி மாணிக்கம்	சிறந்த மாணிக்கம்போன்றவனும்
வித்தினை	ஜகத்காரண பூதனுமான எம்பெருமானை
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலையில்
போய் தொழுது	சென்று பணிந்து
விண்ணகர்	திருவிண்ணகரிலே
சென்றுகாண்டும்	போய் ஸேவிப்போம்.

* * *—தன் திருவடிகளுக்கு நல்லாருக்கு உயிராயிருப்பவனைத் தெற்குத் திருமலையிலே கண்டோம்; இனிப்போய்த் திருவிண்ணகரிலே காண்போமென்கிறார்.

'பத்தராவி' என்பதற்கு இருவகையாகப் பொருளருளிச்செய்வர்; பக்தர்களுக்கு ஆவியாயிருப்பவன் என்பது ஒருபொருள்; பக்தர்களைத் தனக்கு ஆவியாகவுடையவன் என்பது மற்றொரு பொருள். "உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்று கீதையிலருளிச்செய்தபடியே ஞானிகளான பக்தர்களைத் தனக்கு உயிர்நிலையாக வுடையவன் என்றவாறு. [பால் மதியை] சந்திரன்போல எப்பொழுதும் ஆனந்தமாகக் கண்டுகொண்டிருக்க வேண்டிய வடிவுபடைத்தவன் என்றபடி.

"அணித்தொத்தை" என்றும் "மணித்தொத்தை" என்றும் பாடபேதம் வியாக்கியானத்திலுள்ளது. தொத்து—பூங்கொத்து; மாலையையுஞ் சொல்லும்.

கம்ப மாகளி றஞ்சிக் கலங்க * ஓர்
கொம்பு கொண்ட குரைகழற் கூத்தனை *
கொம்புலாம்பொழில் கோட்டியூர்க் கண்டுபோய் *
நம்பனைச்சென்று காண்டும் நாவாயுளே. (கூ)

கம்பம்	(கண்டார்க்கு) நடுக்கத்தை விளைக்கத்தக்கதாய்
மா	பெரிய வடிவுடைத்தான
களிறு	(குவலயாபீடமென்னும்) யானை
அஞ்சி	பயப்பட்டு
கலங்க	கலங்கி முடியுமாறு
ஓர் கொம்பு கொண்ட	அதன் கொம்பை முறித்தெறிந்தவனும்
குரை கழல்	ஒலிக்கின்ற வீரக்கழலையுடையவனும்
கூத்தனை	விசித்திரமான நடையுடையவனும்
நம்பனை	(அன்பர்) விச்வஸிக்கத் தகுந்தவனுமான பெருமானை
கொம்புலாம் பொழில்	கிளைகள் விளங்குகின்ற சோலைகளையுடைத்தான
கோட்டியூர்	திருக்கோட்டியூரிலே
போய் கண்டு	சென்று ஸேவித்து
நாவாயுள் சென்று காண்டும்	திருநாவாயில் போய் ஸேவிப்போம்.

http://acharya.org

* * *—தீயபுந்திக் கஞ்சனுன் மகமூட்டி ஏவப்பட்ட குவலயாபீடமத யானையின் கொம்பைப்பறித்த பெருமானைத் திருக்கோட்டியூரிலே கண்டோம்; இனிச்சென்று திருநாவாயிலே காணக்கடவோ மென்கிறார்.

கம்பமாகளிறு=‘கம்பம்’ என்பதை ‘கம்ப்’ என்னும் வடசொல்லின்விகாரமாகக் கொண்டால் நடுக்கமென்று பொருள்படும்; கண்டாரை நடுங்கச்செய்ய வல்ல களிறு என்றபடி. ‘கம்பம்’ என்று யானைகட்டுங் தறிக்கும் பெயருண்டு; அப்பொருள்கொள்ளில் அது ஜாத்யுசிதவிசேஷணமாகும்.

நம்பன்—‘நம்மை ஒருநாளும் கைவிடான்’ என்று ஆச்ரிதர்கள் நம்புதற்கு உரியன் என்றபடி. **நாவாய்** = மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றில் ஒன்று; நம்மாழ்வாராலும் திருவாய்மொழி ஒன்பதாம்பத்தில் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற திருப்பதி. .... (௯)

பெற்ற மாளியைப் பேரில்மணாளனை *
கற்றநூல் கலிகன்றி யுரைசெய்த *
சொல்திற மிவை சொல்லிய தொண்டர்கட்கு *
அற்றமில்லை அண்ட மவர்க்காட்சியே. (௧௦)

பெற்றம் ஆளியை	பசுக்களை ஆளப் பிறந்தவனும்
பேரில்	திருப்பேர் நகரில்
மணாளனை	மணவாளப்பிள்ளையாக ‘ஸேவை ஸாதிப்பவனு’மான பெருமான் விஷயமாக,
நூல் கற்ற கலிகன்றி உரைசெய்த	நூல்களைப் பயின்ற திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
சொல் திறம் இவை	இந்த சப்தராசியை
சொல்லிய தொண்டர்கட்கு	ஓதுகின்ற பாகவதர்களுக்கு
அற்றம் இல்லை	(கைங்கரியத்திற்கு) இடையூறு (ஒருநாளும்) இல்லையாம்;
அவர்க்கு அண்டம் ஆட்சி	அவர்களுக்குப் பரமபதம் ஆளவுரியதாம்.

* * *—வியாக்கியானத்தில், ‘பெற்றமாளிகை’ என்றும் ‘பெற்றமாளியை’ என்றும் பாடபேதங் கொள்ளப்பட்டது. முந்தினபாடத்தில், ‘பெற்றம்’ என்று பெருமையாய், பெருமைபொருந்திய மாளிகைகளையுடைத்தான திருப்பேர்நகரிலுறையுமெம்பெருமானை என்றதாகிறது. பிந்தினபாடத்தில், ‘பெற்றம்’ என்று பசுக்களுக்குப் பெயராய், கோபாலனுகையாலே பசுக்களை ஆள்பவனும் திருப்பேர் நகரிலுள்ளவனுமான பெருமானை என்றதாகிறது. இப்படிப்பட்ட எம்பெருமான்விஷயமாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய இப்பாசுரங்களை ஓதவல்ல தொண்டர்கட்கு ஒருநாளும் எம்பெருமானைவிட்டுப் பிரிதலின்றியே நித்யாநுபவமாம்படி பரமபதம் அவர்களிட்டவழக்காகுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டினராயிற்று.

http://acharya.org

கற்றநூல்கலிகன்றி—ஆழ்வார் எம்பெருமானால் மயர்வறமதிநல மருளப் பெற்றவரேயன்றி ஒருவரிடத்திலே சாஸ்த்ராப்யாஸம் செய்தவரல்லரே; அப்படியிருக்க 'கற்றநூல்கலிகன்றி' என்றது எங்ஙனே? என்கிற சங்கைக்கு ஸமாதானமாகப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வது காண்மின்;—"திருமந்த்ரம் கற்றவிடத்திலே கற்குமித்தனையிறே அல்லாதவையும்" என்று, ஸகலசாஸ்த்ரங்களும் திருமந்திரத்தில் அடங்கினவையாதலால் அத்திருமந்திரத்தை எம்பெருமான் பக்கலில் கற்றபோதே ஸகலசாஸ்த்ரங்களும் கற்கப்பட்டனவாதலால் இங்ஙனஞ் சொல்லக்குறையில்லையென்க. .... (க0)

அடிவரவு:—ஒரு பொன் வேலை அளக்கம் கடலை வான் கூந்தல் பத்தர் கம்பம் பெற்றம் இரக்கம்.

'முதல் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—இரண்டாந்திருமொழி,

இரக்கமின்றியெங்கோன்.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியில், ஆழ்வார்க்கு இக்கொடுவுலகத்தினின்றும் நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்திற்குச் செல்லவேணுமென்னும் விருப்பம் கிளர்ந்து, 'எம்பெருமான் இனி நம்முடைய அபிமதத்தைத் தலைக்கட்டியல்லது நில்லான்' என்கிற நிச்சயமும் தோன்றிப் பரமபதத்திற்குப் பயணம் புறப்படுவதாகவே பாரிப்புக்கொண்டு, பிறந்தகத்தில் நின்றும் புக்ககம் போகப் புறப்படுகின்ற பெண்பிள்ளை தான் நெடுநாள் வஸித்தவிடத்திலே தன்னோடு மிகவும் முகம்பழகியிருந்த பரமப்ரேமாஸ்பதமான சில பெண்பிள்ளைகளைச் சென்றுபணிந்து 'நங்காய்! நான் போய்வருகிறேன்; மாதே! நான் போய்வருகிறேன்' என்று சொல்லிவருதற்குச் சில குறடுகள் ஏறியிறங்குமாபோலே ஆழ்வாரும் தம்புக்ககமாகிய பரமபதத்தின் பயணத்திற்குப் பூர்வாங்கமாகத் தமது மிக்க ஈடுபாட்டிற்கிடமான சில திருப்பதிகளிலே சொல்லிக்கொள்வதாக நுழைந்து நுழைந்து புறப்பட்டார்.

பெண்பிள்ளை விவாஹக்கோலங்கள் செய்துகொண்டு தன்னாலாகக்கூடிய ஸங்நாஹங்களெல்லாம் செய்துமுடித்தாலும் தாலிகட்டுமவன் தகவிலனுமாகில் அந்த ஸந்நாஹமெல்லாம் பழுதேயாமாபோலே, இன்னமும் இவ்வாழ்வாரைக்கொண்டு

http://acharya.org

லோகோஜ்ஜீவநமாகப் பல பாசுரங்கள் பாடுவிக்கத் திருவுள்ளம்பற்றின எம்பெருமான் இவருடைய அபிமதத்தைச்செய்து தலைக்கட்டாதே தன்னுடைய திவ்யாவதார சேஷ்டிதங்களையே அநுபாவ்யமாகக் காட்டிக்கொடுத்தான். அவற்றிலே, இலங்கைப் போர்க்களத்தில் இராவணன் உயிர்துறக்குமளவாய், மாண்டு போனவர்களில் மிகுந்திருந்த அரக்கர்களும் தங்கள்தங்கள் பிராணனுக்கு மன்றாடுமளவான நிலைமையிலே பெருமாளுடைய வெற்றிச் செல்வத்தை யெடுத்துரைத்துப் பாசுரமிட்டுப்பேசி மகிழவேணுமென்னும் ஆசை ஆழ்வார்க்குக் கிளர்ந்தது. அந்த வெற்றியைத் தம்முடைய வாயாலே பேசவதிலுங்காட்டில் தோற்றுப்போன ராக்ஷஸர்களின் வாயாலே பேசியநுபவித்தல் பாங்கு என்று திருவுள்ளம்பற்றினர்.

தாமான தன்மையி லிருந்துகொண்டும் அந்த வெற்றியைப் பேசலாமாயினும் “நீராடவாராய், பூச்சூடவாராய், காப்பிடவாராய்” இத்யாதி பாசுரங்களைப் பெரியாழ்வார் தம்வாயாற்பேசாமல் யசோதைசொல்லும் பாசுரமாகப் பேசினாற் போலே இவரும் அந்த வெற்றியைப் பேசுவதற்கு இட்டுப்பிறந்த அரக்கர் பேசும் பாசுரமாகவே அருளிச்செய்கிறார். ஆனாலும், மஹாபாபிகளான ராக்ஷஸர்களின் நிலைமையை இவர் ஏறிட்டுக்கொள்ளுதல் தகுதியன்றே என்று சிலர் சங்கிக்கக்கூடும்; விபீஷணாழ்வான் ராக்ஷஸ யோநியிற் பிறந்திருந்தாலும் ஹாவ ஸூஜியைக் கொண்டு அவர் எப்படி உத்தேச்யராகிறாரோ, அப்படியே இந்த அரக்கர்களும் தங்களுடைய தோல்வியையும் பெருமாளுடைய வெற்றியையும் பேசுகிறார்களென்னுங் காரணங்கொண்டு இவர்களுடைய தன்மை ஒருவாறு உத்தேச்யமாகக் குறையில்லை. உண்மையில் விபீஷணாழ்வானுக்கும் இவ்வரக்கர்கட்கும் நெடுந்தூரமுண்டு; இராவணன் சக்தனான நிலைமையிலிருக்கும்போதே அவனைவிட்டுத் தொலைத்து ஸ்ரீராமகோஷ்டியில் அந்வயித்து உய்வு பெற்றவர் விபீஷணாழ்வான்; இவ்வரக்கர்களோ வென்னில் இராவணன் மாண்டொழியுந் தருணத்திலும் ஸ்ரீராமபக்தர்களின் கோஷ்டியிலே அந்வயித்து உய்வு பெறாதவர்கள். ‘இராவணனையும் மற்றும்பல அரக்கர்களையும் போலே எங்களையுங் கொன்றொழிக்க வேண்டா’ என்று தங்கள் உயிர்க்கு மன்றாடுகிறார்களத்தனையேயன்றி விபீஷணாழ்வானைப்போலே உண்மையான சேஷத்வத்திற்கு இசைந்து தொழுகின்றார்களல்லர். ஆயினும் ஆழ்வார்க்கு இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செல்லவில்லை. ஏதேனுமொருபடியாலே பெருமாளுடைய வெற்றியைப் பேசுகிறார்களென்னு மிவ்வளவேகொண்டு உகந்து அவர்களின் நிலைமையைத் தாம் ஏறிட்டுக் கொள்ளுகிறாரென்க. இவ்விடத்திலே பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகாண்மின் ;—“ தமக்கு அபிமதமான ராமவிஜயத்தை எதிரிகள் மேலெழுத்திட்ட பாசுரத்தாலே அநுபவிக்கிறார். அங்குத்தை விஜயம் தமக்கு இஷ்டமாகையாலே அந்த விஜயத்துக்கு இலக்காய்த்தோற்ற ராக்ஷஸர்தசை பிறந்து, பிராட்டிமார்தசைபிறந்து பேசுமாபோலே தாமானதன்மை தோற்றாதே, தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே ராமவிஜயத்தைப் பேசி அநுபவிக்கிறார்” என்று.

http://acharya.org

இத்திருமொழியும் மேல்திருமொழியுமாக இரண்டு திருமொழிகளும் இங்ஙனே செல்லுகின்றன. இத்திருமொழியிற் பாசுரங்களெல்லாம் ‘தடம் பொங்கத்தம் பொங்கோ’ என்ற முடியைக் கொண்டு முடிகின்றன. இத் தொடர்மொழி இவ்வருளிச்செயலில் தவிர வேறு எவ்விடத்தும் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாகப் புலப்படவில்லை. இதுவொரு ஸங்கேத சப்தாநுகாரம் என்றே தோன்றுகின்றது. “தோற்றவர்கள் தோல்வியாலே பறையடிக்க ஆடுவதொரு கூத்துண்டு; அந்த ஸப்தாநுகாரம்” என்றிவ்வளவே பெரியவாச்சான்பிள்ளையும் அருளிச்செய்துவைக்கக் காண்கிறோம். மற்றும் விவரணமுள்ள விடங்களிற் கண்டு கொள்க; வல்லார்வாய்க் கேட்டுமுணர்க. .... *

இரக்கமின்றி யெங்கோன்செய்த தீமை
இம்மையே யெமக்கெய்திற்றுக் காணீர் *
பரக்கயாமின் றுரைத்தென்? இராவணன்
பட்டனன் இனி யாவர்க்குரைக்கோம்? *
குரக்குநாயகர்காள்! இளங்கோவே!
கோலவல்லிலிராமபிரானே! *
அரக்கராடழைப்பாரில்லை நாங்கள்
அஞ்சினேம் தடம்பொங்கத்தம்பொங்கோ. (க)

எம் கோன்	எங்களுக்குத் தலைவனான இராவணன்
இரக்கம் இன்றி	ஈரநெஞ்சு இல்லாமல்.
செய்த	பண்ணின
தீமை	அபசாரமானது
இம்மையே	இப்பிறப்பிலேயே
எமக்கு	எங்களுக்கு
எய்திற்று காணீர்	பலித்துவிட்டது பாருங்கோள்;
இன்று	இப்போது
யாம்	நாங்கள்
பரக்க	விரிவாக
உரைத்து என்	சொல்லுவதனால் என்ன பயன்?
இராவணன் பட்டனன்	ராவணன் மாண்டு போனான்;
இனி	இனிமேல்
யாவர்க்கு உரைக்கோம்	யாருக்குச் சொல்லுவோம்;
குரக்கு நாயகர்காள்	வாநரஸேநாபதிகளே!
இளங் கோவே	இளைய பெருமாளே!
கோலம் வல் வில் இராம பிரானே	அழகிய திண்ணிதான சார்ங்கவில்லைக்கொண்ட ஸ்ரீராமபிரானே!
அரக்கர்	ராக்ஷஸஜாதியில்
ஆடு அழைப் பார் இல்லை	வெற்றியைச் சொல்லிக் கூவுவாரில்லை;
நாங்கள்	(தோற்றொழிந்த) நாங்கள்
அஞ்சினேம்	பயப்படுகின்றோம்;
தடம் பொங் கத்தம் பொங் கோ	தோற்றதோல்விக்கு நாங்கள் ஆடுகிற ஆட்டம் காண்மின் என்றவாறு.

* * *—வாநரவீரர்களையும் இளைய பெருமாளையும் ஸ்ரீராமபிரானையும் விளித்து இலங்கையரக்கர்கள் தங்கள் தோல்வியும் இவர்களின் வெற்றியும் தோற்றச் சொல்லிக் கூத்தாடுகின்றனர்.

http://acharya.org

"த்ரிபிர்வர்ஷைஸ்த்ரிபிர்மாஸைஸ்த்ரிபக்ஷைஸ்த்ரிதிநை:—அத்யுத்கடை: புண்யபாபை: இஹைவ பலமச்நுதே." என்பது சாஸ்த்ரம். புண்யமோ பாபமோ எல்லைகடந்து செய்யப்படின் அவற்றின் பலன் அந்த ஜன்மத்திலேயே அநுபவிக்கக் கூடியதாகும் என்பது இதன்கருத்து. இந்த சாஸ்த்ரம் தங்கள் திறத்தில் பலித்துவிட்டதென்கிறார்கள். [எங்கோன் இரக்கமின்றிச் செய்த தீமை இம்மையே எமக்கு எய்திற்று.] பாவஞ் செய்தவன் அவன்; அந்தப் பாவத்தின் பலன் அவனளவோடு நில்லாமல் எங்களளவும் பலித்து விட்டது; (அதாவது) நாங்கள் உயிர்க்கு மன்றாடும்படியான நிலைமை நேர்ந்துவிட்டது என்கிறார்கள். பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியைக்கண்டால் "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன் சேவடி செவ்வி திருக்காப்பு......வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்று மங்களாசாஸநம் பண்ண ப்ராப்தமாயிருக்க அது செய்யப்பெறாதே மிதுநத்தைப் பிரித்த கொடுமையை நினைத்து 'இரக்கமின்றி' என்றது. அன்றியே, 'நாம் செய்யும் பெரும் பிழை நம்மோடு போய்விடாது; இதன்பலனை நம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளும் அநுபவிக்கவேண்டியதாகும்; அந்தோ! நம்மால் நம்முடையவர்கட்கும் பெருந்துன்பம் விளையுமே!' என்று மனமிரங்காமல் என்றுமுரைக்கலாம். இராவணன் செய்த கொடுமையைத் தங்கள்வாயாலே விவரித்துச் சொல்லக் கூசிப் பொதுப்படையாக 'எங்கோன் செய்ததீமை' என்கிறார்கள்.

இராவணன்பட்டனன்=மேல் ஏழாம் பாட்டில் "ஏழையை யிலங்கைக் கிறைதன்னை எங்களை யொழியக் கொலையவனை" என்று—குற்றஞ்செய்யாத எங்களைவிட்டு விட்டுக் குற்றவாளியான இராவணனை மாத்திரம் கொல்லவேணுமென்பதாக வேண்டிக்கொள்கின்றமையால் இராவணன் இன்னமும் முடிந்திலன் என்பது தெரிகின்றதே; அப்படியிருக்க 'இராவணன்பட்டனன்' என்று இங்குச்சொல்லுகிறபடி எங்ஙனே? என்று சங்கிக்கக்கூடும்; 'இனி இவனுக்கு மரணம் ஸித்தம்; பிழைப்பது கிடையாது' என்கிற நிச்சயம் தங்கட்குத் தோன்றிவிட்டதனால் 'ஜீவச்சவம்' என்னுங்கருத்தாலே பட்டனன் என்கிறார்களென்க.

குரங்கு X நாயகர், குரக்குநாயகர்; மென்றொடர் வன்றொடராயிற்று. ஸுக்ரீவன், ஹநுமான், அங்கதன், ஜாம்பவான் முதலானவர்களை உளப்படுத்திக் குரக்குநாயகர்காள்! என்றது.

அரக்கராடழைப்பாரில்லை='ராக்ஷஸரில் இனி ஆடுபோலே கூப்பிடக்கடவாரில்லை' என்று நஞ்சீயர் நம்பிள்ளைக்குப் பொருள் பணிக்க, அதனை நம்பிள்ளை கேட்டு, 'ஆடு என்று வெற்றிக்கும் வாசகமாதலால், இந்தராக்ஷஸஜாதியில் வெற்றி சொல்லுவாரில்லை; (அதாவது) தோற்றோம் தோற்றோம் என்று தோல்வியைச் சொல்லவல்லாருள்ளோ மத்தனையொழிய வென்றோமென்று விஜயத்தைச் சொல்லிக்கொள்ள வல்லாரில்லை-என்று பொருள்கூறலாகாதோ?' என்ன, நஞ்சீயரும்

http://acharya.org

இதைக்கேட்டருளி 'இதுவேபொருந்தும்பொருள்; இப்படியே சொல்லிக்கொள்ள அமையும்' என்று நியமித்தருளினராம்.

நாங்கள் அஞ்சினோம்=குற்றவாளியான இராவணன்கீழ்க் குடிவாழ்ந்தவர்களென்னுங்காரணத்தினால் எங்களையுங் கொன்றொழிந்து விடுகிறீர்களோவென்று பயப்படுகின்றோமென்கை. [தடம் பொங்கத்தம் பொங்கோ] எங்களுடைய தோல்வியையும் உங்களுடைய விஜயத்தையும் தெரிவிக்குமாறு நாங்கள் ஒரு கூத்தாடுகிறோங் காண்மின் என்றவாறு. .... (க.)

பத்துநீண்முடியு மவற்றிரட்டிப்
    பாழித்தோளும் படைத்தவன் செல்வம் *
சித்தம்மங்கையர்பால் வைத்துக்கெட்டான்
    செய்வதொன்றறியா வடியோங்கள் *
ஒத்ததோளிரண்டு மொருமுடியும்
    ஒருவர்தந்திறத்தோமன்றி வாழ்ந்தோம் *
அத்த வெம்பெருமான்! எம்மைக்கொல்லேல்
    அஞ்சினோந்தடம் பொங்கத்தம்பொங்கோ. (உ)

அத்த எம் பெருமான்	ஸ்வாமிக் ஸ்ரீராமபிரானே!,
நீள்	நீண்ட
பத்து முடியும்	பத்துத்தலைகளையும்
அவை இரட்டி	அந்தத் தலைகளின் கணக்கில் இரட்டிப்பான கணக்கையுடையவையாய்
பாழி	வலிமைமிக்கவையான
தோளும்	(இருபது) தோள்களையும்
படைத்தவன்	உடையவனான இராவணன்
மங்கையர் பால் சித்தம் வைத்து	ஸ்த்ரீவிஷயத்தில் மனம் செலுத்தி
செல்வம் கெட்டான்	(தனது) செல்வம் அழியப் பெற்றான்;

செய்வது ஒன்று அறியா அடியோங்கள்	இனிச் செய்யத் தக்கதொன்று மறிய இல்லாத நாங்கள்
ஒத்த தோள் இரண்டும் ஒரு முடியும்	ஒன்றோடொன்று ஒப்பான இரண்டு திருத்தோள்களையும் ஒரு திருமுடியையுமுடையராய்
ஒருவர் தம் திறத்தோம் அன்றி	அத்விதீயரான தேவரீர் பக்கல்இதற்குமுன்பு ஈடுபட்டவர்களல்லாமையாலே
வாழ்ந்தோம்	கெட்டுப்போனோம்;
எம்மை கொல்லேல்	எங்களைக் கொல்லாதொழிய வேணும்;

அஞ்சினோம், தடம்பொங்கத்தம் பொங்கோ—.

* * *— "விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்। பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதிஸம்யுதா" = விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்— பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதிஸம்யுதா." என்று எம்பெருமானைத் தொழுது உய்வு பெறுதற்கென்றே கைகால் முதலிய உறுப்புகளோடு கூடின தேஹம் படைக்கப்பட்டுள்ளது. அவ்வுறுப்புகளில் தலையானது தலை. தலையை வணக்கியும் கைகளைக் கூப்பியும் வாழ்ச்சி பெறலாம்; இராவணனோ பத்துத்தலைகளையும் இருபது கரங்களையும் படைத்தவன்; இத்தனை

http://acharya.org

உறுப்புகளையுங் கொண்டு வழிபாடு செய்து வாழ்ந்துபோக ப்ராப்தியிருந்தும் அது செய்யாதே மாண்டுபோயினனே! என்ற வருத்தந்தோன்ற நின்றது முதலடி.

[சித்தம் மங்கையர்பால் வைத்துச் செல்வம் கெட்டான்.] இராவணன் போர்க்களத்திலே இராமபிரானது அம்புகட்கு இலக்காகிப்பட்டுப் போனவாறே மந்தோதரி புலம்புகிறாள்—"இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா। ஸ்மரத்பிரிவ தத்வைரம் அத்ய தைரேவ நிர்ஜித: = இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா—ஸ்மரத்பிரிவ தத் வைரம் அத்ய தைரேவ நிர்ஜித:." என்றாள். அதாவது—இராவணனே! நீ முன்பு இந்திரியங்களை யெல்லாம் வென்று அதனால் மூவுலகையும் வென்றாய்; (இந்திரியங்களை நிக்ரஹித்துக் கொடுந்தவம் புரிந்து வரம் பெற்றமையால் மூவுலகும் வென்றனனாதலால் இங்ஙன் கூறப்பட்டது.) அந்த இந்திரியங்கள் 'இப்பாவி நம்மை இப்படி தலையெடுக்க வொட்டாமல் பண்ணிவிட்டானே; ஆகட்டும், தக்க ஸமயம் பார்த்து இவனைத் தலையமுக்குவோம்' என்று நெஞ்சில் பகை வைத்துக்கொண்டிருந்து இப்போது உனக்கு ப்ரதிக்ரியை செய்து விட்டன என்றாள். (இந்த்ரியங்களை அடக்காமல் அவற்றுக்குப் பரவசப்பட்டு ஸீதையைக் கவர்ந்ததனால் இக்கேடு உனக்கு விளைந்ததென்றபடி.) அவ்விதமாகவே இவர்களும் 'மங்கையர்பால் சித்தம் வைத்துக் கெட்டான்' என்கிறார்கள். இந்த விஷயப்ராவண்ய மொன்று இல்லாவிடில் அவனுடைய செல்வமெல்லாம் எவ்வளவோ சிறப்புறுமே; விஷய ப்ராவண்ய மொன்றினால் தன் செல்வமனைத்தும் பாழாகப் பெற்றானென்கை.

மூன்றாமடியில் 'வாழ்ந்தோம்' என்றது விபரீதலக்ஷணை; 'கெட்டோம்' என்பதற்குப் பரியாயம். பத்துத்தலைகளையும் இருபதுகைகளையு முடையனான இராவணனைப்போலே விகாரமான வேஷமுடையரன்றியே இரண்டு தோள்களையும் ஒரு திருமுடியையு முடையரான பெருமாள் திறத்திலே ஈடுபட்டு விபீஷணாழ்வானைப்போலே நாங்களும் வாழ்ந்து போகலாமாயிருக்க அது செய்யாதே கெட்டுப்போனோம் என்றவாறு. "இந்த்ர இந்த்ர இவ ஸ்ரீமாந்—இந்த்ர: இந்த்ரஇவ ஸ்ரீமாந்." என்னுமாபோலே தோளுக்குத் தோளே உவமை என்பது தோன்ற 'ஒத்த தோளிரண்டும்' என்றது. அந்தத் தோளுக்கு இந்தத் தோளுவமை; இந்தத் தோளுக்கு அந்தத் தோளுவமை என்றபடி.

ஸ்வாமின்! எங்களைக் கொலை செய்யாதொழியவேணும் என்று ப்ரார்த்தித்தார்களாயிற்று. .... (௨)

தண்டகாரணியம் புகுந்தன்று
 தையலைத்தகவிலி யெங்கோமான் *
கொண்டுபோந்துகெட்டா னெமக்கிங்கோர்
 குற்றமில்லை கொல்லேல்குலவேந்தே! *

http://acharya.org

பெண்டிராற் கெடுமிக்குடி தன்னைப்
பேசுகின்றதென்? தாசரதீ! * உன்
அண்டவாணருகப்பதே செய்தாய்
அஞ்சினோந்தடம் போங்கத்தம்போங்கோ. (௯)

குலம் வேந்தே	(குற்றமற்றவர்களைத் தண்டியாத இக்ஷ்வாகுவின்) வம்சத்துக்குத் தலைவரே!
தாசரதி	ஸ்ரீராமபிரானே!,
தகவுஇலி எம் கோமான்	ஈரநெஞ்சு இல்லாதவனாய் எங்களுக்குத் தலைவனாயிருந்த இராவணன்
அன்று	(நீங்கள் வனத்திலே தாபஸராயிருந்த) அக்காலத்திலே
தண்டகாரணியம் புகுந்து	தண்டகாரணியத்தில் பிரவேசித்து
தையலை	அழகிற்சிறந்த பிராட்டியை
கொண்டு போந்து	அபஹரித்து வந்து
	(அக்குற்றங்காரணமாக)
கெட்டான்	முடிந்துபோனான்;
இங்கு	இவ்விஷயத்தில்
எமக்கு	எங்களுக்கு
ஓர் குற்றம் இல்லை	ஒரு குற்றமும் கிடையாது;
	(ஆகையாலே)
கொல்லேல்	(எங்களைக்) கொல்லாதொழியவேணும்;
பெண்டிரால் கெடும்	ஸ்த்ரீசாபல்யங் காரணமாகக் கெட்டுப்போகின்ற
இக் குடி தன்னை	இந்த ராக்ஷஸஜாதியைப் பற்றி
பேசுகின்றது என்	பேசலாவது என்ன இருக்கிறது?
உன் அண்டவாணர்	தேவரீருக்கு இஷ்டரான தேவதைகள்
உகப்பதே	ஸந்தோஷிக்கக்கூடிய காரியத்தையே
செய்தாய்	செய்தருளினீர்;

அஞ்சினோம், தடம் பொங்கத்தம் பொங்கோ—.

* * *—குற்றமற்றாரை நலியகில்லாத இக்ஷ்வாகு வம்சத்திற்கு அணி விளக்காக அவதரித்த பிரானே! எங்களிராவணன், தனக்கு ஒருவகையான அபராதமும் செய்யாத உம்மிடத்திலே தானே வீண்பகை கொண்டு நெடுந்தூரங் கடந்து தண்டகாரணியத்திலே புகுந்து சிறிதும் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனாய் அழகிற்சிறந்த ஜானகியை அபஹரித்துக் கொண்டுவந்து சேர்ந்தான்; இக்குற்றம் அவனொருவன் செய்ததத்தனையொழிய இதில் நாங்கள் கூட்டல்லோம். நாங்கள் அவனுடைய சேவகர்களாகையாலே அவன்கீழ்க் குடிவாழ்ந்த குற்றமொழிய ஸீதாபஹாரவிஷயத்தில் சிறிதும் நாங்கள் குற்றவாளிகளல்லோம். ஆகையாலே எங்களைக் கொல்லாதொழியவேணும். விஷயசாபல்யமே ஹேதுவாகக் கெட்டுப்போகின்ற இவ்விழிகுலத்தைப்பற்றி நாங்கள் என்ன சொல்லவல்லோம்! தேவரீருடைய அடியார்களான தேவர்கள் இராவணனால் நெருக்குண்டவர்களாதலால் அப்பாவிதொலைவது என்றோ? என்று எதிர்பார்த்திருந்தனர். அவர்களின் மனோரதம் தலைக்கட்டிற்றாயிற்று. இவ்வளவே போதுமானது; இனி எங்களை ஒரு சரக்காக நினையாதொழியவேணும் என்று பிரார்த்திக்கிறார்களாயிற்று.

http://acharya.org

தண்டகாரணியம்= ஸூர்யகுலத்தில் மநுசக்ரவர்த்தியினது குமாரனை இக்ஷ்வாகு மஹாராஜனுடைய மக்கள் நூற்றுவருட் கடைப்பட்டவனும் மூடனும் மூர்க்கனும் துஷ்டனுமாகித் தண்டனைக்குரியவனென்ற காரணத்தால் எதிர்கால வுணர்ச்சியையுடைய தந்தையால் தண்டகனென்று பெயரிடப்பெற்ற ஓரரசன், விந்தியமலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன் ஆட்சிக்கு உரியதாக்கொண்டு மதுமந்தமென்னும் பட்டணத்தையமைத்து அரசாளுகையில், ஒருநாள் தனது புரோஹிதரான சுக்ராசார்யரது ஆச்ரமத்தினுட் சென்று அவர் மகளாகிய அரஜையென்பவளைக்கண்டு காதலித்து வலியக் கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த அந்தப் பார்க்கவர் சினந்து 'ஏழுநாள்களுள் அவன் குடும்பத்தோடும் சேனை முதலிய பரிவாரத்தோடும் அழிந்துபோகக்கடவன்' என்றும் 'அவனது நாடு மண்மழையால் யாதொரு ஜீவஜந்துவுமில்லாமற் பாழாகக்கடவது' என்றும் சபிக்க, அங்ஙனமே அந்நாடும் அவ்வரசனும் ஏழாநாள் மண்மழை பெய்ததனால் அழிந்து போய்விட, அவ்விடம் பின்பு காடாகித் தண்டகாரணியமென வழங்கலாயிற்றென்றுணர்க.

தையல்—அழகு; அதனையுடையவளுக்கு ஆகுபெயர்.

தகவு—தயவு. **தாசரதீ!**= நீ தசரதன் மகனாகையாலே [நியாயம் தவறாதவரான அவருடைய வயிற்றிற் பிறந்தவனாகையாலே] நியாயப்பழுதாக எங்களைக் கொலை செய்யமாட்டாய் என்று குறிப்பித்தவாறு. வடமொழித்தத்திதாந்த நாமம். **அண்டவாணர்**= அண்டம் வாழ்நர்; மேலுலகத்தில் வாழ்பவரான தேவர்கள். அவர்கள் உகப்பது எங்கள் பரிபவம்; அதைச் செய்தாய் என்கை.

எஞ்சலில் இலங்கைக்கிறை யெங்கோன்றன்னை
முன்பணிந்து எங்கள் கண்முகப்பே *
நஞ்சுதானரக்கர்குடிக்கென்று
நங்கையை யவன்தம்பியே சொன்னான் *
விஞ்சைவானவர் வேண்டிற்றே பட்டோம்
வேரிவார்பொழில் மாமயிலன்ன *
அஞ்சலோதியைக்கொண்டு நடமின்
அஞ்சினோம்தடம் பொங்கத்தம் பொங்கோ. (ச)

எஞ்சல் இல் — ஒரு குறைவுமில்லாதவனாய்
இலங்கைக்கு இறை — (இந்த) லங்காபுரிக்கு அரசனாய்
எம் கோன் தன்னை — எங்களுக்குத் தலைவனாயிருந்த இராவணனை நோக்கி
முன் — முன்பு
எங்கள் கண் முகப்பே — எங்கள் கண்ணெதிரில்
அவன் தம்பியே — அவனுக்குத்தம்பியான விபீஷணாழ்வான்
பணிந்து — விநயமுடன்கைகூப்பிநின்று
நங்கையை அரக்கர் குடிக்கு நஞ்சுதான் என்று சொன்னான் — 'இப்பிராட்டி ராக்ஷஸ குலத்துக்கு விஷமாகத் தோன்றியவள் காண்' என்று சொன்னான்;
(அப்படி சொல்லியும் அப்பாவி பணிந்து வாழ மாட்டாமையாலே)

http://acharya.org

விஞ்சை வானவர் வேண்டிற்றே பட்டோம் } தேவஜாதிகள் ஆசைப்பட்டிருந்தபடியே (நாங்கள்) அனர்த்தப்பட்டோம்;

வேரி வார் பொழில் மா மயில் அன்ன } பரிமளத்தையுடைத்தாய் விசாலமான சோலையில் வளர்ந்த சிறந்தமயில் போன்றவளும்

அஞ்சு அல் ஓதியை } (சுருட்சி நீட்சி குளிர்ச்சி அழகு பரிமளம் என்ற) ஐந்துவகைப்பட்ட குணங்களையுடையதாய் ராத்ரி போற்கறுத்திருக்கின்ற கூந்தலையுடையளுமான பிராட்டியை

கொண்டு நடமின் } கொண்டு போங்கள்;

அஞ்சினேம் தடம் பொங்கத்தம் பொங்கோ.

* * *—விபீஷணன் முன்னமே மிக்க பெருஞ்சபை நடுவே இராவணனை நோக்கி 'பாவி! சானகியை அபஹரித்துக் கொண்டுவந்தாயே, இவள் அரக்கர் குடிக்கு விஷம்போன்றவள் என்பதை அறிந்திலையே; இவளைக் கவர்ந்துவந்ததே காரணமாக அரக்கர்குடி முழுதும் வேரற்றொழியப் போகிறதுகிடாய்; இப்போதும் குற்றமில்லை; இன்றே இராமபிரான் ஸந்நிதியில் இவளைச் சேர்த்திடு' என்று உபதேசித்தான்; வணங்கி வேண்டிக்கொண்டான். அந்த ஹிதோபதேசம் இவன்செவியிற்புகாமையாலே தேவதைகளின் கோரிக்கை நிறைவேறப் பெற்றது. போனது போகட்டும்; இனி உங்கள் பிராட்டியைக்கொண்டு செல்லுங்கள்; எங்களை ஒன்றுஞ் செய்யேல்மின்—என்கிறார்கள்.

எஞ்சல் இல்=ஒருவகையாலும் குறைபாடு இல்லாதவன் என்றபடி. அநுமான் இலங்கையிற் புகுந்து முழுதும் நோக்கினவாறே "யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:। ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா—யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:—ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸசக்ரஸ்யாபி ரக்ஷிதா." என்று—'என்னஐச்வர்யம்! என்ன ஐச்வர்யம்!!, இந்த ராவணனிடத்தில் அதர்மமொன்று மாத்திரம் தவிர்ந்திருக்குமாயின் ஸாக்ஷாத் தேவலோகத்தையும் ஆட்சிபுரியக் கடவனன்றோ இவன்' என்று மதித்தனனாதலால் செல்வத்தில் ஒருவகைக் குறையுமற்றவனென்கிறது. எஞ்சல்—குறைதல்.

விஞ்சை வானவர்='வித்யா' என்னும் வடசொல் 'விஞ்சை' என்றும் திரியும். தேவதைகளில் ஒரு வகுப்பான வித்யாதரர்களைச் சொன்னபடி. தேவஜாதிக்கெல்லாம் இது உபலக்ஷணமென்க. "ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:। அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதந:—ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:—அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:—" என்கிறபடியே இராவணனைத் தொலைக்கவேணுமென்ற வானவர்களின் வேண்டுகோள் நிறைவேறப் பெற்றதாயிற்று என்கிறார்கள்.

அஞ்சுஅல் ஓதியை=ஓதியென்று கூந்தலுக்குப் பெயர். 'ஐந்து' என்பது 'அஞ்சு' என மருவிக்கிடக்கின்றது. மிருதுவாயிருத்தல் குளிர்ந்திருத்தல் நறு

http://acharya.org

மணம் மிக்கிருத்தல் கறுத்திருத்தல் நீண்டிருத்தல் என உத்தமகேச லக்ஷணம் ஐவகைப்பட்டதாகும். 'அல்' என்பது இரவுக்குப் பெயராகி இருளைக் குறிக்கின்றது. இருண்ட கூந்தல் என்றபடி. ஐவகைலக்ஷணங்களில் 'கறுத்திருத்தல்' என்பதும் சேர்ந்திருத்தலால் 'அல்' என்றது புநருக்தியாகுமே யென்னில், ஐவகையில் கறுத்திருத்தல் என்பதை நீக்கி அடர்ந்திருத்தலைக் கூட்டிக்கொள்க. 'அஞ்சொலார்' என்றது அன்மொழித்தொகை. திருவெழுகூற்றிருக்கையில் "ஐம்பாலோதி" என்றதுங் காண்க. .... (௪.)

செம்பொன் நீண்முடி யெங்களிராவணன்
சீதையென்பதோர் தெய்வம் கொணர்ந்து *
வம்புலாங்கடிகாவிற் சிறையா
வைத்ததே குற்றமாயிற்றுக் காணீர் *
கும்பனோடு நிகும்பனும்பட்டான்
கூற்றம் மானிடமாய் வந்துதோன்றி *
அம்பினாலெம்மைக் கொன்றிடுகின்றது
அஞ்சினோந்தடம்பொங்கத்தம்பொங்கோ. (௫)

செம் பொன் நீள் முடி	செம்பொன்னாற் செய்யப்பட்ட நீண்ட கிரீடத்தை யுடையனாய்
எங்கள்	எங்களுக்குத் தலைவனான
இராவணன்	ராவணனானவன்
சீதை என்பது ஓர் தெய்வம் கொணர்ந்து	ஸீதையென்கிற ஒரு தெய்வப் பெண்ணைக் கவர்ந்து வந்து
வம்பு உலாம் கடி காவில்	புதுமை மாறாத தும்பரிமளத்தை யுடையதுமான (அசோக)வனத்திலே
சிறை ஆ வைத்ததே	சிறையிலிருப்பாம்படி வைத்திருந்த இதுதானே
குற்றம் ஆயிற்று காணீர்	அபராதமாய்த் தலைக் கட்டிற்றுக்கிடீர்;
	(அதுவே நிமித்தமாக)
கும்பனோடு நிகும்பனும் பட்டான்	கும்பனும் நிகும்பனும் மாண்டொழிந்தனர்;
கூற்றம்	(இராவணன் கையில் முன்பு தோற்றிருந்த) யமனானவன்
மானிடம் ஆய் வந்து தோன்றி	மநுஷ்ய வேஷத்தைப் பூண்டு கொண்டு இங்ஙனே வந்துதோன்றி
எம்மை	எங்களை
அம்பினால்	பாணத்தினால்
கொன்றிடுகின்றது	கொல்லுகின்றான்;

அஞ்சினோம், தடம் பொங்கத்தம் பொங்கோ.

* * *—வாரீர்!, எங்கள் இராவணனுடைய பெருமை எப்படிப்பட்டது தெரியுமோ? பதிசைகளிலுஞ் சென்று வெற்றி பெற்றுச் செம்பொன் முடி கவித்துக் கொண்டவன். அனைவரும் அவன் கீழே கைகட்டிக் காத்திருக்க வேண்டியவர்கள்; அப்படி யிருக்கச்செய்தேயும், ஸீதாபிராட்டியாகிற ஒரு தெய்வப்பெண்ணைக் கவர்ந்துவந்து இவ்வசோகவனத்திலே சிறைவைத்திட்டதே அவனுக்குப் பெரிய அபராதமாகத் தலைக்கட்டிற்று. அதுவே காரணமாகக் கும்பன் நிகும்பன் முதலான பெரிய ரணவீரர்களும் மாண்டொழியலாயிற்று. இராவணன் கையிலே முன்பு தோற்றுக்கிடந்த ம்ருத்யுவானவன் அந்தவுருவத்

http://acharya.org

துடன் இங்குவரவல்லனல்லனாய் இராமனென்னும் பெயராலே ஒரு மானிட வடிவு கொண்டு வந்து நின்று எங்கள்மேல் சரவர்ஷத்தை வர்ஷிக்கின்றான்; குற்றமற்றவர்களான எங்களது உயிரையும் கொள்ளை கொள்வீர்களோ வென்று அஞ்சுகின்றோம்; நாங்கள் எங்கள் தோல்விக்கும் உங்கள் வெற்றிக்கும் மேலெழுத்திட்டுக் கூத்தாடுகின்றோமாதலால் எங்களை விட்டொழியவேணும் என்றார்களாயிற்று.

கூற்றம் மானிடமாய் வந்து தோன்றி=இராவணன் நெடுநாள் தவம்புரிந்து வரப்ரஸாதம் பெறும்போது மானிடரை ஒரு பொருளாகவே மதியாமல் அவர்களைத் தவிர்த்து மற்று யாராலும் தனக்குச் சாவு நேரிடாமை வேண்டினனாதலால் அவன் உபேக்ஷித்த மானிடத்தில் திருமால் வந்து தோன்றினனென்க. யமன்றானே இப்படி மானிடமாய் வந்து தோன்றினனாக இவர்கள் கூறுவது தங்கள் சாதி மொழிக்கு ஏற்றதாம். கூற்றம்=உடலையும் உயிரையும் வேறு வேறு கூறாக்குபவன் என்ற காரணப் பெயர். .... (ரு.)

ஓதமாகடலைக் கடந்தேறி
உயர்கொள்மாக்கடிகாவை யிறுத்து *
காதல்மக்களும் சுற்றமுங்கொன்று
கடியிலங்கை மலங்கவெரித்து *
தூதுவந்தகுரங்குக்கே உங்கள்
தோன்றல்தேவியை விட்டுக்கொடாதே *
ஆதர்நின்று படுகின்றதந்தோ!
அஞ்சினோந்தடம்போங்கத்தம்போங்கோ. (சு)

ஓதம்	அலைகளையுடைய
மா கடலை	பெரிய கடலை
கடந்து ஏறி	தாண்டி,
உயர்கொள் மா கடி காவை இறுத்து	உயர்த்தியையுடைத்தாய்ப் பெரிதாய் மணம்மிக்கதான அசோகவனத்தை முறித்து
காதல்	(இராவணனுடைய) அன்புக்கு இலக்கான
மக்களும்	அக்ஷகுமாரன் முதலிய புத்திரர்களையும்
சுற்றமும்	அந்தரங்க சேவகர்களையும்
கொன்று	கொலை செய்து
கடி இலங்கை மலங்க எரித்து	காவலையுடைத்தான லங்கையானது கலங்கும்படியாகத் தீக்கொளுவி
தூது வந்த	(பிராட்டிபக்கல்) தூது சொல்லவந்த
குரங்குக்கே	அநுமான்கையிலேயே
உங்கள் தோன்றல் தேவியை	உங்கள் ஸ்வாமியான பெருமாளுடைய தேவியான ஸீதையை
விட்டுக் கொடாதே	ஸமர்ப்பியாமல்
ஆதர்	அவிவேகிகளான நாங்கள்
நின்று படுகின்றது அந்தோ	இப்படி தவண்டு நின்று அகர்த்தப்பட வேண்டிற்றாயிற்று ஐயோ!;

அஞ்சினோம், தடம் பொங்கத்தம் பொங்கோ.

* * *—வாரீர் வானர வீரர்காள்!, முன்னமே இங்குத் தூதுவந்த அநுமானென்னும் ஓர் வானர வீரன் ஒருவராலும் கடக்க முடியாத கடலைக்கடந்து வந்து அசோகவனத்தையும் முறித்து, பல போர்வீரர்களையும் சேனைத்தலைவர்களையும் அக்ஷகுமாரனையும் கொன்று லங்காதஹநமும் செய்து ஆக இப்படியெல்லாம் காட்டின வீரத்தைக்கண்டு 'தூதுவந்த குரங்கின் சக்தியே இதுவானால் இதனை அனுப்பின பிரபுவின் நிலைமை எப்படியிருக்கும்!' என்று ஊஹித்துணர்ந்து அப்போதே 'இனி நாம் உயிர்வாழ்ந்திருக்கவேண்டில் ஸீதையை விட்டுக்கொடுப்பதே உரியது' என்று துணிந்து அது செய்திருக்கவேண்டும்; அந்தோ! அது செய்யாமையினாலே இப்போது அநர்த்தப்படவேண்டிற்றாயிற்று; அஞ்சுகின்றோம் என்கிறார்கள்.

[ஓதமாகடலைக் கடந்தேறி] ஜடாயுவின் தமையனான ஸம்பாதியினால் ஸீதையின் வரலாற்றினையறிந்த வானரவீரர்கள் மிகமகிழ்ந்து மஹேந்திர மலையையடைந்து அங்கே தெற்கு ஸமுத்ரத்தைக்கண்டு அதைக்கடக்கும் வழியறியாமல் வருந்தப்பட்டுக்கிடக்க, அப்போது ஜாம்பவான் அநுமானைப் பார்த்து 'பகவந்! நீரே இக்கடலைத்தாண்ட வல்லமையுள்ளவர்; மற்றொருவரால் இது முடியாது; நீர் பிறக்குங்காலத்தில் ஸூர்யனைப் பார்த்து அவனைப்பிடித்துப் பக்ஷிப்பதாக ஆகாசத்திற் கிளம்பிப்போனீர்; இந்திரன் அதைக்கண்டு உம்மை வஜ்ராயுதத்தினாலடித்தான்; அதனால் கன்னத்தில் அடிபட்டுக் கீழே விழுந்தீர்; அதைக்கண்டு உம்முடைய தகப்பனாகிய வாயு கோபித்துத் தன்னுடைய ஸஞ்சாரத்தை நிறுத்திவிடவே ஜனங்கள் காற்றில்லாமல் வெகுவாய் மாண்டு போகத் தொடங்கின; அப்பொழுது ப்ரஹ்மா உம்மிடம் வந்து வாயுவின் ஸந்தோஷத்தின் பொருட்டு நீர் சிரஞ்ஜீவி யென்றும் ஒருவராலும் அழிக்க முடியாதவரென்றும் ஒரு அஸ்த்ரமும் உம்மை வாதியாதென்றும் (ப்ரஹ்மாஸ்த்ரத்தினால் மாத்திரம் ஒரு முஹூர்த்தம் கட்டுப்படுவீரென்றும்) உமக்கு அஸாத்யமான காரியம் ஒன்றுமே கிடையாதென்றும் இப்படி பலவிதமான வரங்களைக் கொடுத்திருக்கிறார்; ஆகையால் இப்போது வானரர்களுடையவும் இராகவனுடையவும் துயரத்தை நீரே போக்கக்கடவீர்; எழுந்து இக்கடலைக் கடந்து ஸீதாதேவியைப் பார்த்து வருவீராக' என்று புகழ்ந்து பேச, இப்புகழ் மொழியால் அநுமான் மிக்க உத்ஸாஹமடைந்து 'நானே இக்கடலைத்தாண்டக் கடவேன்; நீங்கள் யோசிக்கவேண்டாம்' என்று மற்றவர்கட்குத் தைரியஞ்சொல்லி ஸமுத்ரத்தைத் தாண்டுகைக்காகப் பெரியவடிவங்கொண்டு வானத்தையளாவி மஹேந்திரகிரியின் சிகரத்தை ஏறி அங்கிருந்து ஆகாயமார்க்கமாகக் கிளம்பிக் கடலைக் கடக்கும்போது, இடையில் தனக்கு இளைப்பாறுமிடமாக வந்த மைநாக மலையை நன்மொழிகூறி விலக்கி, தனது நிழலைப் பிடித்துத் தன்னைத் தடுத்துக் கொல்ல வந்த ஸிம்ஹிகை யென்னும் அரக்கியின் வாயினுட்புகுந்து அவளுடலைப்பிளந்து வெளிப்பட்டு, தேவர்களின் தூண்டுதலால் தனது பலத்தை பரீக்ஷிக்க வந்த ஸுரஸை யென்பவள் தன்னை விழுங்குதற்கு வாய் திறந்த

http://acharya.org

வளவும் தானும் வளர்ந்து உடனே நுண்ணிய வடிவுகொண்டு அவள் வாயினுட்புகுந்து வெளிப்பட்டு அவளைச் செருக்கடக்கி அப்பாற்சென்று அன்று ஸாயங்காலம் ஸமுத்ரத்தின் தென்கரையை யடைந்தார் என்ற விவரணமறிக.

[உயர்கோள்மாக் கடிகாவையிறுத்துக் காதல்மக்களும் சுற்றமுங்கொன்று.] பிராட்டி அடையாளமாகக் கொடுத்த சூடாமணியை அநுமான் ஆதரத்துடன் வாங்கிக்கொண்டு பிராட்டியை வணங்கி விடைபெற்று, இராவணனுடைய வலிமையைத் தெரிந்து கொள்வதற்காகவும் தன் வரவை அரக்கர்கட்குப் பிரசுரஞ் செய்தற்காகவும் அசோகவனத்தை முறிக்க, அச்செய்தியைக் காவலாளராலுணர்ந்த இராவணன் பல போர்வீரர்களையும் ப்ரஹஸ்தன் மகனான ஜம்புமாலியையும் விரூபாக்ஷன் முதலான ஐந்துசேனைத் தலைவர்களையும் தன் மகனான அக்ஷகுமாரனையும் சேனைகளுடனே முறையே ஏவியனுப்ப, திருவடி அவர்களெல்லாரையுங் கொன்றுவிட்டு அதற்குமேல் வந்த இந்திரஜித்துடன் வெகு நாழிகை சண்டை செய்ய, அவன் இவர்க்குச் சாவில்லையென்றறிந்து இவரை ப்ரஹ்மாஸ்த்ரத்தினால் கட்ட, அதனால் இவர் கட்டுண்டு கீழேவிழ, ராக்ஷஸர்கள் இவரைச் சணற்கயிற்றினால் கட்டி இராவணனிடமிழுத்துக்கொண்டு போனார்கள். [கடியிலங்கை மலங்க எரித்து.] இராவணன் ஹநுமானைப்பார்த்து முன்பு ஒருகால் தான் கைலாஸம் போகும்போது அங்கு நந்திகேச்வரன் வாநரரூப மெடுத்துநிற்க, அதனைத் தான் பரிஹஸிக்க, அந்த நந்தி 'இம்மாதிரி குரங்கே உன் பட்டணத்தை அழிக்கப்போகிறது' என்று சொல்லியிருந்ததை ஸ்மரித்து 'அது தானோ இது!' என்று அஞ்சி, பக்கத்திலிருந்த ப்ரஹஸ்தனையிட்டு இதன் வரலாற்றைக் கேட்கச் சொல்ல, திருவடி உள்ளபடியே செய்திகளைச்சொல்லி இராவணனுக்கு ஹிதோபதேசமுஞ் செய்கையில், அவன் மிக்க கோபமடைந்து 'இக் குரங்கைக் கொன்றுவிடுங்கள்' என்று கட்டளையிட்டான். விபீஷணன் இதைக்கேட்டு 'அண்ணா! தூதனைக் கொல்லலாகாதென்று சாஸ்த்ரம் சொல்லும்; ஆதலால் இவனைக்கொல்ல வேண்டா; ஏதாவது ஓர் அங்கத்தில் பங்கஞ்செய்து அனுப்பலாம்' என்று சொல்ல, அதை இராவணன் அங்கீகரித்து 'வாலைக் கொளுத்திவிடுங்கள்' என்று கட்டளையிட்டான். அப்படியே ராக்ஷஸர்கள் வாலில் சீலையைச் சுற்றி எண்ணெயில் நனைத்துத் தீ மூட்டிப் பேரியடித்துக்கொண்டு நாற்சந்திகளில் எல்லாரும் வேடிக்கைபார்க்கும்படி பிடித்துக்கொண்டுவர, அதை ராக்ஷஸிகள் ஸீதைக்கு அறிவிக்க, ஸீதாதேவி "அநுமானுக்கு வாலில் தீ குளிரக்கடவது" என்று அக்நிதேவதையைப் பிரார்த்திக்க, அதனால் ஹநுமானுக்கு ஒருபாதையும் நேரிடாமலிருக்க, தன்னைப் பிடித்துக்கொண்டு வருகிற ராக்ஷஸர்களை அடித்துக் கொன்று தான் மேலேகிளம்பி வீடுகள்தோறும் தீமூட்டி இலங்கையை முழுதும் தஹித்துவிட்டு அரக்கர்களையும் இராவணனையும் மிகவும் வியாகுலப்படுத்திப் பின்பு தன் வாலைக் கடலில்தோய்த்து அணைத்துவிட்டார் என்பதும் இங்கு அறியத்தக்கது.

தோன்றல்—ஸ்வாமி. ஆதர்—அறிவில்லாதவர். .... (௧)

http://acharya.org

தாழமின்றி முந்நீரையஞ்ஞான்று
  தகைந்ததேகண்டு வஞ்சிநுண்மருங்குல் *
மாழைமான்மட நோக்கியைவிட்டு
  வாழகில்லா மதியின்மனத்தானை *
ஏழையை யிலங்கைக்கிறைதன்னை
  யெங்களையொழியக் கொலையவனை *
சூழுமாநினை மாமணிவண்ணா!
  சொல்லினோந்தடம்பொங்கத்தம்பொங்கோ. (எ)

மா மணி வண்ணா	நீலமணிநிறத்துறைய பெருமானே!
தாழம் இன்றி	காலதாமதமில்லாமல்
முந்நீரை	கடலை
அஞ்ஞான்று	அன்றைக்கு
தகைந்ததே கண்டு	அணைசெய்ததொன்றையே கண்டு,
வஞ்சி நுண் மருங்குல்	வஞ்சிக்கொடிபோன்று நுட்பமான இடையை யுடையளாய்
மாழை மான் மட நோக்கியை	பேதைமைக்குணமுள்ள மானின் பார்வை போன்ற கபடமற்ற கண் பார்வையை யுடையளான ஸீதையை
விட்டு	(தேவரீர் ஸந்நிதியிலே) ஸமர்ப்பித்துவிட்டு
வாழ கில்லா	வாழ்வதற்கு ப்ராப்தியற்ற
மதி இல் மனத்தானை	மதிகெட்டவனும்
ஏழையை	தகாத விஷயத்தில் நசை கொண்டவனுமான
இலங்கைக்கு இறை தன்னை அவனை	அந்த இராவணனை
எங்களை ஒழிய கொலை	எங்களைத் தவிர்த்துக் கொல்லவேணும்;
சூழும் ஆநினை	அடியோங்கள் தேவரீரைச் சூழ்ந்துகொண்டு ப்ரார்த்திக்கிறவிதனைத் திருவுள்ளம் பற்றவேணும்;
சொல்லினோம்	எங்கள் கோரிக்கையை விண்ணப்பஞ்செய்துகொண்டோம்;

தடம் பொங்கத்தம் பொங்கோ—.

* * *—சிறிதும் தாமதமின்றிக் கடலிலே அணைகட்டிக் கடந்து வருவதென்பது எளிதான காரியமன்றே; மிக அரிதான அக் காரியத்தையும் செய்து விட்டார்களென்பதை அறிந்தபின்பாவது 'ஓ இவர்கள் ஸாமாந்ய மநுஷ்யரல்லர்; தெய்வங்களாகவே யிருக்கவேண்டும்; இல்லையேல் இவ்வருந்தொழில் செய்யக் கூடுமோ?' என்று நினைத்து 'இனி நாம் ஸீதையை ஸமர்ப்பித்துவிட்டு உயிர்தப்பி உய்வதே உரியது' என்று கொண்டு அங்ஙனே செய்து வாழ்ந்து போகலாமே ராவணன்; அப்படி வாழமாட்டாதே 'நாம் இலங்கைக்கு அதிபதியன்றோ? நம்மையும் அடர்ப்பாருண்டோ?' என்று அஹங்காரத்தையே மேற்கொண்டிருந்த அப்பாவியை, மாமணிவண்ணா! இஷ்டப்படி கொன்றுவிடாய்; அக்கொலையில் நின்றும் எங்களைமாத்திரம் தவிர்த்தருளவேணும் என்கிறார்கள்.

தாழம்—தாழ்வு; காலவிளம்பம்.

பிராட்டியின் வடிவழகையும் கண்ணழகையும் அநுபவிக்கவுரியவன் இராமபிரானொருவனே யன்றி நாம் எங்கே! அவை எங்கே! என்று இராவணன் நினைத்

http://acharya.org

திருக்கவேணு மென்பது தோன்ற ‘வஞ்சிநுண்மருங்குல் மாழைமான் மடநோக்கியை’ என்றனர். கள்ளங் கபடமின்றிக் கலையையும் அச்சத்தையுங் கொள்ளும் மகளிர் கண்ணோக்கிற்கு வெருண்ட மானின் மருண்ட பார்வையை உவமை கூறுதல் மரபு. இங்கு இது கூறியதனால், அசோகவனத்தையும் அங்குள்ளாரையுங் கண்டவளவில் பிராட்டி மருண்ட நோக்குடையளாயின ளென்பதுதோன்றும். மாழை—அறிவின்மை, அழகுமாம். ஏழை—தகாத விஷயத்தில் வீணை சாபல்யங் கொண்டவன்.

சூழும் ஆ ரிணை=நாங்கள் இத்தனைபேர் சூழ்ந்துகொண்டு யாசிக்கின்றோமே இதனைத் திருவுள்ளம் பற்றவேணுமென்கை. .... (எ)

மனங்கோண்டேறும் மண்டோதரி முதலா
அங்கயற்கண்ணினார்களிருப்ப *
தனங்கோள் மென்முலைநோக்கமொழிந்து
தஞ்சமேசிலதாபதரென்று *
புனங்கோள்மென்மயிலைச் சிறைவைத்த
புன்மையாளன் நெஞ்சிற்புகவெய்த *
அனங்கனன்ன திண்டோ ளெம்மிராமற்கு
அஞ்சினோந்தடம்பொங்கத்தம்போங்கோ. (அ)

மனம் கொண்டு ஏறும்	நெஞ்சைக் கவரும்படியான அழகுடையவர்களான
மண்டோதரி முதலா	மந்தோதரி முதலான
அம் கயல் கண்ணினார்கள்	அழகிய மீன்போன்ற கண்களையுடையரான மனைவியர்பலர்
இருப்ப	குறையற்றிருக்கச் செய்தேயும்,
தனம் கொள்	தனக்குச் செல்வமாயிருக்கின்ற
மெல் முலை	(அவர்களுடைய) அழகிய முலைகளிலே
நோக்கம் ஒழிந்து	கண் செலுத்தாமல்,
சில தாபதர் தஞ்சமே என்று	(இப்பிராட்டிக்காகப் பரிந்து வரக்கூடியவர்கள்) சில காட்டாள்கள்தானே, அவர்கள்சரக்கோ; என்று அவலீலையாக நினைத்துக் கொண்டு
புனம் கொள் மென் மயிலை சிறை வைத்த	காட்டில் தன்னிஷ்டப்படி திரிகின்ற அழகிய மயில் போன்றவளான பிராட்டியைச் சிறையிலே வைத்தவனாய்
புன்மையாளன்	நீசனான இராவணனுடைய
நெஞ்சில்	மருமத்திலே
புக	உறைக்க
எய்த	அம்பு செலுத்தியவரும்
அனங்கன் அன்ன	மன்மதனைப்போன்ற அழகுடையவரும்
திண் தோள்	வலிமைமிக்க திருத்தோள்களையுடையவருமான
எம் இராமற்கு	எங்களிராமபிரானுக்கு
அஞ்சினோம், தடம் பொங்கத்தம் பொங்கோ.	

http://acharya.org

* * *—இராவணன் தன்னுடைய போகத்திற்கு உரியவிஷயம் இல்லாமையாலே வழியல்லா வழியிற் புகுந்தானென்று சொல்லுதற்கு இடமிருந்தாலாவது குற்றமில்லையென்னலாம்; தன் மனத்தைக் கவரும்படியான அழகுவாய்ந்த மந்தோதரி முதலான மாதர் பலர் இருக்கச் செய்தேயும் அவர்களின் அவயவங்களைப்பேணாதே, நன்னிலத்திலே வளரும்மாவின் சாயல்போன்ற சாயலையுடையளான பிராட்டியைக் கொணர்ந்து சிறைவைத்திட்டான் பாவி; இவனில் விஞ்சின நீசன் உலகில் இல்லை. அப்படிப்பட்டவனுடைய மார்பிலே உறைக்கும்படியாக அம்புகளைப் பொழிந்த இராமபிரானுடைய வீரத்துக்கு அஞ்சுகின்றோமென்கிறார்கள்.

தனங்கோள் மென்முலை—'ஸ்தநம்' என்னும் வடசொல் தனமெனத் திரிந்தது. மாதர்க்குச் செல்வம் முலையாதலால் 'தனங்கொள் மென்முலை' எனப்பட்டது.

தஞ்சமேசில தாபதர் என்று—சில தாபதர் தஞ்சமோ என்று நினைத்தானும் இராவணன். அதாவது—' இந்த ஸீதையை நாம் அபஹரிக்கிறோமே, இவளைச் சேர்ந்தவர்கள் பரிந்து எதிரிட்டுவந்தால் நமக்கு அநர்த்தமாகுமோ?' என்று ஆலோசிக்கப் புகுந்து, 'மரவுரியும் சடையுமாய்த் தாபஸ வேஷங்கொண்டிருக்கின்ற ராமலக்ஷ்மணர்கள் இவளுக்குத் தஞ்சமாக வரக்கூடும்; அவர்கள் நமக்கு ஒருசரக்கோ? என்று அவர்களை அபதார்த்தமாக நினைத்துவிட்டு அபஹரித்து வந்தானென்றபடி.

புன்மையாளன்—அற்பன். அநங்கன்—மன்மதன்; வடசொல். (அ.)

புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப்போதில்
பொங்கெரிக்கிரைகண்டவனம்பில் *
சரங்களே கொடிதாயடுகின்ற
சாம்பவானுடன் நிற்கத்தொழுதோம் *
இரங்குநீ யெமக்கெந்தை பிரானே!
இலங்கு வெங்கதிரோன்றன் சிறுவா *
குரங்குகட்கரசே! யெம்மைக்கொல்லேல்
கூறினோந்தடம் பொங்கத்தம் பொங்கோ. (கூ)

ஓர் மாத்திரை போதில்	ஒரு கண்ணிமைப்பொழுதில்
புரங்கள் மூன்றும்	முப்புரங்களையும்
பொங்கு எரிக்கு	அக்நிஜ்வாலைக்கு
இரை கண்டவன்	இரையாக்கின ருத்ரனுடைய
அம்பில்	அம்புகளிற்காட்டிலும்
சரங்கள்	இந்த ராமபாணங்கள்
கொடிது ஆய்	கொடியவைகளாய்
அடுகின்ற	பொசிக்கின்றன;
சாம்பவான்	ஸ்ரீஜாம்பவான்
உடன் நிற்க	புருஷகாரமாகக் கூடநிற்க
தொழுதோம்	வணங்குகின்றோம்;
எந்தை பிரானே	எங்கள் நாயகனே!

http://acharya.org

இலங்கு வெம் கதிரோன் தன் சிறுவா	விளங்குகின்ற ஸூர்யனுக்குப் புதல்வனாய்
குரங்குகட்கு அரசே	வாநரங்கட்குப் பிரபுவான ஸுக்ரீவனே!
எமக்கு நீ இரங்கு	எங்கள் விஷயத்திலே நீ இரங்கியருளவேணும்;
எம்மை கொல்லேல்	எங்களைக் கொல்லா தொழியவேணும்;
கூறினோம்	இந்தப் பிரார்த்தனையையே அடுத்தடுத்துச் சொல்லுகின்றோம்;

தடம் பொங்கத்தம் பொங்கோ—.

* * *—ஸ்ரீஜாம்பவானைப் புருஷகாரமாகக் கொண்டு ஸுக்ரீவமஹாராஜரைச் சரணம்புகுகிறார்கள் அரக்கர். முப்புரங்களையும் ஒரு மாத்திரைப்பொழுதில் எரித்த சிவபிரானது பாணத்திற்காட்டிலும் ராமபாணங்கள் கொடியவையாயிருக்கையாலே மிக அஞ்சுகின்றோம்; ஆதித்யனுக்குப் புதல்வனான ஸுக்ரீவ மஹாராஜனே! நீர் குரங்குகட்கெல்லாம் அரசராதலால் அக்குரங்குகளெல்லாம் நீரிட்ட வழக்காயிருக்கக் கடவனவாகையாலே அவை எங்கள்மேற் பாயாதபடி திட்டஞ்செய்வீரென்று ஸ்ரீஜாம்பவானைப் புருஷகாரமாகக் கொண்டு உம்மைத் தொழுகின்றோம்; எம்மைக் கொல்லாதபடி இரங்கியருளவேணும் என்கிறார்கள்.

புரங்கள் மூன்றும் பொங்கெரிக்கிரைகண்ட வரலாறு:—முற்காலத்தில் தாரகாஸுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று வானத்துப் பறந்து செல்லுந் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களை யடைந்து மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த விடங்களிற் பறந்து சென்று பலவிடங்களின்மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கிவருகையில் அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலானோருடைய வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ர ஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில் நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்த அக்நியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக்கொண்டு யுத்த ஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும் போது சிரித்து அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன் என்பதாம்.

ஓர் மாத்திரைப்போதில்='கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் மாத்திரைக்களவாம்' என்பர் தமிழர்.

இலங்குவெங்கதிரோன்றன் சிறுவா! என்றதன் விவரணம்;—மேருமலையில் நான்முகக் கடவுள் யோகம் பயின்று கொண்டிருக்கையில் அவரது கண்களில் நீர்த்துளி ததும்பியது; அதை அவர் கையாலெடுத்துக் கீழே யெறிந்தனர். அவ்வளவிலே அந்த நீர்த்துளி ஒரு குரங்காக மாறியது. அக்குரங்கு பிரமதேவருக்கு ஒப்பான மஹிமையும் மிக்க வேகமுமுடையோனாகி அம்மலையில் புஷ்பங்களும் பழங்களும் நிறைந்த விருக்ஷங்களடர்ந்த வனங்கள் தோறும் தாவித்

http://acharya.org

திரிந்து விளையாடிக்கொண்டே காலங்கழித்து வந்தது. அஃது ஒருநாள் நாவறண்டு நீர் வேண்டி அந்த மேருமலையின் வடபக்கஞ்சென்றது. அங்கு ஓர் தடாகத்தைக்கண்டு அதன் கரையில் நின்று தண்ணீரை எட்டிப்பார்க்க, அதனுள் தனது நிழல் தோன்றுவதைக் கண்ணுற்றுத் தனக்குப் பகையான மற்றொரு வானரம் அக்கயத்தினுள் குடிகொண்டு தன்னையிகழ்கின்றதெனக் கருதி அதனை வெல்லுமாறு அம்மடுவிற்குதித்தது. குளத்தில் விழுந்து மூழ்கி மெல்ல நீந்திக் கரையேறியவளவில் அது ஓர் அற்புதமான அணங்காக மாறியது. காண்போர் மனத்தைக்கவரவல்ல பொற்கொடியென ஒரு பெண்மணி தனது வடிவழகினால் எல்லாத் திசைகளையும் ஒளி பெறச்செய்து கொண்டு அப்பொய்கைக் கரையில் நிற்குங்கால், தேவேந்திரன் பிரமதேவரிடஞ்சென்று அவரையடிபணிந்து பூஜித்துத் திரும்பி அவ்வழியாக வந்து கொண்டிருந்தான். அதே தருணத்தில் ஸூரியபகவானும் எங்குஞ் சுற்றித்திரிந்து இந்த ஸுந்தரி நிற்குமிடத்தருகே வரலாயினன். இந்திரனும் ஆதித்யனுமாகிய இரண்டு தேவர்களும் அப்பெண்மணியை ஏககாலத்தில் கண்ணுற்றுக் காம பரவசர்களாகி மெய்மறந்து மனங்கலங்கி நின்றனர். உடனே இந்திரனது வீரியம் ஸ்கலிதமாக, அதனை அவன் அவளது சிரஸில் விழுமாறு செய்தனன். அஃது அவ்வாறு முடிமீது விழாது வாலிலே வீழ்ந்தது. தேவர்களது வீரியம் ஒரு பொழுதும் வீணாவதில்லையாதலின் உடனே அதுமிக்கபலசாலியான ஒருவானரமாகமாறியது. வாலினின்று உற்பவித்தகாரணத்தினால் அவ்வானரத்துக்கு வாலியெனவே பெயர் ப்ரஸித்தமாயிற்று. ஆதித்யனும் அவ்வாறே அனங்கனுக்கு வசமாகித் தனது வீரியத்தை அவளது கழுத்தில் வீழ்த்தினன். க்ரீவையில் [கழுத்தில்] வீழ்ந்த அவ்வீரியம் ஸுக்ரீவனெனப் பெயர்பெற்ற வானரமாகிவிட்டது. இவ்வரலாற்றை உத்தர ஸ்ரீராமாயணம் நாற்பத்து மூன்றும் ஸர்க்கத்தில் விரிவாகக் காண்க. (கூ)

அங்குவானவர்க் காகுலம்தீர
 அணியிலங்கை யழித்தவன்றன்னை *
போங்குமாவலவன் கலிகன்றி
 புகன்றபோங்கத்தங்கோண்டே * இவ்வுலகினில்
எங்கும்பாடி நின்றாடுமின் தோண்டீர்!
 இம்மையேயிடரில்லை * இறந்தால்
தங்குமூரண்டமே கண்டுகோண்மின்
 சாற்றினேனிந்தடம்போங்கத்தம்போங்கோ. (கய)

தொண்டீர் — பகவத்பக்தர்களே!,

அங்கு வானவர்க்கு ஆகுலம் தீர — தேவலோகத்திலுள்ள தேவதைகளின் மனக்குழப்பம் தீரும்படி

அணி இலங்கை அழித்தவன் தன்னை — அழகிய லங்காபுரியை அழித்தருளின பெருமான் விஷயமாக,

http://acharya.org

பொங்கு மா வலவன் கலிகன்றி	கீர்த்தியையுடைய 'ஆடல்மா' என்னும் குதிரையை நடத்த வல்லவரான ஆழ்வார்
புகன்ற	அருளிச்செய்த
பொங்கத்தம் கொண்டு	'பொங்கத்தம் பொங்கோ' என்ற இந்த வெற்றிப் பாசுரங்களைக்கொண்டு
இ உலகினில்	இவ்விபூதியிலே
எங்கும்	எல்லாவிடங்களிலும்
பாடி நின்று ஆடுமின்	பாடிக்கொண்டு கூத்தாடுங்கள்; (இது செய்தால்)
இம்மையே இடர் இல்லை	(உங்கட்கு) இப்பிறவியில் ஒருவகைத்துன்பமுமுண்டாகாது;
இறந்தால்	மரணமானபின்பு
தங்கும் ஊர்	நீங்கள் போய்ச்சேர்ந்து நிலைநிற்குமிடம்
அண்டமே	பரமபதமேயாம்;
கண்டு கொண்மின்	(இதனை அநுபவத்தாலே) கண்டு கொள்ளுங்கள்;
சாற்றினோம்	இதனை எல்லாருமறியச் சொன்னோம்;
தடம் பொங்கத்தம் பொங்கோ	வெற்றியோ வெற்றி.

* * *—இராவணனுடைய கொடுமையினாற் குடியிழந்து வருந்தின தேவ ஜாதிகள் செவ்வனே குடிவாழுமாறு இலங்கையை நீறுபடுத்தின இராமபிரானுடைய வீரத்தை, தோற்ற அரக்கர்களின் பாசுரத்தாலே கவிபாடின இத்திருமொழியைக்கொண்டு தொண்டர்களே! இவ்வுலகில் எங்கும் பாடியாடுங்கோள். அங்ஙனே செய்தால் இம்மையில் ஒரு இடருமின்றி வாழப் பெறுவீர்கள்; இறந்தபின்போ* மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே காண்மின்; இதனை எல்லாருமறியச் சொன்னோம் என்று இத்திருமொழிகற்றார்க்குப்பயனுரைத்துத்தலைக்கட்டினாராயிற்று.

"அங்கவ்வானவர்க்கு" எனப்பாடம் வழங்கும். ஆகுலம்—வட சொல் விகாரம். [பொங்குமாவலவன்] இவ்வாழ்வார் தனதாகக் கொண்டு ஏறிச் செலுத்திய சிறந்த குதிரைக்கு 'ஆடல்மா' எனப்பெயர்வழங்கும்; அதுவே இங்குப் பொங்குமா எனப்பட்டது. வலவன்—வல்லவன், ஸமர்த்தன்; பாகன் என்றபடி.

பொங்கத்தம்='தடம் பொங்கத்தம் பொங்கோ' என்றதன் ஏகதேசானுகாரம்.

கீழ் ஒன்பது பாசுரங்களின் முடிவிலும் "தடம் பொங்கத்தம் பொங்கோ" என்றது இராமபிரான் வெற்றியை ராக்ஷஸர்கள் எடுத்துரைத்தபடி. இப்பாட்டின் முடிவில் 'தடம் பொங்கத்தம் பொங்கோ' என்றது எம்பெருமான் வெற்றியை ஆழ்வார்தாம் உரைக்கிறபடி. இத்திருமொழியானது இவ்விருள் தருமாஞாலத்தைத் தோற்பித்து வெற்றி பெறும்படியைச் சொல்லுகிற தென்பாருமுளர். .... (௧௦)

அடிவரவு:—இரக்கம் பத்து தண்டக எஞ்சல் செம்பொன் ஓதம் தாழம் மனம் புரங்கள் அங்கு ஏத்து.

இரண்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—மூன்றாந்திருமொழி,

ஏத்துகின்றோம் நாத்தழும்ப.

கீழ்த்திருமொழிபோலவே இத்திருமொழியும் இலங்கையரக்கர்களின் பாசுரமாய்ச் செல்லுகிறது. தோற்றவர்கள் தங்கள் தோல்விக்கு ஈடாக ஆடுவதொரு கூத்துக்குக் குழமணிதூரம் என்று பெயர்போலும். அக்கூத்தையாடுகின்ற அரக்கர்களின் நிலைமையிலே நின்று ஆழ்வார் ஸ்ரீராம விஜயத்தைப் பேசியநுபவிக்கிறாராயிற்று.

கீழ்த்திருமொழியில் வந்த 'தடம் பொங்கத்தம் பொங்கோ' என்றதற்கும், இத்திருமொழியில் வரும் 'குழமணிதூரம்' என்றதற்கும் இலக்கணமுமிலக்கியமும் இவ்வருளிச்செயலே போலும். .... *

ஏத்துகின்றோம் நாத்தழும்ப இராமன் திருநாமம் *
சோத்தநம்பீ! சுக்கிரீவா! உம்மைத் தொழுகின்றோம் *
வார்த்தைபேசீ ரெம்மை உங்கள்வானரம் கொல்லாமே *
கூத்தர்போல வாடுகின்றோம் குழமணிதூரமே. (க)

இராமன்	இராமபிரானுடைய	உங்கள் வானரம்	நீங்களிட்ட வழக்காயிருக்கின்ற வாநரவீரர்கள்
திருநாமம்	திருநாமங்களை	எம்மை கொல்லாமே	எங்களைக் கொல்ல நினையாதபடி
நா தழும்ப	நாக்குத் தடிக்கும்படி	வார்த்தை பேசீர்	ஒருவார்த்தையருளிச் செய்யவேணும்;
ஏத்துகின்றோம்	வாயாரச்சொல்லித் துதிக்கின்றோம்;	கூத்தர் போல	கூத்தாடக்கற்றவர்கள் போல
நம்பீ சுக்கிரீவா	ஸுக்ரீவமஹாராஜரே!,	குழமணிதூரம் ஆடுகின்றோம்	உங்கள் வெற்றியும் எங்கள் தோல்வியுந்தோற்ற ஆடுகின்றோம்.
சோத்தம்	இதோ அஞ்ஜலி;		
உம்மை தொழுகின்றோம்	உம்மைத் திருவடிகளில் விழுந்து வணங்குகின்றோம்;		

* * *—பாசுரந்தொடங்கும்போதே "ஏத்துகின்றோம் நாத்தழும்ப இராமன் திருநாமம்" என்ற அழகை என் சொல்வோம்!. "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி = ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:— ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி." [இராமபிரான் அரசாட்சி புரிந்தகாலத்திலே ஜனங்களினத்தின் வாயிலும் ஸ்ரீராமநாமப்ரஸம்ஸை தவிர வேறொன்றும் வந்ததில்லை; உலகமே ராமமயமாக ஆய்விட்டது] என்றாற்போலே இலங்கையும் ராமநாம

http://acharya.org

மயமாக ஆய்விடுகின்றதிப்போது. காக்குத்தடிக்கும்படி ஸ்ரீராமநாமங்களையே சொல்லித் துதிக்கின்றோமென்கிறார்கள்.

நம்பிசுக்கிரீவா! சோத்தம்—அஞ்ஜலிபண்ணுமவர்கள் அதுக்கு அநுகூலமாகத் தாழ்ச்சிதோற்றச் சொல்லுவதொரு சப்த விசேஷம் சோத்தம் என்பதாம். 'ஸ்தோத்திரம்' என்னும் வடசொல் சோத்தமெனத்திரிந்துகிடக்கிறது என்பாருமுளர். ஸுக்ரீவ மஹாராஜனே! இராமபிரானுடைய தயவுக்கும் வாநரமுதலிகளின் தயவுக்கும் உறுப்பாக உம்முடைய அநுக்ரஹமே முக்கியமாக வேண்டியிருத்தலால் உம்மைக் கைகூப்பித்தொழுகின்றோம். உங்கள் வானரப்படை எங்களைக்கொல்லாதபடி வார்த்தைபேசியருளவேணுமென்கிறார்கள்.

'வார்த்தைபேசீர்' என்றது—'நீர் எங்களோடு வார்த்தை சொல்லவேணும்' என்பதாகவும் 'நீர் குரங்குகளிடம் ஒருவார்த்தை சொல்லவேணும்' என்பதாகவும் பொருள்படும். முந்தினபொருளையே பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார். அரசன் ஒருவனோடே வார்த்தை சொன்னால் அதைக்காண்கின்ற ராஜபுருஷர்கள் 'இவன் நம் அரசனுக்கு அந்தரங்கன் போலும்' எனநினைத்து அவர்களும் அவனிடத்து அன்பராயிருக்கக்கடவராகையாலே, உம்முடைய முதலிகள் எங்களை உம்முடைய அந்தரங்கராக நினைத்துக்கொள்ளுமாறு நீர் எம்மோடே வார்த்தை சொல்லுவீராக என்கிறார்களென்க.

முன்பு விபீஷணாழ்வான் ராமகோஷ்டியில் வந்துபுகும்போது, 'சத்ருபக்ஷத்தில் நின்றும் வந்த இவனை இங்குச்சேர்த்துக்கொண்டால் குடிகெட்டுப்போய்விடும்' என்று இடையூறுசெய்தவர்களில் ஸுக்ரீவன் தலைவனாதலால் அதனையறிந்துபோலும் இவர்கள் அவனையே கால்கட்டுகிறார்கள். .... (க)

எம்பிரானே! யென்னையாள்வாய் என்றென்றற்றதே *
அம்பின் வாய்ப்பட்டாற்றகில்லாது இந்திரசித்தழிந்தான் *
நம்பி அநுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே! *
கும்பகர்ணன் பட்டுப்போனான் குழமணிதூரமே. (உ)

இந்திரசித்து — இந்த்ரஜித்தானவன்

எம்பிரானே என்னை ஆள்வாய் என்றென்று அற்றதே — பகவந்நாமங்களையே சொல்லிக்கொண்டும் போடாமல்

அம்பின் வாய் பட்டு — பாணங்களுக்கு இரையாகி

ஆற்றகில்லாது — தரித்திருக்கமாட்டாமல்

அழிந்தான் — மாண்டுபோனான்;

நம்பி அநுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே!—;

கும்பகரணன் — கும்பகர்ணனானவன்

பட்டுப் போனான் — முடிந்துபோனான்

குழமணிதூரம் ஆடுகின்றோம்—.

* * *—அநுமான் ஸுக்ரீவன் அங்கதன் நளன் ஆக நால்வரையும் விளித்துத் தங்கள் தோல்வியைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வாநரமுதலிகளுக்

குள்ளே இந்நால்வரே முக்கியர்கள். ஹநுமானுடைய வீரச்செயல்களை முந்துற முன்னமேபிடித்துக் கண்டிருக்கின்றனர், ஸுக்ரீவனை வாநரர்கட்கெல்லாம் அரசனாகையாலே அவனுடைய இரக்கம் முக்கியமென்று அறிந்திருக்கிறார்கள். [அங்கதனுடைய அற்புதச்செயல்களில் ஒன்றுவருமாறு :—] இராவணன் ஸேது பந்தனம் முதலியவற்றைப்பார்த்தாகிலும் புத்தி திருந்தி வருவானோவென்று மநோரதித்த இராமபிரான் அங்கதனை இராவணனிடமனுப்ப, அவன் சென்று ராவணஸபையிலுட்கார்ந்து அவனை நோக்கி 'ராக்ஷஸராஜனே! சக்ரவர்த்தி திருமகனார் உனக்கு நியமித்தருளுகிறார்—'நீ இன்னும் சிலநாள் இச்செல்வத்துடன் வாழ நினைத்தாயாகில் ஸீதையைக் கொணர்ந்து கொடுத்துவிடு; மேலும் என்னுடைய தகப்பனாரான வாலி உனக்குத் தெரியுமன்றோ? உன்னைத் தன்வாலினால் சுற்றியெடுத்துக்கொண்டுபோய் நான்குஸமுத்ரத்திலும் ஒரு சிறிய புழுவைத் தோய்ப்பதுபோல் தோய்த்தெடுத்த பராக்ரமசாலியன்றோ! அந்தவாலியை இந்த ஸ்ரீராமன் ஒரே அம்பினால் கொன்றுவிட்டார்; இதைக் கேட்டாகிலும் இனி நீ அவரிடத்திற் பகையை ஒழிந்து நட்புக்கொள்' என்று சொல்ல, இராவணன் சீறி அங்கதனைப்பிடித்துக் கொல்லும்படி அரக்கர்கட்குக் கட்டளையிட, அப்படி பிடித்துக்கொண்ட நான்கு ராக்ஷஸர்களையும் தன் கக்ஷத்திலிடுக்கிக்கொண்டு ஆகாசத்திற்கிளம்பி அவ்வரக்கர்களை இராவணனுடையவிமானத்தின்மேற்சுழற்றியடித்து அவ்விமானத்தையும் உடைத்துவிட்டு இராமனிடம் வந்து சேர்ந்தான். இப்படிப்பட்ட வீரச் செயலைக் கண்டவர்களாதலால், அங்கதனே! என்று அவனை விளிக்கின்றனர். அணைகட்டுதலாகிற அரும்பெருந்தொழில் நளனால் நிறைவேறிற்றென்பதை அறிந்தவர்களாதலால் நளனே! என்று அவனையும் விளிக்கின்றனர்.

இவர்களை விளித்துச்சொல்லும் வார்த்தையாவது இந்த்ரஜித்தும் கும்பகர்ணனும் 'எம்பிரானே! என்னையாள்வாய்' என்று சொல்லி வாழ்ந்துபோக ப்ராப்தியிருக்கச் செய்தேயும் அது செய்யமாட்டாதே அம்புக்கு இலக்காகிமாண்டொழிந்தனர்; நாங்கள் அங்ஙனாகாமே வாழ்ந்துபோகப் பார்க்கிறோமென்றவாறு.

கும்பகரணன் பட்டுப்போன வரலாறு :—ராமராவணயுத்தத்தில் முதல் நாட்போரில் இராமனம்புகளால் இராவணன் கிரீடங்களையும் ஆயுதங்களையும் சேனைகளையும் இழந்து சோர்ந்து வெள்கி முகங்கறுத்துத் தலை குனிந்து நின்ற ஸமயத்தில் இராமபிரான், இப்படி யாவுமிழந்திருக்கின்றவனை இப்பொழுது கொல்லலாகாதென்று திருவுள்ளம்பற்றி அவனை நோக்கி 'தனியனாய் வெறுங்கையுடனிருக்கின்ற உன்னை இப்பொழுது நான் கொல்வேனல்லேன்; நீ இன்று உயிர்தப்பிச்சென்று சேனைகளையும் ஆயுதங்களையும் ஸித்தஞ்செய்துகொண்டு நாளைக்குப் போர்புரியப் பிரியமிருந்தால் வா' என்று பலவாறு இரக்கத்தோடு சொல்லியனுப்பியருளினார். மற்றொரு நாள் இராவணன் யுத்தத்திற்குவந்து இராமனை எதிர்த்துச் சண்டை செய்து பின்பு ஸ்ரீராமபாணத்தினாலடிபட்டு முன் நிற்கமாட்டாமல் ஓடிப்போய், உறங்கிக்கொண்டிருந்த கும்பகர்ணனையெழுப்பி

http://acharya.org

யுத்தத்திற்கனுப்பினான். அவனைக் கண்டு வானர ஸேனைகள் அஞ்சியோடின. இராமபிரான் அவனுடைய கைகால்களைத் துண்டம் துண்டமாகத் தறித்துவிட்டு அவனை யமலோகத்துக்கு அதிதியாக்கினார்.

இந்திரசித்து அழிந்த வரலாறு;—மற்றொருநாள் இந்திரஜித்து யுத்தத்திற்கு வந்து சிறிது நேரம் எதிரில் நின்றும் சிறிது நேரம் மாயையினால் ஆகாசத்தில் மறைந்திருந்தும் யுத்தஞ்செய்து பின்பு சென்று இவர்கள் முன்னே மாயாஸீதையின் தலையையறுத்து இவர்களுக்கு வ்யஸநத்தையுண்டாக்கி விட்டுத் தான் நிகும்பிலையென்னும் யாகஞ்செய்யத் தொடங்கினான். இதை விபீஷணாழ்வானறிந்து ஓடிவந்து ஹநுமான்மேல் லக்ஷ்மணனை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு தானும் ஸஹாயமாய்ப் போய் அவனுடைய யாகத்தை யழித்து யுத்தஞ் செய்யத்தொடங்கி, லக்ஷ்மணன் இந்திரஜித்துடன் மூன்று நாள் யுத்தஞ் செய்து மூன்றாநாள் ஸாயங்காலம் இந்திரஜித்தினுடைய தலையை யறுத்துத் தள்ளிவிட்டார் என்பதாம். .... (உ)

ஞாலமாளு முங்கள்கோமான் எங்களிராவணற்கு *
காலனாகி வந்தவாகண்டஞ்சிக் கருமுகில்போல் *
நீலன்வாழ்க சுடேணன்வாழ்க அங்கதன்வாழ்கவென்று *
கோலமாக வாடுகின்றோம் குழமணிதூரமே. (௩)

ஞாலம் ஆளும்	பூமியை யெல்லாம் ரக்ஷித்தருள்பவராய்	கரு முகில் போல்	‘காளமேகம்போன்ற
உங்கள் கோமான்	உங்களுக்கு ஸ்வாமியான ஸ்ரீராமபிரான்	நீலன் வாழ்க	நீலன் வாழவேணும்,
எங்கள் இராவணற்கு	எங்களுக்குத் தலைவனாயிருந்த இராவணனுக்கு	சுடேணன் வாழ்க	ஸுஷேணன் வாழவேணும்;
காலன் ஆகி வந்த ஆ கண்டு	ம்ருத்யுவாக வந்தபடியைப் பார்த்து	அங்கதன் வாழ்க	அங்கதன் வாழவேணும்”
அஞ்சி	பயப்பட்டு,	என்று	என்று ஒவ்வொருவர்க்கும் பல்லாண்டுபாடிக்கொண்டு
		கோலம் ஆக	அழகாக
			குழமணிதூரம் ஆடுகின்றோம்—.

* * *—வானரமுதலிகாள்! பூமண்டலம் முழுவதையும் தனிக்கோல செலுத்தி ஆளப்பிறந்த உங்கள் ஸ்வாமியான இராமபிரான் எங்களுக்குத் தலைவனாயிருந்த ராவணனுக்கு ம்ருத்யுஸ்வரூபியாய் வந்தாரென்பதை நன்கு தெரிந்துகொண்டோம்; இனி நாம் மார்பு நெறிந்து வாழ்வதென்பதில்லை யென்று நிச்சயித்துக் கொண்டு உங்களுக்கு மங்களாசாஸநஞ் செய்வதையே யாத்திரையாகக் கொண்டோம்; ‘நீலனுக்குப் பல்லாண்டு; ஸுஷேணனுக்குப் பல்லாண்டு; அங்கதனுக்குப் பல்லாண்டு’ என்று சொல்லுபவர்களாய்க் குழமணிதூரமாடுகின்றோங் காண்மினென்கிறார்கள்.

காலன்—வடசொல். சுடேணன்—வாலிக்கு மாமனாகிய ஒரு வாநரன்.

http://acharya.org

மணங்கள் நாறும் வார்குழலார் மாதர்களாதரத்தை *
புணர்ந்தசிந்தைப் புன்மையாளன்பொன்ற வரிசிலையால் *
கணங்களுண்ண வாளியாண்ட காவலனுக்கிளையோன் *
குணங்கள்பாடி யாடுகின்றோம் குழமணிதூரமே. (ச)

மணங்கள் நாறும் வார் குழலார் மாதர்கள்	பரிமளம் மிக்க நீண்ட கூந்தலையுடையரான ஸ்த்ரீகள் விஷயத்திலே
ஆதரத்தை புணர்ந்த சிந்தை	ஆசையை ஒருபோதும் விடாத நெஞ்சை யுடையனாய்
புன்மை யாளன்	மிகவும் நீசனான இராவணன்
பொன்ற	முடியும்படியாகவும்
கணங்கள் உண்ண	பிசாசுகள் எறிப் புசிக்கும்படியாகவும்
வரி சிலையால்	அழகிய வில்வழியாக
வாளி ஆண்ட	அம்புகளைப் பிரயோகித்த
காவலனுக்கு	ஸர்வரக்ஷகரான பெருமானுடைய
இளையோன்	திருத்தம்பியாரான லக்ஷ்மணருடைய
குணங்கள் பாடி	திருக்குணங்களைப்பாடிக் கொண்டு

குழமணிதூரம் ஆடுகின்றோம்.—.

* * *—ஸ்த்ரீசாபல்யத்தை மேற்கொண்டதனால் நீசர்களில் முதல்வனாகக் கணக்கிடப்பெற்ற இராவணன் முடிந்துபோம்படியாகவும் அவனுடலைக் கழுக்கள் முதலியவை எறியுண்ணும்படியாகவும் வில்லிலே அம்பைத்தொடுத்த பெருமானுக்குத் தம்பியாய் 'இளையபெருமாள்' என வழங்கப்படுபவரான லக்ஷ்மணருடைய திருக்குணங்களைப் பாடிக்கொண்டு குழமணிதூர மாடுகின்றோமென்கிறார்கள். 'மணங்கள் நாறும்வார்குழலார்' என்றது ஸ்த்ரீஜாதிக்கு இயற்கையான அடைமொழி. மாதர்களாதரத்தைப் புணர்ந்த சிந்தை—ஸ்த்ரீவிஷயமான காதலைக்கொண்ட நெஞ்சுவாய்ந்தவன் என்றபடி. கணம் என்பதை 'கணா' என்ற வடசொல்லின் விகாரமாகக் கொண்டு (கழுகு முதலியவற்றின்) கூட்டமென்று பொருள் கொள்வதிற்காட்டிலும், கணம் என்று பிசாசுகட்குப் பேராதலால் அப்பொருளே இங்குக் கொள்ளத்தகும். .... (ச)

வென்றிதந்தோம் மானம்வேண்டோம் தானமெமக்காக *
இன்றுதம்மி னெங்கள்வாழ்நாள் எம்பெருமான் தமர்காள்! *
நின்றுகாணீர் கண்களார நீரெம்மைக் கொல்லாதே *
குன்றுபோல வாடுகின்றோம் குழமணிதூரமே. (ரு)

எம்பெருமான் தமர்காள்	ஸ்ரீராமபக்தர்களான வாநர வீரர்களே!
வென்றி தந்தோம்	ஜயத்வஜ உங்களுக்குக் கொடுத்துவிட்டோம்;
மானம் வேண்டோம்	'நாங்களும் ஆண்பிள்ளைகள்' என்று கொண்டிருந்த அஹங்காரத்தைக் கைவிட்டிட்டோம்;
எங்கள் வாழ்நாள்	எங்களுடைய ஆயுளை

http://acharya.org

எமக்கு	எங்களுக்கு
தானம் ஆக	யாசகர்க்கொடுக்கும் விதமாக
இன்று நம்மின்	இப்போது கொடுத்து விடுங்கள்;
நீர்	நீங்கள்
எம்மை கொல்லாதே	எங்களைக் கொல்லாமல்
கண்கள் ஆர	கண்படைத்தபயன் பெறுமாறு
நின்று காணீர்	நின்று காணுங்கோள்;
குன்று போல	நாங்கள் மலைமலையாக நின்று கொண்டு

குழமணிதூரம் ஆடுகின்றோம்—.

* * *—ஸ்ரீராமபக்தர்களே! நீங்கள் எங்களைக் கொல்லவேணுமென்று நினைக்கிறது உங்களுடைய வெற்றிக்காகவன்றோ; அந்த வெற்றியை நாங்கள் உங்கட்குத்தந்திட்டோம்; (அதாவது—நாங்கள் தோற்றோமென்று சொல்லி உங்களுடைய வெற்றியைப் பிரசுரம் செய்துவிட்டோமென்றபடி.) நாங்களும் ஆண்பிள்ளைகளென்று மார்பு நெறித்து வந்ததனாலன்றோ நீங்கள் எங்களை நலிய வேண்டிற்றாயிற்று; அப்படி எங்களுடைய நலிவுக்கு ஹேதுவான அஹங்காரத்தையும் விட்டுத்தொலைத்தோம்; இனி எங்களுடைய ஜீவனம் நீங்களிட்டவழக்காகையாலே எங்கள் ஆயுஸ்ஸை எங்களுக்கு இன்று தாரைவார்த்துத் தத்தஞ்செய்துவிடுங்கோள்; நாங்கள் இங்ஙனே வாயாலே இரந்து கேட்பதற்காகவே நீங்கள் எங்களைக் கொல்லாது விடவேணுமென்பதில்லை; நீங்கள் கண்படைத்த ப்ரயோஜனம் பெறவேண்டில் நாங்களாடும் குழமணிதூரக்கூத்தைக் காணவேணுமன்றோ; எங்களைக் கொன்றுவிட்டால் இக்கூத்தை எங்ஙனே காண்பீர்கள்? ஆகையாலே இவ்வதிசயத்தைக் காணவேண்டியதற்காகவும் எங்களைக்கொல்லாதொழியவேணுமென்கிறார்கள்.

குழமணிதூரக் கூத்தாட்டத்தைக் கண்டு முடிந்தபின்பு தங்களைக்கொல்லும்படி சொல்லுகிறார்களோ வென்று சிலர் சங்கிப்பர்; அக்கூத்தைக் கண்டுவிட்டால் 'இப்படி தீரர்களானவர்களையோ நாம் கொல்லுவது!' என்று தன்னடையே இரக்கம் தோற்றுமாகையாலே பிறகு கொல்வதற்கு ப்ரஸக்தியேயில்லை யென்பது அரக்கர்களின் கருத்து.

தானம்—தாநம் என்ற வடசொல் விகாரம். குன்றுபோல ஆடுகின்றோம்= 'குன்று கூத்தாடுமோ என்ன?' என்று சிலர் கேட்பர்; ஆட்டத்திற்குக் குன்று உவமையன்று. தங்களுடைய உருவத்திற்கும் அணிவகுத்து நிற்கும் நிலைமைக்கும் கூறினவுவமை யென்க. .... (௫)

கல்லின் முந்நீர் மாற்றிவந்து காவல்கடந்து * இலங்கை
அல்லல்செய்தா னுங்கள்கோமான் எம்மையமர்க்களத்து *
வெல்லகில்லா தஞ்சினோங்காண் வேங்கதிரோன்சிறுவா! *
கொல்லவேண்டா ஆடுகின்றோம் குழமணிதூரமே. (௬)

http://acharya.org

(வானர முதலிகாள்!)

உங்கள் கோமான் { உங்களுக்குத் தலைவரான ஸ்ரீராமபிரான்,
கல்லில் . மலைகளைக்கொண்டு
முந்நீர் கடலை
மாற்றி வந்து { (அணைகட்டித்) தகைந்து வந்து
இலங்கை லங்கையிலுள்ள
காவல் அரண்களையும்
கடந்து அதிக்ரமித்து
எம்மை எங்களை
அமர் களத்து யுத்தபூமியிலே
அல்லல் செய்தான் { மிகவும் துன்பங்களுக்கு ஆளாக்கினார்;
வெம் கதிரோன் சிறுவா { ஸூர்ய புத்திரனான ஸுக்ரீவனே!
வெல்ல கில்லாது { (உங்களை) ஜயிக்க மாட்டாமல்
அஞ்சினோம் பயப்படுகின்றோம்;
கொல்ல வேண்டா { எங்களைக் கொல்லாதொழிய வேணும்;
குழமணிதூரம் ஆடுகின்றோம் காண்—.

* * *—ஆதித்யனுடைய புத்திரரான ஸுக்ரீவமஹாராஜரே! எங்களுடைய நகரத்தில் பிறரொருவரும் புகுதல் அரிது என்று அபிமானித்திருந்தோம்; பெருங்கடலை அகழாகக் கொண்டும் மற்றும் பலவகைப்பட்ட அரண்களையுடையதாயுமிருக்கின்ற இந்நகரினுள் மானிடப்பிறவியனான ராமன் வந்து புகுந்து அடர்க்கவல்லனோ? என்று இறுமாந்திருந்தோம்; உங்கள் கோமானுடைய சக்தியை நாங்கள் என்ன சொல்லுவோம்? நீரில் போட்டால் அமிழ்ந்துபோகக் கூடிய கற்களைக்கொண்டு கடலிலே அணைகட்டினார்; மற்றுமுள்ள அரண்களையுங் கடந்து உட்புகுந்தார்; 'இலங்கை சுடுகாடாயிற்று' என்னும்படியாக வாயாற் சொல்ல வொண்ணாத அநர்த்தங்களை விளைத்தார். இப்படிப்பட்ட மஹாவீரனை இனிநாங்கள் வெல்லக்கூடுமென்று நினைப்பதற்குக் கனவிலும் ப்ரஸக்தியில்லாமையாலே இந்திரஜித்து, கும்பகர்ணன் முதலானார் சென்ற வழியின்பின்னே நாமும் செல்லும்படியாகிறதோ வென்று மிக அஞ்சிக்கிடவாநின்றோம். எங்களை உயிரோடே விட்டிடவேணுமென்று பிரார்த்திப்பவர்களாகிக் குழமணிதூரமாடுகின்றோமென்கிறார்கள். .... (சு)

மாற்றமாவதித்தனையே வம்மினரக்கருள்ளீர்! *
சீற்றம் நும்மேல் தீரவேண்டில் சேவகம் பேசாதே *
ஆற்றல் சான்ற தோல்பிறப்பில் அநுமனை வாழ்கவென்று *
கூற்றமன்னார் காண வாடீர் குழமணிதூரமே. (எ)

அரக்கர் உள்ளீர் { ராக்ஷஸஜாதியிற் பிறந்திருக்கின்ற இலங்கையர்காள்!
வம்மின் { நீங்களும் எங்களோடே வந்து சேருங்கள்;
மாற்றம் ஆவது இத்தனையே { (உங்கட்கு நாங்கள்) சொல்லும் வார்த்தை இவ்வளவே;
நும் மேல் உங்கள்மேல்
சீற்றம் { (ஸ்ரீராம கைங்கர்யங்களுக்குண்டான) கோபம்
தீர வேண்டில் தணியவேண்டுமாகில்
சேவகம் பேசாதே { (நீங்கள் இனியும்) மிடுக்குச் சொற்களைப்பேசுதல் தவிர்ந்து

தொல் பிறப்பில் ஆற்றல் சான்ற அனுமனை } அநாதிகாலமாக மிக்க வலிமையையுடையரான சிறிய திருவடிக்கு

வாழ்க என்று பல்லாண்டுபாடிக்கொண்டு

கூற்றம் அன்னார் காண { (நமக்கு) ம்ருத்யு போன்ற வானரவீரர்கள் காணும் படியாக

குழமணிதூரம் ஆடீர் { குழமணிதூரக்கூத்தை ஆடுங்கோள்.

* * *—கீழ்த்திருமொழியில் "தடம்பொங்கத்தம்பொங்கோ" என்றும், இத்திருமொழியில் ஏழ்ப்பாட்டளவும் "குழமணிதூரமாடுகின்றோம்" என்றும் சொல்லிவருகிற ராக்ஷஸர்களின் திரளில்புகாமல், "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்து கஸ்யசித்" [இருபிளவாகப் பிளவுண்டு விழும்போதும் குறுக்குவாட்டாக விழுவனேயன்றித் தலைசாய்ந்தவாறாக விழமாட்டேன்] என்று சொன்ன ராவணனுடைய நெறியிலே நிற்பவர்களான அரக்கர்களும் சிலருண்டாகையாலே இன்னமும் அவர்கள் மீசை முறுக்கிக்கொண்டு வீரவாதம் செய்திடக் கண்டு அவர்களையும் தங்கள் திரளிலே வந்துபுகுந்து உய்யுமாறு அழைக்கிறார்கள் இவ்வரக்கர்கள்.

மாற்றமாவது இத்தனையே—ஸ்ரீராமபிரானுடையவும் அவனது சேனைத்தலைவர்களுடையவும் பராக்கிரமத்தைப்பற்றி இப்போது நாங்கள் உங்கட்கு விவரித்துச்சொல்லவேண்டியதொன்றுமில்லை; அதனை ப்ரத்யக்ஷமாகவே கண்டிருக்கின்றவுங்களுக்கு நாங்கள் எடுத்துச்சொல்லவேணுமோ; ஆகையால் அதனைச்சொல்லாதே இப்போது நாங்கள் உங்கட்குச் சொல்லுவதாவது, [வம்மினரக்கருள்ளீர்! இத்யாதி.] இக்ஷ்வாகுவம்சத்திலேயே சேர்ந்துவிட்ட விபீஷணாழ்வான் போல்வாரை நாங்கள் அழைக்கப்போகிறோமோ? இன்னமும் ராக்ஷஸர்களாகவேயிருக்கின்ற உங்களையாயிற்று அழைக்கிறோம். இப்படி வாருங்கள்; இராவணனோடு கூடவே ஒழிந்துபோய்விட உங்கள் கருத்தாகில் ஒழிந்துபோமின்; வானரவீரர்களுக்கு நம்மேல் சீற்றம் தணிந்து உயிர்வாழப்பெறவேணுமென்று விரும்பியிருப்பீர்களாகில் இனி மீசை முறுக்குதலையும் மார்பு நெறித்தலையும் விட்டுத்தொலையுங்கள்; பிறப்பே பிடித்துப் பெருவீரனான அநுமானுக்குப் பல்லாண்டு பாடுங்கள்; உங்களுடைய ம்ருத்யுவே வடிவெடுத்து வந்திருக்கிறானென்னலாம்படியான வானரவீரர்கள் காணும்படியாக எங்களோடே கூடிக் குழமணிதூரமாடுங்கள் என்கிறார்கள்.

மாற்றம்—வாய்வார்த்தை. சேவகம்—வீரவாதம். அநுமான் பிறந்தவுடனே ஸூரியனைப்பார்த்து அவனைப்பிடித்துப்பக்ஷிப்பதாக ஆகாசத்திற்கிளம்பிப்போனவராதலால் 'ஆற்றல் சான்ற தொல்பிறப்பின்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. ஆஞ்சனேயரொருவரைவாழ்த்தினால் மற்றுள்ளாரனைவரும் ப்ரஸந்நராய்விடுவர்களென்று ஸூசிப்பிக்கப்பட்டது. .... (எ)

கவளயானைப் பாய்புரவித் தேரோ டரக்கரெல்லாம்
துவள * வென்ற வென்றியாளன் றன்தமர் கொல்லாமே *
தவளமாட நீடயோத்திக் காவலன்றன் சிறுவன் *
குவளைவண்ணன் காணவாடீர் குழமணிதூரமே. (அ)

கவளம் யானை	கவளங்கொள்ளுமியல்பினவான யானைகளும்
பாய் புரவி	பாய்ந்துவருகிற குதிரைகளும்
தேரொடு	தேர்களும் ஆகிய இவை யெல்லாவற்றோடுங்கூட
அரக்கர் எல்லாம் துஞ்ச	ராக்ஷஸஜாதியடங்கலும் கஷ்டப்படும்படியாக
வென்ற	ஜயித்த
வென்றியாளன் தன் தமர்	ஜயசீலரான பெருமாளுடைய கிங்கரர்களான வானரவீரர்கள்
கொல்லாமே	(நம்மைக்) கொல்லாதபடி;
தவளம் மாடம் நீடு	வெண்மையான மாடமாளிகைகளினால் நீண்டிருக்கிற
அயோத்தி	அயோத்திமா நகர்க்கு
காவலன் தன்	அரசரான தசரதருடைய
சிறுவன்	திருக்குமாரராய்
குவளை வண்ணன்	குவளைமலர்போன்ற நிறத்தையுடையரான இராமபிரான்
காண	காணும்படியாக
குழமணிதூரம்	குழமணிதூரக்கூத்தை
ஆடுமின்	ஆடுங்கள்.

* * *—இப்பாட்டும் கீழ்ப்பாட்டுப்போலவே அரக்கருள்ளாரை யழைப்பதாம். 'அரக்கருள்ளீர்!' என்ற விளி கீழ்ப்பாட்டிலிருந்து வருவித்துக்கொள்ளத் தக்கது. யானைகளும் குதிரைகளும் தேர்களுமாகிய சேனையுறுப்புகளெல்லாவற்றோடுங்கூட அரக்கர் தொலையுமாறு கொன்று வெற்றி பெற்ற ஆண்புலியின் கிங்கரர்களான வானரவீரர்கள் உங்களைக்கொல்லாதிருக்கவேணுமாகில், குவளை வண்ணரான அந்த சக்ரவர்த்தித்திருமகன் கண்டுமகிழும்படியாகக் குழமணிதூர மாட எங்களோடே வந்து கூடுங்கள் என்கிறார்கள்.

கவளயானை=யானையின் உணவுக்குக் கவளம் என்று பெயர்; தினிகளை யிட்டு மதமூட்டப்பட்ட யானை என்றவாறு. தவளம்—தவலம் என்பது வடசொல். சிறந்த சுண்ணாம்பு பூசப்பெற்று வெண்ணிறமாயிருக்கின்ற மாடமாளிகைகளையுடைத்தான அயோத்யாபுரிக்கு இறைவனான தசரதனது திருக்குமாரர் என்றபடி. .... (அ)

ஏடொத்தேந்தும் நீளிலைவேல் எங்களிராவணனார்
ஓடிப்போனார் * நாங்களெய்த்தோம் உய்வதோர் காரணத்தால் *
சூடிப்போந்தோம் உங்கள்கோமானாணை தொடரேன்மின் *
கூடிக்கூடி யாடுகின்றோம் குழமணிதூரமே. (௯)

ஏடு ஒத்த	பனையோலை விரிந்தாற்போல் அகன்றதாயும்
நீள்	நீண்டதாயும்
இலை	இலையையுடைத்தாயுமிருக்கிற
வேல்	வேற்படையை
ஏந்தும்	கையிற்கொண்ட
எங்கள் இராவணனார்	எங்கள் பிரபுவான இராவணன்
ஓடி போனார்	முதுகுகாட்டி ஓடிப்போய் விட்டார்;
நாங்கள்	நாங்களோ
எய்த்தோம்	இளைத்தோம்;
உய்வது ஓர் காரணத்தால்	(இனி) உஜ்ஜீவிப்பதன் பொருட்டு
உங்கள் கோமான் ஆணை	உங்களுக்கு ஸ்வாமியான பெருமாளுடைய ஆஜ்ஞையை

http://acharya.org

குடிப் போந்தோம் — சிரஸாவஹிப்பவர்களாயிருக்கின்றோம்;
தொடரேல்மின் — (எங்களைக்கொல்வதற்குத்) தொடரவேண்டா;
கூடி கூடி — திரள்திரளாகக்குழாங்கூடி
குழமணிதூரம் ஆடுகின்றோம்—.

* * *—இத்திருமொழியின் இரண்டாம்பாட்டில் "நம்பி அநுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே!" என்றுள்ள விளிகள் இப்பாட்டில் அநுஸந்திக்கவுரியன. வானரமுதலிகளே! கையில் வேற்படை பிடித்துப் பெருமதிப்பனாயிருந்த எங்கள் பிரபு ஆயுதங்களறப்புண்டு முதுகுகாட்டி ஓடிப்போனான்; நாங்களோவென்னில், 'இவர்களையோ கொல்லுவது!' என்று நீங்கள் தாமும் இரங்கும்படியாக இளைத்தொழிந்தோம்; அவ்வளவேயன்று; உங்கள் தலைவரான இராமபிரான் காலாலேயிட்டதைத் தலையாலேதாங்கிச் செய்துமுடிக்க வல்லோமாக விதேயராய் வந்துநிற்கின்றோம்; இனி நீங்கள் எங்களைக் கொல்வதாகத் தொடரவொண்ணாது; நாங்கள் கூட்டங்கூட்டமாக இருக்கிறோமென்பதைக் கண்டு 'போர்புரிய நிற்கின்றார்கள் இவர்கள்' என்று நீங்கள் நினைக்கலாகாது; குழமணிதூரமாடுதற்கே திரள்திரளாக இருக்கின்றோங்காண்மின் என்கிறார்கள்.

எங்களிராவணனார் ஓடிப்போனார்=இராவணன் போர்க்களத்தில் நின்றும் வீட்டுக்கு ஓடிச்சென்றானென்பது இதற்குப் பொருளன்று; இவ்வுலகைவிட்டு யமலோகத்திற்கு ஓடிப்போனானென்று பொருளாகவேணும்; இவ்விடத்தில் உயிரோடிருந்தும் இல்லை யென்று சொல்லும்படியாகவே ஆய்விட்டான் என்றுவது கொள்ளவேணும்.

'உய்வதோர் காரணத்தால்' என்பது நடுநிலைத்தீபகமாகி முன்னும் பின்னும் அந்வயிக்கும்; உய்வதோர் காரணத்தால் நாங்கள் எய்த்தோம்; உய்வதோர்காரணத்தால் உங்கள் கோமானைச் சூடிப்போந்தோம் என்பதாக. .... (௯)

வென்றதோல்சீர்த் தென்னிலங்கை வெஞ்சமத்து * அன்றரக்கர்
குன்றமன்னா ராடியுய்ந்த குழமணிதூரத்தை *
கன்றிநெய்நீர்நின்ற வேற்கைக் கலியனொலிமாலை *
ஒன்றுமொன்று மைந்துமூன்றும் பாடிநின் றாடுமினே. (௰)

தொல் — நெடுநாளாக
வென்ற சீர் — வெற்றியையே இயல்பாகவுடைத்தாயிருந்த
தென் இலங்கை — தென்னிலங்கையில்
வெம் சமத்து — வெவ்வியபோர்க்களத்திலே
அன்று — அப்போது
அரக்கர் — ராக்ஷஸர்கள்
குன்றம் அன்னார் — மலைபோன்றவர்களாக
ஆடி உய்ந்த குழமணி தூரத்தை — குழமணிதூரக்கூத்தாடி உயிர் தப்பினபடியைக் குறித்து,
கன்றி நெய் நீர் நின்ற வேல் கை — சினக்குறிப்புடன் கூடியதாய் நெய்யிட்டிருப்பதை நீர்மையாகவுடைத்தாய் நின்ற வேற்படையைக் கையிலுடையரான

கலியன்	திருமங்கையாழ்வார்	பாடி நின்று	பாடிக்கொண்டு
ஒலி	அருளிச்செய்த	ஆடுமின்	(ஆநந்தத்துக்குப் போக்கு வீடாகக்) கூத்தாடுங்கோள்.
மாலை ஒன்றும் ஒன்றும் ஐந்தும் மூன்றும்	சொல்மாலையாகிய இப் பத்துப் பாசுரங்களையும்		

* * *—இலங்காபுரியென்பது நெடுநாளாகவே தோல்வியைக் கண்டறியாமலேயிருந்தது; வெற்றியை இயற்கைச் செல்வமாகக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட இலங்கையில் நடந்த யுத்தத்தில் ராக்ஷஸர்கள் பெருமாளுடைய வெற்றிக்கும் தங்களுடைய தோல்விக்கும் மேலெழுத்திட்டு "குன்றுபோல ஆடுகின்றேன் குழமணிதூரமே" என்றாற்போலே பல சொல்லிக் கூத்தாடி உயிர்தப்பிப் பிழைத்தபடியைத் திருமங்கையாழ்வார் எடுத்துரைத்த இத்திருமொழியைக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களெல்லீரும் பாடியாடுங்கோளென்கிறது இதனால். அரக்கர்கள் ஜீவனம் பெறுதற்காகக் குழமணிதூரமாடினார்; ஸ்ரீவைஷ்ணவர்காள்! நீங்கள் உஜ்ஜீவநம் பெறுதற்காக இப்பாசுரங்களைச் சொல்லி ஆடுங்கோள் என்கிறார்போலும் .... (க௦)

அடிவரவு:—எத்தின்றேம் எம்பிரானே ஞாலம் மணங்கள் வென்றி கல்வின் மாற்றம் கவளம் எடி வென்ற சந்தம்.

மூன்றாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—நான்காந்திருமொழி,

சந்தமலர்க்குழல்தாழ.

உரையவதாரிகை :—கீழ் இரண்டு திருமொழிகளும் ராமாவதாரத்தில் அநுபவமாய்ச் சென்றன; இனி க்ருஷ்ணாவதாரத்திலநுபவமாய்ச் செல்லுகிறது. த்வேஷத்தின் எல்லையிலே நின்றவர்களின் பாசுரத்தாலே ராமாவதாரத்தை அநுபவித்தார் கீழ்; ப்ரேமத்தின் எல்லையிலே நின்றவர்களின் பாசுரத்தாலே க்ருஷ்ணாவதாரத்தை அநுபவிக்கிறாரிப்போது. இத்தால் தெரிவிக்கப்பட்டதாகிறதென்னென்னில்; பகவத்விஷயத்திலே த்வேஷமாகவுமாம், ப்ரீதியாகவுமாம்; ஏதேனுமொருபடியாலே பகவத்குணங்களை எடுத்துரைக்கப்பெறில் அது உத்தேச்யமாகக் குறையில்லை யென்னுமிடம் ஸூசிதமாகிறது. ராக்ஷஸர்களின்

http://acharya.org

நிலைமையை ஏறிட்டுக்கொண்டுபேசினதோடு யசோதைப்பிராட்டியின் நிலைமையை ஏறிட்டுக்கொண்டு பேசுகிறதோடு வாசியில்லையென்றிருக்கிறாராயிற்று இவ்வாழ்வார்.

கண்ணபிரான் விளையாட்டில் விருப்பத்தாலே முலையுண்பதையும் மறந்து திரியாநிற்க, யசோதைப்பிராட்டி அப்பிரானை விளித்து முலையுண்ணுமையை அவனுக்கு அறிவித்துத் தன்முலைகளையுண்ணவேணுமென்று நிர்ப்பந்தித்தபடியை ஆழ்வார்தாமும் அநுபவிக்கவிரும்பித் தம்மை அவ்யசோதைப்பிராட்டியாகவே பாவித்துக் கொண்டு அவனை அம்மமுண்ணுமாறு வேண்டுவதாயித் திருமொழி. பெரியாழ்வார் திருமொழியில் "அரவணையாயாயரேறே! அம்மமுண்ணத்துயிலெழாயே" என்ற திருமொழியோடு ஒக்கும் இத்திருமொழி. உச்சிப்போதிலே முலையுண்ண அழைத்தது அத்திருமொழி; அந்தியம்போதிலே முலையுண்ணவழைக்கிறது இத்திருமொழி என்பது வாசி. .... *

சந்தமலர்க்குழல் தாழத் தானுகந்தோடித் தனியே
வந்து * என் முலைத்தடந்தன்னை வாங்கி நின்வாயில் மடுத்து *
நந்தன் பெறப்பெற்ற நம்பீ! நானுகந் துண்ணு மமுதே! *
எந்தை பெருமானே யுண்ணாய் என்னம்மம் சேமமுண்ணாயே. (க)

நந்தன்	நந்தகோபர்
பெறப்பெற்ற	பிள்ளையாகப்பெறும்படி வாய்ந்த
நம்பீ	ஸ்வாமியே!
நான் உகந்து உண்ணும் அமுதே	நான் பரிவுடனே புஜிக்கின்ற அமுதமாயிருப்பவனே!
எந்தை பெருமானே	என் குலநாதனான கண்ணபிரானே!
சந்தம் மலர் குழல்	செவ்விப்பூக்களை யணிந்த திருக்குழற்கற்றையானது
தாழ	அலைய
தான் தனியே உகந்து ஓடி வந்து	நீ (பலராமனைவிட்டுத்) தனியே மகிழ்ச்சியுடன் (என்பக்கல்) ஓடிவந்து
என் முலைத்தடம் தன்னை வாங்கி	எனது முலைகளைக்கையிற் பிடித்து
நின் வாயில் மடுத்து	உனது வாயிலே நிறைத்துக் கொண்டு
உண்ணாய்	உண்ணவேணும்;
என் அம்மம்	என்னுடைய முலைப் பாலாகிற
சேமம்	க்ஷேமத்தளிகையை
உண்ணாய்	உண்ணவேணும்.

* * *—கண்ணபிரானே! குழலலைய அலைய ஓடிவந்து என்முலைகளை உன் வாயில் மடுத்துப் பாலுண்ணவேணுமென்று அழைக்கிறாள். 'சந்தமலர்க்குழல்' என்றதனால் "செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி, எண்பகர் பூவுங்கொணர்ந்தேன் இன்றிவை சூட்டவா" என்று ஏற்கனவே அழகிய மலர்களைக் குழலிலே சூட்டியிருக்கின்றாளென்பது உணரத்தக்கது. குழல்தாழ வரவேணுமென்றது—முலையுண்பதிலுண்டான பேராவல் விளங்குமாறு தன்னைப் பேணாதே ஓடிவரவேணுமென்றபடி. * தன்னேராயிரம் பிள்ளைகளோடு இவன் விளையாடுகிறானாகையாலே அவர்களையும் பலராமனையும் விட்டுத் தனியே வரவேணுமென்றழைக்கிறாள். [முலைத்தடந்தன்னை வாங்கி நின்வாயில் மடுத்து.]

யசோதைப்பிராட்டிக்கு இப்படியும் ஒருஆசை போலும்; தன்கையாலே முலையை யெடுத்துக்கண்ணபிரானது திருப்பவளத்திலே தான் மடுப்பதிலுங்காட்டில் அவன்தானேபிடித்து வாயில் மடுத்து உண்ணப்பெறில் அதிலே ஒரு போக்ய தாதிசயம் கண்டவள்போலும்.

[நந்தன்பெறப்பெற்ற நம்பீ !] 'நந்தன் பெற்ற நம்பி!' என்றால் போராதோ? 'பெறப் பெற்ற' என்பானேன்? என்னில்; ஈச்வரனுக்கு இது அலப்யலாபம் என்பது தோற்றுதற்காகவே இப்படி அருளிச்செய்ததென்ப. நந்தகோபன் பிள்ளையாகப் பெறும்படியான பாக்கியம் பெற்றவனே! என்றவாறு. இவனுடைய பிறப்பினால் நந்தகோபனுக்கு ஏற்றம்; நந்த கோபனுக்குப்பிள்ளையாகப் பிறந்ததனால் இவனுக்கு ஏற்றம் என்றிறே நம் ஆசார்யர்கள் நிர்வஹிக்கிறபடி. எம்பெருமானுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு இலக்காகப் பெற்ற ஏற்றம் 'நந்தன்' என்ற சொல்வடிவத்திலேயே விளங்கும். மெய்யே இவனை மகனாகப் பெற்ற வஸுதேவனையெடுத்துக்கொள்வோம்; வஸுதேவன் என்றால் பணத்தால் விளங்குபவன் என்று பொருள். நந்தன் என்றால் ஆநந்தப்படுபவன் என்று பொருள். உலகத்தில் பணக்காரனாயிருப்பவனுக் கெல்லாம் ஆனந்தமுடைமை இன்றியமையாததன்று. பணக்காரன் துக்கமுடையவனாகவும் ஏழை ஆனந்த முடையவனாகவும் இருக்கவுங்காண்கிறோம். வஸுதேவன் கண்ணபிரானைப் பெறுதற்கு நெடுங்காலம் உபாயாநுஷ்டாநம் செய்தவனாதலால் கண்ணனுடைய முகத்தைக்கண்ட மாத்திரத்திலே அவனுடைய நோன்பின் பலன் முற்றுப்பெற்றதாகி அவன்தானே பிள்ளையைத் தலையில் சுமந்து கொண்டுபோய் நந்தகோப னிடத்தில் விட வேண்டியதாயிற்று. நந்தகோபன் ஒருவகை உபாயாநுஷ்டானத்தையும் நெஞ்சிலும் நினையாதவனாயிருந்தவனாதலால் அவனுக்கு ஆநந்தமே நித்யமாகச் சென்றது. அப்படிப்பட்டவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தது எம்பெருமான்றனக்கு ஆனந்தம். பிறப்பே காரியமாயிருக்கிற ஸம்ஸாரிக்குப் பிறவாமை ஏற்றமாவதுபோல, பிறவாத பெருமானுக்குப் பிறப்பு ஏற்றமாகிறதென்னும் சுவைப்பொருளும் இங்கு உணரத்தக்கது. தனக்குக்கிடையாததைப் பெறுகையிறே அவனவனுக்கு ஏற்றம்.

[நான் உகந்துண்ணுமமுதே !] தேவர்களுண்கிற உப்புச்சாறுபோலேயோ யசோதையுண்கிற அம்ருதம். * அமுதிலுமாற்றவினிய அமுதமன்றோ இது. அப்படிப்பட்ட அமுதுக்கும் அமுதூட்டப் பாரித்து அழைக்கிறாள். 'அம்மம்' என்பது கண்ணபிரானுடைய குழந்தைப்பருவத்துக்குத்தகுதியாக யசோதை சொல்வதொரு வார்த்தையாகும். 'புவ்வா' என்றும் 'பாப்பம்' என்றும் குழந்தைகட்குச் சொல்லும் சொற்கள்போல இதுவொருசொல். "அம்மமுண்ணத்துயிலெழாயே" "உனக்கஞ்சுவனம்மந் தரவே" என்ற பெரியாழ்வார் திருமொழியுங்காண்க. சேமம் என்றது க்ஷேம மென்னும் வட சொல்விகாரம். பிரபுக்களுக்குக் காவலோடே வரும் சோறு 'சேமத்தளிகை' எனவழங்கப்படும். (க.)

http://acharya.org

வங்கமறி கடல்வண்ணா! மாமுகிலேயொக்கும் நம்பீ! *
செங்கணெடிய திருவே! செங்கமலம் புரைவாயா! *
கொங்கை சுரந்திட வுன்னைக்கூவியும் காணாதிருந்தேன் *
எங்கிருந்தாயர்களோடே என்விளையாடுகின்றாயே? (உ)

வங்கம் மறி கடல் வண்ணா	அலைகள்மடிந்து மடிந்து எறிகிற கடலின்நிறம்போன்ற நிறமுடையவனே!	உன்னை கூவியும்	உன்னையழைத்தும்
மா முகிலே ஒக்கும் நம்பீ	காளமேகத்தை யொத்திருக்கின்ற பிரானே!	காணாது இருந்தேன்	நீவரக்காண்கின்றிலேன்;
நெடிய செம் கண் திருவே	நீண்ட செந்தாமரைக் கண்களையுடைய ஸ்ரீமானே!	ஆயர்களோடே	இடைப்பிள்ளைகளோடே
செம் கமலம் புரை வாயா	செந்தாமரைப்பூப்போன்ற திருமுகத்தை யுடையவனே!,	எங்கு இருந்து	எவ்விடத்திலிருந்துகொண்டு
கொங்கை சுரந்திட	என்முலைகளிலே பால்சுரக்க	என் விளையாடுகின்றாய்	என்ன விளையாட்டு விளையாடுகின்றாய்?.

* * *—கடல்போலவும் காளமேகம்போலவும் விளங்குகின்றவடிவையுடையவனே! அவயவ சோபையெல்லாம் ஒருதட்டும் கண்ணழகுமாத்திரம் ஒரு தட்டுமாம்படி * கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய திருக்கண்களையுடையவனே!, 'திருவுக்குந் திருவாகிய செல்வா!' என்னவேண்டும்படி சிறப்புமிக்கவனே! செங்கமலப்பூப்போன்ற திருவாயையுடையவனே! 'தாய்முலை சுரப்பது எப்போதோ?' என்று நீயே எதிர்பார்த்திருந்து முலைசுரக்குமளவிலேவந்து அம்முணப்ராப்தமாயிருக்க அது செய்யாததன்றியும், நான் கூவியழைத்தும் வாராதிருக்கிறாயே! என்றவாறே, நெடுந்தூரத்திலிருந்து 'இதோவருகிறேன்' என்று குரல்காட்டினான் கண்ணபிரான்; அதைக்கேட்ட யசோதை * மச்சொடுமாளிகையேறி மாதர்கள் தம்மிடம்புக்குக் கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்பு துகிலவை கீறி, நிச்சலுந்தீமைகள் செய்பவனாகையாலே இவன் மச்சுமாளிகைகளிலே புக்கு இடைப்பெண்களிடம் ஏதோ தீம்பு செய்கிறான்போலும் என்று நினைத்து எங்கிருந்து? என்றாள்; அதாவது, நீ கண்ணுக்குப்புலப்படாமலே குரல்காட்டுகிறாயே!, எங்கிருந்து பேசுகிறாய்? என்றாள். அதுகேட்ட கண்ணபிரான் 'நாம் ஆய்ச்சிகளோடிருப்பதாக யசோதை சங்கிக்கிறாள்போலும்; இடைப்பிள்ளைகளோடே விளையாடுகிறேனென்பதை அவளுக்குத் தெரிவிப்போம்' என்றெண்ணித் தன்னுடன் கூட விளையாடுகின்ற இடைப்பிள்ளைகளின் குரலை அவளுக்குச் செவிப்படுத்த, ஆயர்களோடே என் விளையாடுகின்றாய்? என்கிறாள், நான் உன்னை எதிர்பார்த்து அழையாநிற்க இதுதானோ விளையாட்டுக்கு ஸமயம்? என்றவாறு. வங்கம்—அலையும், கப்பலும். .... (உ)

திருவிற்பொலிந்தவெழிலார் ஆயர்தம் பிள்ளைகளோடு *
தெருவில் திளைக்கின்ற நம்பீ! செய்கின்ற தீமைகள் கண்டிட்டு *
உருகியென் கொங்கையின்தீம்பால் ஓட்டந்து பாய்ந்திடுகின்ற *
மருவிக்குடங்காலிருந்து வாய்முலையுண்ண நீவாராய். (ங)

http://acharya.org

திருவின் பொலிந்த	செல்வத்தினால் மிக்கவர்களாய்
எழில் ஆர்	வடிவழகும் நிறைந்தவர்களான
ஆயர்தம் பிள்ளைகளோடு	இடைப்பிள்ளைகளோடு கூட
தெருவில் திளைக்கின்ற	வீதியிலே விளையாடுகின்ற
நம்பீ	பிரானே!
செய்கின்ற	நீ செய்துவருகிற
தீமைகள்	தீம்புகளை
கண்டிட்டு	பார்த்து (அதனாலுண்டான உவப்பினால்)

என் கொங்கையின்	என்னுடைய முலையினின்
தீம் பால்	இனியபாலமுது
உருகி	தானே உருகி
ஓட்டந்து	வெள்ளமிட்டு
பாய்ந்திடுகின்ற	பெருகிப்பாழாய்ப் போகின்றது; (அப்படிபாழாய்ப்போகாமே)
குடங்கால்	(எனது) மடியிலே
மருவி இருந்து	பொருந்தியிருந்து
வாய்	வாயினால்
முலை உண்ண	முலைப்பாலுண்பதற்கு
நீ வாராய்	நீ வரவேணும்.

* * *—யசோதைப்பிராட்டியின் கண்ணுக்குப் புலப்படாமல் நாம் விளையாடிக் கொண்டிருந்ததனாலன்றோ அவளுக்கு நம்மேல் அதிசங்கை உண்டாயிற்று; அங்ஙனன்றியே வெளிப்படையாகவே தெருவில்விளையாடுவோமென்றெண்ணிக் கண்ணபிரான் * தன்னேராயிரம் பிள்ளைகளோடு திருவீதியில் விளையாடத்தொடங்கினான்; அவனுடைய விளையாட்டெல்லாம் * கன்றுகளோடச் செவியில் கட்டெறும்புபிடித்திடுவதும் * இளம்பிள்ளைகிள்ளியெழுப்பிக் கண்ணைப்புரட்டி விழிப்பதுமான தீமைகளாகவே யிருக்குமாதலால் அப்படிப்பட்ட விளையாடல்களைக் கண்டு சீறவேண்டியதாயிருந்தும் * அஞ்சவுரப்பாள் அசோதை ஆணாட விட்டிட்டிருக்குமென்னப்படுபவளாகையாலே 'நம் குழந்தையன்றோ இப்படிப்பட்ட தீம்பு செய்யக்கற்றது!' என்று உள் மகிழ்ந்தவளாகி அந்த மகிழ்ச்சியினால் இன்னமும் விஞ்சியே பால்சுரக்கப்பெற்று அந்த நிலைமையை வாய் விட்டுச் சொல்லி, பிரானே! இப்படி தெருவில் விளையாடுதல் தவிர்ந்து என்குடங்காலிலேயிருந்து பாலமுதுண்ணவாராய் என்றழைக்கிறாள்.

திருவிற்பொலிந்த எழிலார் = தன்னுடைய அழகுக்கு ஏறக்குறையத் தகுதியான அழகுடைய பிள்ளைகள் என்றபடி. [தீமைகள் கண்டிட்டு உருகி] ஏற்கனவே ப்ரேமத்தாலே பெருகுகின்றபால், அதற்குமேலே நீ தீமைசெய்யும்படிகளைக் கண்டு உள்ளுருகி வெள்ளமிடுகின்றதென்றபடி. தீம் பால் = மதுரமான பால்: 'தீம்' என்று இனிமை. [ஓட்டந்து-] ஓட்டம் தந்து என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து விகாரப்பட்டு 'ஓட்டந்து' என்றாயிற்று; உடன் பாட்டு இறந்தகால வினையெச்சம். ஓட்டம் தருதலாவது ஓடிவருதல்; ப்ரவஹித்ததைச் சொன்னபடி. (௫)

மக்கள்பெறுதவம்போலும் வையத்து வாழும் மடவார் *
மக்கள் பிறர்கண்ணுக்கொக்கும்முதல்வா! மதக்களிறன்னாய்! *
செக்கரிளம்பிறைதன்னை வாங்கி நின்கையில் தருவன் *
ஒக்கலைமேலிருந்தம்மம் உவந்தினிதுண்ண நீவாராய். (௬)

http://acharya.org

வையத்து வாழும் மடவார்	நாட்டிலே வாழ்கின்ற ஸ்த்ரீகளினுடையவும்
பிறர் மக்கள்	மற்றுமுள்ள மநுஷ்யர்களினுடையவும்
கண்ணுக்கு	கண்களுக்கு
மக்கள் பெறு தவம் போலும் ஒக்கும் முதல்வா	பிள்ளைபெறுதற்கு நோற்கும் நோன்புதான் ஒருவடிவு கொண்டதோ! என்று சொல்லலாம் படியிருக்கின்ற ஜகத்காரணபூதனே!
மதம் களிறு அன்னாய்	மதம்பிடித்த யானைபோலச் செருக்கியிருப்பவனே!
செக்கர் இளம் பிறை தன்னை	செவ்வானத்திலிருக்கின்ற பாலசந்திரனை
வாங்கி	பிடித்து
நின் கையில்	உன்கையிலே
தருவன்	கொடுப்பேன்;
ஒக்கலை மேல் இருந்து	(என்) இடுப்பிலே இருந்து கொண்டு
அம்மம்	முலைப்பாலை
உவந்து	ஆதரித்து
இனிது	போக்யமாக
உண்ண	உண்பதற்கு
நீ வாராய்	நீ வரவேணும்.

* * *—"வையத்துவாழும் மடவார் பிறர்மக்கள் கண்ணுக்கு மக்கள் பெறு தவமொக்கும் முதல்வா" என்று அந்வயிப்பது. (முதலடியில் போலும் என்றது அசை.) இந்த நாட்டில் வாழ்கின்ற ஸ்த்ரீகளென்ன, பொதுவாக மனிதர்களென்ன ஆக எல்லோருடையவும் கண்ணுக்கு 'பிள்ளை பெறுகைக்கு நோற்கும் நோன்புதான் இங்ஙனே ஒரு வடிவு கொண்டதோ?' என்னும்படி புலப்படுகிறவனே! என்றபடி. யார்கண்டாலும் 'இவன் நம்முடைய குழந்தையாயிருக்கக்கூடாதோ?' என்றே ஆசைப்படும்படியாக திவ்யஸௌந்தர்யங்களை விக்ரஹம் படைத்தவனே! என்பதாகக் கொள்க. இவன் நடக்கிற நடை யானை நடக்குமாபோலே நெஞ்சைக் கவர்வதாயிருந்ததனால் மதக்களிறன்னாய்! என்கிறாள்.

இப்படி யசோதைப்பிராட்டி தன்னைப் புகழ்ந்துகொண்டு அழைப்பதைக் கண்ட கண்ணபிரான் 'அம்மா! உன் சூதெல்லாம் எனக்குத் தெரியும்; நீ என்னைப் புகழ்ந்து பேசுவதெல்லாம் கிட்ட அழைத்துக் கொள்வதற்காகத் தானே; நேற்றெல்லாம் நான் 'சந்திரனைப்பிடித்துத்தா' என்று உன்னை எவ்வளவோ வேண்டியும் 'மஞ்சில்மறையாதே மாமதி! மகிழ்ந்தோடிவா' என்றும் 'அம்புலீ! கடிதோடிவா' என்றும் 'விண்தனில் மன்னிய மாமதீ! விரைந்தோடிவா' என்றும் 'வாழவுறுதியேல் மாமதீ! மகிழ்ந்தோடிவா' என்றும் சந்திரனையழைப்பதுபோல் ஆசைகாட்டிவிட்டு வஞ்சித்தொழிந்தாய்; அவனைப்பிடித்து என்கையில் தந்தாலொழிய நான் உன்னருகில் வருவதில்லை' என்று சொல்லி நெடுந்தூரத்திலே நிற்க, 'குழந்தாய்! குறைகூறாதே; இன்று இளம்பிறையைப்பிடித்து அவசியம் உன்கையில் தந்திடுவேன், வா' என்று யசோதை அழைக்க, கண்ணபிரான் சிறிது அருகேவந்துநின்று 'இதோ வந்தேன்; என்ன செய்யவேணும்?' என்ன; பிரானே! என் இடுப்பின்மேலிருந்து கொண்டு ஒருமுலையை வாய்மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு, இருமுலையும் முறை முறையாயேங்கி யேங்கி யிருந்துண்ணவேணுமென்றன்றோ நான் அபேக்ஷிக்கிறேன்; அதற்கு இசைந்துவரவேணுமென்றழைக்கிறாள்.'

http://acharya.org

சேக்கர்—செவ்வானம். குழந்தைகள் ஆகாசத்தில் சந்திரனைக்கண்டுவிரும்பி அவனைக் கையில்பிடித்துத் தருமாறு அபேக்ஷிப்பதும், அவற்றின் உவப்புக்காகத் தாய் தந்தை முதலானோர் 'சந்தமாமா ! வா வா' என்றழைத்துப் போதுபோக்கு வதும் உலகவியற்கை. எம்பெருமான் மநுஷ்யஸஜாதீயனாய் அவதரித்தகாலத்தில் இந்த விருப்பத்தையும் கொண்டிருந்தனனென்பது பெரியாழ்வார் திருமொழியில் (1-4.) 'தன்முகத்துச் சுட்டி.' என்னுந் திருமொழியிலும் விரிவாகக் காணத்தக்கது.

மைத்த கருங்குஞ்சி மைந்தா ! மாமருதூடே நடந்தாய் ! *
வித்தகனே! விரையாதே வெண்ணெய் விழுங்கும் விகிர்தா! *
இத்தனைபோதன்றியென்றன் கொங்கைசுரந்திருக்ககில்லா *
உத்தமனே! அம்மமுண்ணாய் உலகளந்தாய்! அம்மமுண்ணாய். (௫)

மைத்த கரு குஞ்சி	மைபோன்று கறுத்த திருக் குழல்களையுடைய
மைந்தா	சிறுக்கனே !
மா மருதூடு	பெரிய மருதமரங்களி னிடையே
நடந்தாய்	தவழ்ந்து சென்றவனே !
வித்தகனே	ஆச்சரிய சக்தியையுடையவனே !
விரையாதே	ஸாவகாசமாக
வெண்ணெய் விழுங்கும்	வெண்ணெயை வாரி விழுங்கவல்ல
விகிர்தா	விலக்ஷணனே !

என் தன் கொங்கை	என்னுடைய ஸ்தனமானது
சுரந்து	பால்சுரந்து
இத்தனை போது அன்றி	இதுவரையிலிருந்தது போலல்லாமல்
இருக்ககில்லா	இனி இருக்கமாட்டா;
உத்தமனே	சிறந்த குணசாலியே!

அம்மம் உண்ணாய்—;

உலகு அளந்தாய்	உலகமளந்தபிரானே!

அம்மம் உண்ணாய்—.

* * *—அஞ்சனம் போன்று கறுத்துக் கண்ணுக்குக் குளிர்ந்த குழற்கற்றையையுடையவனே !, உரலோடுங் கட்டுண்டு தவழ்ந்து செல்லுமளவிலே இரட்டை மருதமரங்களினிடையே தவழ்ந்து சென்று அவற்றை முறித்துத் தள்ளி அவையாயிருந்த குபேரபுத்திரர்களையும் சாபத்தில் நின்றும் நீக்கி ஆச்சர்யசக்தியை ஆவிஷ்கரித்தவனே!, நான் வெண்ணெய்க்கலங்களை உறிகளிலே வைத்துச் சேமித்துக் கள்ளக்கயிறிட்டுப் படுக்கையில்போய்ச் சாயுமளவும் பதறாமேயிருந்து ஸாவகாசமாகப் பிறகு எழுந்து வெண்ணெயை வாரிவிழுங்குமவனே !, நான் முலைக் கடுப்போடே நின்று கூப்பிடுகிறது நெடும்போதுண்டு; இதுவரையிலும் ஒருவாறு பொறுத்துப் பாடாற்றியிருந்தேனாகிலும் இனி ஒரு கோடிப்பொழுதும் பாடாற்றகில்லேன்; நீ உத்தமனன்றோ? உன் நோவைக்காட்டிலும் தாய்நோவு அறியுமவனன்றோ? [உலகளந்தாய்!] ஒருவரும் அபேக்ஷியாதிருக்கச் செய்தேயும் எல்லார்பக்கலிலும்போய் நின்றவனன்றோ நீ; இப்போது நான் அபேக்ஷிப்பது உனக்கு மிகையாயிற்றோ? பிரானே! சடக்கென வந்து அம்மமுண்ணாய் என்கிறாள்.

வித்தகன்—ஆச்சரியப்படத்தகுந்த குணசேஷ்டிதங்களையுடையவன்.

http://acharya.org

'விரையாதே வெண்ணெய் விழுங்கும்' என்றதில் இவனுடைய சாதுரியம் தொனிக்கும்; வெண்ணெயுண்பதில் பதற்றத்தினால் யசோதை படுக்கையிற் சென்று சாய்வதற்கு முன்னமே அவஸரப்பட்டு எடுத்து விழுங்கிவிட்டுக் கையும் பிடியுமாய் அகப்பட்டுக்கொள்ளாதே ஆறப்பொறுத்து மெதுவாகச் சென்று வாரி விழுங்குவனாம். விகிர்தா !—'விக்ருத:' என்னும் வடசொல் திரிந்து விளியுருபு ஏற்றது; அச்சொல்—வேறுபட்டவனென்னும் பொருளுடையது; எங்குங் கண்டறியாத சாதுர்யமுடையவனே! என்றவாறு. .... (ரு)

பிள்ளைகள் செய்வன செய்யாய் பேசிற் பெரிதும் வலியை *
கள்ளம் மனத்தி லுடையை காணவே தீமைகள் செய்தி *
உள்ளமுருகி யென்கொங்கை ஓட்டந்து பாய்ந்திடுகின்ற *
பள்ளிக்குறிப்புச் செய்யாதே பாலமுதுண்ண நீவாராய். (சு)

பிள்ளைகள் செய்வன செய்யாய்	(உன்னோடொத்த பருவமுள்ள) பிள்ளைகள் செய்யும் தீம்புகளை நீ செய்கின்றிலை;
பேசில்	உன்னைப்பற்றிச் சொல்வோமாகில்,
பெரிதும் வலியை	மிகவும் மிடுக்குடையனாயிராநின்றாய்;
மனத்தில்	நெஞ்சிலே
கள்ளம் உடையை	கபடத்தை வுடையாயின்றாய்;
காணவே	(தண்டிக்கவேண்டியவர்களும்) பார்த்துக்கொண் [illegible] டிருக்கும் … யாகி
தீமைகள்	தீம்புகளை
செய்தி	செய்கின்றாய்;
என் உள்ளம் உருகி	என்னுடைய நெஞ்சு நீர்ப்பண்டமாகி
கொங்கை	முலைகளும்
ஓட்டந்து பாய்ந்திடுகின்ற	பால் பெருகிப் பாயப் பெறுகின்றன;
பள்ளி குறிப்பு செய்யாதே	(கொட்டாவி விடுதல் முதலிய) தூக்கக் குறிகளைச்செய்
	பால் அமுது உண்ண ம வ..

* * *—கண்ணா! இத்திருவாய்ப்பாடியில் நீ ஒருவனேயன்று; "தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர்நடை யிட்டு வருவான்" என்கிறபடியே ஆயிரக் கணக்கான பிள்ளைகளுண்டிறே; அவர்களும் தீம்பு செய்யாதவர்களன்று; "பல்லாயிரவரிவ்வூரிற் பிள்ளைகள் தீமைகள் செய்வார்" என்கிறபடியே எல்லாரும் தீம்பு செய்பவர்களே; ஆயினும் நீ செய்கிற தீம்பு மற்ற பிள்ளைகள் செய்யுந் தீம்பைப்போன்றதன்று. பொதுப்படையாகச் சொல்லுங்கால் 'நீ மிகவும் மிடுக்குடையாய்' என்றே சொல்லத்தகும். நீ நெஞ்சில் நினைக்குமவை இன்னதென்று தெரிந்து கொள்ள வொண்ணாதபடி மிக்க கள்ள நெஞ்சனாயிருக்கின்றாய்; தீம்புசெய்வதில் நின்றும் உன்னைவிலக்கி சிக்ஷிக்க உரிமைப்பட்டவர்களும் மோவாய்க்கட்டையில் கையைவைத்துக்கொண்டு 'இது என்ன ஆச்சரியம்!' என்று வியந்து காணவேண்டும்படியான தீம்புகளைச் செய்யாநிற்கின்றாய். அத்தீமைகளைக் காணவே என் உள்ளம் உருகி முலைவழியே பாலாய்ப்புறப்படாநின்றது. நீயோ முலையுண்பதில் விருப்பமற்று, கண்கள்சிவப்பது மூரிநிமிர்வது கொட்டாவிகொள்

வது முதலான உறக்கக்குறிப்புகளைக் காட்டுகின்றாய்; இது தவிர்ந்து பால முதுண்ணவாராய் என்றழைக்கிறாள்.

கண்ணபிரான் செய்யும் தீமைகளைப் பாசுரமிட்டுச் சொல்லில் கண்டுணைச் சில்படுமென்று பொதுப்படையாகப் 'பிள்ளைகள் செய்வன செய்யாய்' என்றும், 'பேசில்பெரிதும் வலியை' என்றும் சொல்லுகிறாளென்றுணர்க. .... (௬)

தன்மகனாக வன்பேய்ச்சி தான்முலையுண்ணக் கொடுக்க *
வன்மகனா யவளாவி வாங்கி முலையுண்ட நம்பீ! *
நன்மகளாய்மகளோடு நானிலமங்கை மணாளா! *
என்மகனே! யம்மமுண்ணாய் என்னம்மம் சேமமுண்ணாயே. (௭)

வல் பேய்ச்சி	கொடிய நெஞ்சுடையளான பூதனையானவள்	நல் மகள் ஆய்மகளோடு	சிறந்த மகளாகிய நப்பின்னைப் பிராட்டிக்கும்
தன் மகன் ஆக	(உன்னைத்) தன்புத்திரன் போல அபிமானித்து	நானிலம் மங்கை	பூமிப்பிராட்டிக்கும்
தான் முலை உண்ண கொடுக்க	தான் தனது முலையை உன் வாயிலே மடுக்க, (அவ்வளவிலே)	மணாளா	வல்லபனானவனே!
வல் மகன் ஆய்	வலிய ஆண்பிள்ளையாய்	என் மகனே	எனக்குப் பிள்ளையாக வாய்த்தவனே!
		அம்மம் உண்ணாய்—;	
அவள் ஆவி வாங்கி	அவளுயிரைக் கவர்ந்து	என் அம்மம்	எனது ஸ்தந்யமாகிற
முலை உண்ட நம்பீ	அவளது முலையை உண்ட பிரானே!	சேமம்	க்ஷேமத்தனிசையை
		உண்ணாய்	உண்ணவேணும்.

* *—பிரானே! உன்னைக்கண்ட பின்பும் நெஞ்சு நெகிழாத வன்மையை[illegible] பூதனையானவள் என்னுடைய வேஷத்தைப் பூண்டுகொண்டு பரிவு [illegible]முலைகொடுக்கவந்தாள்; [illegible] அதற்கு நீ மோசம்போகாதே அவ[illegible]டைய தீயபுந்தியைத் தெரிந்துகொண்டு அந்தச் சிறு[illegible]நிலையே பெரிய ஆண்பிள்ளையாய் அவளுயிரை முலைவழியே உண்டு அவளை முடித்திட்ட[illegible] உன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை நான் அறியாதவளல்லேன்; நப்பின்னைப் பிராட்டிக்கும் பூமிப்பிராட்டிக்கும் வல்லபனாயிருக்கையாகிற உன் ஏற்றமெல்லாம் அறிவேன்; [என்மகனே!] ஆயினும், எனக்குப் பிள்ளையாகவாய்த் தாய் என்கிற ஸௌலப்யத்தையே பற்றாசாகக்கொண்டு பிரார்த்திக்கிறேன்—அம்மமுண்ணாய், என்னம்மம் சேமமுண்ணாய், என்கிறாள் யசோதைப்பிராட்டி.

மூன்றாமடியில், 'நன்மகள்' என்று தனியே பிரித்து ஸ்ரீமஹாலக்ஷ்மியைச் சொல்லுவதாக நிர்வஹித்தலுமாம்.

நானிலமங்கை=நானிலம்—நான்காகிய நிலங்களையுடையதெனப் பூமிக்குக் காரணப்பெயர். நால்வகை நிலங்களாவன—முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன. காடும் காடுசார்ந்த இடமும் முல்லையெனப்படும்; மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியெனப்படும்; நாடும் நாடுசார்ந்த இடமும் மருதமெனப்படும்; கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தலெனப்படும். மற்றொன்றாகிய பாலை

http://acharya.org

நிலம் பிராணிஸஞ்சாரத்திற்கு உரியதன்றென்று இங்கு விலக்கப்பட்டது. அது நீரும் நிழலுமில்லாத கொடுநிலம். பாலைக்குத் தனியே நிலமில்லை யென்பதும் நால்வகை நிலங்களும் தத்தம் தன்மை கெட்டவிடத்தே பாலையா மென்பதும் சில ஆசிரியர்கொள்கை. இப்பாட்டில் நாணில மென்றது ஸாமாந்யமாகப் பூமியைச் சொல்லக்கடவது. .... (எ)

உந்தமடிகள்முனிவர் உன்னைநா னென்கையிற் கோலால் *
நொந்திட மோதவுங்கில்லேன் உங்கள்த மாநிரையெல்லாம் *
வந்து புகுதரும்போது வானிடைத்தெய்வங்கள் காண *
அந்தியம்போ தங்குநில்லேல் ஆழியங்கையனே! வாராய். (அ)

ஆழி அம் கையனே	திருவாழியினால் அழகு பெற்ற திருக்கையை யுடையவனே!	உங்கள் தம் ஆ நிரை எல்லாம்	உங்களுடைய பசுக் கூட்டங்களெல்லாம்
(நீ செய்கிற தீமைகளைக் கண்டால்)		வந்து புகுதரும் போது	(காடுகளில் மேய்ந்து) மீண்டு வந்து (ஊர்க்குள்) புகும்போது
உந்தம் அடிகள்	உங்கள் பிதாவாகிய நந்தகோபர்	வானிடை தெய்வங்கள் காண	ஆகாசத்திலுள்ள தேவதைகள் (எச்சிற்கண்ணால்) காணுமாறு
முனிவர்	சீறுவர்;	அந்தியம்போது	மாலைப்பொழுதிலே
நான்	நானேவென்றால்	அங்கு நில்லேல்	நாற்சந்தியிலே நிற்கவேண்டா;
என் கையில் கோலால்	என் கையிலுள்ள கொம்பினால்	வாராய்	(என்னருகே) வந்திடாய்.
உன்னை நொந்திட மோதவும் இல்லேன்	உன்னை நோகும்படி அடிக்கவும் மாட்டேன்;		

* * *—யசோதைப்பிராட்டி இப்படி வேண்டிவருந் தியழைக்கச்செய்தேயும் கண்ணபிரான் இசைந்துவருதலின்றியே நாற்சந்திகளிலே விளையாட்டுப் பராக்காக நிற்க, அச்சமுறுத்தியழைக்கிறாள். 1. "அஞ்சவுரப்பா ளசோதை ஆணாட விட்டிட்டிருக்கும்" என்கிறபடியே, யசோதை கொடுந்தண்டனைகள் செய்யகில்லாள்; ஆகையாலே அவன் இவளைக்கண்டால் திம்பில் ஒன்று பத்தாகப் பண்ணப்பது வழக்கம்; ஆகவே, 'உன்னை நான் தண்டிக்கமாட்டேனாகிலும் உன் தகப்பனார் உன்னை லகுவாக விடமாட்டார்காண்' என்று அச்சமுறுத்துகிறாள் உந்தமடிகள் முனிவர் என்று. உங்கள் முதலியார் சீறுவர்கிடீர் என்கிறாள்.—உந்தம் என்று பன்மையாகச் சொன்னது வழக்கு பற்றிய வழுவமைதி. 'பயலே! உங்க ளண்ணை எங்கே?' என்றாற் போன்ற உலகவழக்குகள் காண்க.

'உந்தமடிகள் முனிவர்' என்று சொல்லும்போது யசோதை தன்கையிலும் தடி வைத்துக்கொண்டிருந்தாளாகையாலே அதனைக் கண்டு அஞ்சி ஓடிப்போய் விடுவனோ வென்று சங்கித்து, பிரானே! நான் அது செய்யகில்லேனென்கிறாள். என்கையில் கோலுள்ளது உண்மைதான்; ஆனால் இது கொண்டு காரியங் கொள்ளும்படியான வன்மை எனக்கில்லை காண் என்கிறாள்.

1. நாச்சியார் திருமொழி 3-8.

http://acharya.org

'யசோதாய்! அடிக்கமாட்டேனென்று நீ சொல்லுகிறபடியாலே அடிக்க வேண்டும்படியான குற்றம் ஏதோ என் பக்கல் உள்ளதுபோல் தோன்றுகின்றதே, அப்படி என்ன தீமை நான் செய்தேன்?' என்று கண்ணபிரான் கேட்க; கானகத்தில் மேயப்போன பசுக்களெல்லாம் மீண்டு ஊர்புகுங்காலமாகிய இம்மாலைப் பொழுதிலே ஆகாசத்திலேபார்த்துக்கொண்டு நிற்கிற துர்தேவதைகள் எத்தனையுண்டு!, அவற்றின் கண்பட்டால் என்னாகும்!, இஃதுணராதே இந்தப் பொழுதிலே அவ்விடத்தே நிற்கின்றாயே; இது தகுதியோ? என்றாள்;

அது கேட்ட கண்ணபிரான், '*வானிடைத் தெய்வங்களுக்கோ நீ அஞ்சுவது; உன் அச்சம் அழகிதாயிருக்கிறது!; என் கையில் திருவாழியைக் கண்டிலையோ? நீயே முன்பு அம்புலியை நோக்கி 1. "ஆழிகொண்டுன்னையெறியும் ஐயுறவில்லைகாண், வாழவுறுதியேல் மாமதீ! மகிழ்ந்தோடிவா" என்று சொல்லியிருக்கிறாயே, என் கையில் திருவாழியை மறந்திட்டாயோ?' என்று, முன்பு வஸுதேவதேவகிகளின் வேண்டுகோளுக்கிணங்கி மறைத்திட்ட திவ்யாயுதத்தைச் சற்று மின்னச் செய்தருளினன் கண்ணபிரான். 'ஆழியங்கையனே! வாராய்' என்கிறாள். இந்த திவ்யாயுதச்சேர்த்திக்கு ஒரு தீங்கு நேரிடாமே வந்துசேர் என்கிறாள். 'வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு' என்னுமவர்களிறே.

கீழ்ப்பாசுரங்களிற்போலே இப்பாசுரத்தில் 'அம்மமுண்ண' என்பதின்றியே 'வாராய்' என்று மாத்திரம் உள்ளது; நீ முலையுண்ணுந்தொழிலில் ஒழி; உனக்கொரு அவத்யம் விளையாதபடி அவ்விடத்தைவிட்டு இவ்விடத்தே வந்து சேர்ந்தாற் போதும் என்பது உட்கருத்து. .... (அ)

பெற்றத்தலைவ னெங்கோமான் பேருளாளன் மதலாய்! *
சுற்றக்குழாத் திளங்கோவே! தோன்றிய தொல்புகழாளா! *
கற்றினந்தோறும் மறித்துக் கானந்திரிந்த களிறே! *
எற்றுக்கென் னம்மமுண்ணாதே யெம்பெருமானிருந்தாயே? (௯)

பெற்றம் தலைவன்	பசுக்களுக்குத் தலைவனே!	கானம்தோறும்	காடுகள்தோறும்
எம் கோமான்	எங்கள் பெருமானே!	கன்று இனம்	கன்றுகளின் கூட்டங்களை
பேருளாளன் மதலாய்	மஹோதாரனுவான நந்தகோபருடைய திருக்குமாரனே!	மறித்து	மடக்கி மேய்த்து
சுற்றம் குழாம்	பந்து ஸமூஹத்துக்கெல்லாம்	திரிந்த	உலாவின
இள கோவே	யுவராஜாவானவனே!	களிறே	கஜராஜமே!,
தோன்றிய தொல் புகழாளா	எங்கும் பரவி விளங்குகின்ற நித்ய கீர்த்தியையுடையவனே!	எம் பெருமான்	எனக்குப் பெருமையை விளைப்பவனே!;
		எற்றுக்கு	எதுக்காக
		என் அம்மம் உண்ணாதே இருந்தாய்	என் முலைப்பாலை உண்ணாமலிருக்கின்றாய்?.

1. பெரியாழ்வார் திருமொழி 1—4—9.

http://acharya.org

* * *—முதலடிமுழுவதையும் ஒரே விளியாகக் கொள்ளலாம் போலத்
தோன்றுமாயினும் மூன்று விளிகளாகவே கொள்க. பசுக்களுக்குத் தலைவனையும்
எங்களுக்குக் கோமானையும் பரமதயாளுவாயுமிருக்கிற நந்தகோபனுடைய
மகனே! என்று (ஏகஸம்போதநமாகக் கொண்டு) பொருள் சொல்லிவிடக்கூடுமாயி
னும், அக்கண்ணபிரான் தானே மேல்விழுந்து வந்து முலையுண்பதற்காக அவனைப்
புகழ்ந்து பேசும் ப்ரகரணமாதலால் மூன்று விளிகளாகப் பிரிந்து பொருள்படத்
தகும். பெற்றத்தலைவன்! என்றது அண்மைவிளி; பசுக்களுக்கெல்லாம் ரக்ஷ
கனே! என்றபடி. அந்த பசுக்களில் வாசியற்ற எங்களுக்கும் ரக்ஷகனே! என்
கிறது இரண்டாவது விளி.

பேரருளாளன் என்பதையும் தனியே பிரித்து அண்மைவிளியாகக் கொண்டு
'பேரருளாளனே!' என்றும், மதலாய்!—குமாரனே! என்றும் பொருள் கொள்ள
லாமாயினும், பெரியவாச்சான்பிள்ளை இங்ஙனே யருளிச்செய்யாமையாலே
'பேரருளாளன் மதலாய்!' என்றவளவும் ஒருவிளியாகக் கொள்ளத்தக்கது. முற்
காலத்தில் [கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் வந்து சேர்தற்குமுன்] நந்த
கோபர்க்குப் 'பேரருளாளன்' என்றே ப்ரஸித்தமாகப் பெயர்வழங்குமாம்.
பேரருளாளனென்றால் எல்லாப் பொருள்களிடத்தும் ஈரநெஞ்சு இளநெஞ்சு
பொருந்தியவன் என்று பொருள். நந்தகோபர் பசும்புல்மேல் நடந்தாலும்
'எந்தஜந்துவுக்கு என்ன நலிவுநேருமோ' என்று அஞ்சி தரையில் காலூன்றாதே
மெதுவாக நடப்பவராம். இந்தத் தன்மை எதுவரையில்?—கண்ணபிரான்
தனக்குத் திருக்குமாரனாகவந்து பிறக்கும்வரையில். அதற்குப் பிறகோ வென்
னில், அந்தத்தயாளுத்வம் மாறி, 1. "கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன்"
என்னும்படியாயினான். ஏனென்னில்; கண்ணபிரானிடத்துப் பரிவினால், தொட்டி
லின்கீழ் ஓர் சிற்றெறும்பு ஊர்ந்தாலும் புலியின்மேற் பாயுமாபோலே வேற்படை
யைத் திட்டிக்கொண்டு பாய்வனாம். ஆகவே, இங்குப் பேரருளாளனென்றது
முன்னைய நிலைமைபற்றியென்க. காதில் தோடுகழற்றினாலும் தோடிட்டகாது
என்னலாமிறே.

மதலாய்—'மதலை' என்பதன் ஈறுதிரிந்த விளி. [சுற்றக்குழாத்திளங்கோவே!]
பந்துவர்க்கத்திலுள்ளவர்கட்கெல்லாம் இளவரசாகக் குலாவப்படுமவனே! என்
கை. [தோன்றிய தொல்புகழாளா!] தாய்தந்தையர் வார்த்தையைத் தவறாத
வன் என்று நெடுநாளைக்குமுன்னமே [ஸ்ரீராமாவதாரத்தில்] புகழ்படைத்தவ
னல்லையோ நீ; இப்போது நானழைப்பதற்கு இசைந்துவந்து அம்மமுண்ணாவிடில்
உன் தொல்புகழ்க்குக் குறையாகுங்கிடாய் என்றுணர்த்துகிறபடி.

[கானந்தோறும் கற்றினம்மறித்துத்திரிந்தகளிறே] "காடுகளூடுபோய்க் க
கள் மேய்த்து மறியோடி" என்கிறபடியே ஒன்றிரண்டு காடுகளன்றிக்கே,
காடுகள் தோறும் திரள்திரளான கன்றுகளை மேய்த்து ஒரு மத்தகஜம் உ
போலே உலாவினவனே!; அந்த விடாயெல்லாந் தீர அம்மமுண்ண வேண்

1. திருப்பாவை—2.

http://acharya.org

ப்ராப்தமாயிருக்க என் அஃதுண்ணாமே திரிகிறாய்? உன்னுடைய விடாய் தீர்வதற்காகவும் நீ முலையுண்ணவேணும்; நான் தரிப்பதற்காகவும் நீ முலையுண்ணவேணுங்காண். .... (௯)

இம்மையிடர் கெடவேண்டி யேந்தெழில்தோட் கலிகன்றி *
செம்மைப்பனுவல் நூல்கொண்டு செங்கணெடியவன் றன்னை *
அம்மமுண்ணென் றுரைக்கின்ற பாடலிவையைந்துமைந்தும் *
மெய்ம்மை மனத்துவைத்தேத்த விண்ணவராகலுமாமே. (௧௦)

எழில் ஏந்து தோள் கலிகன்றி	அழகை ஏந்தியிருக்கின்ற தோள்களையுடையரான திருமங்கையாழ்வார்
இம்மை இடர் கெட வேண்டி	இப்பிறவியிலுண்டான இடரெல்லாம் அழிய வேண்டி
செம் கண் நெடியவன் தன்னை	புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரனை நோக்கி
செம்மை நூல் பனுவல் கொண்டு	சிறந்த சாஸ்த்ரமாகிய அருளிச்செயலைக் கொண்டு
அம்மம் உண் என்று உரைக்கின்ற இவை பாடல் ஐந்தும் ஐந்தும்	‘முலைப்பாலுண்ண வா’ என்று அழைப்பதான இப்பத்துப் பாசுரங்களையும்
மெய்ம்மை	யதார்த்தமான அன்பு பொலிய
மனத்து வைத்து	நெஞ்சிற்கொண்டு
ஏத்த	அநுஸந்திக்குமளவில்
விண்ணவர் ஆகலும் ஆம்	நித்யஸூரிகளாகப் பெறுதலும் அவர்கட்கு நேரும்.

* * *—யசோதைப் பிராட்டியானவள் கண்ணபிரானை அம்மமுண்ண அழைத்தபடியை அவளுடைய தன்மையை ஏன்றுகொண்டு திருமங்கையாழ்வார் பாடின இப்பாசுரங்களை மெய்யன்புடன் அநுஸந்திப்பவர்கள் நித்யஸூரிகளோடொக்கும்படியான தரம் பெறலாமென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

‘இம்மையிடர்கெடவேண்டி’ என்றதற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்யும் பொருளின் சீர்மையைக் குறிக்கொண்மின்;—

“இவள் முலை கொடுத்தல்லது தரியாதாப் போலே ஆழ்வார் கவிபாடியல்லது தரியாதாராய்ப் பாடின கவியாயிற்று”

என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. ஆழ்வார் இப்பாசுரங்களை வாய்விட்டுப் பாடாவிடில் இடர்படுவர்; அவ்விடர் உண்டாகாதபடி கவிபாடினரென்க. (௧௦)

அடிவரவு.—சந்தம் வங்கம் திருவில் மங்கள் மைத்த பிள்ளைகள் தன்மகன் உந்தம் பெற்றம் இம்மை பூங்கோதை.

நான்காந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—ஐந்தாந்திருமொழி,

பூங்கோதையாய்ச்சி.

உரையவதாரிகை:—யசோதைப்பிராட்டி கண்ணபிரானை அம்மமுண்ணவா வென்றழைத்தபடியை ஆழ்வார்தாமும் தம்மை அவளாகப்பாவித்து அங்ஙனமே பேசியநுபவித்தார் கீழ்த்திருமொழியில். குழந்தைவிளையாடல்களில் 'சப்பாணி கொட்டுதல்' என்பது ஒருவிளையாட்டு; அதாவது, ஒருகையோடு மற்றொருகையைச் சேர்த்துக் கொட்டுதல். அவ்விளையாட்டை அக்காலத்தில் யசோதைப் பிராட்டி பிரார்த்தித்து அநுபவித்ததைப் பிற்காலத்தில் பெரியாழ்வார் "மாணிக்கக் கிண்கிணியார்ப்ப" என்னுந் திருமொழியிலே அநுகரித்து அநுபவித்தாப் போலே இவ்வாழ்வாரும் அவ்விளையாட்டை அநுபவிக்கிறார் இத்திருமொழியில். கீழ்த்திருமொழிபோலே இதுவும் யசோதைப் பிராட்டிபேசுகிற பாசுரமாகவே செல்லுகிறது. ... . *

பூங்கோதையாய்ச்சி கடைவெண்ணெய் புக்குண்ண *
ஆங்கவளார்த்துப் புடைக்கப் புடையுண்டு *
ஏங்கி யிருந்து சிணுங்கி விளையாடும் *
ஓங்கோத வண்ணனே! சப்பாணி ஒளிமணி வண்ணனே! சப்பாணி.(க)

பூ கோதை ஆய்ச்சி	புஷ்பங்களணிந்த மயிர் முடியை யுடையளான யசோதையினால்
கடை	கடையப்பட்ட
வெண்ணெய்	வெண்ணெயை
புக்கு உண்ண	(கள்ளத்தனமாய்ப்) புகுந்து அமுது செய்தவளவில்
அவள்	அந்த யசோதை
ஆங்கு	அவ்விடத்திலேயே
ஆர்த்து	(தாம்பினால்) கட்டி
புடைக்க	அடிக்க
புடை உண்டு	அடிபட்டு
ஏங்கி இருந்து	(சற்றுப்போது) அழுது கொண்டிருந்து (பிறகு)
சிணுங்கி	சீராட்டப்பெற்று
விளையாடும்	விளையாடுகின்ற
ஓங்கு ஓதம் வண்ணனே	தேங்கின கடல்போன்ற வடிவையுடையவனே!
சப்பாணி	சப்பாணி கொட்டவேணும்;
ஒளி மணி வண்ணனே	ஒளிபொருந்திய மணி போன்ற நிறமுடையவனே!
	சப்பாணி—.

* * *—யசோதைப்பிராட்டி பேசுகிற இப்பாசுரத்தில் 'பூங்கோதையாய்ச்சி' என்று வந்தது, தன்னையே படர்க்கையாகச் சொல்லிக்கொண்டபடி. பெரியாழ்வார் திருமொழியில் 'சீதக்கடல்' என்னுந் திருமொழியில் இப்படி அடிக்கடி வருதல் காண்க. அன்றியே, ஆழ்வார் யசோதைபேசும் பாசுரமாக அருளிச்செய்தாலும் தாமான தன்மையும் இடையிடையே தோற்றி, அதனால் யசோதையைப் படர்க்கையாகக் குறிக்கின்றார் என்னவுமாம்.

http://acharya.org

யசோதைப்பிராட்டி கடைந்த வெண்ணெயைக் கள்ளவழியால் வாரிவிழுங்கினவளவிலே அவள் பிடித்துக்கொண்டு * கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டிப்புடைக்க, அதனால் சிறிதுபோது வருந்திக்கிடந்து, பின்னையும் அவள் சீராட்ட அதனால் விளையாட்டிலே இழிகின்ற கடல்வண்ணனே! சப்பாணி கொட்டவேணும் என்று பிரார்த்திக்கிறது.

யசோதை தயிர்கடையும்போது தன் மயிர்முடியை மலர்களிட்டு அலங்கரித்துக்கொண்டே கடைவளாம்; ஏன்? கண்ணபிரானுக்கு அணுக்கம் உண்டாகாமைக்காக. அலங்காரங்களின்றியே இடைச்சாதிக்குரிய 'ஜல்லாரிபில்லாரி' வேஷங்களுடனே நின்றால் கண்ணன் அணுகுவதற்கு அஞ்சுவன் போலும். ஆகவே 'பூங்கோதையாய்ச்சி' எனப்பட்டது.

'கடைவெண்ணெய்' என்பது முக்காலத்துக்கும் பொது; கடையப்பட்ட வெண்ணெய், கடையப்படுகிற வெண்ணெய், கடையப்போகிற வெண்ணெய் என்று முக்காலத்துக்கும் பொதுவாக இருந்தாலும் எதிர்காலப்பொருள் பிரகரணத்துக்குச் சேராதாகையால் இறந்தகாலப் பொருளும் நிகழ்காலப் பொருளுமே கொள்ளத்தகுவன; அவற்றிலும் நிகழ்காலப்பொருள் கொள்வதே இன்சுவையென்று பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றுகிறார்;—“கடைந்து திரட்டிச் சேமித்துவைத்தபின்பு களவுகாண்கை யன்றிக்கே கடைகிறபோதே நிழலிலே யொதுங்கிக் களவுகண்டாயிற்று அமுது செய்வது” என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

ஏங்கியிருந்து=யசோதை தாம்பினால் தன்னைக் கட்டிப்போட்டிருக்குங் காலத்தில் கண்ணபிரான் ஏங்கியழுவது பாதை பொறுக்கமாட்டாமையாலன்று; திருவாய்ப்பாடியில் ஆங்காங்கு வேண்டியபடியே திரிந்து தீம்பு செய்ய முடியாதபடி கட்டிப்போட்டுவைத்திருக்கிறாளே! என வருந்துவனென்க. பெரிய திருவிழாக்களில் கள்ளர்களைப் பிடித்துச் சிறைப்படுத்தினால் அவர்கள் ஏங்கியழுது வருந்தக்காண்கிறோம்; 'அவமானகரமான சிறையிருப்பு நமக்கு நேர்ந்ததே!' என்று வருந்துகிறாரல்லர்; அருளிச்செயல் கோஷ்டியிலும் வேதபாராயண கோஷ்டியிலும் அந்வயித்துக் கைங்கரியம் பண்ணத் தடையாயிற்றே யென்றும் வருந்துகிறாரல்லர்; பெருமாளை முன்னும் பின்னும் ஸேவிக்க ப்ராப்தியில்லையாயிற்றே என்றும் வருந்துகிறாரல்லர். உறங்குவார் கையில் வளைகளைக் கழற்றவும் ஓடுவார் கழுத்தில் மணிகளையறுக்கவும் இப்படி பலவகைக் கொள்ளைகளை வேண்டினபடி செய்து திரிய வொண்ணாதபடி சிறைப்படுத்திவிட்டார்களே யென்றுதான் வருந்துவர்கள்; அதுபோலவே கண்ணபிரானும் திருவாய்ப்பாடியில் கொள்ளைகள் நடத்தத் தடையாயிற்றே யென்பதுகாரணமாகவே வருந்திக்கிடப்பனாம்.

யசோதைதானும் * ஆறுடை விட்டிட்டிருக்குமவளாகையாலே அவனுடைய கொள்ளைகளுக்கு நெடுகத் தடை செய்யமாட்டாளே; 1. “வண்ணக் கருங்குழல்

---

1. பெரியாழ்வார் திருமொழி 3—2—4.

http://acharya.org

மாதர்வந் தலர்தூற்றிடப், பண்ணிப்பலசெய் திப்பாடியெங்கும் திரியாமே, கண்ணுக்கினியானைக் கானதரிடைக் கன்றின்பின், எண்ணற்கரியானைப் போக்கினேனெல்லே பாவமே” என்று வயிறுபிடிப்பவளாகையாலே, அவன் தீமை செய்யப்பெறாது சிறைப்பட்டு வருந்துவதைக்கண்டு ஆற்றகில்லாதவளாய் உடனே சீராட்டத் தொடங்குவள், அதனால் பழையபடியே விளையாட்டில் கை வைக்கத் தொடங்குவனும்; அது சொல்லுகிறது சிங்குகி விளையாடும் என்று.

சப்பாணி=ஸஹ, பாணி என்ற இரண்டு வடசொற்கள் சேர்ந்து சப்பாணியென விகாரப்பட்டு வந்ததென்பர்; ‘ஒருகையுடன் கூட’ என்று பொருள்; இத்தொடர் மொழி—ஒருகையுடன் கூட மற்றொருகையைச் சேர்த்துக் கொட்டுதலாகிய விளையாட்டைக் காட்டும். .... (க)

தாயர் மனங்கள் தடிப்ப * தயிர்நெய்யுண்
டேயெம்பிராக்கள்! இருநிலத் தெங்கள்தம் *
ஆய ரழக! அடிக ளரவிந்த [சப்பாணி. (உ)
வாயவனே! கொட்டாய் சப்பாணி மால்வண்ணனே! கொட்டாய்

தாயர் மனங்கள் தடிப்ப	தாய்மாருடைய நெஞ்சு துடிக்கும்படியாக
தயிர் நெய் உண்டு	தயிரையும் நெய்யையும் வாரி யமுதுசெய்து
எய்	பொருத்தமான காரியம் செய்ததாகநினைத்திருக்கிற
எம் பிராக்கள்	எம்பெருமானே!
இரு நிலத்து	விசாலமான இப் பூமண்டலத்திலே
எங்கள் தம் ஆயர்	எங்கள் இடைச்சாதிக்குள்ளே
அழக	அழகிற் சிறந்தவனே!
அரவிந்தம்	தாமரைப் பூப்போன்ற
அடிகள் வாயவனே	திருவடிகளையும் திருமுகத்தையு முடையவனே!
	சப்பாணி கொட்டாய்—;
மால் வண்ணனே	கரிய திருமேனியனே!
	சப்பாணி கொட்டாய்—;

* * *—பெற்றதாய், வளர்த்ததாய் என்று சொல்லப்படுகிற தாய்மாருடைய நெஞ்சு துடிக்கும்படியாக [—அதாவது, அளவில்லாமல் வாரிவிழுங்குகிறானே, இத்தனையும் இவனுக்கு ஜரிக்கமாட்டாதே, வயிற்றுக்கு வலியாகுமே! என்று நெஞ்சுளுக்கும்படியாக]த் தயிரையும் நெய்யையும் களவுகண்டு புஜித்து, இப்படி செய்தோமே! என்று வெட்கப்படாதே ‘பொருத்தமான காரியமே செய்தோம்’ என்றிருக்கிற பெருமானே!, இந்நிலவுலகின்கண் எங்களிடைச் சாதியிலுள்ளாரில் மிக்க அழகையுடையவனே!, திருவடிகளும் திருவதரமும் செவ்வித்தாமரைபோலே யிருக்கப்பெற்றவனே!, அதற்குப் பரபாகமாகக் கரிய திருமேனியுடையவனே! சப்பாணி கொட்டவேணும்.

இரண்டாமடியின் முதற்பதம் எய் என்று பிரியும். எய்தல்—பொருந்துதல், நிறைதலுமாம். தயிரையும் நெய்யையுமுண்டு வயிறு நிறையப்பெற்ற என்னவுமாம்.

‘அரவிந்தமாயவனே’ என்றும் பாடமுள்ளதாக வியாக்கியானங்காண்கிறது; அப்போது, திருவடிகள் தாமரையாயிருக்கிறவனே! என்று பொருள்காண்க.

http://acharya.org

மால்வண்ணனே!—'மால்' என்று கருமைக்கும் வியாமோஹத்திற்கும் பெயர்; வியாமோஹமே வடிவெடுத்திருப்பவனே! என்னவுமாம். .... (உ)

தாமோருருட்டித் தயிர்நெய் விழுங்கிட்டு *
தாமோ தவழ்வரென் றாய்ச்சியர் தாம்பினால் *
தாமோதரக்கையா லார்க்கத் தழும்பிருந்த *
தாமோதரா! கொட்டாய் சப்பாணி தாமரைக்கண்ணனே! சப்பாணி.

தா	தாவி
மோர் உருட்டி	மோர்ப்பானைகளை உருட்டிவிட்டு
தயிர் நெய் விழுங்கிட்டு	தயிரையும் நெய்யையும் விழுங்கிவிட்டு
தாமோ தவழ்வர் என்று	'இப்படி பெரிய காரியத்தைச் செய்தவரோ (ஒன்று மறியாத குழந்தை போலத்) தவழ்கின்றார்' என்று சொல்லி
ஆய்ச்சியர்	தாம் இடைச்சிகள்
தாம்பினால் ஆர்க்க	தாம்பால் கட்டவும்
கையால் மோதர	கைகளால் அடிக்கவும்
தழும்பு இருந்த	அதனால் காய்ப்பேறிக் கிடக்கின்ற
தாமோதரா	தாமோதரனே!
சப்பாணி கொட்டாய்—;	
தாமரைக் கண்ணனே சப்பாணி—.	

* * *—இடைச்சிகள் மோரை ஒரு பாத்திரத்திலும் தயிரை மற்றொரு பாத்திரத்திலும் நெய்யை வேறொருபாத்திரத்திலும் சேமித்து வைத்துவிட்டு உறங்குவர்கள்; கண்ணபிரான் ஆங்காங்கு இருளிலே சென்று கையால் தடவிப் பார்ப்பன்; மோர்க்குடம் கைப்பட்டவாறே வெறுத்து உருட்டி விடுவன்; தயிரும் நெய்யும் கைப்பட்டவாறே வாரி விழுங்கிடுவன்; பின்னை 'இந்தப் பூனையா இந்தப்பாலைக்குடித்தது!' என்னவேண்டும்படி ஒன்று மறியாதவன் போலத் தவழ்நடையிடத் தொடங்குவன்; சில குறிப்புகளாலே ஆய்ச்சியர் உணர்ந்தெழுந்து சென்று சேமித்து வைத்திருந்தவற்றை நோக்கினவாறே குறியழிந்திருப்பதையும் மோருருண்டிருப்பதையுங்கண்டு கண்ணபிரானே இது கொள்ளை கொண்டிருக்கவேணுமென்று நிச்சயித்து இவனைத் தேடி வந்தவாறே இவன் ஒருபாவமுமறியாதவன் போன்று தவழ் நடையிட்டிருக்குமிருப்புக் கண்டு 'இத்தனைகாரியஞ்செய்த இந்த மஹாநுபாவர் தவழ்கிறாரோ!' என்று சொல்லித் தாம்புகளாற் கட்டியும் கையாலடித்தும் சில நலிவுகளைப்பண்ண அதனால் திருமேனி நிறையக் காய்ப்புக்காய்த்து இதுவேநிரூபகமாகத் தாமோதர னென்று திருநாமம் படைத்தவனே! சப்பாணி கொட்டவேணும்.

முதலடியில் 'தாவி' என்பது 'தா' என்று குறைந்துகிடக்கிறது. [மோருருட்டி] "மோரார்குட முருட்டி" என்றார் சிறிய திருமடலிலும். மூன்றாமடியின் வியாக்கியானத்தில்

அன்றியே, அலங்க்ருதமான கைகளாலேகட்ட. தாம் மோதரக்கையால் என்று பிரித்து; "மோதரத்தை மோதிரமென்று வ்யவஹரிக்கிற வித்தனை; படாகை, கணறு என்கிற இவற்றைப் பிடாகை, கிணறு என்கிறாப்போலே"

http://acharya.org

என்று அச்சுப்புத்தகங்களிற் காணப்படும் வாக்கியங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டவை. பழைய ஏட்டுப் பிரதிகளிற் காண்பரியன; பொருந்தவும்மாட்டா. முற்காலத்தில் ஏட்டுப்பிரதிகளை வைத்துக்கொண்டு காலக்ஷேபங் கேட்கும்போது உபதேசிக்கின்ற ஆசார்யர்கள் அருளிச்செய்யுமர்த்தங்கள் சில ஆவச்யகமென்று தோன்றினால் சிஷ்யர்கள் அதை ஏட்டில் அவ்விடத்தில் ஒருமூலையில் குறித்து வைத்துக் கொள்வார்கள். அவ்வர்த்தங்களிற் பொருத்தமானவையும் சிலவுண்டு; பொருந்தாதவையுஞ் சிலவுண்டு. பிறகு அந்த ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு அச்சிடப்புகுந்தவர்கள் அவற்றில் மேற்சொன்னவிதமாகப் புகுந்த டிப்பணிகளையும் வியாக்கியானகாரர்களான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளாகவே ப்ரமித்து அச்சிட்டுவிடுகிறார்கள். நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவற்றிலும் இப்படிப்பட்ட ப்ரக்ஷேபங்கள் பல புகுந்துள்ளன வென்பதை ஏற்கனவே யாம் நிரூபித்துள்ளோம். அவ்வண்ணமாகவே இப்பாட்டின் வியாக்கியானத்திலும் மேற்குறித்தவாக்கியங்கள் நவீநர்களின் கைச்சரக்காக நுழைந்துகொண்டன. "ஆய்ச்சியர்தாம் தாம்பினால் ஆர்க்க, கையால் மோதர" என்று அந்வயித்துப் பொருளுரைக்குமத்தனையே பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ளது. அதற்குமேல் 'மோதரக்கையால்' என்றுகொண்டு மோதிரங்களணிந்த கையால் என்று பொருள் கூறுவதும், மோதரமென்று மூலத்திலிருக்கிறதேயன்றி மோதிரமென்று இல்லையே என்று சிஷ்யர்கேட்க, கணறு என்று சொல்லவேண்டியதைக் கிணறு என்று வ்யவஹரிப்பதுபோல மோதரமென்று சொல்லவேண்டியதையே மோதிரமென்று வ்யவஹரிக்கிறோம்; ஆகவே மோதரமென்பதே பொருந்துமென்று ஆசார்யர் ஒரு அபத்த ஸமாதாநம் கூறுவதும், இதைப் பரமார்த்தமென்று க்ரஹித்த சிஷ்யன் இதனை அவ்வோலையில் ஒரு மூலையில் எழுதிவைக்க அதையுஞ் சேர்த்துப் பின்புள்ளார் அச்சிட்டுவைப்பதும் அவையும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியாகவே கொள்ளப்படுதலும் வியப்பினும் வியப்பே. பல மஹநீய பண்டித சிகாமணிகள் கூடிப் பரிசோதித்துப் பதிப்பித்த ப்ராசீந பகவத்விஷய ஸ்ரீகோசங்களிலும் இப்படிப்பட்ட பிறழ்வுகள் சிற்சில நேர்ந்துள்ளன வென்னும்போது மற்றையோர்பதிப்புகளின் பிறழ்வுகட்கு வியக்கவேண்டுவதுமில்லை. நிற்க.

பெற்றார் தளைகழலப் பேர்ந்தங்கயலிடத்து *
உற்றா ரொருவருமின்றி யுலகினில் *
மற்றாருமஞ்சப்போய் வஞ்சப்பெண் நஞ்சுண்ட * [சப்பாணி.
கற்றாயனே! கொட்டாய் சப்பாணி கார்வண்ணனே! கொட்டாய்

பெற்றார்	தாய் தந்தையருடைய	அயலிடத்து உற்றார் ஒருவரும் இன்றி	நெருங்கின உறவுமுறையார் ஒருவருமில்லாமற்போக
தளை	கால்விலங்கு		
கழல	கழன்று விழும்படி		
பேர்ந்து	வந்தவதரித்து	உலகினில் மற்றாரும் அஞ்ச	உலகத்திலுள்ள எல்லாரும் அஞ்சும்படியாக
அங்கு	அவ்விடத்தில்		

http://acharya.org

வஞ்சம் பெண் நஞ்சு உண்ட — வஞ்சனையேவடிவாய் வந்த பூதனையின் (முலையில் தடவின) விஷத்தை அமுதுசெய்தருளின | சப்பாணி கொட்டாய்— ;

கன்று ஆயனே — கோபலகிருஷ்ணனே! | கார் வண்ணனே — காளமேகநிறத்தனே ! சப்பாணி கொட்டாய்—.

* * *—தேவகியின் வயிற்றில் பிறக்கும் பிரஜையினால் தனக்கு மரணமுண்டாகுமென்று ஆகாசவாணியினாலறிந்த கம்ஸன் அவளைக் கத்தியினால் வெட்டிக் கொல்லப்புகுந்தபோது நல்வார்த்தைகளால் ஒருவாறு ஸமாதாநமடைந்து வஸுதேவதேவகிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்துவைக்க, "மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள் தன்வயிற்றில், சிக்கனவந்து பிறந்து நின்றாய்" என்கிறபடியே கண்ணபிரான் திருவவதரித்தவுடனே அவ்விலங்கு முறிபட்டுக் கழன்றொழிந்ததென்று இதிஹாஸ புராணங்கள் கூறுதலால் 'பெற்றார்தளைகழல' எனப்பட்டது. "தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண் வந்த பெருந்தை" "தந்தைகாலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்" என்றவை யுங்காண்க.

பேர்ந்து என்றது "நாகவய்யங்கஸ்ரு தேஜஸாஹ்யாமதெளகா யெரா வாஸீ — நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" என்கிறபடியே திருப்பாற்கடலில் நின்றும் திருவடமதுரைக்கு வந்தபடியைச் சொல்லுகிறது. பேர்தலாவது—முன்னிருந்த இருப்பில் நின்றும் வேறொரு இருப்பைக் கொள்ளுதலாம்.

அயலிடத்து உற்றா ரொருவருமின்றி—அயலிட மென்றது வேறோரிட மென்றபடியன்று ; மிகவும் நெருங்கின ஸமீபஸ்தலத்தை அயலிட மென்பது பெரும்பான்மையான இலக்கணவழக்கம். ஆகவே 'அயலிடத்து உற்றார்' என்றது ஸமீப பந்துவைச் சொன்னபடி. நெருங்கின உறவுமுறையாரும் மற்றும் ஸாமாந்யரான உலகத்து உறவுமுறையாரும் இல்லாதஸமயத்திலே பூதனைமுலைகொடுத்துக் கொல்ல வர, அவளை நஞ்சுண்டு முடித்த கோபாலக்ருஷ்ணனே! சப்பாணி கொட்டவேணும் என்கை.

இனி, முதலடிக்கு வேறுவகையாகவும் பொருள் கொள்ளலாம்; பெற்றார் தளைகழல—(மதுரையில் வந்து பிறந்தவாறே) தந்தைதாயர்களின் கால்விலங்கு இற்று முறிந்து விழுந்ததும், அங்கு—அந்த மதுரையில் நின்றும், அயலிடத்துப் பேர்ந்து—('ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்துவளர' என்கிறபடியே) அசலிடமான திருவாய்ப்பாடிக்குச் சென்று—என்னவுமாம்.

கன்று + ஆயன், கற்றாயன். .... (௪.)

சோத்தென நின்னைத் தொழுவன் வரந்தர *
பேய்ச்சி முலையுண்ட பிள்ளாய்! * பெரியன
ஆச்சிய ரப்பம் தருவர் * அவர்க்காகச்
சாற்றியோ ராயிரம் சப்பாணி தடங்கைகளாற்கோட்டாய் சப்பாணி.

http://acharya.org

பேய்ச்சி முலை உண்ட பிள்ளாய்	பூதனையின் முலையை உறிஞ்சியுண்ட கண்ணபிரானே!,
வரம் தர	என் கோரிக்கையை நீ நிறைவேற்றுதற்காக
நின்னை	உன்னை
சோத்தம் என	சோத்தமென்று சொல்லிக் கொண்டு
தொழுவன்	தொழுகின்றேன்;
ஆய்ச்சியர்	இடைச்சிகள்
பெரியன அப்பம் தருவர்	பெரிய அப்பங்களை உனக்குக் கொடுப்பர்கள்;
அவர்க்காக சாற்றி	அவர்களுக்காக வென்று ஒரு வியாஜமிட்டு
ஓர் ஆயிரம் சப்பாணி—;	
தடங் கைகளால் சப்பாணி கொட்டாய்—.	

* * *—பூதனையின் முலையைச் சுவைத்துயிருண்ட மைந்தனே! என்வார்த்தையை ஆதரித்து நீ சப்பாணி கொட்டுதலாகிற என் அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டும்பொருட்டு 'சோத்தம்' என்றுசொல்லி உன்னைத் தொழுகின்றேன்; சப்பாணிகொட்டவேணும் என்றுசொல்ல, 'நீ தொழுதாலென்ன? தொழாவிடிலென்ன; எனக்கு வேண்டியது கிடைக்குமாகில் உன்சொற்படி செய்கிறேன்' என்று கண்ணன் சொல்ல, அதுகேட்ட யசோதை 'குழந்தாய்! அப்படியேயாகிறது; அதற்கென்ன குறை? இதோபார், பலபல ஆய்ச்சிகள் உனக்குக் கொடுப்பதற்காகப் பெரியபெரிய அப்பங்களை யெடுத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள் காண்; சப்பாணிகொட்டுவாயாகில் உனக்குத் தந்திடுவர்கள்' என்று சொல்ல, அதுகேட்ட கண்ணபிரான் 'எனக்கு நீ கொடுப்பது ஒன்றுமில்லையே; அவர்கள் அப்பங் கொடுப்பதற்கு உன் அப்பனை யென்ன? அப்பங்கொடுப்பவர்கள் அவர்களாகில் அவர்கள் விரும்பினால் அவர்கட்காகச் சப்பாணி கொட்டுவேன்; நீ வந்து வெறுங்கையை முழம்போடுவதேன்?' என்று சொல்ல, 'பிரானே! எனக்காக வேண்டா; அப்பங் கொடுக்கவல்ல ஆய்ச்சிகட்காகவே சப்பாணி கொட்டு' என்கிறாள்.

சோத்தம் என=சோத்தென; விகாரப்புணர்ச்சி. அஞ்ஜலிபண்ணுமவர்கள் தாழ்ச்சி தோற்றச் சொல்லுவதொரு சொல் **சோத்தம்** என்பது. ஆயிரம் **சப்பாணி**=அப்பமும் கையுமாய் வந்து திரண்டிருக்கின்ற ஆய்ச்சிகள் ஆயிரக் கணக்காயிருப்பதால் ஒவ்வொரு அப்பத்துக்கு ஒவ்வொரு சப்பாணி விழுக்காடு ஆயிரம் சப்பாணி கொட்டவேணுமென்கிறாள் போலும்.

'அவர்க்காகச் சாற்றி' என்றது 1. "நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்" என்றது போலவெண்க. அவர்களுக்காகச் சப்பாணி கொட்டுகிறேனென்று சொல்லிக்கொண்டு என்றவாறு. .... (ரு)

கேவலமன் றுன்வயிறு * வயிற்றுக்கு
நானவ லப்பம் தருவன் * கருவிளைப்
பூவலர் நீண்முடி நந்தன்தன் போரேறே! *
கோவலனே! கொட்டாய்சப்பாணி குடமாடீ! கொட்டாய்சப்பாணி(சு)

1. திருப்பாவை—3.

கருவிளைப்பூ அலர் — காக்கணம் பூவைக் காட்டுகின்ற நிறமுடையவனே!
நீள் முடி — நீண்ட திருவபிஷேகமுடையவனே!
நந்தன் தன் போர் ஏறே — நந்தகோபன் வளர்க்க வளர்ந்த செருக்கின காளையே!
கோவலனே — பசுமேய்க்க வல்லவனே!
உன் வயிறு கேவலம் அன்று — உன் வயிறு ஸாமாந்யமானதன்று;
நான் வயிற்றுக்கு அவல் அப்பம் தருவன் — (உனது பெரிய) வயிற்றுக்குப் போரும்படியாக அவலும் அப்பமும் நான் தருவேன்;
சப்பாணி கொட்டாய்—;
குடம் ஆடு — குடக்கூத்தாடினவனே!
சப்பாணி கொட்டாய்—.

* * *—அட்டுக்குவிசோற்றுப் பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறு மடங்கப் பொட்டத் துற்றின திருவயிற்றுக்கு அப்பப்பணியாரவகை ஒன்று போருமோ? இன்னமும் பலவகைப் பொருள்களிலே விருப்பமுற்றவனாய் நிற்க, யசோதை சொல்லுகிறாள்; பிரானே! உன் வயிறு மற்றையோருடைய வயிறு போல் ஸாமாந்யமானதன்று; * பேழைவயிற்றெம்பிரான் நீ என்பதை நன் கறிவேன். அந்த வயிற்றுக்கு ஏற்றவாறு அவலும் அப்பமும் நான் தருவேன், சப்பாணி கொட்டாய் என்கிறாள்.

இரண்டாமடியில் "நான் வலவப்பம்" என்று பாடபேதமுள்ளதாக அரும்பதவுரை கூறுகின்றது; சிலருடைய பாடமும் அப்படியிருந்தாலும் அது வேண்டா.

'கருவிளைப்பூவலர்' என்பது கண்ணபிரானுக்கு விசேஷணம். கருவிளைப் பூவை அலர்விப்பவன் (அதாவது) தன் திருமேனி நிறத்தினால் விளங்கச் செய்பவன் என்றவாறு. .... (கூ)

புள்ளினை வாய்பிளந்து பூங்குருந்தம் சாய்த்து *
துள்ளிவிளையாடித் தூங்குறி வெண்ணெயை *
அள்ளியகையா லடியேன் முலைநெருடும் * [சப்பாணி.
பிள்ளைப்பிரான்! கொட்டாய் சப்பாணி பேய்முலையுண்டானே!

புள்ளினை வாய் பிளந்து — பகாசுரனுடைய வாயைக் கிழித்தெறிந்து
பூ குருந்தம் சாய்த்து — பூத்திருந்த குருந்தமரத்தைச் சாய்த்து முறித்து
துள்ளி விளையாடி — நிலத்தில் நில்லாமல் விளையாடல்களைச் செய்து
தூங்கு உறி வெண்ணெயை — தொங்குகின்ற உறியிலுள்ள வெண்ணெயை
அள்ளிய — வாரியெடுத்த
கையால் — கைகளாலே
அடியேன் முலை நெருடும் — என்னுடைய முலையை(ப் பால் சுரப்பதற்காக) நெருடுகின்ற
பிள்ளை பிரான் — பிள்ளையாயும் பிரபுவாயுமிருப்பவனே!
சப்பாணி கொட்டாய்—;
பேய் முலை உண்டானே! சப்பாணி—.

* * *—உன்னை நலிவதற்குக் கஞ்சனால் ஏவப்பட்ட ஓர் அஸுரன் கொக்கின் வடிவமெடுத்து உன்னை விழுங்கிவிடுவதாகவர, அவன்வாயைக் கீண்டொழித்த

http://acharya.org

வனே !, நீ மலர் கொய்தற்பொருட்டு விரும்பியேறும் குருந்தமரத்திற் பிரவேசித்த ஓர் அஸுரன், நீ அந்த மரத்தின் மீது ஏறும்போது தான் முறிந்து விழ்ந்து உன்னையும் வீழ்த்திக் கொல்லக் கருதியபோது அவ்வசுரனுட்பட அம்மரத்தைத் தொலைத்தபிரானே !, அங்குறிக்கும் துள்ளி விளையாடிக்கொண்டே உறிகளிற் சேமித்து வைத்த வெண்ணெயை அள்ளி அமுது செய்த கையில் முடை நாற்றத்தோடே கூடி என்னுடைய முலைக்கண்களைப் பால்சுரக்குமாறு நெருடுகிற பிள்ளைப்பிரானே ! சப்பாணிகொட்டவேணுமென்கிறாள்.

மகனை நோக்கித் தாய்சொல்லும் வார்த்தையில் 'அடியேன் முலை நெருடும்' என்றது கூடுமோவெனின்; கீழ்ச்சொன்ன பரத்வ ஸௌலப்யங்களிலே தோற்றுத் தான் அடிமைப்பட்டமை தோற்றச் சொல்லுகிறாளென்க. அன்றி, ஆழ்வாருடைய ஸமாதியும்கூடவே கலசியிருக்கையாலே ஆழ்வார் தம் ஸ்வரூபத்துக்குச் சேர அடியேன் என்றது, என்னவுமாம். புள்ளின்வாய் பிளந்தது, பூங்குருந்தம் சாய்த்தது முதலிய சேஷ்டிதங்கள் சப்பாணிகொட்டும் பருவத்திற்குப் பின்பு நடந்தவையாதலால் அவற்றையிட்டுத் துதித்து 'சப்பாணிகொட்டாய்' என்று யசோதை பிரார்த்திப்பது எங்ஙனே பொருந்தும்? என்கிற கேள்வியும் இதனால் ஸமாதானம் செய்யப்பட்டதாகும்; சப்பாணி கொட்டாய் என்று யசோதை பிரார்த்தித்த ஸமயத்தில் மேற்குறித்த சேஷ்டிதங்கள் நடவாதிருந்தாலும், அவ்யசோதையின் நிலைமையை ஏறிட்டுக்கொண்டு பேசுகிற ஆழ்வார் பிற்காலத்தவராகையாலே அந்த சேஷ்டிதங்களை இவர் எடுத்தோதக் குறையில்லையிறே. பெரியாழ்வார் திருமொழிவியாக்யானத்தில் ஸ்ரீமணவாளமாமுனிகள் இங்ஙனே ஸமாதான மருளிச்செய்துள்ளமை காண்க. .... (எ)

யாயும் பிறரு மறியாத யாமத்து *
மாய வலவைப்பெண் வந்து முலைதர *
பேயென்றவளைப் பிடித்துயிருண்ட *
வாயவனே! கோட்டாய் சப்பாணி மால்வண்ணனே! கோட்டாய் சப் [பாணி.

யாயும்	பெற்ற தாயாகிய நானும்	முலை தர	முலைகொடுத்தவளவிலே
பிறரும்	மற்றுமுள்ளவர்களும்	அவளை	அப்பூதனையை
அறியாத	கண்விழித்திருக்கப் பெறாமல் உறங்கிக் கொண்டிருந்த	பேய் என்று பிடித்து	பேய்ச்சி யென்றறிந்து பிடித்துக்கொண்டு
யாமத்து	நடுச்சாமத்திலே	உயிர் உண்ட	(அம்முலைவழியே அவளது) பிராணனைக் கவர்ந்த
மாயம்	வஞ்சகையாய்	வாயவனே	திருப்பவளத்தை யுடையவனே!
அலவை பெண்	துஷ்டஸ்த்ரீயான பூதனை		சப்பாணி கொட்டாய்—;
வந்து	(கம்ஸனுலேவப்பட்டுத் திரு வாய்ப்பாடிக்கு) வந்து		மால் வண்ணனே! சப்பாணி கொட்டாய்—.

* * *—கண்ணபிரானுடைய தொட்டிற்பருவத்தில் நிகழ்ந்த சிறுச்சேவகங்களுள் பூதனையின் முலையைச்சுவைத்துயிருண்டது மிக்க பயங்கரமாதலால்

http://acharya.org

அதனை அடுத்தடுத்து எடுத்துப் பேசுகிறாள். பெற்ற தாயாகிய நானும் மற்றுள்ளாரொருவரும் கண்விழித்திருக்கப் பெறாதே உறங்கிக்கொண்டிருந்த நடுநிசியிலே வஞ்சகப்பேய்மகள் வந்து முலையுண்ணக் கொடுக்க, 'இவள் தாய்தான்' என்று ப்ரமித்தொழியாமல் 'பேய்தான்' என்று நிச்சயித்து அவளுயிரைக் கவர்ந்துண்ட பிரானே! சப்பாணி கொட்டவேணும் என்கிறாள்.

யாய் என்றாலும் மோய் என்றாலும் தாய்க்குப் பெயர். யாமம்—வடசொல். அலவை=கெட்டுப்போனவள் என்றபடி. பஹுவாக ஜல்பநம்பண்ணிக்கொண்டு வருபவள் என்றருளிச்செய்வர் பெரியவாச்சான் பிள்ளை. தாய்வடிவுகொண்டு வருகிறாளாகையாலே 'என்குட்டனே! வா, என் முத்தமே! வா, என் செல்வமே! வா' என்று போலிப்பிதற்றல்களைச் செய்துகொண்டு வருபவளென்றவாறு. .... (அ.)

கள்ளக் குழலியாய்க் காலாற் சகடத்தை *
தள்ளி யுதைத்திட்டுத் தாயாய் வருவானை *
மெள்ளத் தொடர்ந்து பிடித்தா ருயிருண்ட * [பாணி.
வள்ளலே! கொட்டாய் சப்பாணி மால்வண்ணனே! கொட்டாய் சப்

கள்ளம் குழவி ஆய்	மாயக் குழந்தையாய்ப் பிறந்து
சகடத்தை	(அஸுரன் ஆவேசித்திருந்த) வண்டியை
காலால் தள்ளி உதைத்திட்டு	திருவடியாலே தள்ளி யுதைத்தவனும்,
தாய் ஆய் வருவானை	தாய்வேஷம் பூண்டு வந்த பூதனையை
மெள்ள தொடர்ந்து பிடித்து	பிதானித்திருந்து மேல் விழுந்து பிடித்து
ஆர் உயிர்	(அவளது) அருமையான உயிரை
உண்ட	கவர்ந்தவனான
வள்ளலே	உதாரனே!

சப்பாணி கொட்டாய்—;
மால் வண்ணனே! சப்பாணி கொட்டாய்—.

* * *—உன்னை நான் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிட்டுக் கண்வளர்த்தி யமுனைநீராடப்போயிருந்தகாலத்து, கம்ஸனாலேவப்பட்ட அஸுரனொருவன் அந்த வண்டியில் வந்து ஆவேசித்து உன் மேல் விழுந்து உன்னைக் கொல்ல முயன்றதை அறிந்த நீ பாலுக்கு அழுகிற பாவனையில் சிறிய திருவடிகளை மேலேதூக்கியுதைத்து அச்சகடத்தைச் சின்ன பின்ன மாக்கினாய்; தாய்போல வந்த பூதனையைப் பிடித்துயிருண்டாய்; இப்படி அருமையான காரியங்களைச் செய்த நீ எளிதான சப்பாணி கொட்டுதலையும் செய்தருளவேணுமென்கிறாள்.

காரார் புயற்கைக் கலிகன்றி மங்கையர்கோன் *
பேராளன் நெஞ்சிற் பிரியா திடங்கொண்ட
சீராளா! * செந்தாமரைக்கண்ணா! தண்டுழாய்த்
தாராளா!* கொட்டாய் சப்பாணி தடமார்வா! கொட்டாய் சப்பாணி.

http://acharya.org

கார் ஆர் புயல் கை	கார்காலத்து நிறைய நீர் கொண்டெழுந்த மேகம் போன்ற ஔதார்யமுடையவராய்
மங்கையர் கோன்	திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவராய்
பேராளன்	பெருமை பொருந்தியவரான
கலி கன்றி	திருமங்கையாழ்வாருடைய
நெஞ்சில்	திருவுள்ளத்திலே
பிரியாது	ஒரு நொடிப்பொழுதும் விட்டுப்பிரியாமல்
இடம் கொண்ட	நித்யவாஸம் பண்ணுகின்ற
சீராளா	சீர்மைபொருந்தியவனே!
செம் தாமரை கண்ணா	செந்தாமரைப்பூப்போன்ற திருக்கண்களையுடையவனே!
தண் துழாய் தார் ஆனா	குளிர்ந்த திருத்துழாய் மாலையை யணிந்துள்ளவனே!

சப்பாணி கொட்டாய்—;

தட மார்வா	விசாலமான திருமார்வையுடையவனே!

சப்பாணி கொட்டாய்—.

* * *—ஆழ்வார் தாமான தன்மையிற் பேசாதே பிறருடைய நிலைமையை ஏறிட்டுக்கொண்டு பேசும் பதிகங்களில் இறுதியில்வரும் நிகமனப்பாசுரம் மாத்திரம் வேறுபட்டுவருகிற வழக்கம் இதில் மாறிற்று. முதற்பாட்டில் இவர்மேல் வந்து புகுந்த யசோதைநிலைமை இப்பாட்டிலும் நீங்கவில்லையாயிற்று. இதுவும் யசோதைப்பிராட்டி சொல்வதுபோலவே அமைந்துள்ளது. (என் நெஞ்சிற் போலவே) திருமங்கையாழ்வார் திருவுள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் திருமாலே! சப்பாணி கொட்டவேணுமென்று யசோதை சொல்வதாகவே தலைக்கட்டிற்றாயிற்று.

இத்திருமொழி (கற்பார்க்குப் பயனுரையாதொழிந்தது, இப்படிப்பட்ட பிரார்த்தனையே பயனாக அமையும் என்று காட்டுதற்குப்போலும். .... (௧௦)

அடிவரவு:—பூங்கோதை தாயர் தாமோர் பெற்றார் சோத்தென கேவலம் புள்ளினை யாயும் கள்ளம் காரார் எங்கானும்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—ஆறாந்திருமொழி,

எங்கானுமீதொப்பதோர்.

உரையவதாரிகை :—நம்பெருமான் அநந்த கல்யாணகுண நிதியாயிருப்பவன். அத்திருக்குணங்கட்கு ஓர் எல்லை கிடையாது. பலவகைப்பட்டு எல்லையற்றிருக்கின்ற அத்திருக்குணங்கள் மேன்மைக்கு ஏகாந்தமான குணங்களென்றும் எளிமைக்கு ஏகாந்தமான குணங்களென்றும் இரண்டுபாகுபாடுகளையுடையன. ஜ்ஞாநம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்றிவை போன்ற திருக்குணங்கள் மேன்மைக்குணங்கள் [பரத்வகுணங்கள்] என்றும், வாத்ஸல்யம் ஸௌசீல்யம் முதலிய குணங்கள் எளிமைக்குணங்கள் [ஸௌலப்ய குணங்கள்] என்றும் வழங்கப்பெறும். பகவத்குணாநுபவம் பண்ணுகிறவர்களில் சிலர் பரத்வகுணங்களையே அநுபவிப்பர்; சிலர் ஸௌலப்ய குணங்களையே அநுபவிப்பர். பலர் இரண்டையுஞ் சேர அநுபவிப்பர்.

கேவலபரத்வமும் கேவல ஸௌலப்யமும் கொண்டாடத் தகுந்ததன்று. மேருமலை, கைலாஸமலை போன்ற மலைகள் மிகச்சிறந்தவையேயாயினும் அவை ஒருவர்க்கும் எளிதல்லாமையாலே பயனற்றவையாம்; அவைதாமே தரித்ரர்கட்குக் கிடைக்கக் கூடியவையாயிருந்தால் எவ்வளவோ சீர்மைபெறுமே. ஆகவே ஸௌலப்யமற்ற பரத்வம் உபயோகமற்றது. இவ்விதமாகவே பரத்வமற்ற ஸௌலப்யமும் உபயோகமற்றது; தெருக்களில் பரல்கள் பல எளிதாயிருக்கின்றன; அவற்றை விரும்புவாருண்டோ? அவைதாமே மணியும் மாணிக்கமுமாயிருந்தால் எவ்வளவோ பயனுண்டு. ஆகவே, வெறும் ஸௌலப்யமும் வெறும் பரத்வமும் பயனற்றவையே. எம்பெருமான் இவ்விருவகைக் குணங்களாலும் நிறைந்தவன். அடியார்கள் கூசாதே வந்து பணிகைக்கீடான எளிமைக் குணங்களாலுங் குறையற்றவன்; வந்து பணிந்தவர்களுக்கு அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைத் தலைக்கட்டித்தருகைக்கீடான மேன்மைக்குணங்களாலுங் குறையற்றவன். ஆகவே பகவத்குணாநுபவம் பண்ணுமவர்கட்குப் பரத்வகுணாநுபவம் ஸௌலப்ய குணாநுபவம் என்ற இரண்டும் ப்ராப்தம்.

இவ்வாழ்வார் இக்குணங்களைப் பலபாசுரங்களிலும் அநுபவித்திருக்கின்றாராயினும் இப்போது விலக்ஷணமாக அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி, கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் களவுவழியிலே தயிர் நெய்பால்களை வாரியுண்டு இடைச்சிகள் கையிலேயகப்பட்டுத் தாம்பினால் கட்டுண்டு ஏங்கியிருக்குங்காலத்திலே அவனுடைய உண்மையான மேன்மையை யறிந்தவர்கள் 'எவ்வளவு மேன்மை தங்கிய இவன் எவ்வளவு எளிமையிலேயிருக்கிறான்!', இது என்ன

http://acharya.org

ஆச்சரியம்!' என்று சொல்லி ஈடுபட்டபடியைத் தாமும் அநுகரித்துப் பேசுகிறதாயிராநின்றது இத்திருமொழி. மேல் பதினோராம்பத்தில் *மானமருமென்னோக்கி யென்னும் திருமொழியிலும் இவ்விருவகைக் குணங்கள் அநுபவிக்கப்படுகின்றன; ஆனால் அவ்விடத்திற்கும் இவ்விடத்திற்கும் வாசியுண்டு. பரத்வத்தை முன்னே பேசி ஸௌலப்யத்தைப் பின்னே பேசுகிறது அவ்விடம். ஸௌலப்யத்தை முன்னேபேசிப் பரத்வத்தைப் பின்னே பேசுகிறது இவ்விடம். அன்றியும், ஒருவர்பேச்சாகவே செல்லுகிறது இத்திருமொழி. இகழ்வாரும் புகழ்வாருமான இருவர் பேச்சாகச் செல்லுகிறது அத்திருமொழி.

இத்திருமொழியின் ஒவ்வொருபாசுரத்திலும் ஈற்றடியின் பிற்பகுதியை முன்னம் எடுத்துக்கொண்டு அந்வயித்துப்பொருள்கொள்ளும் பக்ஷத்தில், (அதாவது) "இன்று ஆய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவன் நரநாரணனாய்........அங்கார்த்தவன் காண்மின்"—"இன்று ஆப்புண்டிருந்தவன்.... அன்று மலையேழுலகே ழொழியாமை யுண்டவன் காண்மின்"—"இன்று ஆப்புண்டிருந்தவன்... மன்னன் சினந்தோளவையாயிரமும் மழுவாலழித்திட்டவன்காண்மின்" என்றிவ்வண்ணமாக அந்வயித்து உரைக்குமிடத்து, ஸௌலப்யத்தை முன்னே அநுபவித்துப் பரத்வத்தைப்பின்னே அநுபவிப்பதாகவே நிர்வஹிக்கக் குறையில்லை. ஆனாலும், பரத்வத்தைப் பூர்வபக்ஷமாக்கி ஸௌலப்யத்தை ஸித்தாந்தமாக்கி யநுபவிக்கவே இப்போது ஆழ்வார்க்கு அபிமதம் என்பது தோன்றப் பாசுரம் அமைந்தபடியே பொருள் கொள்ளுதல்நன்று.

எம்பெருமானுடைய பரத்வகுணத்தையே பார்த்து 'அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான் யானார்?' என்றாற்போலே இவ்விஷயம் நமக்கு ப்ராப்தமன்றென்று வெறுத்துப்போய்விடாதீர்கள்; ஸௌலப்யகுணத்தை நோக்கிக் கூசாதே அணுகுங்கள் என்பதாகவும், 1. "கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப் பெற்றான் காடுவாழ்சாதியு மாகப்பெற்றான், பற்றியுரலிடை யாப்புமுண்டான் பாவிகாள்! உங்களுக் கேச்சுக்கொலோ?" என்கிறபடியே, இவனுடைய எளிமைக்குணத்தையே கண்டு 'ஓர் இடைச்சி தன்னைக்கட்டின கட்டை அவிழ்த்துக் கொள்ளமாட்டாத இவனோ நம்முடைய ஸம்ஸாரக்கட்டை அவிழ்க்கப்போகிறான்' என்று குறைச் சாக்காக நினைத்துவிடாமல் இவனுடைய மேன்மைக்குணங்களையும் நோக்கி உகந்திடுங்கள் என்பதாகவும் வெளியிடுதல் இத்திருமொழிக்குப் பரமார்த்தமாகும். ... . *

எங்கானு மீதொப்பதோர் மாயமுண்டே?
நரநாரணனா யுலகத்தறநூல் *
சிங்காமை விரித்தவ னெம்பெருமான்
அதுவன்றியுஞ் செஞ்சுடரும் நிலனும் *

---

1. நாச்சியார் திருமொழி 12—8.

http://acharya.org

போங்கார்கடலும்பொருப்புநெருப்பும்
நெருக்கிப்புகப் பொன்மிட றத்தனைபோது*
அங்காந்தவன் காண்மி னின்றுஆய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (க)

நரன் நாரணன் ஆய்	(சிஷ்யனும் ஆசார்யனுமாக) நரநாராயணரூபியாய்
உலகத்து	லோகத்திலே
அறம் நூல் சிந்தாமை விரித்தவன்	அறநெறிகளைத் தெரிவிக்கும் நூலாகியவேதம் சுருங்கிப் போகாதபடி அதை விஸ்தரிப்பித்தவனும்
எம்பெருமான்	எமக்கு ஸ்வாமியாயும்
அது அன்றியும்	அவ்வளவுமல்லாமல்
செஞ்சுடரும்	சந்திர ஸூர்யர்களும்
நிலனும்	பூமியும்
பொங்கு ஆர் கடலும்	பொங்குதல் பொருந்திய ஸமுத்ரங்களும்
பொருப்பும்	மலைகளும்
நெருப்பும்	அக்நியும் (ஆகிய இவை யடங்கலும்)
நெருக்கி	ஒன்றின்மேலொன்றாய்
புக அத்தனை போது	உள்ளே புகுமளவும்
பொன் மிடறு	திருவயிற்றை
அங்காந்தவன் காண்மின்	விவரித்துக்கொண்டிருந்தவனன்றே
இன்று	இப்போது
அளை	தயிரையும்
வெண்ணெய்	வெண்ணெயையும்
உண்டு	(திருடி) உட்கொண்டு
ஆய்ச்சியரால்	இடைச்சிகளால்
ஆப்புண்டிருந்தவன்	(தாம்பால்) கட்டுண்டிருக்கிறான்;
ஈது ஒப்பது ஓர் மாயம்	இது போன்ற ஆச்சரியம்
எங்கானும்	எங்கேனுமோரிடத்திலாவது
உண்டே	கண்டதுண்டோ?

* * *—தொடங்கும்போதே 'எங்கானு மீதொப்பதோர் மாயமுண்டே' என்ற அழகு என்னே!; மேன்மையின் எல்லையிலே நிற்கிற பரபரன் நீர்மையின் எல்லையிலே நிற்கிறவிது என்ன ஆச்சரியம்! என்ன கபடச்செயல்!, இப்படிப் பட்ட மாயம் பகவத்விஷயத்தில் தவிர வேறு எந்த விஷயத்திலாவது காணக் கிடைக்குமோ? என்கிறார். நீர் கண்ட மேன்மையும் நீர் கண்ட நீர்மையும் என் கொல்? என்ன; முந்துற முன்னம் மேன்மையை உபபாதிக்கிறார் நரநாரணனாய் என்று தொடங்கி.

முன்னொருகாலத்தில் குருசிஷ்யக்ரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் நன்கு விளக்குவதற்காக நரனென்னும் சிஷ்யனும் நாராயணனென்னும் குருவுமாக ஸ்ரீபதரிகாச்ரமத்தில் எம்பெருமான் அவதரித்து சிஷ்யனுக்குக் குரு திருமந்திரத்தை உபதேசித்தருளினமை அறியத்தக்கது. "ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து ஈச்வரகைங்கர்யத்தையுமிழந்து இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரம் சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான். சிஷ்யனைப்

http://acharya.org

னின்றது சிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டாறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக." என்ற முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்திகளும் இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

நாராயணனாய் என்றநிலையே ஒரு மாயமுண்டு; அதாவது—சீரியசிங்காசனத்தில் வீற்றிருந்து ஆசார்யபதம் செலுத்த வேண்டிய தான் தன்னை சிஷ்யனாக அமைத்துக் கொண்ட மாயம்; அதுவும் 'எங்கானு நீதொப்பதோர் மாயமுண்டே' என்றதில் விவக்ஷிதமாகலாம்.

அறநூல் சிங்காமை விரித்தவன் = தருமமார்க்கத்தை நிலைநிறுத்த அவதரித்த நால் வேதநூலாதலால் அதுவே இங்கு அறநூல் எனப்படுகிறது. அவற்றுக்கு உபப்ருஃம்ஹணங்களான ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களுங்கூடி அறநூல், என்றும் கொள்ளப்படலாம். இப்படிப்பட்ட ஸகலசாஸ்திரங்களினும் கணக்கற்ற விஷயங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் எல்லாம் ஐந்து அர்த்தங்களாகத் தொகுக்கப்படும். அவையாவன ;—(1) எம்பெருமானுடைய ஸ்வரூபம், (2) அப்பெருமானையடைகின்ற சேதநனுடைய ஸ்வரூபம். (3) அப்பெருமானைப் பெறுதற்கான உபாயத்தின் ஸ்வரூபம். (4) அவ்வுபாயத்தினால் பெறக் கூடியதான பேற்றின் ஸ்வரூபம். (5) அப்பேற்றைப் பெறவொட்டாமல் தடை செய்கின்ற ப்ரதிபந்தகத்தின் ஸ்வரூபம் (அதாவது) விரோதிஸ்வரூபம். ஆக இவை ஐந்தாம். இவையே அர்த்த பஞ்சக மெனப்படும். 1. "மிக்க இறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும், தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையுமோதுங் குருகையர்கோன், யாழினிசை வேதத்தியல்" என்கிறபடியே திருவாய்மொழியில் பேசப்படும் அர்த்தங்களும் இவையேயாம். இவ்வர்த்தபஞ்சகத்தையும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டுகின்றது திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரமாதலாலும் அத்தை நாராயணனாய் வெளியிட்டருளினனாதலாலும் அறநூல் சிங்காமை விரித்தவனெம்பெருமான் என்னக்குறையில்லையென்க.

திருமந்திரத்தில் அர்த்தபஞ்சகம் பிரதிபாதிக்கப்படுகிறவிதம் ரஹஸ்யநூல்களில் ஆசார்யமுகமாக அறிந்துகொள்ளத்தக்கது.

கீழ் ஒன்றரையடியால், அறியவேண்டுமர்த்தங்களையெல்லாம் அறிவித்தருளினமையாகிற பரத்வத்தைச் சொல்லி, மேல், ப்ரளயகாலத்தில் ஸர்வஸம்ரக்ஷகனாயிருந்தமையாகிற பரத்வத்தைப்பேசுகிறார் அதுவன்றியும் என்று தொடங்கி. உலகத்துப் பொருள்களில் ஒன்று தப்பாமல் எல்லாம் தன் திருவயிற்றினுள்ளே அடங்கிவாழும்படி திருவயிற்றைத் திறந்து கொண்டிருந்தவன்.

"தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன்வயிறு, இவ்வேழுலகமுண்டுமிடமுடைத்தால் சாழலே." என்கிறபடியே திருவயிற்றினுள்ளே எத்தனை கோடிக் கணக்கான பதார்த்தங்கள் அடைபட்டாலும் இடம் விசாலமாகவே யிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்க, இங்கு 'நெருக்கிப்புக' என்கிறதே, இதுவென்? என்னில்; திருவயிற்றினுள்ளே இடம் போதாமல் நெருக்குண்டிருக்கும்படியைச்

---

1. திருவாய்மொழித்தனியன்.

http://acharya.org

சொல்லுகிறதன்று இது; பின்னையோ வென்னில், செஞ்சுடர் முதலிய பதார்த்தங்கள் பிரளயாபத்துக்கு அஞ்சித் திருவயிற்றினுள்ளே புகுங்கால், 'நாம் எங்கே தவறிப்போகிறோமோ, நாம் எங்கே தவறிப்போகிறோமோ' என்று ஒன்றின்மேலொன்றாக மேல் விழுந்து நெருக்கித்தள்ளிக்கொண்டு உள்ளே புகுகிற நிலைமையைச் சொன்னபடியாகக்கடவது.

அங்காத்தல்—வாய்திறத்தல்.

அளைவெண்ணெய் என்பதை உம்மைத்தொகையாகக் கொண்டால் அளையையும் வெண்ணெயையும் என்றதாகிறது. (அளை—தயிர்.) இனி, வினைத்தொகையாகக் கொண்டால், அளையப்படுகிற வெண்ணெய் என்றதாகிறது. அளைதல்—துழாவுதல். .... (௧.)

குன்றொன்று மத்தா வரவமளவிக்
குரைமாகடலைக் கடைந்திட்டு * ஒருகால்
நின்றுண்டை கொண்டோட்டி வன்கூன்நிமிர
நினைந்தபெருமான் அதுவன்றியும்முன் *
நன்றுண்ட தொல்சீர் மகரக்கடலேழ்
மலையேழுலகேழொழியாமைநம்பி *
அன்றுண்டவன் காண்மினின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௨)

ஒன்று குன்று	(மந்தரமென்கிற) ஒரு மலையை
மத்து ஆ	மத்தாகக் கொண்டு
அரவம்	(வாஸுகியென்னும்) நாகத்தை
அளவி	(கடைகயிறாகச்) சுற்றி
குரை மா கடலை	ஒலிக்கின்ற பெருங்கடலை
கடைந்திட்டு	கடைந்து
ஒருகால்	மற்றொருகாலத்தில்,
உண்டை கொண்டு	(வில்லிலுள்ள) உண்டைகளைக்கொண்டு
வன் கூன்	வலிதான கூனை
ஓட்டி நின்று	போக்கி
நிமிர	(கூன்) நிமிரும்படி
நினைந்த	திருவுள்ளம்பற்றின
பெருமான்	ஸர்வேச்வரனாய்,
	அது அன்றியும்—;
முன் அன்று	முன்பொருகாலத்தில்,
நன்று உண்ட தொல் சீர்	நன்றாகத் தன்னுட்கொள்ளப்பட்ட சிறப்பையுடைய
மகரம் கடல் ஏழ்	மகரங்கள் திளைக்கின்ற ஸப்த ஸாகரங்களும்
மலை ஏழ்	ஸப்தகுலாசலங்களும்
உலகு ஏழ்	ஸப்தலோகங்களும்
ஒழியாமை	ஒன்றுதப்பாதபடி
நம்பி	(எல்லாவற்றையும்) விரும்பி
உண்டவன் காண்மின்	திருவயிற்றிற் கொண்டவனன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்.

http://acharya.org

* * *—துர்வாஸ மஹாமுனியின் சாபத்தினால் தேவர்களின் செல்வமெல்லாம் கடலில் புக்கொளித்த காலத்து, அத்தேவர்களின் வேண்டுகோளினால் மந்தர மலையை மத்தாக நாட்டி வாஸுகி நாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிக் கடலைக் கடைந்தருளின பரத்வகுணத்தை முதலடியிலே அநுஸந்திக்கிறார்.

இரண்டாமடியிற் குறித்த வரலாறு:—பலராமனும் கண்ணபிரானும் வில்விழவுக்கென்று கம்ஸனாலழைக்கப்பட்டு மதுரைக்குச் செல்லுங்கால் ராஜவீதியில் சந்தனக்கிண்ணத்தைக் கையிலேந்தி வருகிற மங்கைப்பருவமுடைய ஒரு கூனியைக்கண்டு 'நங்காய்! நீயார்? யாருக்கு நீ இந்தப் பூச்சுக்கொண்டுபோகிறாய்?' என்று விலாஸத்தோடு கேட்டருள, அந்தக் கூனி இவ்வாறு காதலுடையவன் போலக் கண்ணன் அருளிச் செய்தது கேட்டு அவனது திருக்கண்களினாலே மனமிழுக்கப்பட்டவளாய் 'அழகனே! நான் நைகவக்ரை என்பவளென்றும் கம்ஸனாலே சந்தநாதிப் பூச்சுக்கள் விதந்து செய்யும் வேலையில் வைக்கப்பட்டவளென்றும் நீ அறியாயோ?' என்ன; கண்ணன் 'எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குக் கொடுக்கவேணும்' என்று சொன்னவுடனே அவள் 'அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்' என்று மிக்க அன்போடு ஸமர்ப்பிக்க, அப்பூச்சைத் திருமேனியிலணிந்து ஸ்ரீ க்ருஷ்ணன் இவளிடத்து மிகவும் ப்ரஸந்நனாய், நடுவிரலும் அதன் முன் விரலுங் கொண்ட நுனிக்கையினாலே அவளை மோவாய்க்கட்டையைப் பிடித்துத் தன் திருவடிகளினால் அவள் கால்களை யமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணல் நிமிர்த்து அவளை மகளிரிற் சிறந்த உருவினளாக்கி யருளினன் என்பது க்ருஷ்ணாவதாரத்திற் கதை. இனி, ஸ்ரீராமாவதாரத்திலும் இங்ஙனே யொரு கதையுண்டு;—திருவாய்மொழியில் "கூனே சிதைய வுண்டை வில் நிறத்தில் தெறித்தாய்" [1-5-5] என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில்—"வநவாஸ ஹேதுபூதையான குப்ஜையைச் சொல்லிற்றாய்; பெருமாள் பால்யத்திலே சுண்டுவிற்கொண்டு திரியா நிற்க, லீலாரஸ மநுபவித்தாரென்று ஒன்றுண்டு; அத்தைப் பற்றச் சொல்லிற்றாகவுமாம்" என்றருளிச் செய்யப்பட்டிருப்பது காண்க. அதாவது—சக்ரவர்த்தி திருமகன் இளம்பிராயத்திலே சுண்டு வில்லை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது லீலையாக விட்டெறியப்பட்ட அந்தச் சுண்டு வில்லானது மந்தரை யென்னுங் கூனியினுடலிற் போய்ப்பட்டு அவளுடைய கூன் நிமிர்க்கப்பட்டதாம். "கொண்டை கொண்ட கோதைமீது தேனுலாவு கூனி கூன், உண்டை கொண்டரங்கவோட்டி உள் மகிழ்ந்த நாதன்" என்ற திருச்சந்த விருத்தமும் காண்க.

பிரளயத்தில் ஸகல லோகங்களையும் திருவயிற்றில் வைத்து நோக்கின பரத்வம் மூன்றாமடியில் கூறப்பட்டது. ஆக இப்படிப்பட்ட பரத்வம் பொலிய நின்ற பிரான் இன்று அளை வெண்ணெயுண்டு ஆய்ச்சியரால் ஆப்புண்டிருக்கும் எளிமை என்னே! என்று ஈடுபடுகிறாராயிற்று. .... (உ)

http://acharya.org

உளைந்திட்டெழுந்த மதுகைடவர்கள்
உலப்பில் வலியாலவர்பால் * வயிரம்
விளைந்திட்டதென்றெண்ணி விண்ணோர்பரவ
அவர்நாளொழித்த பெருமான் முனநாள் *
வளைந்திட்ட வில்லாளி வல்வாளெயிற்று
மலைபோலவுணனுடல் வள்ளுகிரால் *
அளைந்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௫)

உலப்பு இல் வலியால்	எல்லையில்லாத வலிமையினால்
எழுந்த	பெரியகிளர்த்தியோடே தோன்றின
மது கைடவர்கள் அவர்பால்	மதுகைடபர்களென்கிற அவ்வசுரர்களோடே
வயிரம்	பகை
விளைந்திட்டது என்று எண்ணி	உண்டாகிவிட்டதென்றறிந்து
உளைந்திட்டு	அஞ்சிநடுங்கி
விண்ணோர்	தேவர்கள்
பரவ	(திருவடிகளிலே தொழுது) துதிக்க,
	(அத் தேவர்களுக்காக)
அவர்	அந்த மதுகைடபர்களுடைய
நாள்	ஆயுளை
ஒழித்த	முடித்த
பெருமான்	ஸர்வேச்வரனாய்,
	(அதுவுமல்லாமல்)
முனநாள்	முற்காலத்தில்
வளைந்திட்ட வில்லாளி	வளைந்தவில்லைக் கையிலேந்தியுள்ளவனும்
வல் வாள் எயிறு	வலிமைபொருந்திப் பிறங்கிய பற்களையுடையவனும்
மலை போல்	மலைபோன்றவனுமான
அவுணன்	இரணியாசுரனுடைய
உடல்	உடலை
வள் உகிரால்	கூர்மையான நகங்களினால்
அளைந்திட்டவன் காண்மின்	இரண்டாகக்கிழித்தவனன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

* * *—மதுகைடபர்களை மாளச்செய்த பெருமையையும் இரணியாசுரனுடலைப் பிளந்த வலிமையையும் பேசி இப்படிப்பட்ட பராக்ரமசாலி காண்மின் இன்று அசக்தரைப் போலே கட்டுண்டு கிடக்கிறானென்கிறார்.

மதுகைடபர்களின் நாளையொழித்த வரலாறு பலவிதமாகச் சொல்லப்படுவதுண்டு; அவற்றுள் ஒருவிதம் வருமாறு;—பிரமதேவனது தினப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினால் எங்கும் நீர்மயமாயிருந்தபொழுது அவ்வெள்ளத்தில் திருமால் அரவணையில் அமர்ந்திருக்கையில் அத்திருமாலினிடத்து நின்ற ரஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றி "எம்மை நீ கொல்லுக என்று தம் வாயாற் சொல்லிய பின்னரே தம்மைப் பிறர் கொல்லலாகும்" என்று வரம்பெற்ற மதுகைடபரிருவரும் அப்பிரளய நீரைக் குழப்பிக்கொண்டு போரா

வார்த்துடன் சென்று பிரமதேவனைக் கண்டு அவனிடத்து நின்று வேதங்களை யெல்லாம் பறித்துக்கொண்டு அப்பிரளய வெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தேறாது திகைப்புக் கொண்ட அப்பிரமன் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத் துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அக்கடவுள் ஹயக்ரீவாவதாரஞ் செய்து அக்கடலிற்புக்கு இனியதோர் இசையைப்பாட, அவ்வினிய கீதத்தைக் கேட்ட அவ் வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலி வந்த வழியைப் பிடித்துச் செல்லுமளவில் திருமால் அவ்வேதங்களுள்ள விடத்திற் சென்று அவற்றைக் கொணர்ந்து பிரமனுக்குத் தந்தருள, அப்போது ஒருவரையுங் காணாதவராய் வேதங்களும் எடுத்துக்கொண்டு போகப்பட்டதை யுணர்ந்த அவ்வசுரர்கள் மிகச் சினந்து அரவணையில் அறிதுயிலமரும் பரம்பொருளைக்கிட்டிப் போர் செய்யத் தொடங்கவே, திருமாலுக்கும் அவ்வசுரர்கட்கும் வெற்றி தோல்விக ளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் 'உனது ஆற்றலுக்கு உவந்தோம்; வேண்டும் வரம் பெற்றுக்கொள்' என்ன; அக்கடவுள் 'யான் உங்களைக் கொல்லவேணும்; இதுவே யான் வேண்டும் வரம்' என்று சொல்ல; அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் 'உங்கட்கு வேண்டும் வரங்கொண்மின்' என்ன; 'ஒருவரும் இறவாத இடத்தில் நாங்கள் இறக்க வேண்டும்' என்று அவர்கள் வேண்ட, திருமாலும் அங்ஙனமே வரமளித்துத் தனது திருத்துடையைக் கொண்டு அவர்களை இறுக்கிக் கொன்றிட்டனன் என்பதாம்.

கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் அழகருடைய திருத்துடைகளை வருணிக்குங்கால் "விஷ்டம்பஷ்டம்பயோ: கைடப ஸமீகம்—பிஷ்டதுஷ்டமதுகைடப ஸிதேள" என்றும், பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய திருத்துடைகளை வருணிக்குங்கால் "ஊரூ இவ யயோ: கைடபஹஸ்த்ய...வபுஷ: ஹயவதநவபுஷா: கிம்வதந்தீ ஸஹஸ்ரஜாநுர்மதவபுஷா:=மதுமிவ மதுகைடபஸ்ய ...பரிபூய கர்வகுர்வோ: கிமுபமிமீமஹி ரங்கராஜ ஊர்வோ:?" என்றும் அருளிச் செய்திருக்கையாலே மதுகைடபர்கள் திருமாலின் திருத்துடையில் இறுகி முடிந்தன வென்பது தெற்றென விளங்கும். பேயாழ்வார் மூன்றாந்திருவந்தாதியில் "காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள், ஏய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப—வாய்ந்த மதுகைடபரும் வயிறுருகி மாண்டார்" என்று—அரவணையில் துயில்கொள்ளு மெம்பெருமானோடு போர்புரிவதாக மதுகைடபர்கள் கிட்ட வந்த மாத்திரத்திலே திருவனந்தாழ்வானுடைய உஷ்ணமான மூச்சுக் காற்று வீசினவளவிலே அவ்வசுரர்கள் வயிறுருகி மாண்டொழிந்தன ரென்பதாக அருளிச் செய்வது இதிஹாஸ புராணங்கள் பலவகைப்பட்டிருத்தலால் அங்ஙனேயும் ஒருபுடையுண்டு போலே. 1. "மேருகிரி யவுணனுடல் மிடல்

1. திருவரங்கக் கலம்பகம்.

கெடுத்தாயென்பர் அது, உன் கூறுநீரே யறிந்ததல்லால் கோவே! நீ அறியா யால் " என்றாற்போலே, உண்மையில் நிருந்துடைகளாலிறுக்கிக் கொல்லப்பட்ட அவ்வசுரர்களை ஆநிசேசையுடைய வெவ்வுயிர்ப்பினால் வயிறுருகி மாண்டனராகச் சொல்வதும் பொருந்தியதேயாம். அதிசயோக்தியில் ஒருவகை யென்க. (௩)

தளர்ந்திட்டிமையோர் சரண்தாவெனத்
தான்சரணாய் முரணாயவனை * உகிரால்
பிளந்திட்டமரர்க் கருள்செய்துகந்த
பெருமான் திருமால் விரிநீருலகை *
வளர்ந்திட்டதொல்சீர் விறல்மாவலியை
மண்கொள்ளவஞ்சித் தொருமாண்குறளாய் *
அளந்திட்டவன்காண்மி னின்றுய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௪)

இமையோர்	தேவர்கள்
தளர்ந்திட்டு	(அசுரர்களாலே நெருக்குண்டு) மிகவும் தளர்ச்சியடைந்து
சரண் தா என	'நீ எமக்கு ரக்ஷகனாக வேணும்' என்று பிரார்த்திக்க,
தான் சரண் ஆய்	தான் ரக்ஷகனாகி நின்று
முரணாயவனை	பெருமிடுக்கனான இரணியனை
உகிரால்	நகங்களாலே
பிளந்திட்டு	கிழித்துப்போட்டு
அமரர்க்கு	தேவர்களுக்கு
அருள்செய்து	கிருபைபண்ணி
உகந்த	திருவுள்ளமுவந்த
பெருமான்	ஸர்வேச்வரனாய்
திருமால்	திருமகள் கொழுநனாய்,
வளர்ந்திட்ட தொல் சீர்	மேன்மேலும் வளர்கின்ற அதிக ஸம்பத்தையுடைய
விறல்	பலிஷ்டனான
மாவலியை	மஹாபலியை
மண் கொள்ள	பூமியைக்கொள்ளும் பொருட்டு
ஒரு மாண் குறள் ஆய்	அத்விதீயனான ப்ரஹ்மசாரி வாமனனாய்
வஞ்சித்து	சிறு காலைக்காட்டி மோத்தி
விரிநீர் உலகை	கடல்சூழ்ந்த வுலகங்களை
அளந்திட்டவன் காண்மின்	அளந்துகொண்டவன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

* * *—இரணியாசுரனால் தேவர்கள் சாலவும் நெருக்குண்டு தளர்ந்து வந்து 'நாயனே! எம்மை ரக்ஷித்தருள வேணும்' என்று பிரார்த்திக்க, அவர்கட்கு ரக்ஷகனாகி ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள்செய்யும் வியாஜமாகத் தூணில் நரசிங்கவுருக்கொண்டு தோன்றி அவ்விரணியனை மடிமீது போட்டுக்கொண்டு திருக்கை நகங்களாலே பிளந்து ஒழித்து, தேவர்களின் துயரைத் தீர்க்கப் பெற்றோமென்று திருவுள்ள முவந்தவனும், மேன்மேலும் வளர்கின்ற எல்லையில்லாத செல்வமுடைய பெருமிடுக்கனான மஹாபலியை வலியடக்க வேண்டி,

http://acharya.org

அழகிய வாமன வேஷத்தையுடையனாய்க்கொண்டு வந்து வஞ்சித்து உலகங்களை யளந்து கொண்டவனுமான பரத்வத்திற் குறைபற்ற பெருமான் இவர் இன்று தரித்ரன் போலே வெண்ணெயைக் களவாடியுண்டு ஓரிடைச்சியிட்ட சிறையை விடுத்துக்கொள்ள மாட்டாதவன் போல இருந்து எளிமைக் குணத்தை விளக்குகின்றானென்கிறார். .... (ச)

நீண்டான்குறளாய் நெடுவானளவும்
அடியார்படு மாழ்துயராயவெல்லாம் *
தீண்டாமைநினைந் திமையோரளவும்
செலவைத்தபிரான் அதுவன்றியும்முன் *
வேண்டாமைநமன்தமர் என்தமரை
வினவப்பெறுவா ரலரென்று * உலகேழ்
ஆண்டானவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (ரு)

அடியார் படும்	பக்தர்கள் அநுபவிக்கிற
ஆழ் துயராய எல்லாம்	கொடிய பாப பலன்களெல்லாம்
தீண்டாமை	அவர்களை ஸ்பர்சியாதபடி
நினைந்து	திருவுள்ளம்பற்றி
குறள் ஆய்	வாமனமூர்த்தியாகி
நெடு வான் அளவும்	பரம்பிய ஆகாசமெங்கும்
நீண்டான்	வளர்ந்தவனாய்,
இமையோர் அளவும்	நித்யஸூரிகளளவும்
செல	செல்லும்படியாக
வைத்த	திருவடிகளை உயர்த்தி வைத்தருளின
பிரான்	உபகாரகனாய்,

அது அன்றியும் முன்—;

வேண்டாமை	(‘எல்லாரையும் யமபடர்கள் ஆராயக்கடவர்கள்’ என்று தானே யிட்ட கட்டளையை) வேண்டாமையினாலே
நமன் தமர் என் தமரை வினவப் பெறுவார் அலர் என்று	‘யமபடர்கள் எம்மடியாரை ஆராயக்கடவர்களல்லர்’ என்று நியமித்தருளி
உலகு எழ் ஆண்டான் அவன் காண்மின்	உலகங்களையெல்லாம் ரக்ஷித்தருளினவனன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

* * *—இப்பாட்டின் முன்னடிகளை இரண்டுபடியாக நிர்வஹிக்கலாம்; எங்ஙனே யென்னில்; குறளாய் நெடுவானளவும் நீண்டான் என்று ஒரு வாக்கியமாகவும், “அடியார்படும்” என்று தொடங்கி “இமையோரளவும் செல வைத்த பிரான்” என்றதளவும் வேறொரு வாக்கியமாகவும் யோஜித்தல் ஒரு வகை; இந்த யோஜனையில், ‘நீண்டான் குறளாய் நெடுவானளவும்’ என்ற மட்டுமே த்ரிவிக்ரமாவதார விஷயம் சொல்லுகிறது, அடியார்படு மென்று தொடங்கி மேல் வாக்கியத்தின் கருத்தாவது:—தனக்கு அடிமைப்பட்டவர்கள் கீழ்க்காலங்களில் செய்த பாபங்களின் பலன்களை அநுபவித்துத் தீர்க்க வேண்

http://acharya.org

டாமல் 1. "வாயினாற்பாடி மனத்தினாற் சிந்திக்கப் போயபிழையும் புகுதரு வான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்கிறபடியே அவை தன்னடையே கழிந்தொழியுமாறு திருவுள்ளம் பற்றி அவர்களுக்கு ஞானபக்தி விரக்திகளை வளரச் செய்துகொண்டு போந்து அவர்களை நித்யஸூரி துல்யராக ஆக்கி வைக்கும் பெருமான் என்கை. [இமையோரளவும் செல] நித்ய ஸூரித்வ ப்ராப்தி பர்யந்தமாக=நித்ய ஸூரிகளாகவும் ஆம்விடும்படியாக என்றவாறு. வைத்த பிரானென்றது வைக்கும் பிரானென்றபடி. இனி மற்றொரு யோஜனை பதவுரையிற் காணத்தக்கது. மஹாபலியின் செருக்கினால் அடியார்கள் துயருற்றிருந்ததனால் அத்துயர் நீங்குமாறு வாமநமூர்த்தியாய் மாவலி வேள்வியிற் சென்று நெடுவானளவும் நீண்டவனாகி இமையோரளவும் செல்லும்படியாகத் திருவடிகளை நீட்டிவைத்த பிரான் என்றவாறு.

தன்னடியார் திறத்தில் யமபடர்கள் ஒன்றும் ஆராய வொண்ணாதபடி எம்பெருமான் தனது அடியார்களைப் பாதுகாக்குந்திறம் மூன்றாமடியிற் கூறப்பட்டது. ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் (3-7-14) "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே । பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் = ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்" என்றதும், திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் (68) "திறம்பேன்மின் கண்டீர் திருவடி தன் நாமம், மறந்தும் புறந்தொழாமாந்தர்—இறைஞ்சியும், சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும் தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு." என்றருளிச் செய்ததும் இங்கு அறியத்தக்கன. யமனுடைய தூதர்கள் பாசங்களைக் கையிற் கொண்டு தங்கள் கடமையைச் செலுத்தப் புறப்படும்போது யமன் அத்தூதர்களை யழைத்து ரஹஸ்யங்கள் சொல்லுமாபோலே காதோடே ஒரு வார்த்தை சொல்லுவான்:—ஓ தூதர்களே! நீங்கள் பாகவதர்களிடத்தில் சிறிதும் அதிகாரம் செலுத்தவேண்டா; அவர்கள் கிட்ட நீங்கள் செல்லவே கூடாது; ஒருகால் அவர்கள் நேர்பட்டால் வணங்கி வலஞ்செய்து பரம ஸாத்விகர்களாய் விலகுங்கோள் என்றானாம். இதனால் பாகவதர்களுக்கு யமபய ப்ரஸக்தியே யில்லை யென்றதாம். "அவன் தமர் எவ்வினையராகிலும் எங்கோனவன் தமரே யென்றொழிவதல்லால், நமன் தமரால் ஆராயப்பட்டறியார் கண்டீர் அரவணை மேல், பேராயற் காட்பட்டார்பேர்" என்றார் பொய்கையாழ்வார். "கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன, நாளுங் கொடுவினை செய்யுங் கூற்றின்தமர்களுங் குறுககில்லார்" என்றார் நம்மாழ்வார். "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ! நின்னாமங்கற்ற ஆவலிப்புடைமை கண்டாய்—காவலிற்புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டுழிதர்கின்றோம் நமன் தமர் தலைகள் மீதே" என்றார் தொண்டரடிப்பொடி யாழ்வார். யமன் தனது

1. திருப்பாவை—5.

படர்களை யழைத்து அவ்வாறு கட்டளையிடுதலும், பாகவதர்கள் 'நமன் தமர் தலைகளிலே காலை வைத்துக் குமுக்குகிறோம்' என்று சொல்லுதலு மெல்லாம் எம்பெருமானுடைய நியமநத்தி னுறைப்பினாலென்பது இப்பாட்டில் வெளியாகின்றது.

[வேண்டாமை] "உயிரும் தருமனையே நோக்கும்" என்ற பொதுவான நீதியின்படி பாகவதர்களின் உயிரும் யமனுக்கு வசப்படவேண்டியதாயிருக்கச் செய்தேயும் பொதுவிதியைப் பாகவதர் திறத்திலும் உபயோகப்படுத்த வேண்டாமையினா லென்றபடி. [என் தமரை நமன்தமர் வினவப்பெறுவாரலர்] வினவுதல்—தண்டனை செய்தலுக்குப் பரியாயம். 'என்னுடைய பக்தர்கள் எவ்வகைப்பட்ட பிழைகளைச் செய்தவராயினும் அவர்களை யமபடர்கள் தண்டிக்க வுரியாரல்லர்' என்று எம்பெருமான் கட்டளையிட்டு வைத்து ஜகத்பரிபாலனம் பண்ணுகிறானென்கிறது.

இப்படி பிறர்க்கு நேரக்கூடிய பாசங்களையும் தவிர்த்தருளவல்ல பெருமை வாய்ந்தவன் இன்று ஆய்ச்சியர் பாசங்களால் கட்டுண்டிருக்கு மெளிவரவு என்னே! என்றாராயிற்று. ... ... (௫)

பழித்திட்டவின்பப்பயன் பற்றறுத்துப்
பணிந்தேத்தவல்லார் துயராயவெல்லாம் *
ஒழித்திட்டவரைத் தனக்காக்கவல்ல
பெருமான் திருமாலதுவன்றியும் முன் *
தெழித்திட்டெழுந்தே யெதிர்நின்றமன்னன்
சினத்தோளவை யாயிரமும் மழுவால் *
அழித்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௬)

பழித்திட்ட	சாஸ்திரங்களில் இகழப்பட்ட
இன்பம்	சிற்றின்பமாகிற
பயன்	அற்ப பலன்களை
பற்று அறுத்து	வாசனையோடே விட்டிட்டு
பணிந்து	திருவடிகளிலே விழுந்து
ஏத்த வல்லார்	துதிக்கவல்லவர்களுடைய
துயர் ஆய எல்லாம்	துன்பமென்று பேர்பெற்றவை யெல்லாவற்றையும்
ஒழித்திட்டு	கழித்தருளி
அவரை	அவர்களை
தனக்கு ஆக்க வல்ல	தனக்கு நித்யகிங்கரராகச் செய்துகொள்ளவல்ல
பெருமான்	ஸ்வாமியாய்
திருமால்	ச்ரிய:பதியாய்,

அது அன்றியும் முன்—;

தெழித்திட்டு	பெரிய ஆரவாரத்தைச் செய்துகொண்டு
எழுந்து	மார்புதட்டிக் கிளர்ந்து
எதிர் நின்ற	(போர்புரிய) எதிரே வந்து நின்ற
மன்னன்	(கார்த்தவீர்யார்ஜுனனென்னும்) அரசனுடைய
சினம்	கோவத் துடிப்புக்கொண்ட
தோள் அவை ஆயிரமும்	ஆயிரந்தோள்களையும்
மழுவால்	மழுப்படையினால்
அழித்திட்டவன் காண்மின்	அழித்தவனான பெருமானன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

http://acharya.org

* * *—உலகத்தில் சேதநர்கள் பலவகைப்பட்டிருப்பார்கள்; பலர் அற்பமான பலன்களை விரும்பி அவற்றைப் பெறுதற் பொருட்டுத் தேவதாந்தர பஜனஞ் செய்து போருவர்; அவர்கள் கடக்க நிற்க. அங்ஙனம் தேவதாந்தர பஜனம் பண்ணாமல் எம்பெருமானையே பஜிப்பவர்களும் ஐச்வர்யம் வேணுமென்று சிலரும், ஸந்தானம் வேணுமென்று சிலரும், ஸ்வர்க்க புருஷார்த்தம் வேணுமென்று சிலரும், கைவல்ய புருஷார்த்தம் வேணுமென்று சிலருமாய் இப்படி பலவகைப்பட்ட காமனைகளுடனே எம்பெருமானைப் பணிந்தேத்துவாருண்டு. அப்படியெல்லாமல்லாமல் ஹேயங்களான புருஷார்த்தங்களில் சிறிதும் விருப்பமின்றியே "உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்" என்கிற அத்யவஸாயமொன்றையே கொண்டு பணிந்து துதிக்க வல்லவர்களுடைய துன்பங்களையெல்லாம் தொலைத்திட்டு, பெரிய திருவடி திருவனந்தாழ்வான் முதலிய நித்யஸூரிகளைப்போலே அவர்களை அத்தாணிச் சேவகத்துக்கு ஆளாக்கிக் கொள்ளுமியல்வினனை எம்பெருமானென்பன முன்னடிகள்.

ஸஹஸ்ரபாஹ்வர்ஜுநனென்று ப்ரஸித்தனான கார்த்தவீரியனைப் பரசுராமாவதாரத்தில் கொன்று வென்றிட்ட வரலாறு மூன்றாமடியில் அநுஸந்திக்கப்படுகிறது. கொழுத்துத் திரிந்து உலகில் கொடுமையியற்றி வந்த க்ஷத்ரிய வம்சங்கள் பலவற்றை யழிக்கும் பொருட்டு ஸ்ரீமந் நாராயண மூர்த்தி ஜமதக்நி முனிவனது மனைவியான ரேணுகையினிடம் இராமனாய்த் திருவவதரித்துப் பரசு என்னும் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனால் பரசுராமனென வழங்கப்பட்டு வருகையில், ஒருநாள் கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் ஜமதக்நியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்த காலத்தில், அங்கே அம்முனிவனது ஹோமதேநுவானது வேண்டின வஸ்துக்களையெல்லாம் யதேஷ்டமாக அளித்துக்கொண்டிருப்பதைக் கண்ட இவர்கள் அப்பசுவைக் கைக்கொள்ள விரும்பி 'இந்தப் பசுவை எனக்குக் கொடுக்கவேணும்' என்று ஜமதக்நியைக் கார்த்தவீரியன் கேட்க, அதற்கு மறுமொழி 'அது என் வசமன்று; ரிஷிகளின் உபயோகத்திற்காக இதனைத் தேவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள்' என்று சொல்ல, அது கேட்ட கார்த்தவீரியன் தன்னை வெல்வாரில்லையென்னுஞ் செருக்குடைமையாலே அக்காமதேநுவைப் பலாத்காரமாகப் பிடித்திழுத்துக் கொண்டு தன் நகர்க்குச் சென்றான்; வனத்திற்குச் சென்றிருந்து மீண்டும் வந்த பரசுராமன் ஆச்ரமத்தில் பசுவைக் காணாமல் கார்த்தவீரியன் வலியக் கவர்ந்து கொண்டுபோனதாகத் தந்தை சொல்லக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டு அவனிருக்கும் மாஹிஷ்மதி நகரத்திற்குச் சென்று அங்குள்ள த்வாரபாலர்களை விளித்து 'உங்களரசன் எங்கள் பசுவைக் கொடுத்துப் பிழைத்துய்ய நினைக்கிறானா? அன்றி என்னுடன் போர்செய்து முடிய நினைக்கிறானா? கேட்டு வாருங்கள்' என்று சொல்ல, அவர்கள் சென்று அவ்வண்ணமே கார்த்தவீரியனுக்கறிவிக்க, அவன் 'பரசுராமனுடன் நாம் எதிர்த்தால் நமக்கு ப்ராஹ்மஹத்

http://acharya.org

யை வரும்; காமதேநுவைக் கொடுத்துவிட்டால் 'இவனொரு பார்ப்பானுக்கு எதிர் நிற்கமாட்டாத அஸமர்த்தன்' என்று உலகர் சிரிப்பர்; இதற்கென்ன செய்வோம்' என்று ஆலோசித்து, தனக்குக் கீழ்ப்பட்ட அரசர்களைப் பரசுராமனுடன் போர்புரிய அனுப்ப, பரசுராமன் அவர்களைக் கொன்று வென்றிட, அவர்களெல்லாம் மாண்டுபோனதைக் கேட்கவுற்ற கார்த்தவீரியன் தானே எதிர்த்துவர, அவனைப் பரசுராமன் தனது கோடாலிப்படையினால் ஆயிரம் கைகளையும் வெட்டிக் கொன்றுவிட்டுத் தன் தேநுவைத் தன் ஆச்ரமத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார். [கார்த்தவீரியனது புதல்வர் 'பரசுராமன் நம் தந்தையைக் கொன்றிட்டானாதலின் நாம் அவனது தந்தையைக் கொன்றிடல் வேண்டும்' என்றெண்ணிப் பரசுராமன் வனஞ்சென்றிருந்த வேளைபார்த்து அவரது ஆச்ரமத்திற்கு வந்து ஜமதக்நியைக் கொன்று விட்டனர். பரசுராமன் ஆச்ரமத்திற்கு மீண்டு வந்ததும் செய்தியறிந்து அதனால் க்ஷத்ரிய வம்சம் முழுவதன் மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்துவிட்டான்.]

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவன்காண்மின் இன்று அசக்தியை அபிநயித்து ஆப்புண்டிருக்கிறான்! .... (௬)

> படைத்திட்ட திவ்வையமுய்யமுனநாள்
> பணிந்தேத்தவல்லார் துயராயவெல்லாம் *
> துடைத்திட்டவரைத் தனக்காக்கவென்னத்
> தெளியாவரக்கர் திறல்போயவிய *
> மிடைத்திட்டெழுந்த குரங்கைப்படையா
> விலங்கல்புகப்பாய்ச்சிவிம்ம * கடலை
> அடைத்திட்டவன்காண்மி னின்றுய்ச்சியரால்
> அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௭)

முனநாள்	முன்பொருகாலத்தில்	அவரை	அப்படிப்பட்டவர்களை
இ வையம்	இவ்வுலகங்களை	தனக்கு ஆக்க என்ன	தனக்கே உரியவராக ஆக்கிக் கொள்ள நினைத்தவளவிலே
படைத்திட்டு	(காரணகளேபரங்கள் கொடுத்து) ஸ்ருஷ்டித்து	தெளியா	அத்திருவுள்ளத்தை ஸஹிக்க மாட்டாமல் கலங்கித் தீங்கிழைத்த
அது	அவ்வுலகம்		
உய்ய	உஜ்ஜீவிப்பதற்குறுப்பாக	அரக்கர்	ராவணாதி ராக்ஷஸர்களுடைய
பணிந்து	திருவடிகளிலே விழுந்து	திறல்	மிடுக்கு
ஏத்த வல்லார்	துதிக்கவல்லவர்களுடைய	போய் அவிய	பாழ்படும்படியாக
துயர் ஆய எல்லாம்	துன்பமென்று பேர்பெற்றவற்றையெல்லாம்	மிடைத்திட்டு எழுந்த	நெருடமாகத் திரண்ட
துடைத்திட்டு	போக்கி	குரங்கை	வானரவீரர்களை

படை ஆ	சேனையாகக்கொண்டு
விம்ம	(கடல்) நிரம்பும்படி
விலங்கல்	மலைகளை
புக பாய்ச்சி	பரப்பியிட்டு
கடலை	ஸமுத்ரத்தை
அடைத்திட்டவன் காண்மின்	தூர்த்தவனான பெருமானன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

* * *—முன்பு இவ்வுலகமடங்கலும் பிரளயங்கொண்டு உபஸம்ஹாரமடைந்திருந்த காலத்து, மீண்டும் சேதநர்கள் தன்னை வணங்கி வழிபட்டு உஜ்ஜீவிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, இறகொடிந்த பக்ஷிபோலே கிடந்த ஆன்மாக்களுக்கெல்லாம் கரண களேபரங்களைக் கொடுத்து ஸ்ருஷ்டித்து, அவர்களெல்லாம் தன்னைப் பணிந்து ஏத்தவல்லவர்களாகும்போது அவர்களது துயர்களை யெல்லாம் தொலைத்திட்டு அவர்களைத் தனக்கு அந்தரங்க கிங்கரர்களாக்கிக் கொள்ளவேணும் என்று பாரித்திருக்கையில் ராக்ஷஸர்கள் ஏற்பட்டு அவ்வடியார்களுக்குத் தீங்கிழைத்த காலத்து, அவர்களது திறல்மாளும்படியாக வானரப் படைகளைத் துணைகொண்டு கடலை யணைசெய்த பெருமான்காண்மின் இன்று அஜ்ஞனும் அசக்தனுமாய்க்கொண்டு இடைச்சி கையிலே கட்டுண்டு கிடக்கிறான்! என்கிறார். .... (எ)

நெறித்திட்ட மென்கூழை நன்னேரிழையோடு
உடனாயவில்லென்ன வல்லேயதனை *
இறுத்திட்டவளின்ப மன்போடணைந்திட்டு
இளங்கோற்றவனாய்த் துளங்காதமுந்நீர் *
செறித்திட்டிலங்கை மலங்கவரக்கன்
செழுநீண்முடி தோளொடு தாள்துணிய *
அறுத்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (அ)

நெறித்திட்ட	நெறித்திராநின்ற
மென்	மிருதுவான
கூழை	மயிர்முடியையும்
நல் நேர் இழையோடு	விலக்ஷணமாய் அழகிய ஆபரணங்களையுமுடையவளான ஸீதையோடு
உடன் ஆய	கூடப்பிறந்த
வில் அன்ன	இருண்ட
வில் அதனை	அந்தவில்லை
இறுத்திட்டு	முறித்துவிட்டு
அவள் இன்பம்	அவளோடுகலவியாலுண்டாகும் இன்பத்தை
அன்போடு	ப்ரீதியுடனே
அணைந்திட்டு	லபித்து
இள கொற்றவன் ஆய்	யுவராஜாவாயிருந்து

(பிறகு வநவாஸம் நேர்ந்த பின்பு)

துளங்காத	ஒருவராலும் அசைக்க முடியாத
முந்நீர்	கடலை
செறித்திட்டு	அணைகட்டி
இலங்கை மலங்க	லங்கை கலங்கும்படியாக

அரக்கன்	இராவணனுடைய	துணிய	சிதிலமாகும்படியாக
செழு	செழித்த	அறுத்திட்டவன் காண்மின்	அறுத்தொழித்தவனன்றோ
நீள்	நீண்ட	இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன் —.	
முடி	தலைகளும்		
தோள்	தோள்களும்		
தாள்	கால்களும்		

* * *—ஸீதாபிராட்டியின் விவாஹத்திற்கு சுல்கமாக அமைக்கப்பட்டிருந்த வில்லை யிறுத்து அவளைக் கைப்பிடித்து இன்பம் நுகர்ந்தமை முன்னடிகளிற் கூறப்பட்டது. [நன்னேரிழையோடுடனாய] இது வில்லுக்கு விசேஷணமாகவுள்ளது. முன்னொரு காலத்தில் தேவசில்பியான விச்வகர்மாவினால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டு விற்களுள் ஒன்றைச் சிவபிரானும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக்கொள்ள, பின்பு ஒரு காலத்தில் அவ்விற்களுள் சிறந்தது இன்னதென்பதை அறிய விரும்பிய தேவர்களின் வேண்டுகோளாற் பிரமன் அரனுக்கும் அரிக்கும் போரை மூட்டிவிட, அங்ஙனமே அவர்கள் அவ்விற்களைக் கொண்டு பொருகையில், சிவபிரானது வில் சிறிது முறிபட, அவ்வாறு இற்ற வில்லைச் சிவபிரான் ஜநககுலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட அது வம்சபரம்பரையாய் ஜநகமஹாராஜனளவும் வந்ததென்றும், அதனையே ஸீதைக்குக் கந்யாசுல்கமாக ஜநகன் வைத்திருந்தான் என்றும் இதிஹாஸங்களில் விளங்கா நிற்க, அந்த வில் பிராட்டியோடு கூடப்பிறந்ததாக இப்பாட்டில் அருளிச் செய்யப்படுகிறது என்கொல்? என்று பலரும் சங்கிப்பர்கள்; அந்த வில் ஸீதையோடு கூடப்பிறந்ததாக இங்குச் சொல்லப்படுவதன்று. இங்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வருளிச்செயல் காண்மின்;—“இந்த வில்லை முறித்தார்க்கு இவளைக் கொடுக்கக் கடவதாக நியமித்தபடியாலே ‘உடனாய’ என்கிறது” என்று. சுல்கபந்தத்தினால் பிராட்டியை விட்டுப் பிரியாதிருந்த வில் என்றவாறு.

உடனாய என்றதற்குமேல் பல பாடபேதங்களுள; “அல்லன்ன வில்லேயதனை” என்றும், “வல்லன்ன வில்லேயதனை” என்றும், “வில்லென்ன வல்லேயதனை” என்றும். [‘அல் என்று இருளாய், இருண்ட வில் என்றுமாம்’ என்பர் பெரியவாச்சான் பிள்ளையும்.] ‘வல்லன்ன’ என்ற பாடத்தில் [கடினமான] என்று பொருள்.

இளங்கோற்றவனாய் என்றதனால், பன்னிரண்டு வருஷகாலம் திருவயோத்தியில் இளங்கோவாயிருந்து கொண்டு பிராட்டியோடு போகரஸமநுபவித்தமை நினைக்கப்படுகிறது. அதற்கு மேல் கைகேயி வரம் வேண்டக் கானகம் சென்று கடலடைத்து இராவணனைக் கொன்ற வரலாறு மூன்றாமடியில் அநுஸந்திக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீரப்பாடுடையவன் கிடீர் தன் பெருமையை யெல்லா மொளித்து எளிமையைக் காட்டாநின்றானென்கிறார்.... .... (அ)

http://acharya.org

சுரிந்திட்டசெங்கேழுளைப் பொங்கரிமாத்
　　தொலையப்பிரியாதுசென்றெய்தி * எய்தா
திரிந்திட்டிடங்கொண் டடங்காததன்வாய்
　　இருகூறுசெய்தபெருமான், முனநாள் *
வரிந்திட்டவில்லால் மரமேழுமெய்து
　　மலைபோலுருவத்தோரிராக்கதிமூக்கு *
அரிந்திட்டவன் காண்மி னின்றாய்ச்சியரால்
　　அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௯)

சுரிந்திட்ட	சுருண்டிராநின்ற
செம் கேழ்	சிவந்தநிறமுடையனவான
உளை	பிடரிமயிர்களையுடைத்தாய்க் கொண்டு
பொங்கு	களித்துவந்த
அரிமா	குதிரைவடிவனான கேசியென்னுமசுரன்
தொலைய	முடிந்துபோம்படியாக
பிரியாது	அதனைவிடாதே
சென்று எய்தி	சென்றுகிட்டி,
எய்தாது	கிட்டவாராமல்
திரிந்திட்டு இடம் கொண்டு அடங்காத அதன்வாய்	அங்குமிங்கும் திரிந்து கொண்டு அவகாசங் கொடாதே அவிதேய மாய்க்கிடந்த அந்தக் குதிரையின்வாயை
இரு கூறு செய்த	இருதுண்டமாக்கி யொழித்த
பெருமான்	ஸ்வாமியாய்,
முனநாள்	(அன்றியும்) முன்பொரு காலத்திலே
வரிந்திட்ட	கட்டுடைத்தான
வில்லால்	வில்லாலே
மரம் ஏழும்	மராமரங்களேழையும்
எய்து	முறித்தவனாய்,
மலை போல் உருவம்	மலைபோன்றவடிவை யுடையளான
ஒரு இராக்கதி	சூர்ப்பணகையென்னும் ஒரு ராக்ஷஸியினுடைய
மூக்கு	மூக்கை
அரிந்திட்டவன் காண்மின்	அறுத்தொழித்தவனான பெருமானன்றோ

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவன்—.

* * *—குதிரை வடிவுகொண்டு நலிய வந்த கேசியைக் கொன்றும் மராமரமேழ் செற்றும் சூர்ப்பணகைக்கு அங்கபங்கஞ் செய்தும் தன் விறலை வெளியிட்டுக்கொண்ட பெருமான் இவர் இன்று வெண்ணெய்க்களவுக்காகக் கட்டுண்டு கிடக்கிறானென்கிறார்.

கேழ்—ஒளியும் நிறமும். கம்ஸனேவப்பட்ட அஸுரர்களில் கேசியென்பானொருவன் குதிரை வடிவங்கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் தாக்கிக்கொண்டு கண்ணபிரான் மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினனென்ற வரலாறு அறிக. அக்குதிரையின் பிடரிமயிர் சுருண்டு செந்நிறங்கொண்டிருந்தது பற்றிச் சுரிந்திட்ட செங்கேழுளை என்று அடைமொழியாயிற்று.

http://acharya.org

அக்குதிரை சில ஸமயம் கண்ணபிரான் கையிற் பிடிகொடாமல் அவிதேயமாய் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருந்தமை தோன்ற "எய்தாது இரிந்திட்டிடங் கொண்டடங்காத" எனப்பட்டது. 'அடங்காததன்' என்ற விடத்துத் தொகுத்தல் விகாரம்.

வில்லால் மரமேழு மெய்த வரலாறு:—ஸுக்ரீவன் இராமபிரானால் அபய ப்ரதானம் செய்யப் பெற்ற பின்பும் மனந்தெளியாமல் வாலியின் பேராற்றலைப் பற்றிப் பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒரு யோஜனை தூரம் தூக்கி யெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக் கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்வது கூடுமோ?' என்று சொல்ல, அது கேட்ட லக்ஷ்மணன் 'உனக்கு நம்பிக்கை இல்லையாயின் இப்போது என்ன செய்யவேண்டுவது?' என்ன; ஸுக்ரீவன் 'இராமபிரான் நீறு பூத்த நெருப்புபோலத் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும்போது சங்கையுண்டாகின்றது; ஏழு மராமரங்களையுந் துளைத்து இந்தத் துந்துபியின் எலும்பையும் இருநூறு விற்கடை தூரம் தூக்கி யெறிந்தால் எனக்கு நம்புத லுண்டாகும்' என்று சொல்ல; ஸுக்ரீவனுக்கு நம்பிக்கையுண்டாகுமாறு அவ னது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவிய லைத் தனது காற்கட்டைவிரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோஜனை த்துக்கு அப்பால் எறிய, அதனைக் கண்ட ஸுக்ரீவன் 'முன்பு உலராதிருக் வாலி இதனைத் தூக்கி யெறிந்தான்; இப்போது உலர்ந்து விட்ட இத கி யெறிதல் ஒரு சிறப்பன்று' என்று கூற, பின்பு இராமபிரான் ஒரு ணத்தை ஏழு மராமரங்களின்மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்த டு ஏழுலகங்களையுந் துளைத்துச் சென்று அம்பறாத் தூணியை யடைந்

இராக்கதி மூக்கரிந்திட்ட வரலாறு:—இராமபிரான் பஞ்சவடியிலெழுந் தருளியிருக்கும்போது ஹேமந்த காலத்தில் சூர்ப்பணகை யென்றொரு அரக்கி அழகிய வடிவமெடுத்து வந்து இராகவனைக் கண்டு காமவிகாரமடைந்து தன்னை மனைவியாகக் கொள்ளுமாறு விரும்ப இராகவன் 'எனக்கு ஒரு மனைவி இருக்கி றாள்; என் தம்பியாகிய லக்ஷ்மணனை அடைந்தாயாகில் ஸுகமடையலாம்' சொல்ல; அப்படியே அவள் லக்ஷ்மணனிடம் செல்ல, 'நான் ஒருவர்க்கு ன். என்னையடைந்தால் நீயும் வேலைக்காரியாவாய்; ஆகையால் அவ வது உனக்கு நலம்' என்று லக்ஷ்மணன் சொல்ல; இப்படி ய்த் திரிந்து இஷ்டத்தைப் பெறாமல் 'நம் இஷ்டத்தை இந்த பெறவொட்டாமல் செய்கிறாளாகையால் இவளைத் தின்று விடு அவ்வரக்கி ஸீதாதேவியிடம் ஓட, உடனே இலக்குமணன் இராம ஜ்ஞையினால் அவளைத் தகைந்து காதையும் மூக்கையுமறுத்து அங்க திட்டார்.

http://acharya.org

இப்படி சூர்ப்பணகைக் [illegible]ங்கபங்கஞ் செய்தது இளையபெருமாளின் செய்கையாயிருக்க, இதனைப் [illegible]மாள் தாமே செய்த செயலாக இப்பாசுரத்திலும் மற்றும் வருமிடங்களிலும் அநுஸந்திப்பது என்னேயெனின்; இராமனது கருத்துக்கு ஏற்ப அவன் கட்டளையிட்டபடி லக்ஷ்மணன் செய்தனனாதலின் ப்ரயோஜககர்த்தாவின் வினையாதல் பற்றியென்க. அன்றியும் "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" என்றபடி இராமபிரானுக்கு லக்ஷ்மணன் வலத்திருக்கை எனப்படுதலால் அங்ஙனம் கையாகிய லக்ஷ்மணனுடைய செயலை அவயவியாகிய இராமன்மேல் ஒற்றுமை நயம்பற்றி ஏற்றிச் சொல்லுதலும் தகுதியே. பலராமன் செய்தருளிய ப்ரலம்பாஸுரவதத்தைக் கண்ணபிரான் செய்தருளியதாக அநுஸந்திப்பதும் இதுபோன்றதேயாம்.

இராக்கதியின் மூக்கை யரிந்திட்டது முன்பும் மாமேழெய்தது பின்பும் நடந்ததாயிருக்க, இங்கு க்ரமமாறுபட்டதாகச் சொல்லியிருப்பது பொருந்துமோ வென்று சங்கிக்கவேண்டா; எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்களை அநுபவித்தல் மாத்திரமே இங்கு விவக்ஷிதம்; ஆநுபூர்வியாகச் சரித்திரம் எழுதிக்கொண்டு போகிறார்களன்று.

இராக்கதி—ராக்ஷஸீ என்னும் வடசொல்விகாரம். .... (௯)

நின்றார்முகப்புச்சிறிதும் நினையான்
வயிற்றைநிறைப்பா னுறிப்பால்தயிர்நெய் *
அன்றாய்ச்சியர்வெண்ணெய் விழுங்கி உரலோ
டாப்புண்டிருந்த பெருமானடிமேல்*
நன்றாயதொல்சீர் வயல்மங்கையர்கோன்
கலியனொலிசெய் தமிழ்மாலைவல்லார் *
என்றானுமெய்தாரிடர் இன்பமெய்தி
இமையோர்க்குமப்பால் செலவெய்துவாரே. (௧௦)

நின்றார் முகப்பு	தன்னைக்காணவந்து நின்றவர்களெதிரே
சிறிதும் நினையான்	கொஞ்சமும் வெட்கப்பட அறியாதவனும்
வயிற்றை நிறைப்பான்	வயிற்றைநிறைப்பதற்காக
ஆய்ச்சியர்	இடைச்சிகளுடைய
உறி	உறிகளிலேயிருந்த
பால்	பாலையும்
தயிர்	தயிரையும்
நெய்	நெய்யையும்
வெண்ணெய்	வெண்ணெயையும்
விழுங்கி	(களவாடி) அமுதுசெய்து
அன்று	அப்போது
உரலோடு	உரலோடே
ஆப்புண்டிருந்த	கட்டுண்டிருந்த
பெருமான்	கண்ணபிரானுடைய
அடி மேல்	திருவடிகள்
நன்று ஆய தொல் சீர்	விலக்ஷண[illegible] ஸ்ரீமை ஸ்ரீயை
வயல் மங்கையர் கோன்	வயல்சூழ்ந்த நாட்டிலுள் தலைவராக

http://acharya.org

கலியன்	ஆழ்வார்	இடர் எய்தார்	துன்பமடையார்கள்;
ஒலி செய்	அருளிச்செய்த	இன்பம் எய்தி	நித்யாநந்தத்தைப் பெற்று
தமிழ் மாலை	இப்பாசுரங்களை	இமையோர்க்கும் அப்பால் செல	தேவர்களுக்கும் அவ்வருகான பரமபதத்தையடையும்படியானபாக்கியத்தை
வல்லார்	கற்றுவல்லவர்கள்	எய்துவார்	பெறுவர்கள்.
என்றும்	ஒருகாலும்		

* * *—இத்திருமொழியில் பாசுரந்தோறும் பரத்வகுணத்தை விஸ்தாரமாகவும் ஸௌலப்யகுணத்தைச் சுருக்கமாகவும் பேசியிருக்கச் செய்தே இதில் ஆழ்வார்தம்முடைய ஊற்றம் ஸௌலப்யகுணநுபவத்தில்தான்—என்பது விளங்கும் இப்பாசுரத்தில்; உடலோடாப்புண்டிருந்தபெருமானடிமேல் ஒலி செய்தது என்றருளிற்றுத் தலைக்கட்டுவது. இப்படியருளிச் செய்த இத்திருமொழியைக் கற்றுவல்லவர்கள் ஒருகாலும் ஸாம்ஸாரிக துக்கங்களை அநுபவிக்கப்பெறார்கள்; அந்தமில் பேரின்பத்தை யடைந்து ப்ரஹ்மாதிகள் குடியிருப்புக்கும் அவ்வருகான பரமபதத்திலே சென்று சேரப்பெறுவர் என்றுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

நின்றார் முகப்புச் சிறிதும் நினையான் வயிற்றை நிறைப்பான்—இப்படிவயிறுதாரியாய்த் திரிகிறீனை யென்று பலரு மேசுவர்களே! என்று சிறிதும் கூணங்காமல் அபூர்ணரைப்போலே வாரிவாரி யுண்டு வயிற்றை நிறைப்பவன். ஆச்ரிதர்களின் ஹஸ்தஸ்பர்சமுள்ள பொருள்களாலல்லது போது போக்கமாட்டாத ஸௌலப்யகுணம் விளங்கும். .... (௪0)

அடிவரவு:—எங்ஙனும் குன்று உளங்கு தாங்கு நீண்டான் பழித்திட்ட படைநெறி கரி நின்றார் மானம்.

ஆறாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர்திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—ஏழாந்திருமொழி,

மானமுடைத்துங்கள்.

உரையவதாரிகை:—வெண்ணெய் களவாடி உரலோடு கட்டுண்டிருக்கைக்கீடான பருவத்தை அநுபவித்துப் பேசினார் கீழில் திருமொழி. அதற்குமேலே வெண்ணெயையும் பெண்களையும் ஒக்கக் களவு செய்யும்படியான பருவத்தில் சேஷ்டிதங்களையும் அநுபவிக்கவேணுமென்னும் ஆசை கிளர்ந்தது ஆழ்வார்க்கு. அப்பருவந்தான் ஒரு மஹாபாரதமாய்ச் செல்லுமிறே. * ஆற்றிலிருந்து விளையாடுவோங்களைச் சேற்றாலெறிந்தான் என்று முறையிடுவாரும், * வளை துகில் கைக்கொண்டு காற்றிற் கடியனாய் ஓடி அகம்புக்கானென்று முறையிடுவாரும், * மச்சொடுமாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்கு கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறி நிச்சலும் தீமைகள் செய்கிறானென்று முறையிடுவாரும், * தொத்தார் பூங்குழல் கன்னி யொருத்தியைச் சோலைத்தடங் கொண்டுபுக்கு முத்தார் கொங்கை புணர்ந்து வந்தானென்று முறையிடுவாருமாய்த் திருவாய்ப்பாடி முழுதும் பேராரவாரமாய்ச் செல்லும் பருவமிறே. இப்படிப்பட்ட பருவத்திலுள்ள இவனாலே நோவுபட்டு ஊரிலுள்ளாரடங்கலும் 'அது போயிற்று, இது போயிற்று' என்று முறைப்பட, அவை கேட்டு யசோதை சொல்லும் பாசுரமும் முறையிடுவார் சொல்லும் பாசுரமுமாய் நிகழ்ந்த வாறுகளை அவரவர்கள் பாவனையாகவே தாம் பேசி யநுபவிக்கிறார் இத்திருமொழியில்.

கிருஷ்ணாவதார சேஷ்டிதந் தவிர வேறோரவதாரத்தின் வரலாறு லவலேசமும் கலசாத திருமொழியாயிருக்கிறது இது. .... (*)

மானமுடைத்துங்க ளாயர்குலம் அதனாற்பிறர்மக்கள்தம்மை *
ஊனமுடையன செய்யப்பெறாயென் றிரப்பனுரப்பகில்லேன் *
நானுமுரைத்திலேன் நந்தன் பணித்திலன் நங்கைகாள் ! நானென்செய்கேன்?*
தானுமோர்கன்னியுங்கீழையகத்துத் தயிர்கடைகின்றான்போலும். (க)

உங்கள் ஆயர் குலம்	'உங்களிடைக்குலமானது	ஊனம் உடையன செய்ய பெறாய் என்று	இழிவான செயல்களைச் செய்யாதொழிய வேணும்' என்று
மானம் உடைத்து அதனால்	மானத்தோடு வாழுந் தன்மையுடையதாகையாலே		
பிறர் மக்கள் தம்மை	அயலாருடையபெண்பிள்ளைகளிடத்திலே	இரப்பன்	வேண்டிக்கொள்வனே யன்றி

http://acharya.org

உரப்ப இல்லேன் } வெருட்டி வார்த்தை சொல்லியறியேன்;
நங்கைகாள் பெண்பிள்ளைகாள்!
நானும் உரைத்தி லேன் } (தாயாகிய) நானும் ஒன்று (சீறிச்) சொல்லி யறியேன்;
நந்தன் { (தகப்பனாரான) நந்தகோபரும்
பணித்திலன் ஒன்று சொல்லமாட்டார்;

(தாய்தந்தையரான நாங்களிருவரும் இப்படி உதாஸீநராயிருப்பதுவே காரணமாக)
தானும் கண்ணபிரான்தானும்
ஓர் கன்னியும் { ஒரு இடையர்க் கன்னியு மாய்க்கொண்டு
கிழை அகத்து கீழண்டை வீட்டில்
தயிர் கடை கின்றான் போலும் } தயிர்கடைந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது;
நான் என் செய்கேன்?—.

* * *—கண்ணபிரான் செய்த சில தீமைகளைச் சில ஆய்ச்சியர் யசோதைப் பிராட்டி பக்கலிலே வந்து முறையிட, அதற்கு அவ் யசோதை ஆய்ச்சியரை நோக்கிக் கூறும் பாசுரமாய்ச் செல்லுகிறது இப்பாட்டு.

ஆய்ச்சிகாள்! கண்ணன் அது செய்தான் இது செய்தானென்று நீங்கள் என்னிடம் முறையிடுவது உண்மையே; அவனைத் தண்டிக்கும்படியான வன்மை எனக்கு இருக்குமாகில் நீங்கள் என்னிடம் முறையிட்டுக் கொள்வதற்கு ஒரு ப்ரயோஜனமுண்டாகும்; நானோ அவனைச் சீறி ஒரு வார்த்தை சொல்லமாட்டாதவளாயிருக்கிறேன். அவனை நோக்கி நான் ஏதேனும் சொல்லவிரும்பினால் எங்ஙனே சொல்லுகிற வழக்கமென்றால்; தாயனே! நம்முடைய இடைக்குலமானது மிகவும் கௌரவமாக வாழுங்குடி; இக்குடிக்கு இழுக்காக யாரேனும் கொசகொசவென்று மறைவில் ஏதேனுஞ் சொன்னாலும் ஸஹிக்கமாட்டோம்; அவ்வளவு மானம்பேணி வாழுங்குடிகாண் இது: ஆகையாலே அயற்பெண்களிடத்தில் நீ இழிவாக நடந்து கொள்வது இக்குலமரியாதைக்குக் கேடாகுமாதலால்தப்பான காரியமொன்றுஞ் செய்யாதே பிரானே! என்று கையைக் காலைப் பிடித்துக்கொண்டு பிரார்த்தித்துச் சொல்லுவனேயன்றிக் கோபித்துச் சொல்லும் வழக்கமே எனக்கில்லை; நந்தகோபரும் வாய்விட்டுக் கண்டித்தறியார்; கிழண்டையகத்தில் ஓர் இளம் பெண்ணுடனே உட்கார்ந்து அவனுந் தானுமாகத் தயிர்கடைவதாகத்தெரிகிறது; நங்கைகாள்! நீங்கள் சொல்லுவதில் பொய்ம்மையில்லை; தாய்தந்தையரான எங்களுக்கோ அவனைத் தண்டிக்க வன்மையில்லை; நானென்ன செய்வேன்? என்கிறாள்.

[உங்களாயர்குலம் மானமுடைத்து] "கேளார் ஆயர் குலத்தவ ரிப்பழி கெட்டேன்! வாழ்வில்லை" என்ற பெரியாழ்வார் திருமொழியுங் காண்க. மாநம், ஊநம்—வடசொற்கள். [உரப்பகில்லேன்] "அஞ்சவுரப்பாள் யசோதை ஆணாட விட்டிட்டிருக்கும்" என்ற நாச்சியார் திருமொழியுங் காண்க. உரப்புதல்—அதட்டுதல். [நானுமுரைத்திலேன்] கீழ் "உரப்பகில்லேன்" என்றதன் அநுவாதமே யிதுவும். ... . (௬)

http://acharya.org

காலையெழுந்து கடைந்தவிம்மோர்விற்கப்போகின்றேன் கண்டேபோனேன் *
மாலைநறுங்குஞ்சி நந்தன்மகனல்லால் மற்றுவந்தாருமில்லை *
மேலையகத்துநங்காய்! வந்துகாண்மின்கள் வெண்ணெயேயன்றிருந்த *
பாலும்பதின்குடங் கண்டிலேன் பாவியேனென்செய்கேன்? என்செய்கேனோ (உ)

காலை எழுந்து	விடியற்காலத்திலெழுந்து
கடைந்த	(வருந்திக்) கடைந்த
இ மோர்	இந்த மோரை
விற்க	விற்பனை செய்ய
போகின்றேன்	(தெருவேறப்) போகாநின்ற நான்
கண்டே போனேன்	(கண்ணபிரான் எதிரே வருவதைப்) பார்த்தே (திடுக்கிட்டுக் கொண்டே) போனேன்;
மாலை நறு குஞ்சி	பூவணிந்து மணங்கமழப் பெற்ற மயிர்முடியை யுடைய
நந்தன் மகன் அல்லால்	அக்கண்ணபிரான் தவிர

மற்று வந்தாரும் இல்லை	மற்றொருவரும் இங்கு வரப்ரஸக்தியில்லை;
மேலை அகத்து நங்காய்	மேலண்டை வீட்டுப் பெண்பிள்ளாய்! [அசோதாய்]
வந்து காண்மின்கள்	(கண்ணன் செய்த களவுகளை இங்கே) வந்துபாருங்கள்;
வெண்ணெயே அன்று	(கடைந்து வைத்த) வெண்ணெயை மாத்திரமல்லாமல்
பதின் குடம்	பத்துக் குடங்களிலே
இருந்த	(கடைவதற்காகச் சேமித்து) வைத்திருந்த
பாலும்	பாலையும்
கண்டிலேன்	காண்கின்றிலேன்;

பாவியேன் என் செய்கேன் என் செய்கேனோ—.

* * *—ஓர் இடைச்சி கண்ணபிரானுடைய வெண்ணெய் பால் களவுகளைச் சொல்லி முறையிடும் பாசுரம் இது. 1. "வெண்ணிறத் தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின் முன்னெழுந்து கண்ணுறங்காதே யிருந்து கடைய" என்கிறபடியே ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே யெழுந்து கடைந்தமோரை விற்பதற்காகத் தலையிற் சுமந்து புறப்பட்டு நான் போகாநிற்கச் செய்தே நடுவழியிலே உன் மகன் கண்ணன் எதிர்படக் கண்டு அப்போதே திடுக்கிட்டுப் போனேன்: 'வீட்டில்புகுந்து என்ன அநர்த்தம் செய்யப்போகிறானோ!' என்று சிந்தித்துக் கொண்டே, போக வேண்டியது தவிர வொண்ணாமையினாலே போனேன்; இப்போது வந்து பார்த்தால் வெண்ணெயும் காணோம், பத்துக் குடங்களில் நிரப்பி வைத்திருந்த பாலையுங் காணோம்; விசாரித்ததில், நந்தகுமாரன் தவிர வேறொருவரும் இங்குப் புகுந்ததாகத் தெரியவில்லை; அவன் இங்கே பண்ணிவிட்டுப் போயிருக்கிற சேஷ்டைகளைப் கண்படைத்தவர்காள்! வந்து காணுங்கோள்; இங்ஙனே நான் முறையிட்டுப் பயனென்ன? தண்டிக்கக் கடமைப்பட்டவர்களே ஆறுடை விட்டிட்டிருக்கும்போது பாவியேன் என்செய்வேன்! என்று தன்னில்தான் வெறுத்துரைத்துக் கொள்ளுகிறாளொருத்தி.

1. பெரியாழ்வார் திருமொழி 3—8—9.

http://acharya.org

முதலடியில் போகின்றேன் என்றது வினைமுற்றன்று; முற்றெச்சம்.

வெண்ணெயையும் பாலையும் இழந்த வயிற்றெரிச்சல் ஒருபுறமிருக்கவும் கண்ணபிரானுடைய அழகிலே பரவசமாகவே யீடுபட்டவளாதலால் மாலைநறுங் குஞ்சி நந்தன் மகன் என்று பரமபோக்யமாகப் பேசுகிறபடி காண்மின். சூர்ப்பணகை பஞ்சவடியிலே வந்து அபசாரப்பட்டுக் காதும் மூக்குமறுப்புண்டு ஜனஸ்தானத்திலே சென்று கரன் முன்னிலையில் தரையில்வீழ்ந்து ரக்த வெள்ளம் பெருகக் கதறிப் புரண்டு அழுமளவிலே 'தங்காய்! உன் விஷயத்தில் இப்படிப்பட்ட கொடுமையான பிழையைச் செய்தவன் யாவன்? சொல்லாய்' என்று பெருஞ்சினத்துடனே கரன்கேட்க, அதற்குச் சூர்ப்பணகை சொல்லத்தொடங்குகிறாள்—[ஸ்ரீராமாயண ஆரண்யகாண்டத்தில் பத்தொன்பதாவது ஸர்க்கத்தில் கச, கரு, கசு சுலோகங்கள் காண்மின்] "[illegible] = தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ. பலமூலாசநௌ தாந்தௌ தாபஸௌ தர்மசாரிணௌ; புத்ரௌ [illegible]ஸ்தாம் ப்ராதரௌ ராமலக்ஷ்மணௌ; கந்தர்வராஜப்ரதிமௌ பார்த்[illegible]வ்யஞ்ஜநாந்விதௌ, தேவௌ வா மாநுஷௌ வா தௌ ந தர்க்கயிதுமுத்ஸஹே." [நல்ல யௌவநமுள்ளவர்களும் மிகுந்த ஸௌந்தர்ய முள்ளவர்களும் ஸுகுமாரமான திருமேனி படைத்தவர்களும் மஹா பலசாலிகளும் செய்ய தாமரைக் கண்களுடையவர்களும் மரவுரியும் மான்தோலுமுடுத்தவர்களும் பழங்களையும் வேர்களையு முண்பவர்களும் ஜிதேந்திரியர்களும் ரிஷிவேஷம் பூண்டவர்களும் தருமநெறி தவறாதவர்களும் தசரதனுக்குப் புதல்வராகப் பிறந்தவர்களும் கந்தர்வராஜனுக்கொப்பானவர்களும் ராஜ லக்ஷணங்களுடன் கூடியவர்களுமான ராம லக்ஷ்மணர்களென்னும் அண்ணன் தம்பிமார் இருவர் (பஞ்சவடியில்) இருக்கிறார்கள்; அவர்கள் தேவர்களோ அல்லது மநுஷ்யர்களோ! நிச்சயிக்கமுடியவில்லை—] என்று சொல்லிக்கொண்டு போய் 'அவர்கள் காண் என்னை இப்பாடுபடுத்தினர்' என்று தலைக்கட்டினாள். 'உன்னை இங்ஙனே அங்கபங்கம் செய்தது யார்?' என்று கேட்டால் தான்படும் கஷ்டமும் தன் கோபமும் சொல்லுவிக்கிற வார்த்தை எப்படியிருக்கவேணும்? 'இரண்டு படுபாவிகள்' என்று தொடங்கி வாயாரவைது செய்திகளைச் சொல்லவேண்டியிருக்க, அதனையொன்றும் நெஞ்சிலும் நினையாமல் "தருணௌ ரூபஸம்பந்நௌ" என்று வருணித்துச் சொல்லத் தொடங்கினளென்றால் வயிரவுருக்கான வடிவழகு படுத்துகிறபாடு இது என்றன்றோ நினைக்கவேண்டும். ஓர் அரக்கியே அப்பாடுபட்டனளென்றால் இடைச்சியைப்பற்றிப் பேசவேணுமோ? பேசுகிறவளோ இடைச்சி; பேசப்படுகிறவனோ கண்ணபிரான். வைய வந்த வாயாலே வாழ்த்தவேண்டியல்லது இராதிறே.

http://acharya.org

மேலையகத்து நங்காய்! என்றது யசோதைப்பிராட்டியை விளிக்கிறது என்னவுமாம்; வேறொரு அயல்வீட்டிடைச்சியை விளிக்கிறது என்னவுமாம். நங்காய் என்று ஏகவசநமாக இருந்தாலும் ஜாத்யேக வசநமாகக்கொண்டு பன்மைப் பொருள் கொள்ளலாம்; மேலே காண்மின்கள் என்று பன்மையானமுற்று இருக்கையாலே. அன்றி, நங்காய்! என்று ஒருத்தியை யழைத்தவாறே கண்ணபிரானது தீம்புகளைக் கேட்கையிலுள்ள ஆவலினால் உள்ளிருந்த பலபெண்கள் எழுந்தோடிவர, 'வந்துகாண்மின்கள்' என்று அவர்களெல்லாரையும் நோக்கிச் சொல்லுகிறாளென்று நிர்வஹிப்பாருமுண்டு. .... (உ)

தெள்ளியவாய்ச் சிறியானங்கைகாள்! உறிமேலைத் தடாநிறைந்த *
வெள்ளிமலை யிருந்தாலொத்த வெண்ணெயை வாரிவிழுங்கியிட்டு *
கள்வனுறங்குகின்றான் வந்துகாண்மின்கள் கையெல்லாம்நெய்வயிறு *
பிள்ளைபரமன் றிவ்வேழுலகுங்கொள்ளும் பேதையேனென்செய்கேனே ?

நங்கைகாள் !—;	
தெள்ளிய வாய்	தெளிந்த திருப்பவளத்தை யுடையனான
சிறியான்	இச்சிறு பிள்ளையானவன்
உறி மேலைத் தடா நிறைந்த	உறியின் மேலிலுள்ள பானையிலே நிரம்பியிருந்த
வெள்ளி மலை இருந்தால் ஒத்த	வெள்ளிமலை போன்றிருந்த
வெண்ணெயை	வெண்ணெயை
வாரி விழுங்கி யிட்டு	(தன் தடங்கையால்) வாரி விழுங்கிவிட்டு
கள்வன் உறங்குகின்றான்	கள்ளத் தூக்கம் தூங்குகின்றான்
வந்து காண்மின்கள்	வந்துபாருங்கள்;
(செய்த களவை மறைக்க வொண்ணாதபடி)	
கை எல்லாம் நெய்	கை முழுதும் நெய் மயமாயிரா நின்றது;
வயிறு	(இவனது) வயிறானது
பிள்ளை பரம் அன்று	பிள்ளைப் பருவத்துக்கு ஏற்றதா யிருந்ததில்லை;
இ ஏழ் உலகும் கொள்ளும்	இந்த ஸப்த லோகங்களையும் உட்கொள்ளக் கடவது போலும்;
பேதையேன்	அறிவற்றவளான நான்
என் செய்கேன்	என்ன பண்ணுவேன்?.

* * *—யசோதை தானே முறைப்பட்டுப் பேசும் பாசுரம் இது. நங்கைமீர்! உறிமேலே தடாக்களிலே சேமித்து வைக்கப்பட்டு வெள்ளிமலை யிருந்தாற்போன்ற வெண்ணெயை அள்ளி விழுங்கிவிட்டு 'இந்தப் பூனையா இந்தப் பாலைக் குடித்தது!' என்னும்படியாகப் பாசாங்குடன் குறட்டைவிட்டுக் கள்ள நித்திரை செய்கின்றான், இந்த வேடிக்கையை வந்துபாருங்கள்; தன் களவை மறைத்துவிடவேணுமென்ற எண்ணத்தினால் ஒன்றுமறியாதவன்போல உறங்குவதாகப் பாவனை காட்டுகின்ற இவன் கையிலுள்ள நெய்யை நன்றாகத் துடைத்துவிட்டன்றோ உறங்கவேணும்; திருடக்கற்றானேயன்றித் திருட்டை மறைக்கும் வகை கற்றானல்லன்; கையெல்லாம் நெய்மயமாக இருக்கும்படியை வந்து காணுங்கோள்; இவ்வளவு வாரியுண்டும் வயிறு நிரம்பினபாடில்லை; இவனுடைய பருவத்துக்குத் தக்க வயிறாக இல்லை. இவ்வேழுலகையும் உட்கொள்ளக் கடவதாக இட

http://acharya.org

முடைத்திராநின்றது; என்று யசோதை சொன்னதைக்கேட்ட சில ஆய்ச்சிகள் 'அசோதாய்! இத் தயிரும் பாலும் பாழ் போகாமே ஒரு பிள்ளை வேணுமென்றன்றோ நீ பெற்றது; அவன் இப்போது அமுது செய்தானாகில் நீ இப்படி முறையிடுவானேன்?" என்றுசொல்ல, பேதையேன் என்செய்கேனோ? என்கிறாள். வெண்ணெய் போயிற்றே யென்று வருந்துகிறேனல்லேன், இத்தனையும் இவனுக்கு ஜீர்ணியாதொழியில் என் செய்வதென்று வருந்துகின்றேனென்கிறாள் போலும்.

தெள்ளியவாய்ச் சிறியான்= "கண்ணுக்கு இருக்கிறபடியும் செயலிருக்கிறபடியுங்காண்" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்யான ஸ்ரீஸூக்தி. ஒரு சிறுபிள்ளையாகக் கண்ணுக்குத் தோற்றுவானாயினும் செய்கிற காரியம் வலிதாயிராநின்றதென்கை. தெள்ளியவாய் என்ற விசேஷணத்தினால், கள்ளத்தனம் முகத்திலே தோற்றாமே தெளிவுதோற்ற விராநின்றதென்கை. "தெள்ளிய வா சிரியா" என்பது சிலருடைய பாடமாம். அப்பாடத்தில் 1. "நாளிளந்திங்களைக் கோள்விடுத்து, வேயகப்பால் வெண்ணெய் தொடுவுண்ட" என்கிற பாசுரத்தின்படியே பொருள் கொள்ளவேணும்: அதாவது, உறிகளிலே சேமித்து வைத்த வெண்ணெயைக் களவு காணப்போன போது தன் திருநிறத்தின் இருட்சியாலும் அவ்விடத்தின் இருட்சியாலும் ஒன்றுந் தெரியாமையாலே தடவாநிற்கச் செய்தே கையிலே வெண்ணெய்த்தாழிகள் அகப்படப் பெற்ற மகிழ்ச்சியினால் சிரிப்பு உண்டாகும்; பூர்ண சந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக்களின் ஒளி புறப்படவே அந்த வொளியையே கைவிளக்காகக் கொண்டு வாரி விழுங்குவது வழக்கம் என்க. தெள்ளியவா—தெளிவாக, சிரியா—சிரித்து என்றபடி. 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டிறந்தகால வினையெச்சம். இப்பாடத்திற் காட்டிலும் முந்தினபாடமே வியாக்கியானத்தோடு நன்கு இணங்கும்.

[கையெல்லாம் நெய்] முற்காலத்தில் ஒருபிள்ளை அரசன் தோட்டத்திற் புகுந்து மல்லிகையரும்புகளைத் திருடிக் கொண்டிருக்கையில் அஃதறிந்த தோட்டக்காரன் அவனைப்பிடித்து, ராஜஸபைக்குக் கொண்டுபோகாநிற்கையில் அதனையுணர்ந்த அக்கள்வன் 'இந்த ஆபத்தில் நின்றும் எங்ஙனே தப்பிப் பிழைப்பது' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் இச்செய்தியை யறிந்த அவனது தந்தை 'வாயுண்டானால் பிள்ளை பிழைக்கிறான்' என்று அப்பிள்ளையின் செவியிலே படுமாறு செய்விக்க, 'பாம்பின் சுவடு பாம்புக்குத் தெரியும்' என்றாற்போல் தந்தை சொற்கருத்தை யுணர்ந்த அப்புதல்வன் அந்த மல்லிகை யரும்புகளைத் தின்று மென்றுவிட்டான்; பிறகு வெறுங்கையனான அவனை என்சொல்லி ராஜதண்டனைக்கு ஆளாக்குவதென்று திகைத்த தோட்டக்காரன் அவனை விட்டிட்டான் என்றொரு கதையுண்டு; தின்னக் கூடாதவற்றையும் தின்று களவை மறைத்துக்கொள்ளும் பிள்ளைகளின்படி தெரிந்திருந்தும் உண்ட நெய்யின் சுவட்டை நாவினால் நக்கிமறைத்துக் கொள்ளலாமாயிருக்க அங்ஙனஞ்செய்யாதே களவு

1. திருவாய்மொழி 3—8—8.

http://acharya.org

நன்கு வெளிப்படுமாறு கையெல்லாம் நெய்யாகவே கிடந்தது என்னே!, இப்படியும் ஒரு பேதைமையுண்டோ? என்று யசோதை தன்னில்தான் உள்குழைகின்றாள் போலும்.

“யசோத நாத! நவநீதலேபலிப்த ஸர்வாங்க தநுநாத யதி தே ஹ்ரியா விராஸீத், கிம் ஸாது! ஸ்வஸ்ஸாதநா ஸர்வஜ்ஞம் தேஹாதே ஹ்ருதயேஜ்ய நிராஸாகிய விலேபஹ: = யச்நாம நாத! நவநீத மருசுராஸ் த்வம் தச்சாதநாய யதி தே பதிரா விராஸீத், கிம் மூர்க்க! திக்தமமுநா சாபல்லவம் தே காத்ரே ப்ரம்ருஜ்ய நிரகா: கில நிர்விசங்க:” என்ற ஆழ்வானுடைய அதிமாநுஷஸ்தவ ஸ்ரீஸூக்தி இங்கே ஸ்ம்ருதி விஷயமாகும். [வெண்ணெயைக் களவுசெய்த கண்ணன் உடையவர்கள் தன்னைப்பிடிக்க வருகிற சுவடறிந்து கையதுவாயதான வெண்ணெயைமறைத்திடவேணுமென்றெண்ணி ‘வாயிலே யாவது கையிலே யாவது வெண்ணெயிருக்கக் கண்டாலன்றோ நம்முடைய களவு வெளிப்படலாவது, கையிலும் வாயிலும் இல்லாதபடி யாக்கிவிடுவோம்’ என்று வெண்ணெயை யெல்லாம் உடம்பிலே தடவிக்கொண்டு ‘இனி நாம் ஆர்க்கும் அஞ்சவேண்டியதில்லை’ என்று நிர்ப்பயனாய் வெளிப் புறப்பட்டானென்கிற ஒரு முக்த சேஷ்டிதத்தை அநுஸந்தித்து ‘என் நாயனே! இப்படியும் ஒரு மௌக்த்ய முண்டோ? வெண்ணெய்க் களவை மறைக்க நினைத்து அது நன்கு வெளியாம்படியான காரியஞ் செய்தாயே!, இது உண்மையில் மௌக்த்யத்தாலோ? அன்றி மௌக்த்ய பாவனையாலோ? சொல்லாய் பிரானே! என்றார்.] இங்கு, நெய்யை நக்கியும் உண்ணாமல் உடம்பிலும் தடவிக்கொள்ளாமல் கையிலேயே தோயவைத்துக் கொண்டிருப்பது மௌக்த்யத்திலும் மிக்க மௌக்த்யமிறே.

பரம்—ஹரஃ என்ற வடசொல் விகாரம்.

கீழில் மேலிற்பாட்டுக்களிற் போல இப்பாட்டிலும் ஈற்றில் ‘என் செய்கேனென்செய்கேனோ’ என்று இரட்டித்து ஓதுதல் அத்யாபக பாடமாயினும் அது யாப்புக்குப் பொருந்தாது. .... (௩)

மைந்நம்புவேற்கணல்லாள் முன்னம்பெற்ற வளைவண்ண நன்மாமேனி*
தன்னம்பிநம்பியு மிங்கு வளர்ந்தது அவனிவை செய்தறியான் *
பொய்ந்நம்பிபுள்ளுவன் கள்வம்பொதியறை போகின்றவாதவழ்ந்திட்டு *
இந்நம்பிநம்பியா ஆய்ச்சியர்க்குய்வில்லை யென்செய்கேன்? என்செய்கேனோ (௪)

மை நம்பு	மையணிந்த	நல் மா	மிகச்சிறந்த
வேல் கண்	வேற்படை போன்ற கண்களையுடையளான	மேனி	திருமேனியையுடைய
நல்லாள்	யசோதைப் பிராட்டியானவள்	தன் நம்பி நம்பியும்	பலராமனும்
பெற்ற	பெற்ற	முன்னம்	முன்பு
வளை வண்ணம்	சங்குபோல் வெண்ணிறத்த தாய்	இங்கு	இத்திருவாய்ப்பாடியில்
		வளர்ந்தது	வளர்ந்ததுண்டு;
		அவன்	அந்த பலராமன்

http://acharya.org

இவை செய்து அறியான்	இப்படிப்பட்டதீம்புகளைச் செய்ததில்லை;
பொய் நம்பி	பொய்யேவடிவெடுத்தவனாய்
புள்ளுவன்	வஞ்சகனாய்
கள்வம் பொதி அறை	கள்ளத்தனத்திற்குக் கொள்கலமா யிருப்பவனான இக்கண்ண பிரான்

(தான் ஒரு பாவமுமறியாதவன் போல)

தவழ்ந்திட்டு	தவழ்நடைகற்று
போகின்ற ஆ	போகிறபடி என்னே!;
இ நம்பி நம்பி ஆ	இந்த ஸ்வாமி ஸ்வாமியாக
ஆய்ச்சியர்க்கு	இடைச்சிகளுக்கு
உய்வு இல்லை	ஜீவிக்கவழியில்லை;

என் செய்கேன் என் செய்கேன்—.

* * *—நம்பி மூத்தபிரானை [பலராமனை]ப் புகழ்ந்துகொண்டு கண்ணபிரானைப் பழித்துப் பேசுகிறாளொரு ஆய்ச்சியின் பாசுரமாய்ச் செல்லுகிறது இது. 1. "முன்னலோர் வெள்ளிப் பெருமலைக்குட்டன்" என்கிறபடியே வெள்ளை வெளேலென்று இக் கண்ணனுக்கு முற்பிறந்தவனான பலராமனும் இத் திருவாய்ப்பாடியில் வளர்ந்ததுண்டு; அவன் இங்கு விளையாடித் திரியும்போது நாங்கள் இப்பாடுபட்டறியோம்; சூது வஞ்சனை கள்வம் ஒன்றுமறியா னவன். இக்கண்ணபிரானோ வென்னில், மெய் கலவாத பொய்யுரைகளிற் சிறந்தவன்; கடைகிறபோதே பிடித்து 'இவர்கள் எங்கேகைப்பர்களோ' என்று அடியொற்றிக் கொண்டு திரியும்படியானவன்; களவு என்னும் பொருளை வைத்துவைப்பதற்குப் பாங்கான பாத்திரமா யிருப்பவன்; களவுகளை வேண்டினபடி செய்துவிட்டு 'இக் குழந்தை இவ்வளவு காரியம் செய்யுமோ?' என்று ஒருவரும் நம்பவொண்ணாதபடி தவழ்நடை பயில்கிறபடியை என்ன சொல்லுவேன்!. இவன் இப்படி சூதும் வஞ்சகமும் கள்வமும் மிக்கவனாக இவ்வூரில் இடைச்சிகளுக்கு வாழ வழியில்லை: இவன்கீழே இச்சேரியில் எங்ஙனே குடியிருப்பே னென்கிறாள்.

எம்பெருமானால் நியமிக்கப்பட்ட யோக நித்திரை யெனப்படும் மாயை நந்தகோபருடைய கோகுலத்திலிருந்த வஸுதேவ பத்தினியான ரோஹிணியின் வயிற்றிலிருந்த வாயுரூபமான ஆறுமாதத்துக் கர்ப்பத்தைக் கலைத்துவிட்டு வஸுதேவருடைய மற்றொரு பத்தினியான தேவகியின் வயிற்றிலிருந்த ஆதிசேஷாம்சமான கர்ப்பத்தைக் கொண்டுபோய் அந்த ரோஹிணியின் வயிற்றிற் சேர்த்திட இங்ஙனம் வஸுதேவ பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவது கருவாக) ஆறுமாஸமும், ரோஹிணியின் கர்ப்பத்தில் மற்றோர் ஆறுமாசமுமிருந்து பலராமன் பிறந்தனனென்று இதிஹாஸங் கூறும். ஆகவே, மைந்நம்புவேற்கண் நல்லா ளென்றது, தேவகியையாகவுமாம், ரோஹிணியையாகவுமாம்.

மை நம்பு கண்=மையை விரும்பி யிருக்கின்ற கண்களையுடையவளென்க. "நம்பும் மேவும் நசையாகும்மே." [வளைவண்ண நன்மாமேனி] பலராமன் ஆதிசேஷனுடைய அம்சமாதலால் சங்குபோல் வெளுத்த நிறத்தனா யிருப்பன்; "வளைகொண்ட வண்ணத்தன் பின்தோன்றல்" என்றார் கீழும். 1. "வெள்ளிப் பெருமலைக் குட்டன்" என்றார் பெரியாழ்வாரும். [நம்பி நம்பியும்] ஸம்ப்ரதா

1. பெரியாழ்வார் திருமொழி 1—7—5.

http://acharya.org

யத்தில் பலராமனுக்கு 'நம்பி மூத்தபிரான்' என்று திருநாமம் வழங்கும். தன் நம்பி நம்பியும் என்றதை "நம்பிதன் நம்பியும்" என்று அந்வயித்துக் கொள்ளலாம். (முதல்நம்பி கண்ணபிரானைச் சொல்லி, இரண்டாம் நம்பி பலராமனைச் சொல்லுகிறது.)

இந்நம்பி நம்பியா='நம்பியால்' என்றபாடம் மறுக்கத்தக்கது. 'நம்பியா' என்றது 'நம்பியாக' என்றபடி. "நிரபேக்ஷனை இவன் இவனாக, இவ்வூரில் இடைச்சிகளுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி. (இவன் இவனாக) என்றது—இவன் இப்படி தீம்பில் குறையற்றவனா யிருக்கையாலே என்றபடி. .... (௪)

தந்தைபுகுந்திலன் நானிங்கிருந்திலேன் தோழிமாராருமில்லை *
சந்தமலர்க்குழலாள் தனியேவிளையாடு மிடங்குறுகி *
பந்துபறித்துத் துகில்பற்றிக்கீறிப் படிறன் படிறுசெய்யும் *
நந்தன்மதலைக் கிங்கென்கடவோம் நங்காய் என்செய்கேன்? என்செய்கேனோ?

நங்காய்	யசோதைப்பிராட்டியே!,	குறுகி	சென்றுகிட்டி
தந்தை	(இப்பெண்பிள்ளையின்) தகப்பனார்	பந்து பறித்து	(அவளது கையில் நின்றும்) பந்தைப்பிடுங்கியும்
புகுந்திலன்	வீடுவந்து சேரவில்லை;	துகில் பற்றி கீறி	துணியைப்பிடித்துக் கிழித்தும்
நான் இங்கு இருந்திலன்	நானும் வீட்டிலிருந்திலேன்;	படிறு செய்யும்	தீம்புகளைச் செய்கிற
தோழிமார் ஆரும் இல்லை	தோழியரும் ஒருவருமில்லை;	படிறன்	தூர்த்தனாகிய
சந்தம் மலர் குழலாள்	பரிமளம்மிக்க பூக்களையணிந்த கூந்தலையுடையவளான என்மகள்	நந்தன் மதலைக்கு	கண்ணன் விஷயத்திலே
தனியே	ஒருத்தியாயிருந்துகொண்டு	இங்கு என் கடவோம்	இவ்விடத்தில் என்ன செய்யக் கடவோம்?
விளையாடும் இடம்	விளையாடிக்கொண்டிருந்த விடத்திலே		என் செய்கேன் என் செய்கேன்—.

* * *—ஒரு ஆய்ப்பெண் பந்தடித்துக்கொண்டிருந்த தனியிருப்பிலே கண்ணபிரான் சென்று செய்த தீமைகளைச் சொல்லி ஓரிடைச்சி முறையிடும் பாசுரமிது. கன்றுகாலிகளை மேய்க்க வெளியிற்சென்ற வீட்டுத் தலைவர் வீடு வந்து சேர்ந்திலர்; நானும் தயிர் மோர் முதலியன விற்க வெளியே போயிருந்தேனாதலால் வீட்டிலிராதொழிந்தேன். பெண்ணின் தோழியர்களும் பிரிந்திருந்தார்கள்; இந்த நிலைமையில் என்மகள் 1. "காரார் குழலெடுத்துக் கட்டி, கதிர் முலையை வாரார வீக்கி மணிமேகலை திருத்தி, ஆராயில்தேவற்கணஞ்சனத்தின் நீறணிந்து, சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன் நான்" என்றாற்போலே

1. சிறிய திருமடல்.

அலங்காரங்கள் செய்துகொண்டு தனியே பந்துவிளையாடல் பயில்பவளாயிருந்தாள். இவன்தான் 'எந்தப் பெண் எந்த வேளையில் எங்கே தனியேயிருப்பள்' என்று ஆராய்ந்து திரியுமவனாகையாலே அங்கே அடியொற்றினான்; அவள் கையில் நின்றும் பந்தைப்பறித்தான்; அதைப் பறித்துக்கொண்டு பேசாமற்போய்விடலாமே; தான் வந்து அதிக ப்ரஸங்கங்கள் செய்ததைப் பலருமறிந்திட வேணுமென்று அவளுடைய புடவையைப் பற்றிக் கிழித்தான்; இவனை தீம்பனென்று ப்ரஸித்தி பெற்றவன்; இவன் செய்த தீம்புகளை இன்னமும் நான் விவரித்துச் சொல்லவேணுமோ? படிறு செய்தானென்று சுருங்கச் சொல்லலாமத்தனையன்றி அதிகமாக ஒன்றுஞ் சொல்லகில்லேன். இங்ஙனே பெருந்தீம்பனான நந்தகுமாரன் கீழே நாங்கள் எங்ஙனே குடியிருக்கவல்லோம்? செய்வதொன்றறியேனே என்கிறாள்;

படிறு—தகாத காரியம். .... (௫)

மண்மகள்கேள்வன் மலர்மங்கைநாயகன் நந்தன்பெற்றமதலை *
அண்ணலிலைக்குழலூதி நஞ்சேரிக்கே யல்லிற்றான் வந்தபின்னை *
கண்மலர்சோர்ந்து முலைவந்துவிம்மிக் கமலச்செவ்வாய் வெளுப்ப *
என்மகள்வண்ண மிருக்கின்றவாநங்காய்! என்செய்கேன் ? என்செய்கேனோ ? (௬)

நங்காய்	யசோதைப்பிராட்டியே!
மண் மகள் கேள்வன்	பூமிப் பிராட்டிக்கு வல்லபனாய்
மலர் மங்கை நாயகன்	பெரிய பிராட்டியார்க்கு நாயகனாய்
நந்தன் பெற்ற மதலை	நந்தகோபன் பெற்ற பிள்ளையாய்
அண்ணல் தான்	ஆண் பிள்ளைத்தனத்தில் குறையற்றவனான கண்ணபிரான்
இலை குழல்	இலையினாலாகிய ஊது குழலை
ஊதி	ஊதிக்கொண்டு
அல்லில்	இரவில்
நம் சேரிக்கே	நம் மனைக்கு
வந்த பின்னை	வந்த பிறகு,
கண் மலர்	குவளைமலர்போன்றகண்கள்
சோர்ந்து	வதங்கியும்
முலை வந்து விம்மி	முலைகள் செறித்துக் கிளர்த்தும்
கமலம் செம் வாய் வெளுப்ப	தாமரைபோற் சிவந்த அதரம் வெளுத்தும் போகவும்
என் மகள் வண்ணம் இருக்கின்ற ஆ	என்மகளின்வடிவு விவர்ணப்பட்டிருக்கிற படியை என் சொல்வேன்!;

என் செய்கேன் என் செய்கேன்—.

* * *—கீழ்ப்பாட்டில் "பந்து பறித்துத் துகில்பற்றிக் கீறி" என்று ஒருத்தி முறையிட்டதைக் கேட்ட இன்னொருத்தி, தேள்கொட்டித் துடிக்கிறவன் வாளாலறுப்புண்டு துடிப்பவனைக் கண்டு துடிப்படங்குமாபோலே நம்முடைய துயரத்தைக் கேட்டுத் தன் துயரம் தொலையப்பெறுக வென்றெண்ணி, கண்ணபிரான் தன் மனையிற் செய்த பெரும்பிழை யொன்றை யெடுத்துப்பேசி முறைப்படுகின்றாள். [கீழ்ப்பாட்டில் ஸம்போகத்தின் உபக்ரமமாத்ரம்; இதில் ஸம்போகம் செய்து தலைக்கட்டினபடி சொல்லுகிறதென்க.]

http://acharya.org

பழித்து முறையிடுமவர்கள் 'மண்மகள் கேள்வன் மலர்மங்கை நாயகன்' என்று ஏத்தவேணுமோ வென்னில்; இது ஏத்தும் வார்த்தையன்று; 'இவனுக்கு என்னகேடு? தனக்குவாய்த்த மனைவியர் இல்லையோ? மண்மகளையும் மலர்மகளையும் தன் இஷ்டப்படி அநுபவிப்பதற்கு இடையூறு செய்வாரார்? அகாலத்திலே நம்மனையிலே வந்து இப்பாடு படுத்தவேணுமோ?' என்கிறாள். அன்றியே, கண்ணனைத் தாய்மார் முதலானோர் தாலாட்டும்போது 'மண்மகள் கேள்வனே தாலேலோ மலர்மங்கை நாயகனே தாலேலோ' என்றாற்போலே சொல்லக்கேட்டு அதனை அநுவதிக்கிறார்களென்னவுமாம்.

தான் ஏதோ ஸங்கேதம் செய்துவைத்தவன் போல இரவிலே வருவதும், மெல்லிய ஓசைபட இலைக்குழலை ஊதிக்கொண்டு வருவதும், என் மகளைக் * கண் மலர் சோர்ந்து முலைவந்து விம்மிக் கமலச் செவ்வாய் வெளுப்ப விவர்ணப்படுத்துவதும் தகுதியோ? என்பெண் நிறமழிந்து கிடக்கும் கிடையைக் காணவல்லீர்களோ? இழந்த நிறம் மீண்டும் இவளுக்கு உண்டாகும்படி நான் என்ன உபாயம் செய்யவல்லேன்? என்று தடுமாறுகிறாள்.

இரண்டாமடியில் 'அல்லுற்றான்' என்ற பாடம் பெரும்பாலும் வழங்குமாயினும் அது பொருந்ாது. "குழலையும் ஊதிக்கொண்டு ராத்திரியிலே வந்த பின்னை" என்பது வியாக்யான வாக்கியம். ஆகவே "அல்லிற்றான்" என்ற பாடமே 'அல்லுற்றான்' என விகாரப்பட்டு விட்டதென்னவேணும். அன்றி, 'அல்லுத்தான்' என்றிருந்தால் ஒருவாறு பொருந்தும்; அல்லு, தான் என்று பிரிக்க. அல் என்பது உகரச்சாரியை பெற்றதென்க. அல்லில் என்பதே பொருள்.

"கண்மலர் சோர்ந்து முலை வந்து விம்மிக் கமலச் செய்வாய் வெளுப்ப" என்றதை நோக்குமிடத்துக் கண்ணபிரானுடைய லீலாவிலாஸம் மரியாதையை மீறிச் சென்றதாக விளங்குகின்றதே யென்று சிலர் சங்கிப்பர்கள்; அது வேண்டா; ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச் செய்த யாதவாப்யுதய காவ்யத்தில், [4-63.] "விமோஹநே வல்லவகேஹிநீநாம் ந ப்ரஹ்மசர்யம் பிபிதே ததீயம் । ஸம்பத்ஸ்யதே பாலகஜீவநம் தத் ஸங்கேத யோகைவ ஸதாம் ஸமக்ஷம் ॥ = விமோஹநே வல்லவகேஹிநீநாம் ந ப்ரஹ்மசர்யம் பிபிதே ததீயம்- ஸம்பத்ஸ்யதே பாலக ஜீவநம் தத் ஸங்கேத யோகைவ ஸதாம் ஸமக்ஷம்." என்னுள்ள ச்லோகார்த்தம் குறிக்கொள்ளத் தக்கது. பண்டு பாரதப் போரில் அர்ஜுநன் மகனான அபிமந்யுவின் மனைவியாகிய உத்தரை யென்பவளுடைய கருவை நோக்கி அச்வத்தாமாவினால் ப்ரயோகிக்கப்பட்ட அபாண்டவாஸ்திரத்தினால் அக்கருவிலிருந்த சிசு [பரிக்ஷித்] நீறுபொழிய, அச்சிசுவை மீண்டும் உயிர் பெறுத்தவேணுமென்று ஸுபத்திரையினால் பிரார்த்திக்கப்பட்ட கண்ணபிரான் தனது செந்தாமரை மலர்போன்ற திருவடியினால் அச்சிசுவை அடிதொடங்கி முடியீறாக ஸ்பர்சித்தருள, உத்தரக்ஷணத்திலேயே அச்சிசு உயிர் பெற்றமை

http://acharya.org

ப்ரஸித்தம். அப்படி கண்ணபிரான் திருவடியினால் ஸ்பர்சிக்கும்போது, "யதி மே [illegible] தேந ஜீவது ஸிசுக: யதி மே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத் ஸத்யஞ்ச மயி திஷ்டதி, அவ்யாஹதம் பலைச்வர்யம் தேந ஜீவது பாலக:" [நான் உண்மையான ப்ரஹ்மசாரியாக [அஸ்கலித வீர்யனாக] இருப்பேனாகில்...... இந்த சிசு உயிர் பெற்று எழுந்திருக்கட்டும்] என்று சபதஞ்செய்தருளினதாகப் புராணங்கள் கூறு கின்றன. அவ்விஷயத்தையே தேசிகன் மேற்குறித்த யாதவாப்யுதய ச்லோகத்தில் விளக்கியருளினர். அந்தச்லோகத்தின் வியாக்கியானத்தில் அப்பய தீக்ஷிதர் விரிவாக வகுத்துள்ள விஷயங்களும் நோக்கத்தக்கன. .... (கூ)

ஆயிரங்கண்ணுடை யிந்திரனுக்கென்று ஆயர்விழவெடுப்ப *
பாசன நல்லன பண்டிகளால் புகப்பெய்த வதனையெல்லாம் *
போயிருந்தங்கொரு பூதவடிவுகொண்டு உன்மகனின்று நங்காய்! *
மாயனதனையெல்லாம் முற்றும் வாரி வளைத்துண்டிருந்தான் போலும். (எ)

நங்காய்	அசோதாய்!,
ஆயர்	இடையர்கள்
ஆயிரம் கண் உடை இந்திரனுக்கென்று	ஸஹஸ்ராக்ஷனை தேவேந்திரனுக்காக
விழவு எடுப்ப	ஆராதனைசெய்வதற்கு
நல்லன பாசனம்	நல்ல பாத்திரங்களிலே
பண்டிகளால்	(பலபல) வண்டிகளாலே
புகப் பெய்த அதனை எல்லாம்	கொண்டுவந்து தள்ளப்பட்ட ....அந்த அன்னராசியை யடங்கலும்
இன்று	இன்றையதினம்
அங்கு	அவ்விடத்தில்
மாயன் உன் மகன்	மாயச்செய்கை வல்லவனான உன் பிள்ளை
போய் இருந்து	போயிருந்து
ஒரு பூதம் வடிவு கொண்டு	ஒருபூதத்தின் வடிவைப் பூண்டு
அதனை எல்லாம் முற்ற	அவை முழுவதையும்
வளைத்து வாரி	(கைகளால்) வாரித்திரட்டி
உண்டிருந்தான் போலும்	உட்கொண்டானாயிற்று.

* * *—கண்ணபிரானுடைய அதிமானுஷ சேஷ்டித-வேஷங்களைக்கண்டு ஆயர்களனைவரும் 'இவனே நம் குலக்கொழுந்து; இவன் கட்டளைப்படியே நாம் நடக்க வேண்டும்' என்று நிச்சயித்திருந்தனர்; இங்ஙனமிருக்கையில் சரத்காலம் வந்தது; அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடந்துவந்து போல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜாத்ரவ்யங்களுமாகிய இவற்றைச் சேகரிப்பதைக்கண்டு கிருஷ்ணன் 'ஓ பெரியோர்களே! நாமும் நம்முடைய் பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜை செய்வது தகுதி; இக்

http://acharya.org

கோவர்த்தனகிரியே பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்று கின்றது; இந்திரனால் நமக்கு என்ன பயன்? ஒன்றுமில்லை; ஆகையால் இப்பூசனையனைத்தையும் நீங்கள் இம்மலைக்கே இடுங்கள்' என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதாரூபங் கொண்டு 'ஸஹஸ்ரம் ஶிரா வயம் — ஶைநாஸி' என்று அவற்றை முற்றும் அமுது செய்தருளினனென்னும் வரலாறு ப்ரஸித்தம்; அந்தக் கதையை யெடுத்துச் சொல்லி முறைப்படுகிறாள் ஓரிடைச்சி.

அசோதாய்! இப்படி பெருவயிறுதாரியான ஒரு பிள்ளையைப் பெற்றாயே! என்று ஆவலை வசவது வெளிப்படை; இச்செய்தியை ப்ரஸ்தாவிக்கும் முகத்தால், 'ஏழுநாள் கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துத்தாங்கி நின்று கோவலரையும் கோநிரையையும் காத்தருளின பெருமானன்றோ இவன்; அந்தப் பெருமையை யெல்லாம் மறந்து ஸௌலப்யகுணத்துக்கு ஏற்ற சிறுச் சேவகங்களையிட்டுப் பழித்தல் தகுதியோ?' என்று காட்டுதல் உள்ளுறை. "அசலகத்தாரும் அசல்சேரியாரும் எல்லாம் ஏககாலத்திலே முறைப்பட்டபடியைக் கண்டு 'இது என்ன புதுமை! நீங்களும் பிள்ளை பெற்றதில்லையோ? என் மகன் இத்தனை செய்யவல்லனோ?' என்று யசோதைப் பிராட்டி சொல்ல, அதைக் கேட்ட எல்லாரும் ஒருமிடறாய்ச் சேர்ந்து, 'பர்வதத்தை யுண்டவனன்றோ? அவன் செய்யமாட்டாதது மொன்றுண்டோ?' என்கிறவர்கள் படியாலே அநுபவிக்கிறார்" என்பர் அரும்பதவுரைகாரர்.

இப்பாட்டில், 'அதனை யெல்லாம்' என்பது இரண்டாமடியிலும் ஈற்றடியிலுமாக இரண்டுமுறை பிரயோகிக்கப்பட்டுள்ளது; * அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறுமாகத் திரட்டின திரளிலே ஒரு சிறு அவிழும் மிச்சமாகாதபடி அடங்கலும் துற்றினனென்பதைக் காட்டுதற்கே யாயிற்று இவ்விரட்டிப்பு.

ஶாஜம் என்ற வடசொல் பாசனமெனத்திரிந்தது. பண்டி—வண்டி; திசைச்சொல் என்பர். .... (௭)

தோய்த்ததயிரும் நறுநெய்யும் பாலும் ஓரோகுடந் துற்றிடுமென்று *
ஆய்ச்சியர்கூடியழைக்கவும் நானிதற்கெள்கி யிவனைநங்காய்! *
சோத்தம்பிரா னிங்கவசெய்யப்பெறாயென்று இரப்ப னுரப்பகில்லேன் *
பேய்ச்சிமுலையுண்டபின்னை யிப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே. (௮)

	நங்காய்!—;	ஓரோ குடம்	ஒவ்வொரு குடத்திலின்றும்
தோய்த்த	தோய்த்து வைக்கப்பட்ட	துற்றிடும் என்று	(கண்ணன்) அமுது செய்து விடுவனென்று
தயிரும்	தயிரையும்	ஆய்ச்சியர்	இடைச்சிகளெல்லாரும்
நறு நெய்யும்	மணம் மிக்க நெய்யையும்	கூடி	திரண்டு
பாலும்	பாலையும்		

http://acharya.org

அழைக்கவும்	என்னைக் கூப்பிடச் செய்தேயும்
நான்	(அவனைப்பெற்ற தாயாகிய) நான்
இதற்கு	இந்தச் செயலுக்கு
என்கி	ஈடுபட்டு
இவனை	இப்பிள்ளையை நோக்கி
பிரான்	"பிரானே!
சோத்தம்	உனக்கு ஓர் அஞ்ஜலி;
இவை செய்ய பெறாய்	இப்படிப்பட்ட தப்புக்காரியங்களைச் செய்யாதொழியவேணும்?"
என்று இரப்பன்	என வேண்டிக்கொள்வனேயன்றி
உரப்ப கில்லேன்	கோபித்துப் பேசமாட்டு கின்றிலேன்;
பேய்ச்சி	பூதனையினுடைய
முலை	முலையை
உண்ட பின்னை	(இவன்) உறிஞ்சியுண்டது முதலாக
இ பிள்ளையை	இந்த மகனை
பேசுவது அஞ்சுவன்	பொடிந்துவார்த்தை சொல்ல அஞ்சாகின்றேன்.

* * *—பெற்ற தாயாகிய யசோதை கண்ணபிரானை இப்படி ஆணையிட்டிருக்கிறாளே!' இதுவும் தகுதியோ? மக்களை அடக்கியாள வேண்டிய முறைமை தாயர்க்கன்றோ கடமை; அவள் இப்படி உபேக்ஷித்திருப்பது சிறிதும் தகாது; தயிரும் பாலும் நெய்யும் அவரவர்கள் பறிகொடுத்துப் படும் பரிபவமும் பரிதாபமும் வாசாமகோசரமாயிருக்கின்றதே!, இப்படியும் ஒருத்தி தன் மகனைத் தீம்பிலே தடிக்கவிட்டிருப்பளோ! என்றிப்படி ஊரெல்லாம் அலர் தூற்றல் பாவினவாறே யசோதைப்பிராட்டி ஒருத்தியை நோக்கியுரைக்கின்றாள்;

தயிரையும் நெய்யையும் பாலையும் கண்ணபிரான் குடங்குடமாகப் பருகுகின்றானென்று இடைச்சிகளெல்லோரும் திரண்டு முறையிட்டால் அதைக் கேட்டு நான் வருந்தாமையில்லை; ஆனாலும் கண்ணபிரானைத் தண்டிக்க என்னாலாகாது; நல்வார்த்தையாக அவனை நான் எவ்வளவு வேண்டிக்கொள்ள முடியுமோ அவ்வளவு வேண்டிக்கொண்டு 'பிரானே! உன்னைத் தொழுகின்றேன்; இப்படிப்பட்ட அநீதிகளைச் செய்வது தகாது; இக்காரியங்களையெல்லாம் விட்டிடு' என்று இதமாக நான் சொல்லாமையில்லை; இதற்கு மேற்பட அவனைச் சிறிப்புடைக்கவேணுமென்றால் அது என்னாலாகாது; இவன் பூதனையை முலையுண்டு முடித்த பின்பு இவனைப் பொடிந்து ஒன்று சொல்ல நான் அஞ்சிக் கிடக்கிறேனித்தனை என்கிறாள். .... (அ)

ஈடும்வலியுமுடைய இந்நம்பிபிறந்த வேழுதிங்களில் *
ஏடலர்கண்ணியினானை வார்த்தி எழனை நீராடப்போனேன் *
சேடன்றிருமறுமார்பன் கிடந்துதிருவடியால் * மலைபோல்
ஓடுஞ்சகடத்தைச் சாடியபின்னை உரப்புவதஞ்சுவனே. (கூ)

ஈடும் வலியும் உடைய — தேஜோபலமும் மிக்குமுடையனான
இ நம்பி பிறந்த — இப்பிள்ளை பிறந்த
எழு திங்களில் — ஏழாவது மாதத்திலே
ஏடு அலர் கண்ணியினானை — இதழ்விரிகின்ற மாலையை யணிந்த இப்பிள்ளையை
வளர்த்தி — கண்வளரச்செய்துவிட்டு
யமுனை நீராட போனேன் — யமுனையிலே குளித்துவரப் போனேன்;
சேடன் — மிக இளம்பிள்ளையாய்
திரு மறு மார்பன் — பிராட்டியையும் ஸ்ரீவத்ஸத்தையும் திருமார்பிலுடையனான இவன்
கிடந்து — தான் படுத்துக்கொண்டிருந்த படியே
திரு அடியால் — தனது திருவடியினால்
மலை போல் ஓடும் சகடத்தை சாடிய பின்னை — மலைபோலுருண்டுவந்த வண்டியை முறித்துத் துகளாக்கின பிறகு
உரப்புவது அஞ்சுவன் — (இவனைச்) சீறிப்பேச அஞ்சாநின்றேன்.

* * *—கீழ்ப்பாட்டில் "பேய்ச்சி முலையுண்ட பின்னை இப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே" என்று சொன்ன யசோதையை நோக்கி 'நங்காய்! நீ இப்படியும் சொல்லலாமோ? பிள்ளை ஜீவித்திருக்கவேண்டிய அத்ருஷ்டம் கனத்திருந்தபடியாலே பூதனை மாண்டாளத்தனை; அதற்காக நீ அஞ்சவேணுமோ! தகுதியற்ற வார்த்தையைச் சொல்லுகிறாயே' என்று பல ஆய்ச்சிகள் கூற, 'நங்கைகாள்! பேய்ச்சிபாலுண்டது ஒன்று தானோ? சகடுதைத்தபடியைக் கேளுங்கோள்' என்று சகடாஸுரபஞ்சன வரலாற்றைச் சொல்லிக் காட்டுகிறாள் யசோதை. கண்ணபிரானை நந்தகோபர் திருமாளிகையிலே ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்திவிட்டு யசோதை யமுனை நீராடப்போயிருந்த காலத்து, கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்துக் கண்ணபிரான் மேல் விழுந்து அவனைக் கொல்லமுயன்றதை யறிந்து கொண்ட அத்தெய்வக்குழவி, பாலுக்கு அழுகிற பாவனையில் தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கியுதைத்து அச்சகடத்தை (அஸுரனுட்பட) சின்ன பின்னமாக்கின வரலாறு இப்பாட்டில் கூறப்படுகிறது.

ஈடும் வலியுமுடைய=ஈடு என்றாலும் வலி என்றாலும் பொருள் ஒன்றேயாயினும் இங்கு வாசி கொள்ளலாம்; ஈடு என்று தேஜோபலத்தைச் சொல்லுகிறது; வலி என்று எதிரிகளை அநாயாஸமாக அடர்க்கும் வல்லமையைச்சொல்லுகிறது. வடமொழியில் ஸௌர்யம் வீர்யம் பராக்ரமம் என்று சொல்லப்படுகிற குணங்களுக்குக் கூறப்படும் பொருள் வாசியை நினைப்பது.

எழுதிங்களில்=ஏழாவது திங்களில் என்றபடி. திங்கள்—சந்திரன்; அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதமெனக் கொண்டு சந்திர ஸம்பந்தத்தாற் காலத்தை வரையறுக்கும் சாந்திரமாநரீதி பற்றித் திங்கள் என்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று; இலக்கணை. இங்கு 'எழுதிங்களில்' என்றது மிக்க சிறு பிராயத்தில் என்றபடி. [ஏடலர்கண்ணியினானை வளர்த்தி] குழந்தையைப் [illegible]லையிலே அலங்கரித்து உறங்கப்பண்ணின தென்க.

http://acharya.org

சேடன் = இச்சொல்லுக்குப் பல பொருள்களுண்டு; இளையோன் என்ற பொருளில் இங்கு வந்தது. .... (கூ)

அஞ்சுவன்சொல்லியழைத்திட நங்கைகாள்! ஆயிரநாழி நெய்யை *
பஞ்சியமெல்லடிப் பிள்ளைகளுண்கின்று பாகந்தான் வையார்களே *
கஞ்சன்கடியன் கறவெட்டுநாளில் என் கைவலத்தாதுமில்லை *
நெஞ்சத்திருப்பன செய்துவைத்தாய்நம்பி! என்செய்கேன்! என்செய்கேனோ? (௧௦)

நங்கைகாள் — பெண்காள்!
சொல்லி அழைத்திட அஞ்சுவன் — (இவன் செய்யுந் தீம்புகளைச்) சொல்லி முறைப்பட அஞ்சுகின்றேன்;
பஞ்சியம் மெல் அடி பிள்ளைகள் — பஞ்சுபோல் மெல்லிய அடியை யுடையரான (இவ்வூர்ப்) பிள்ளைகள்
ஆயிரம் நாழி நெய்யை — ஆயிரம் நாழி நிறைந்த நெய்யை
உண்கின்று — உண்ணும்போது
பாகம் தான் வையார்களே — ஸ்வல்பபாகமும் மிகுத்தி வைத்தார்களில்லை;
கஞ்சன் — கம்ஸனென்பவன்
கடியன் — கோபிஷ்டன்;
கறவு — (அவனுக்குச் செலுத்தவேண்டிய) கப்பமோவென்றால்
எட்டு நாளில் — இன்னமும் எட்டுநாளைக்குள் செலுத்தவேண்டியதாகவுள்ளது;
என் கைவலத்து — என்கையில்
ஆதும் இல்லை — ஒன்றுமில்லை;
நம்பி — கண்ணபிரானே!
நெஞ்சத்து இருப்பன செய்து வைத்தாய் — என்னெஞ்சு புண்பட்டிருக்கும்படியான காரியங்களையே செய்து போகிறாய்;
என் செய்கேன் என் செய்கேன்!—.

* * *—ஈற்று இரண்டு பாட்டிலும் 'இப்பிள்ளையைப்பேசுவதஞ்சுவனே' என்றும் 'உரப்புவதஞ்சுவனே' என்றும் சொன்ன யசோதைப் பிராட்டியை நோக்கி ஆய்ச்சிகளெல்லாரும் 'நங்காய்! தாய்க்கு அடங்காதவன் ஊர்க்கு அடங்கான் என்னும் பழமொழி உனக்குத் தெரியாததன்று; நீயே இப்படி கைவிட்டால் இனி நாங்கள் வாழும் வகையுண்டோ? எங்கள் நெய் பால் தயிர் முதலானவற்றை யெல்லாம் பறிகொடுப்பதேயோ எங்கள் தலைவிதி?' என்று கண்ணும் கண்ணீருமாய்ச் சொல்ல, அவர்களுக்கும் மறுமாற்றஞ் சொல்லிக் கண்ணபிரானையும் லகுவாகப் பொடிகின்றாள் யசோதை.

ஈற்றிரண்டு பாசுரங்களிலும் 'அஞ்சுவனே' என்று தான் சொன்னது கண்டிப்பான விஷயந்தா னென்பதைத் திண்ணமாகக் காட்டவேண்டி மீண்டும் "அஞ்சுவன் சொல்லியழைத்திட நங்கைகாள்" என்கிறாள். [ஆயிரநாழி நெய்யை இத்யாதி.] நீங்கள் படுகிற கஷ்டத்தை நீங்கள் முறையிடுகிறீர்களே யன்றி நான் படுகிற கஷ்டத்தை நீங்கள் சிறிது மறிந்திலீர்களே; இத்திருவாய்ப்பாடியில் தயிர் பால் வெண்ணெய் முதலானவற்றைக் கொள்ளை கொள்பவன் இவனொருவனேயோ? "தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருவான்" என்றாற் போலே மற்றும் ஆயிரக் கணக்கான இவனது தோழப் பிள்ளை

http://acharya.org

களூ மூனாதலால் அவர்கள் கொள்ளைகொள்ளும் விதம் நீங்களறியீர் போலும். அவர்களெல்லோரும் புகுந்து ஆயிரநாழி நெய்யைப் பருகும்போது ஸ்வல்ப பாகமேனும் மிச்சப்படுத்தி வைக்கிறார்களோ, அது கிடையாது; நாமெல்லாரும் கம்ஸனுக்குத் தீர்வை செலுத்தவேண்டிய நாள் ஸமீபித்து விட்டதென்பது உங்கட்குத் தெரியாதோ? எட்டுநாளைக்குள் தீர்வை செலுத்தியாகவேண்டுமே; கம்ஸனோ கொடியவன், சிறிது தவணை கடந்தாலும் கொடிய தண்டனை விதித்திடுவான். இந்தப் பிள்ளைகள் நெய்யையும் பாலையும் குடித்தொழிந்தால் எந்தப் பொருளை விற்று நான் தீர்வை செலுத்தித் தொலைப்பேன்? என் கையிலோ ஒற்றைக் காசுமில்லையே!—என்றிங்ஙனே யசோதைப் பிராட்டி சொல்வதைக்கேட்ட ஆய்ச்சிகள் 'அந்தோ! இவளுடைய ஸாமர்த்தியத்தை என்ன சொல்லுவோம்!, இவள் மகன் செய்யுந் தீம்புகளைப் பாக்கச் சொல்லி நாம் முறையிட்டால் அவனை பரிக்ஷிக்கமாட்டாமல் ஊர்ப் பிள்ளைகளின் மேல் வசை கூறத் தொடங்கிவிட்டாளே!' என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ள, அவர்களுக்கும் ஒருவாறு த்ருப்தியுண்டாகும்படி கண்ணபிரானை நோக்கிக் கூறுகின்றாள் ஈற்றடியை.

பிரானே! என் நெஞ்சு புண் மாறாதிருக்கும்படியான சேஷ்டைகளையே செய்து வைக்கிறாயே, என்ன பண்ணுவேன்! என்றாளாயிற்று.

ஊர்ப்பிள்ளைகள் நெய்பால் முதலியவற்றை யுண்பதற்கு உள்ளே புகும்போது பூனைபோல் அடி ஓசைபடாமல் மெத்தெனப் புகும்படியைத் தெரிவிப்பதாம் பஞ்சியமெல்லடிப் பிள்ளைகள் என்பது. [உண்கின்று] திருவாய்மொழியில் (10-2-5) "அமரர்கோன் அர்ச்சிக்கின்று" என்ற பிரயோகத்தை யொத்ததாமிது. ஷாமம் என்னும் வடசொல் பாகமெனத் திரிந்தது.

மூன்றாமடியில் கறவு என்றது, கரம் என்னும் வட சொல்லடியான தமிழ்ச்சொல் என்னலாம்; கப்பம் என்று பொருள்.

கம்ஸனுடைய ராஜதானியாகிய வடமதுரையைச் சார்ந்த விடங்களில் வாழ்பவர்கள் வருஷத்துக்கொருமுறை கம்ஸனுக்குக் கப்பங்கட்டுவது வழக்கமென்பது ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் (5.5-2) முதலிய இடங்களிற்காணத்தக்கன.

அங்ஙனுந்தீமைகள் செய்வர்களோநம்பி! ஆயர்மடமக்களை *
பங்கயநீர் குடைந்தாடுகின்றார்கள் பின்னேசென் றொளித்திருந்து *
அங்கவர்பூந்துகில்வாரிக்கொண்டிட்டு அரவேரிடையாரிரப்ப *
மங்கைநல்லீர்! வந்துகொண்மினென்று மரமேறியிருந்தாய்போலும். (கக)

நம்பி	கண்ணபிரானே!	தீமைகள் செய்வர்களோ	தீம்புகள் செய்யத் தகுமோ?
ஆயர் மடம் மக்களை	இடையர்களுக்கு விதேயரான பெண்பிள்ளைகளிடத்தில்	பங்கயம் நீர்	தாமரைப்பொய்கையிலே
அங்ஙனும்	அப்படியும்	குடைந்து	அவகாஹித்து

http://acharya.org

ஆடுகின்றார்கள் பின்னே சென்று	நீராடப்போனவர்களின் பின்னேபோய்
ஒளித்து இருந்து	மறைந்துகொண்டிருந்து
அங்கு	அவ்விடத்தில்
அவர்	அந்தப்பெண்பிள்ளைகளினுடைய
பூ துகில்	அழகிய சேலைகளை
வாரிக் கொண்டிட்டு	வாரிக்கொண்டு (அவ்வளவிலே)
அரவு ஏர் இடையார்	அரவுபோலே நுண்ணிய இடையையுடையரான அப்பெண்கள்
இரப்ப	(அத்துகில்களை) யாசிக்க
நல் மங்கைமீர்	'அழகிய பெண்காள்!
வந்து	(காணிருக்குமிடத்திலே) வந்து
கொள்மின்	(உங்கள் துகில்களைப்) பெற்றுக்கொள்ளுங்கோள்'
என்று	என்றுசொல்லி
மரம் ஏறி இருந்தாய் போலும்	மரத்தினுச்சியில் ஏறியிருந்தாயாமே.

* * *—கீழ்ப்பாட்டில் கண்ணபிரானைப் பொடிவதற்குச் சிறிது தொடங்கின யசோதை இது முதலாக மூன்று பாசுரங்களிலே தான் கேள்விப்பட்டிருந்த சில சேஷ்டிதங்களை யெடுத்துரைத்து இப்படியும் தீமை செய்யலாமோ வென்கிறாள்.

ஆயர்மாதருடனே கூடிக்கலந்திருந்த கண்ணபிரான் சில காரணங்களாலே பிரிய நேர்ந்தது; அப்படி பிரிந்தபோதே தொடங்கி ஊரில் விசேஷங்களை ஆராய்ந்து வருகையில், பஞ்சலக்ஷங் குடிப் பெண்களுக்கும் தனித்தனியே ஆளிட்டு நடந்தவற்றையும் நடக்கின்றவற்றையும் நடக்கப்போகின்றவற்றையும் ஆராய்ந்தறிந்து அந்த ஆய்ப்பெண்கள் பனிநீராடப் போகிறபடியை யுணர்ந்து அவர்களின் பின்னே தானும் போவதாகக் கணிசித்திருந்தான். அந்த ஆய்ச்சிகளோ வென்னில் 'கண்ணபிரானோடு ஸம்ச்லேஷம் பொறுக்க முடியாது; அதுக்குமேலே விச்லேஷவ்யஸநம் மிகவும் அஸஹ்யம்; ஸம்ச்லேஷமோ விச்லேஷ பர்யந்தமாயல்லது இராது; ஆனபின்பு அவனோடு ஸம்ச்லேஷித்துப் பிறகு வருந் துவதிற் காட்டிலும் முந்துற முன்னமே விரஹதாபத்திற்குப் பரிஹாரமாக நீரிலே போய்ப்படிந்து மூழ்கி ஆச்வஸித்திருப்போம்; அது செய்யும்போது நாமும் அவனுமாய் முன்பு குளிக்கும் பொய்கைகளில் புகுந்தால் அவன் அறிந்து வந்திடுவான்; அவனறியாததொரு பொய்கைதேடிப் போகவேணும்' என்று ஸங்கேதம் செய்து கொண்டு எல்லாரும் போனார்கள். கண்ணபிரான் * இருளன்னமா மேனியனாகையாலே அவர்களது நிழலைப் பற்றிக் கொண்டு போய் அவர்களுக்கு முன்னமே பொய்கைக்கரை போய்ச் சேர்ந்தான்; இவர்கள் அவன் வந்தமை யறிந்திலர். இடைப்பெண்களாகையாலே சேலைகளையும் நகைகளையு மெல்லாம் களைந்து கரையிலே வைத்து விட்டு நீரிலே படிந்தார்கள்; அவ்வளவிலே கண்ணபிரான் இவற்றை யெல்லாம் வாரியெடுத்துக் கொண்டு மிக விரைந்து குருந்த மாத்தின் மேலேறி மறைய நின்றான். பிறகு ஆய்ச்சிகள் கரையேறிக் கண்ட வளவில் அவை காணாமையாலே துணுக்கென்று 'நம்முடன் கூட வந்தார் பிறர் ஆருமில்லையே!, இவற்றை ஆகாயங்

http://acharya.org

கொண்டதோ? திசைகள் கொண்டனவோ? இக்குளம் கொண்டதோ? கிருஷ்ணன் கொண்டானோ? என்றிங்ஙனே கலங்கிப் பல வகைகளாகச் சங்கித்து எங்கும் பருகு பருகென்று பார்த்துக்கொண்டு வாரா நிற்கக் கண்ணபிரானைக் குருந்த மரத்தின்மேற் கண்டு 'கூறைதாராய்' என்று யாசிக்க, 'நானிருக்கு மிடத்தேற வந்து கொள்ளுங்கோள்' என்று அவ்வாய்ச்சிகளைக் கண்ணபிரான் நெடும்போது சிரமப்படுத்தின வரலாறு நாச்சியார்திருமொழியில் * கோழியழைப்பதன் முன்னமென்னும் திருமொழியில் விரிவாகவுள்ளது; இப்பாட்டில் அது சுருங்கக் கூறப்பட்டது.

கண்ணபிரானைச் சீறவேணும் தண்டிக்கவேணும் என்று மன்றாடின இடைச்சிகட்காக யசோதைப் பிராட்டியின் வாயில் 'அங்ஙனுந் தீமைகள் செய்வர்களோ நம்பி!' என்ற வார்த்தை வந்திட்டது. இவள் சொல்லுகிற சொல் நயத்திலே மேன்மேலும் அவன் தீம்பிலே கைவளரும்படியாகின்றதே யன்றி அஞ்சி நிற்பதற் குறுப்பாகின்றதில்லை. இது பற்றியே 1. 'அஞ்ச § வுரப்பாள் அசோதை ஆணாடவிட்டிட்டிருக்கும்' என்று ஆய்ச்சிகள் வருந்திக் கூறுவது.

பங்கய நீர்=தாமரைகள் நிறைந்த நீரிலே; தாமரைத் தடாக மென்றபடி; (பங்கஜம்—வடசொல்.) மங்கை நல்லீர்—உருபுபிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. யசோதை தான் நேரே கண்டிலளாதலால் 'இருந்தாய் போலும்' என்றாளென்க. ... . (௧௧)

அச்சந்தினைத்தனையில்லை யிப்பிள்ளைக்கு ஆண்மையுஞ்சேவகமும் *
உச்சியில்முத்தி வளர்த்தெடுத்தேனுக்கு உரைத்திலன்று னின்றுபோய் *
பச்சிலைப்பூங்கடம்பேறி விசைகொண்டு பாய்ந்து புக்கு ஆயிரவாய் *
நச்சழற்பொய்கையி னாகத்தினோடு பிணங்கிநீ வந்தாய்போலும். (௧௨)

இ பிள்ளைக்கு	இந்தபிள்ளைக்கு	பூ	பூத்திருக்கிற
தினைத் தனை	கொஞ்சமேனும்	கடம்பு	கடப்பமரத்தின்மீது
அச்சம் இல்லை	பயமில்லை	ஏறி	ஏறி
ஆண்மையும் சேவகமும்	சௌர்யமும் வீர்யமுமே யுள்ளது;	விசை கொண்டு	வேகத்துடனே
உச்சியில் முத்தி	உச்சிமோந்து	பொய்கையில் பாய்ந்து புக்கு	(காளியநாகங்கிடந்த) பொய்கையிலே குதித்து;
வளர்த்து எடுத்தேனுக்கு	வளர்த்தெடுத்த தாயாகிய எனக்கும்	ஆயிரம் வாய்	ஆயிரம்வாயாலும்
		நஞ்சு அழல்	விஷத்தைக் கக்குகின்ற
தான் உரைத்திலன்	தான் சொல்லாதவனாய்	நாகத்தினோடு	(அந்தக்காளிய) நாகத்தினோடு
இன்று போய்	இன்று வெளியிற்போய்	பிணங்கி	போர் செய்து
பச்சிலை	பசுமையான இலைகளையுடைத்தாய்	நீ வந்தாய் போலும்	நீ வந்தாயாமே.

1. நாய்ச்சியார் திருமொழி ௩—௯.   § உரப்பாள்—சீறமாட்டாள்.

http://acharya.org

* * *—ஒருநாள் கண்ணபிரான் கன்றுகளை ஓட்டிக்கொண்டு ஒருவரும் ஸஞ்சரியாத வழியே போகத் தொடங்க, மற்றுள்ள இடைப்பிள்ளைகள் அழைத்து 'க்ருஷ்ணா! அவ்வழி நோக்கவேண்டா; அவ்வழியிற் சென்றால் யமுநா நதியில் ஓர் மடுவிலிருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினாற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானத்துக்கு அநர்ஹமாம்படி செய்த காளியனென்னும் கொடிய ஐந்தலை நாகம் குடும்பத்தோடு வாஸஞ்செய்து கொண்டு அணுகினவர்களெல்லாரையும் பிணமாக்கி விடுதலால் நாங்கள் அஞ்சுகின்றோம்' என்ன, அதைக்கேட்ட கண்ணபிரான் உடனே அந்தக் காளிய நாகத்தைத் தண்டிக்கவேண்டுமென்ற திருவுள்ளங்கொண்டு அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின் மேலேறி அம்மடுவிற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின் மேலேறித் துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்கினனென்ற வரலாற்றைக் கேள்விப்பட்ட யசோதை 'அந்தோ! சிறிதும் அச்சமில்லாமல் இப்படியுஞ் செய்யலாமோ' என்கிறாள். இப்பாட்டில் முன்னடிகள் யசோதை தன்னில்தான் சொல்லிக்கொள்வன; அன்றி ஆய்ச்சிகளை நோக்கிச் சொல்லுவனவுமாம்; பின்னடிகள் கண்ணபிரானை நோக்கிச் சொல்லுவன.

இப்பிள்ளைக்கு ஆண்மையும் சேவகமும் உள்ளனவேயன்றி இளமைக்கு உரிய அச்சம் சிறிதுமில்லை; எவ்வளவோ அன்பாக இவனை உச்சிமோந்து வளர்ப்பவளான என்னிடத்திலும் ஒருவார்த்தைசொல்லாமேபோய்விட்டானென்கிறாள். 1. "ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ வ்ருந்தாவநம் யயௌ... ஸ்ருஹம் காளிய நாமஸ்ய தஷ்ட்ரா திவிஷம் = ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ,.......ஹ்ரதம் காளியநாகஸ்ய தத்ஸாதி விஷிஷணம்" 2. யஸ்மிந் ஸுருஷுவோஷி காளியஹ்ரதே கோலாஹலாயாபவ: = யஸ்மிந்லேஷலவோபி காளியஹ்ரதே கோலாஹலாயாபவத்" இத்யாதிப்படியே பலராமனைத் துணைகொள்ளாமற்போனதோடு தன்னோடு ஒருவார்த்தை சொல்லாமற்போனதும் யசோதைக்கு வருத்தமாயிற் றென்க.

பச்சிலைப்பூங்கடம்பேறி = ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் காளியன் கிடந்த பொய்கையைப்பற்றிச் சொல்லுமிடத்து (5—7—4) விஷாக்நிநா ப்ரஸ்ருதா தக்த தீரமஹீருஹம்—விஷாக்நிநா ப்ரஸரதா தக்ததீரமஹீருஹம்" என்றபடியே அக் கடப்பமரம் காளியனுடைய விஷாக்நியினால் கொளுத்தப்பட்டு இலை பூ காய் கனி முதலியவை யொன்றுமின்றி மொட்டை மரமாக இருந்தாலும் கண்ணபிரான் அதன்மேலேறும்போது அவனுடைய திருவடி ஸம்பந்தமுண்டான மாத்திரத்தினால், * பச்சிலைப் பூங்கடம்பாயிற்று என்று ஆசாரியர்கள் நிர்வஹிக்கும்படி. பசுமை + இலை, பச்சிலை.

---

1. ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-7-1. 2. ஸ்ரீரங்கராஜஸ்தவம்-உத்தரசதகம்.

http://acharya.org

[ஆயிரவாய் நாகத்தினோடு.] காளியனைச் சில விடங்களில் ஐந்தலை நாகமென்று சொல்லியிருக்க ஆயிரவாய் நாகமென்றதென்? எனில்; பயங்கரத்வம் தோற்றுதற்காகவா மத்தனை.

தினைத்தனை = தினையென்பது ஒரு மிகச்சிறிய தானியம்; அதிக அற்பமான அளவுக்கு அதனை உவமை கூறுவர்கள் கவிகள்; கிஞ்சித்தும் என்றபடி. "தினையாஞ் சிறிதளவும்" என்ற பெரிய திருவந்தாதியுங் காண்க. (கஉ)

தம்பரமல்லன வாண்மைகளைத் தனியேநின்று தாம்செய்வரோ ?
எம்பெருமான் ! உன்னைப்பெற்ற வயிறுடையேன் இனியானென்செய்கேன் ?
அம்பரமேழு மதிருமிடி குரல் அங்கனற்சேங்கணுடை *
வம்பவிழ்கானத்து மால்விடையோடு பிணங்கிநீ வந்தாய்போலும். (கஙு)

எம் பெருமான்	என்னுடைய கண்ணபிரானே!	வம்பு அவிழ் கானத்து அங்கு	பரிமளம் வீசுகின்ற அச்சோலையிடத்திலே,
தம் பரம் அல்லன ஆண்மைகளை	தம் பருவத்தினளவல்லாத பௌருஷங்களை	அம்பரம் ஏழும் அதிரும் இடி குரல்	மேலுலகங்களெல்லாம் அதிரும்படியான கனத்த குரலையும்
தனியே நின்று செய்வரோ தாம்	தனிமையாயிருந்து செய்யத் தகுமோ?	அனல் செம் கண் உடை	நெருப்புப்போலே சிவந்த கண்களையு முடையனவான
உன்னை பெற்ற வயிறு உடையேன்	(தனியே அதிமாநுஷ காரியங்களைச் செய்கிற) உன்னைப் பெறும்படியான வயிறு படைத்தவளானேன்;	மால் விடையோடு	கரிய எருதுகளோடே
யான் இனி என் செய்கேன்	உன்னைப் பெற்ற பின்பு நான் என்ன செய்யவல்லேன் ?	நீ பிணங்கி வந்தாய் போலும்	நீ போர் செய்து வந்தாயாமே.

* * *—இதுவும் யசோதைப்பிராட்டி கண்ணபிரானை நோக்கிக் கூறும் பாசுரம். கண்ணனை நலியக் கருதின கஞ்சனால் ஏவப்பட்டு மிகவும் பயங்கரமான ரிஷபத்தின் உருக்கொண்ட அரிஷ்டாஸுரன் திருவாய்ப்பாடியிற் புகுந்து கோநிரையையும் கன்றுகளையும் கோவலரையும் பலவாறாக நலியத் தொடங்க, அடியார் துயரத்தைப் பொறுக்கமாட்டாத கண்ணபிரான் அக்காளையின்மேற் கடுங் கோபங்கொண்டு அதன் இரண்டு கொம்புகளையும் பிடித்துச் சிறிது தூரம் கெட்டிக்கொண்டு போய்க் கீழே விழும்படி தள்ளி மீதேறி மிதித்து நின்று அவ்விரண்டு கொம்புகளையும் வேருடன் பறித்து அவைகளையே வஜ்ராயுதமாக இரண்டு திருக்கைகளிலுந் தாங்கி உறுதியாகப் பிடித்துப் பின்பாய்ச்சல்கொண்டு கிறுகிறென்று சுழற்றி முன் பாய்ந்துவந்து மோதி யடித்து உதைத்தார்; அவ்வளவில் அவ்வசுரன் மூக்கினும் வாயினும் உதிரத்தைக் கக்கிக்கொண்டும் கிடுகிடென்று நடுங்கி உதைத்துக் கொண்டும் பிராண பயமடைந்து மூத்திரபுரீஷங்

http://acharya.org

கள் செய்துகொண்டும் ஒருதரங்கதறி ஓரிரைச்சலிட்டு உயிரைத் துறந்தானென்ற ஒரு வரலாறு உண்டு; (இவ்வசுரன் பெயர் அரிஷ்டநேமியென்றும் வழங்கும்.) இப்பாட்டிற் கூறுவது இவ்வரலாறு ஆகவுமாம்; அன்றியே; ஸீதா விவாஹத்திற்கு வில் முறியைப் பந்தயமாக வைத்திருந்தது போல நப்பின்னைப் பிராட்டியின் திருமணத்திற்கு எருது முறியைப் பந்தயமாக வைத்திருந்ததனால் அப்படியே கண்ணபிரான் எருதுகளேழையும் வலியடக்கினனென்ற வரலாறு ஆகவுமாம்.

கண்ணனுடைய தீம்புகளைச் சொல்லி முறையிடுகின்ற ஆய்ச்சிகளை ஒருவாறு த்ருப்தி செய்விக்க முன்னடிகள் அமைந்தன; உன்னுடைய பருவத்துக்கும் சக்திக்கும் ஈடல்லாத காரியத்தை நீ செய்வதே பிசகு; அதிலும் பலராமனோடு கூடவிருந்து செய்தாலாவது கண்ணெச்சில் படாதிருக்கும்; அஸஹாயனாய் நின்று செய்யத் தகுமோ? இனிச் சொல்லி என்? இப்படிப்பட்ட உன்னை இந்த வயிற்றில் சுமந்து பெற்றுவிட்டேன்; இனி நான் என்ன செய்யக்கூடுமென்கிறாள்.

தம்பரமல்லன = ஸ்வ: பர: என்னும் வடசொல் பரமெனத் திரிந்தது. தன்னால் தாங்கமுடியாதவற்றை என்றபடி. ஆண்மைகள்—ஆண் புலியென்பதைக் காட்டக்கூடிய வீரச்செயல்கள். அம்பரம்—வடசொல். .... (கரு)

அன்னநடை மடவாய்ச்சி வயிறடித்தஞ்ச அருவரைபோல் *
மன்னுகருங்களிற்றாருயிர் வவ்விய மைந்தனை மாகடல்சூழ் *
கன்னிநன்மாமதிள் மங்கையர்காவலன் காமருசீர்க்கலிகன்றி *
இன்னிசைமாலை களீரேழும்வல்லவர்க்கு ஏதமிடரில்லையே. (கச)

அன்னம் நடை	அன்னத்தின் நடைபோன்ற நடையையும்
மடம்	மடமைக் குணத்தையுமுடையவளான
ஆய்ச்சி	யசோதைப் பிராட்டியானவள்
வயிறு அடித்து அஞ்ச	வயிற்றிலே மோதிக்கொண்டு பயப்படும்படியாக
அரு வரை போல் மன்னு	பெரிய மலைபோலப் பேராதே நின்ற
கரு களிறு	(குவலயாபீடமென்கிற) கரிய யானையினுடைய
ஆர் உயிர்	அருமையான உயிரை
வவ்விய	கவர்ந்த
மைந்தனை	மிடுக்கனான கண்ணபிரான் விஷயமாக,
மா கடல் சூழ்	பெரிய கடலாலே சூழப்பட்டு
கன்னி நல் மா மதிள்	ஸ்திரமாய் விலக்ஷணமான பெரிய திருமதிள்களையுடைத்தான
மங்கையர்	திருமங்கைநாட்டில் உள்ளவர்கட்கு
காவலன்	பரிபாலகராய்
காமரு சீர்	விரும்பத்தக்க திருக்குணங்களையுடையரான
கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்த)
இன் இசை மாலைகள் ஈர் ஏழும்	மதுரமான இசையையுடைய சொல்மாலையான இப்பதினன்கு பாசுரங்களையும்
வல்லவர்க்கு	ஓதவல்லவர்களுக்கு
இடர் ஏதம் இல்லை	துன்பமொன்றுமில்லையாகும்.

http://acharya.org

* * *—எருதோடு பொருததினும் காட்டில் யானையோடு பொருதது மிகவும் பயங்கரமான வீரச் செயலாதலால் யசோதைப்பிராட்டி அதனையுஞ் சொல்லி வயிறெரிந்தது இந்த நிகமனப் பாசுரத்தில் ஒருவாறு தோற்றுவிக்கப்படுகின்றது. வில்விழா வென்கிற வியாஜம் வைத்துக் கம்ஸனால் மதுரைக்கு வரவழைக்கப்பட்ட கண்ணபிரான் அவனது அரண்மனை வாயிலிற் புகும்போது தன்னைக் கொல்லுமாறு அவனால் வழி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீடமென்னும் மதயானை சீறிவர, கண்ணபிரான் அதனை யெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அவ் யானையையும் யானைப் பாகனையும் உயிர் தொலைத்த வரலாறு அறிக. 'தன்னைப் பேணாதே இப்படியும் ஒரு வீரச்செயல் செய்யலாமோ' என்று யசோதைப்பிராட்டி வயிற்றிலே மோதிக்கொண்டு வருந்தும்படியாக மலைபோன்ற மதயானையைப் பொருது உயிர் தொலைத்திட்ட கண்ணபிரான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இப்பதினொரு பாசுரங்களையும் கற்று வல்லவர்கட்குத் துன்பம் சிறிதுமில்லையாகும். யசோதைப்பிராட்டியைப் போலே அநுபவத்திற் குறைபடில்லாதே இன்பமே அதிகரிக்கப் பெறுவர் என்றவாறு. .... (௧௧)

அடிவரவு:—மானம், காலை, தெள்ளி, மை, தந்தை, மண், ஆயிரம், தோய், ஈடு, சஞ்சலன், தங்கனும், அச்சம், தம்பரம், அன்ன, காதில்.

ஏழாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—எட்டாந்திருமொழி,

காதிற் கடிப்பிட்டு.

உரையவதாரிகை:—கண்ணபிரானுடைய சிறுச் சேவகங்களைச் சொல்லி அலர் தூற்றுவாருடைய பாசுரத்தாலும், அவனை நியமிப்பவளான யசோதைப் பிராட்டியின் பாசுரத்தாலும் பேசி நின்றது, கீழ்த்திருமொழி. புணர்ந்து பிரிந்து பிரிவாற்றாதாருடைய ஊடல் திறத்தைப் பேசியநுபவிப்பது இத்திருமொழி.

கண்ணபிரான் ஒரு ஆய்ப் பெண்ணோடே புணர்ந்து பிரிந்தானாய், பிரியும் போது 'மீண்டும் இன்னபோதிலே வருகிறேன்' என்று ஒரு ஸமயங் குறிப்பிட்டு

http://acharya.org

வைத்து அந்த ஸமயத்தில் அங்கு வந்து சேரமுடியாதபடி வேறொரு ஆய்ச்சியோடே போது போக்கிவிட்டுக் காலங்கடந்து வந்து சேர்ந்தவாறே, நெடும்போதே பிடித்து இவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவ்வாய்ச்சி ப்ரணயரோஷம் தலையெடுக்கப் பெற்று 'ஸ்வாமிந்! எங்கு எழுந்தருளிற்று? எதுக்கு எழுந்தருளிற்று? தேவரீர்க்குத் தகுதியான தேவிமார்கள் பலரிருக்க அவர்களை விட்டு இங்கு ஏது காரியம்?' என்றாற்போலே சில ஊடற் பாசுரங்களைச் சொல்லி அவனுக்கு முகங்கொடாதே இகழ்ந்தவிதம் ப்ரணயதாரையின் மேயெல்லையாதலால் அங்ஙனே அநுபவிக்க வேணுமென்று விரும்பிய ஆழ்வார், பெருமாள் திருமொழியிலே * ஏர் மலர்ப் பூங்குழலென்னுந் திருமொழியிலே ஸ்ரீ குலசேகராழ்வார் அநுபவித்தாற் போலவும், திருவாய்மொழியிலே * மின்னிடை மடவார்களென்னுந் திருவாய்மொழியிலே நம்மாழ்வார் அநுபவித்தாற்போலவும் அவ்வாய்ச்சிகளின் பாவனை முதிர்ந்து அநுபவித்துப் பேசுகிறார் இத்திருமொழியில். .... (*)

காதிற்கடிப்பிட்டுக் கலிங்க முடுத்து *
தாதுநல்லதண்ணந்துழாய் கொடணிந்து *
போதுமறித்துப் புறமே வந்துநின்றீர் *
ஏதுக்கிதுவென்? இதுவென் இதுவென்னோ? (க)

(பெரியவரே!)

காதில்	காதிலே
கடிப்பு	குண்டலத்தை
இட்டு	அணிந்துகொண்டும்
கலிங்கம் உடுத்து	திருப்பரியட்டத்தைச் சாத்திக் கொண்டும்
தாது நல்ல தண் அம் துழாய்	தாதுகளையுடைத்தாய் நல்ல குளிர்ந்த அழகிய திருத்துழாய்மாலையை
அணிந்து கொடு	அணிந்துகொண்டும்
போது மறித்து வந்து	காலதாமதமாக வந்து
புறமே	கதவின் புறமாக
ஏதுக்கு நின்றீர்	என்கிற்கின்றீர்;
	இது என்? இது என்?—

* * *—[காதில் கடிப்பிட்டு.] கண்ணபிரானை இளம்பிராயத்திலே யசோதையானவள் "கேசவநம்பீ! உன்னைக் காதுகுத்த ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார் அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்" "மகரக்குழை கொண்டு வைத்தேன், வெய்யவே காதில் திரியையிடுவன் நீ வேண்டியதெல்லாந் தருவன்" "இக்கடிப்பிட்டால் இனிய பலாப்பழம் தந்து, சுணநன்றணிமுலை யுண்ணத் தருவன் நான் சோத்தம்பிரானிங்கே வாராய்" என்றிப்படி பல வகையாக நல் வார்த்தைகள் சொல்லிக் காது குத்திக் கடிப்பிட அழைக்கச் செய்தேயும் இளமைக்குரிய துருதுருக்கைத் தனத்தினால் தாய்கையில் பிடிகொடாதே காது குத்தப் பெறாதேயிருந்திட்டு, பின்பு பருவம் நிரம்பி விளையாடப் புகுந்தவாறே பெண்களெல்லாரும் காதைக் கண்டு 'விடுகாதழகியார்' என்

http://acharya.org

றும் ‘சுணைகாதழகியார்’ என்றும் பரிஹாஸம் பண்ணத் தொடங்கவே அது பொறுக்கமாட்டாமல் காது குத்திக் கடிப்பிட்டுவரத் தொடங்கினனென்று விநோதமாக அருளிச் செய்வது காண்க.

[கலிங்கமுடுத்து] பத்துப் பாட்டில் சிறுபாணாற்றுப் படையில் (85) “வானம் வாய்த்த வளமலைக்கவாஅற் காணமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய” என்ற விடத்திற்கு நச்சினார்க்கினியர் உரையிடுமிடத்து, (கலிங்கம் நல்கிய—) “போர்வையைக் கொடுத்த” என்றுரைத்தனராதலால் இங்குக் கலிங்கமென்றதற்குப் போர்வை யென்று பொருள் கொள்ளலாம். பிறர்க்குத் தெரியாமலிருத்தற் பொருட்டுப் போர்வை போர்த்துக்கொண்டு வந்தனன் போலும்; கலிங்கமாவது கறுப்புத் திருப்பரிவட்ட மென்பர் ஒரு அரும்பதவுரைகாரர். மேற்பாட்டில் ‘துவராடையுடுத்து’ என்ற விடத்திற்கு வியாக்கியான மருளா நின்ற பெரியவாச்சான்பிள்ளை—“முற்பட உடுத்ததுக்கு ஈடுபட்டாமையாலே அதுக்குமேலே ஒரு சிவப்பு நிறப்புடைவையைச் செமிழ்த்துக்கொண்டு வந்தானாயிற்று” என்றருளிச் செய்திருக்கக் காண்கையாலே இங்குக் கலிங்கமென்றது கறுப்பு வஸ்திரத்தை யென்னலாம்.

[தாதுநல்ல தண்ணந்துழாய்கொடு அணிந்து] பரிமளத்தையும் செவ்வியையும் குளிர்த்தியையு முடைத்தான திருத்துழாய் மாலையிலே அனைவரும் ஈடுபடக் கண்டவனாகையாலே அதனை அணிந்துகொண்டு வந்தானாயிற்று. பழைய ரோஷம் நீங்கிக் கடுக அணைத்துக்கொள்வளென்னும் விருப்பத்தாலே இங்ஙனே சில அலங்காரங்களைச் செய்துகொண்டு வந்தானாயிற்று.

இவன்றான் காலதாமதஞ் செய்து வந்தானாகையாலே “[illegible]” என்றும் “ஒரு பகலாயிர மூழியாலோ” என்றும் சொல்லும்படியாக விருக்கிற அவ்வாய்ச்சி ஆதரித்து முகங்கொடுத்து வார்த்தை சொல்லமாட்டிற்றிலள்; அதுவே ஹேதுவாக இவனும் விரைந்து செல்ல மாட்டாதே கதவின் புறமே கவிழ்ந்தலையிட்டு நிற்கவேண்டியவனாயினன்; அந்த நிலைமையைக் கண்டு ஆய்ச்சி “போது மறிந்துப் புறமே வந்து நின்றீர் ஏதுக் கிதுவென் இதுவென் இதுவென்னோ?” என்கிறாள்.

‘காதில் கடிப்பு இட்டுக்கொண்டு வரவேண்டியதையாலும் அரையில் கலிங்க முடுத்துக்கொண்டு வரவேண்டியதையாலும் நல்ல தண்ணந்துழாய் அணிந்து கொண்டு வரவேண்டுகையாலும் இவற்றுக்காகத் தாமதமாயிற்றேயன்றி உன்னை யொழிய வேறொருத்தியிடத்தே போயிருந்தேனாய்த் தாமதித்து வந்தேனல் லேன்’ என்று கண்ணபிரான் ஸமாதிப்பிக்க, இதுவென்? இதுவென்? இது வென்? என்கிறாள்; அதாவது—[இதுவென்?] வெறுங்காதே பரம போக்யமாயிருக்கக் காதிலே கடிப்பிடுவானேன்? [இதுவென்?] *பூணித் தொழுவினிற்புக்குப் புழுதியளைந்த பொன்மேனியைக் காணப் பெரிது உகப்பார் நாங்களாயிருக்கக் கலிங்க முடுத்து அத்திருமேனி யழகை மறைப்பானேன்?

http://acharya.org

[இது வென்?] 'ஸஹஜ கந்த:' என்கிறபடியே திருமேனிதானே பரிமள ப்ரசுரமாயிருக்கத் திருத்துழாய்ப் பரிமளம் ஏறிடுவானேன்? இருந்தபடியே உகக்கிற எங்களுக்காக அலங்கரித்து வரவேணுமோ? என்கை. [எதுக்கிது?] கொடும் பசிவேளையிற் கிடையாத சோறு எதுக்கு? உம்முடைய நீரே கண்டு கொண்டு உம்முடம்பையும் நீரே தொட்டுக்கொண்டு நீரே மோந்து கொண்டு நீரே கட்டிக் கொண்டு நீரே மகிழ்ந்திரும்; எங்களுக்கேதுக்கு? வேண்டா வேண்டா என்று கதவடைக்கின்றாள் போலும். ... . (க)

துவராடையுடுத் தொருசெண்டு சிலுப்பி *
கவராக முடித்துக் கலிக்கச்சுக் கட்டி *
சுவரார் கதவின் புறமே வந்துநின்றீர் *
இவரார்? இதுவென்? இதுவென்? இதுவென்னோ? (உ)

துவர் ஆடை — சிவப்பு நிறமான திருப்பரியட்டத்தை
உடுத்து — சாத்திக்கொண்டு
ஒரு செண்டு சிலுப்பி — ஒருசெண்டையும் (கையால்) சிலுப்பிக் கொண்டு
கவர் ஆக முடித்து — (திருக்குழலை) வாரிமுடித்து,
கலி கச்சு கட்டி — வலியகச்சுப்பட்டையை (இடுப்பில்) கட்டிக் கொண்டு
சுவர் ஆர் கதவின் புறமே — சுவரோடு சார்ந்த கதவின்புறமாக
வந்து நின்றீர் — வந்து நிற்கின்றீர்;
இவர் ஆர் — இப்படி நிற்கிற இவர் ஆர்கொல்?
இது என் இது என் இது என்?—.

* * *—கீழ்ப்பாட்டில் கலிங்க முடுத்து வந்தமை கூறப்பட்டது; இப் பாட்டில் துவராடை யுடுத்தமை கூறப்படுகின்றது; கண்ணபிரான் வரும் போதே துவராடையையும் சுருட்டி யிடுக்கிக்கொண்டு வந்தான் போலும்; கலிங்க முடுத்து வந்ததற்கு இவள் ஈடுபடக் காணமையாலே துவராடையை யுடுத்துக் காட்டுவோம், அதிலாகிலும் ஈடுபடுகிறாளோ பார்ப்போம் என்றெண்ணித் துவ ராடையை உடுத்துக்கொண்டானாயிற்று. [ஒரு செண்டு சிலுப்பி.] கையிலே ஒரு பூஞ்செண்டைச் சிலுப்பிக்கொண்டு வந்தானாயிற்று. சிலுப்புதல்—அசைத் தல். [கவர் ஆகமுடித்து.] கவர்—இரண்டாகப் பிரிகை; எனவே, குழலை வாரி முடித்து என்றதாயிற்று. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக் கியானத்தில் "மயிரைப் புகுந்து முடித்து" என்றதில் 'புகுத்து' என்றது அச் சுப்பிழை; 'பகுத்து' என்றிருந்தது. பகுத்தல்—அலகலகாக வாருதல். [கலிக்கச்சுக் கட்டி.] மிகப்பெரிய ஆற்று வெள்ளத்தில் இழிவாரைப்போலே குழலைவாரி முடித்துக் கொண்டும் வலிய கச்சுப்பட்டையை அரையிலே இறுக்கிக் கட்டிக்கொண்டும் இங்கு ஜோடுவெதாதல்விலே அவகாஹிக்க வந்தான் போலும்.

http://acharya.org

வந்தவன் ஆய்ச்சியினுடைய முகக்குறியைக் கண்டவாறே தைரியமாக உள்ளுப் புகமாட்டாமல் சுவராார்ந்த கதவுக்குப் புறம்பே நின்றுபிற்று; அதைத் தானறிந்தமை சொல்லுகிறாள் சுவரார் கதவின் புறமே வந்து நின்றீர் என்று. கண்ணபிரான் அந்த வார்த்தையையே அவகாசமாகப் பற்றிக்கொண்டு அணுகிச் சென்று மடிபிடிக்கப் புகுந்தான்; புகவே இவரார்? இதுவேன் இதுவேன் இதுவென்னோ? என்கிறாள். .... (உ)

கருளக்கொடியொன்றுடையீர்! தனிப்பாகீர்! *
உருளச்சகடமது உறக்கில் நிமிர்த்தீர் *
மருளக் கொடேடாடி வந்தில்லம் புகுந்தீர் *
இருளத்திதுவேன்? இதுவேன்? இதுவென்னோ * (௩)

கருளன்	கருடனுகிற	நிமிர்த்தீர்	திருவடியைத் தூக்கினவரே!
கொடி ஒன்று உடையீர்	ஒருத்வஜத்தையுடையவரே!	இருளத்து	இவ்விராப்போதிலே
தனி பாகீர்	அக்கருடனை நடத்துவதில் ஒப்பற்றவரே!	மருள	(பெண்கள்) மோஹிக்கும் படியாக
உறக்கில்	தூங்கும்போது	பாடிக்கொடு வந்து	இசைபாடிக்கொண்டு வந்து
சகடம் அது	(அஸுரனாலாவேசிக்கப் பட்ட) வண்டியானது	இல்லம் புகுந்தீர்	வீட்டினுள் வந்து சேர்ந்தீர்;
உருள	உருமாய்ந்துபோம்படி		இது என் இது என் இது என்?—

* * *—நீர் மிகப் பெரியீர்; பெரிய திருவடியைக் கொடியாக வுடையீர்; அவனை ஏறி நடத்துவதில் அஸாதாரணமான வல்லமையுடையீர்; உறங்கும் போது அஸுராவிஷ்டமான சகடம் மேலே விழ, பாலுக்கழுகிற பாவனையிலே நிமிர்ந்த திருவடியாலே அதனைப் பொடிபடுத்தினீர்; இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்தவுமக்கு நாங்கள் லக்ஷியமோ? இப்படி எங்களைக் குழைச்சரக்காக நினைத்து உபேக்ஷிக்கிற நீர் எங்களை நெஞ்சிலும் இட்டெண்ணாதே யிருந்துவிடலாகாதோ? பெண்பிறந்தா ரெல்லாரும் நஞ்சுண்டாரைப்போலே மோஹிக்கும் படியாகப் பண்ணை தானுங்கிக்கொண்டு அபராத்ரியிலே இங்கு வந்து புகுந்தீரே, இது எதுக்கு? போம், போம் என்கிறாள்.

கருளன் X கொடி, கருளக்கொடி. ஗ருட: என்னும் வடசொல் கருளனெனத் திரிந்தது. மூன்றுமடியில், 'மருளைக்கொடுபாடி' என்றபாடம் மறுக்கத் தக்கது; மருள—வினையெச்சம். கொடுபாடி—பாடிக்கொடு. கொடு=கொண்டு என்பதன் சிதைவு. .... (௩)

நாமம்பலவுமுடை நாரணநம்பி! *
தாமத்துளபம் மிக நாறிடுகின்றீர் *
காமனேனப்பாடி வந்தில்லம் புகுந்தீர் *
ஏமத்திதுவேன்? இதுவேன்? இதுவென்னோ? (௪)

http://acharya.org

நாமம் பலவும் உடை	பல பல திருநாமங்களை யுடைய
நாரண நம்பி	ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே!
மிக நாறு	மிகவும் பரிமளித்துக்கொண்டிருக்கிற
துளபம் தாமம்	திருத்துழாய்மாலையை
இடுகின்றீர்	அணிந்துகொண்டிருப்பவரே!
காமன் என	மன்மதன்போல
பாடி வந்து	பாடிக்கொண்டுவந்து
ஏமத்து	இராப்பொழுதில்
இல்லம்புகுந்தீர்	வீட்டினுள் புகுந்தீர்;

இதனென் இதனென் இதனென்?-.

* * *—"நாமம் பலவுமுடை" என்பதற்கு * விச்வம் விஷ்ணுர் வஷட்காரஃ என்று தொடங்கி ஓதப்படுகிற ஸஹஸ்ர நாமங்களை யுடையவர் என்பதாக இங்குப் பொருளன்று; இங்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்வது காண்மின்;—"இன்னானுக்கு அடியான் இன்னானுக்கு அடியான் என்று நீர் படைத்த பேர்களுக்கு எல்லையுண்டோ? சொல்லவேணுமோ? நீர் ஊர்ப் பொதுவல்லீரோ? நீர் நிரபேக்ஷரல்லீரோ?" என்று.

நாச்சியார் திருமொழியில் (4—11.) "நீடு நின்ற நிறைபுகழாய்ச்சியர்" என்றவிடத்திற்கு எம்பார் அருளிச்செய்யும் ரஸோக்திகளை இங்கு அநுஸந்திக்கவேணும். அதாவது—'நிறைபுகழாய்ச்சியர்' என்பதற்கு ஸாமாந்யமாகச் சிலர் என்ன பொருளுரைப்பரென்றால், நம்மைப்போலே * உண்டியே உடையே உகந்தோடித் திரிந்து பழுதே பலபகலும் போக்காமல் முச்சந்தியும் பகவத்விஷய சிந்தனையேயாய்ப் போது போக்குகிறார்கள் ஆய்ச்சிகள் என்ற காரணத்தினால் அவர்கட்குப் புகழ் நிறைந்திருக்குமென்று சொல்லுவர்களாம்; எம்பார் அருளிச்செய்யும் விசேஷார்த்தம் இதுவன்று; 'ஆய்ச்சியர்க்கு நிறைபுகழாவது க்ருஷ்ணனை இன்னாள் நாலுபட்டினி கொண்டாள், இன்னாள் பத்துப் பட்டினி கொண்டாள் என்னும் புகழ்நாணும்' என்பராம் எம்பார். இதன்கருத்து என்னென்னில்; "கூர் மழைபோல் பனிக்கு ஊதலெய்திக் கூசி நடுங்கி யமுனையாற்றில், வார்மணற் குன்றில் புலர நின்றேன் வாசுதேவாவுன் வரவு பார்த்தே" என்னும்படியே கண்ணபிரானுடைய வரவை எதிர்பார்த்திருப்பர்கள் தனித்தனியே பல மாதர்; இவனென்னென்னில் இப்படி பலபேர்களை எதிர்பார்த்திருக்கும்படிசெய்து விட்டுத் தன் மனத்துக்கினியாளான ஒருத்தியோடே கலந்திருந்து போது போக்குவன்; அப்போது, எதிர்பார்த்திருந்த மாதர்கள் 1. "இன்னமென்கையகத்தீங்கு ஒருநாள் வருதியேல் என்சினம் தீர்வன் நானே" என்கிறபடியே 'இனி அந்தக் கண்ணன் இங்கேற வருவனாகில் முகங்கொடுத்து ஒருவார்த்தையும் சொல்லக் கடவோமல்லோம்' என்று ஸங்கல்பம் செய்துகொண்டு அளவற்ற ரோஷத்துடனிருப்பர்கள்: பெருநாளைக்கு ஒழிந்தபோது ஒருநாள் கண்ணபிரான் அளவுகடந்த அன்பு பூண்டவன்போல ஆடிப் பாடிக்கொண்டு அவர்கள் முன்னே வந்து நிற்பன்; அப்போது அவர்கள் நாங்கள் முன்பு செய்துகொண்ட ஸங்கல்பத்தின்படியே முகங்கொடாமலே யிருப்பர்கள்; அப்போது இவன் கண்

1. பெருமான் திருமொழி 6—8.

http://acharya.org

ணிர்விட்டழுவதும் காலில் கும்பிடுவதுமாய் ஊணுமுறக்கமுமில்லாமல் பலநாட்களளவும் அவர்கள் வீட்டைவிட்டுப் போகாமல் இடைகழித் திண்ணையிலே கிடந்து படுவன்; இப்படி நாலுநாள் பட்டினி கிடந்தபிறகு ஒருத்தி மனமிரங்கி முகங்கொடுப்பள்; மற்றொருத்தி அவ்வளவிலும் மறம் மாறாதே இவன் எட்டுநாள் பட்டினிகிடந்த பின்பு முகங் கொடுப்பள்; மற்றுமொருத்தி அவ்வளவிலும் ஊடல் தீராதே இவன் பத்துநாள் பட்டினிகிடந்த பின்பு முகங் கொடுப்பள். இங்ஙனே பல பலநாள் பட்டினிகிடந்தாகிலும் அவ்வாய்ச்சிகள் பக்கலிலே இவன் முகம் பெற நினைப்பது அவர்களிடத்துள்ள தேஹகுணம் ஆத்மகுணம் முதலியவற்றாலான வைலக்ஷண்யத்தைப்பற்றியென்க. இதனால் அவர்களுடைய புகழ் வீறு பெறுமென்பதாம். இப்படி பலபல ஆய்ச்சிகளிடத்திலே பட்டினிகிடந்து முகம் பெறுவனும் கண்ணபிரான். ஆகவே, தனித்தனி இன்னாளுக்கடியான் இன்னாளுக்கடியானென்று இவன்படைத்த திருநாமங்கள் பல பலவாயின; அதைச்சொல்லுகிறது நாமம் பலவுமுடை என்று.

தாமத்துளபம் மிகநாறுகின்றீர்—விரஹதாபம் பொறுக்கமாட்டாமல் நீர் இங்கு ஸம்ச்லேஷிக்க வருகிறீராகில் விரஹாக்நியாலே துளபமாலை கருகிப்போயிருக்கவேணுமே? இப்படி பரிமளிக்க ப்ரஸக்தியுண்டோ? என்பதாகக் கருத்துக் காண்க.

ஏமத்து இதுவேன்?—ஏமம் என்று இரவுக்கும் பெயர்; காவலுக்கும் பெயர்; இரண்டு பொருளும் இங்குக்கொள்ளத் தகுவனவே. கட்டுங் காவலுமான இடத்திலே எதுக்கு வந்து சேர்ந்தீர்; இரவிலே நீர்தேடிப் போகவேண்டிய இடம் வேறாயிருக்க இங்கு எதுக்கு வந்தீர்? .... (௪)

சுற்றுங் குழல்தாழச் சுரிகையணைத்து *
மற்றும்பல மாமணிபொன்கொ டணிந்து *
முற்றம்புகுந்து முறுவல் செய்துநின்றீர் *
எற்றுக்கிதுவேன்? இதுவேன்? இதுவேன்னோ? (௫)

குழல்	திருக்குழல்களானவை	பொன்	பொன்னாபரணங்களையும்
சுற்றும்	பிடரியைச்சுற்றியும்	அணிந்துகொடு	சாத்திக்கொண்டும்
தாழ	தாழ்ந்தலைப்பெற்றும்	முற்றம் புகுந்து	(எங்கள் வீட்டு) முற்றத்திலே வந்து சேர்ந்து
சுரிகை	உடைவாளை	முறுவல்செய்து	புன்சிரிப்புச் சிரித்து
அணைத்து	தரித்துக்கொண்டும்	எற்றுக்குநின்றீர்	எதுக்காக நிற்கிறீர்?
மற்றும் பல	மற்றும் பலவகைப்பட்ட		இதுஎன் இதுஎன் இது என்?.
மா மணி	சிறந்த ரத்னாபரணங்களையும்		

* * *—இரண்டாம்பாட்டில் "கனாகமுழுத்து" என்றபடியே மயிர் முடித்து வந்ததில் ஈடுபடக் காணாமையாலே "கனிவண்டெங்கும் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள்மேல், மிளிரநின்று விளையாட" என்றாற்போலே குழல்களைத் தோள்களிலே தாழவிட்டான்; அதைக்கண்டு சொல்லுகிறாள் 'சுற்

http://acharya.org

றுங் குழல்தாழ' என்று. [சுரிகையணைத்து] இடுப்பிலே (அழகுக் குடலாகச்) சொருகும் கத்திக்குச் சுரிகை யென்று பெயர்; க்ஷுரிகா என்ற வடசொல் விகாரம்; அதை யணிந்துகொண்டு வந்தாயிற்று. இங்கே வியாக்கியான வாக்கியங் காண்மின் ;—"(சுரிகையணைத்து) உகப்பார்க்கும் உகவாதார்க்கும் கருவி ஒன்றாயிற்று; சத்ருக்களை இருதுண்டமாக விட்டு முடிக்கும்; அநுகூலரை அழகாலே கொல்லும்."

[மற்றும் பல இத்யாதி.] பலவகைப்பட்ட ரத்நபூஷணங்களையும் பொன்னாபரணங்களையும் சாத்திக்கொண்டு வந்தீர்; காலங் கடந்து வந்தீராகையாலே உள்ளே வரமாட்டாமையாலே முற்றத்தளவிலே நின்று 'புன்முறுவல் செய்து பார்ப்போம், இவள் அநுராகந்தோற்ற இருந்தாளாகில் உள்ளே புகுவோம்; ரோஷந்தோற்ற இருந்தாளாகில் சற்று நிதானிப்போம்' என்று கருதிப் புன் முறுவல் செய்து நிற்கிறீர்? எதுக்கு இவ்வளவு ப்ரயாஸப்படுகிறீர்? உம்முடைய திருவுள்ளத்துக்குப் பொருந்தினாரை விட்டிட்டு இங்கே வந்து எதுக்கு இத்தனை வருத்தப்படுகிறீர்?. .... (ரு)

ஆனாயரு மாநிரையு மங்கொழிய *
கூனாயதோர் கொற்றவில்லொன்று கையேந்தி *
போனாரிருந்தாரையும் பார்த்துப் புகுதீர் *
ஏனோர்கள் முன்னென்? இதுவென்! இதுவென்னோ! (சு)

ஆன் ஆயரும்	கோபாலர்களையும்	கை ஏந்தி	கையில் பிடித்துக்கொண்டு
ஆ நிரையும்	பசுக்கூட்டங்களையும்	போனார் இருந்தாரையும் பார்த்து புகுதீர்	போனவர்கள்யார், இருப்பவர்கள்யார் என்று பார்த்துக் கொண்டு வருகின்றீர்;
அங்கு ஒழிய	அங்கேவிட்டுவிட்டு,		
கூன் ஆயது	வளைந்திருப்பதாய்	ஏனோர்கள் முன் என்	பிரதிகூலர்களின் எதிரே எனிப்படி?
கொற்றம்	ஐச்வர்யஸூசகமான		
வில் ஒன்று	ஒருவில்லை		இது என் இது என்?—.

* * *—வாரீர் மறைநாபாவரே!, உமக்கு நாங்கள் லக்ஷியமோ? இடையரும் கன்றுகளும் பசுக்களும் கிடைத்துவிட்டால் அவற்றை ரக்ஷிப்பதேயன்றோ உமக்குப்பணி. அந்த ஆனாயரையும் ஆநிரையையும் விட்டுவிட்டு எதுக்கு இங்கு வந்தீர்? வருகிறவர் கொற்ற வில்லொன்றைக் கையிலேந்தி வந்தீர். 'ஆய்ச்சியிடம் போவதாகப் பிறர்க்குத் தெரிந்தால் அவமானமாகும்; ஏதோ வேட்டையாடப் போவதுபோல் பாவனை செய்வோம்' என்று கருதியன்றோ வில்லைக் கையிலேந்தி வந்தீர். எங்களிடம் வருவது உமக்கு அத்தனை அவமானமா யிருக்கின்றதோ? போகிறவர்களையும் இருப்பவர்களையும் கள்ள விழியிட்டுப் பார்த்துக்கொண்டே புகுகின்றீர்; இங்ஙனே கூசியாகிலும் எதுக்கு நீர் இங்குவரவேணும்? உம்முடைய வருகையினாலே ஏதேனும் பலன் கிடைப்பதாயிருந்தாலாகிலும் குற்றமில்லை; பழி கழிக்க வந்து போகிறீரித்தனை. இங்குள்ளவர்களோ ஒருவரும் விச்வாஸ

http://acharya.org

முடையாரல்லர்; 1. "அதுகண்டிவ்வூர் ஒன்று புணர்க்கின்றதே" என்னும்படியான விரோதிகளின் கண் வட்டத்திலே வீண்பழியை மாத்திரம் விளைப்பதான இவ்வருகை எதுக்கு? ஸ்வாமிந்! இங்குப் புகாதே யெழுந்தருளீர் என்கிறாள். (சு)

மல்லேபொருத திரடோள் மணவாளீர்! *,
அல்லேயறிந்தோம் நும்மனத்தின் கருத்தை *
சொல்லா தொழியீர் சொன்னபோதினால் வாரீர் *
எல்லே! யிதுவென்? இதுவென்! இதுவென்னோ! (எ)

மல்	மல்லர்களை
பொருத	போர்செய்தழித்த
திரள் தோள்	திரண்டபுஜங்களையுடைய
மணவாளீர்	மணவாளரே!
நும் மனத்தின் கருத்தை	உம்முடைய திருவுள்ளத்தை
அல்லே	(நேற்று) இரவே
அறிந்தோம்	தெரிந்துகொண்டோம்;
சொல்லாதொழியீர்	(இன்னபோது வருவேனென்றொரு குறிப்பிட்டுச்) சொல்லாமற் போகிறீரில்லை;
சொன்னபோதினால் வாரீர்	குறிப்பிட்டகாலத்தின்படி வருகிறீரில்லை;
எல்லே	அந்தோ!,

இது என் இது என் இது என்?—.

* * *—மல்லர்களோடே போர் செய்யும்படியான மிடுக்குடையீர் நீர்; உம்முடைய தோளோடே ஸம்பந்தம் பெறுகைக்கு அந்த முரட்டாண்களையன்றோ இட்டுப் பிறந்தவர்கள்; வீணாக நாங்கள் ஆசைப்பட்டுப் பயனென்? என்று ஆய்ச்சி சொன்னவாறே, 'அந்தோ! உன்னையொழிய வேறொரு புகல் அற்றவனான என்னை நோக்கி இப்படி வெட்டிதாக வார்த்தை சொல்லலாமோ? கம்ஸனாலே ஏவப்பட்ட மல்லர்கள் மேல்விழுந்து என்னைமுடிக்க வந்தார்களாகையாலே அவர்களைப் பொடிபடுத்த வேண்டி அவர்களோடே பொருதேனேயன்றி அவர்களை யணையவேணுமென்று ஆசைப்பட்டுச் செய்த காரியமொன்றுமில்லையே; எதுக்குவீணாக வருந்துகிறாய்?' என்று கண்ணபிரான்சொல்ல [அல்லேயறிந்தோம் நும்மனத்தின் கருத்தை] நேற்றிரவு ஸம்ச்லேஷிக்கிறபோதே நினைவு ஒன்றும் செயல் ஒன்றுமாயிருந்தது உமக்கு; செருப்புவைத்துத் திருவடி தொழுவாரைப் போலே வந்தீரென்பதை நேற்றிரவே நன்கறிந்துகொண்டோம் என்றாள் ஆய்ச்சி.

அதைக்கேட்ட கண்ணபிரான் 'வீணாக என்மேல் ஏதேனும் பழியிட்டுப் பேசுவது உனக்குத் தகுதியன்று; என்மனம் வேறுபட்டிருக்குமாகில் இப்போது நான் இவ்விடம் எதுக்கு வந்திருக்கவேணும்? நேற்றிரவு சொல்லிப் போனபடியே இப்போது நான் வந்து நிற்கச் செய்தேயும் பழியிடுவது பாங்கன்று' என்று சொல்ல; [சொல்லாதொழியீர் சொன்னபோதினால் வாரீர் எல்லேயிதுவென்?] பல்லாயிரம் தேவிமார்களையுடையீரான நீர் ஸமயம் குறித்துப்போவது பிசகு; உம்முடம்பு உம்மதாயிருந்தாலன்றோ குறிப்பிட்ட ஸமயத்தின்படியே

1. பெரியாழ்வார் திருமொழி 3—4—3.

http://acharya.org

வந்து சேர முடியுமென்று இடமாக ஸமயம் குறிப்பிட்டுப் போகலாம்; ஊர்ப் பொதுவான நீர் எதுக்கு ஸமயம் குறிப்பிட்டுப் போவது! பிரிந்து போகிறவர் வாயை மூடிக்கொண்டு போயிருந்தால் இத்தனை துடிப்புக்கு இடமிருக்குமோ? ஸமயம் குறித்துப்போனால் குறித்தபடி வரவேண்டாவோ? உம்முடைய பேச்சுக்கும் செயலுக்கும் சேர்த்தியில்லையே! என்கிறாள்.

(இரண்டாமடியில்) அல்—இரவு; நேற்றிரவு என்றபடி. .... (எ)

புக்காடரவம் பிடித்தாட்டும் புனிதீர்! *
இக்காலங்கள் யாமுமக் கேதோன்றுமல்லோம் *
தக்கார்பலர் தேவிமார் சாலவுடையீர் *
எக்கே! யிதுவென்? இதுவென்? இதுவென்னோ? (அ)

புக்கு	(பொய்கையிலே) குதித்து
ஆடு அரவம் பிடித்து	படமெடுத்தாடுகின்ற காளிய நாகத்தைப் பிடித்து
ஆட்டும்	ஆட்டிவாட்டின
புனிதீர்	பரிசுத்தரே!
இக் காலங்கள்	இப்போது
யாம்	நாங்கள்
உமக்கு	உமக்கு
ஏது ஒன்றும் அல்லோம்	ஒருசரக்காகவும் எண்ணப் படுவோமல்லோம்;

தக்கார்	உமக்குத் தகுந்திருப்பவர்களாய்
பலர்	அனேகர்களான
தேவிமார்	மஹிஷீவர்க்கங்களை
சால	மிகவும்
உடையீர்	உடையராயிருக்கின்றீர்;
எக்கே	இது என்ன கஷ்டகாலமே!

இது என் இது என் இது என்—.

* * *—ஸ்வாமிந்! உமக்கு ஓர் அஞ்ஜலி: உம்மை அணுகுவதற்கும் எனக்கு யோக்யதையில்லை காணும்? நீர் ஐந்தலை நாகத்தோடே எதிர்த்துப் போர்செய்ய வல்ல மிடுக்குடையீர்; உம்முடைய மிடுக்குக்கு நாங்கள் இலக்காகக்கடவோமோ? என்று ஆய்ச்சி சொன்னவாறே, 'அந்தோ! இப்படி ரோஷந்தோற்ற வார்த்தை சொல்லலாமோ? எனக்கு உங்களை யொழியவும் வேறே சிலருண்டோ' என்று கண்ணபிரான் பரம விநயந்தோற்றச் சொல்ல, [இக்காலங்கள் யாமுமக்கு ஏதோன்றுமல்லோம்] நீர் சொல்லுகிறது பண்டைக்காலத்து வார்த்தையன்றோ? இப்படி நீர் சொல்லுவதற்கு இப்போது என்ன ப்ரஸக்தியிருக்கிறது? உமக்கு இப்போது நாங்கள் ஒரு சரக்காகப் புலப்படுகிறோமோ? என்றாள். நான் வேறேயும் சில்வரை அறிவேனோ வென்றான் கண்ணபிரான். [தக்கார் பலர் தேவிமார் சாலவுடையீர்] என்கிறாள்.

* அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்திலே பிறந்த எங்களையேயோ நீர் கணிசித்திருப்பது? * மன்று நரகன்றன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து கன்னிமகளிர் தம்மைக் கவர்ந்த கடல்வண்ணரல்லீரோ? "பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு பௌவமெறி துவரை, எல்லாருஞ்சூழச் சிங்காசனத்தே யிருந்தானைக் கண்டாருளர்" என்றும் "பதினாறுமாயிரவர் தேவிமார் பணிசெய்யத் துவரை

http://acharya.org

யென்னுமதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர்" என்றுஞ் சொல்லுகிறபடியே நரகாசுரனைத் தொலைத்திட்டுக் கவர்ந்த பதினாறாயிரத் தொருநூற்றுக் கன்னிகைகள் உமக்குத் தகுதியான அழகுடையார் இல்லையோ? "ஸ்ரீமாந் ஸ்வாமி ஜ்யேஷ்டஸ் ஸர்வகுணோபேத: க்ருஷ்ண: நாகரஸ்த்ரீகதாஹ்ரூஷயோ ஹ்ருஷ்டத்ருணா வாமதுராம் ப்ராப்ய கோபிகா: கதம் கோகுலமேஷ்யதி? நகர ஸ்த்ரீ கலாலாபமது ச்ரோத்ரேண பாஸ்யதி." [வடமதுரைக்குச் சென்று கண்ணபிரான் எங்ஙனே மீண்டும் இடைச்சேரிக்குத் திரும்புவான்? நகரத்துப் பெண்களினுடைய இனிய பேச்சுக்களாகிற அமுதத்தைச் செவியினால் பருகிக்கொண்டு அவ்விடத்திலேயே யிருந்திடுவானத்தனை.] என்கிறபடியே உம்முடைய அபிநிவேசங்களை நாங்களறியோமோ? எதுக்குப் போலியான அன்பை ஏறிட்டுக்கொண்டு இங்ஙனே வந்து நடமாடுகிறீர்? கடக்க நில்லும் என்கிறாள். .... (அ)

ஆடியசைந்து ஆய் மடவாரொடு நீபோய் *
கூடிக்குரவைபிணை கோமளப்பிள்ளாய் *
தேடித்திருமாமகள் மண்மகள் நிற்ப *
ஏடி! யிதுவென்? இதுவென்? இதுவென்னோ? (கூ)

திரு மா மகள்	பெரியபிராட்டியாரும்	கூடி	கலந்து
மண் மகள்	பூமிப்பிராட்டியாரும்	ஆடி அசைந்து	ஆடியசைந்துகொண்டு
தேடி நிற்ப	தேடிக்கொண்டிருக்க,	குரவை பிணை	ராஸக்ரீடை நடத்தின
நீ போய்	அவர்களை உபேக்ஷித்துப் போய்	கோமளம் பிள்ளாய்	அழகிய பிள்ளாய்!,
ஆய் மடவாரொடு	இடைப்பெண்களோடே	இது என்	இது என்னகாரியம்!,
		ஏடி	வாசாய் தோழீ!
			இது என் இது என்?—,

* * *—'திருமாமகள் மண்மகள் தேடிநிற்ப ஆய்மடவாரொடு ஆடியசைந்து போய்க் குரவைபிணை கோமளப்பிள்ளாய்!' என்று கண்ணனை விளித்து ஒரு வார்த்தை சொல்லத் தொடங்கினாள் ஆய்ச்சி; அதற்குள்ளே கண்ணபிரான் அவள் சொல்லப்போகிற வார்த்தையைத் தெரிந்துகொண்டு 'நங்காய்! என் சாயத்தையெல்லாம் வெளியிட வேண்டா, உன்னைக் கும்பிடுகிறேன்' என்று அவளது காலைப் பற்றிக்கொண்டான்; 'இவனை உள்ளே புகவிட்ட தோழியையன்றோ பொடியவேண்டும்' என்று கருதி அவனை நோக்கி வார்த்தை சொல்லுகை தவிர்ந்து 'ஏடீ யிதுவென் இதுவென் னிதுவென்னோ?' என்று தோழியை நோக்கியுரைத்துத் தலைக்கட்டினாளாயிற்று.

திருமகளும் மண்மகளும் உன்னைத் தேடி நிற்கும்படியாக அவர்களை வஞ்சித்துவிட்டு ஆடியசைந்துகொண்டு சில ஆய்மடவாரோடு கூடிச்சென்று குரவைக் கூத்தாடிவிட்டு அவர்களையும் வஞ்சித்து என்பால் அன்புள்ளவன்போல இப்

http://acharya.org

போது இங்கு வருகின்றாய்; உடனே என்னையும் வஞ்சித்து ஓடப்போகிறாய்; நீ ஒருவர்க்கும் மெய்யனல்லை; ஆகையாலே கடக்க நில்—என்றவாறு.

"கருமலர்க் கூந்தலொருத்தி தன்னைக் கடைக்கணித்து ஆங்கே ஒருத்தி தன்பால் மருவி மனம்வைத்து மற்றொருத்திக் குரைத்து ஒரு பேதைக்குப் பொய் குறித்துப், புரிகுழல் மங்கையொருத்திதன்னைப் புணர்தி அவளுக்கும் மெய்யனல்லை, மருதிறுத்தாய்! உன் வளர்த்தியோடே வளர்கின்றதாலுன்றன் மாயைதானே" என்ற பெருமாள் திருமொழிப் பாசுரம் இங்கு நினைக்கத்தக்கது.

குரவை பிணைதல்—ஆய்ச்சியரோடு கைகோத்தாடல்; ராஸக்ரீடையெனப் படும்.

கோமளப்பிள்ளாய்! என்று க்ருஷ்ணனை விளித்து 'ஏதுக்கு இங்குவந்தாய்?' என்றுசொல்ல நினைத்த ஆய்ச்சியானவள் "இந்த வார்த்தையும் நாம் இவன் முகத்தை நோக்கிச் சொன்னோமாக வொண்ணாது; 1. 'மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி விடைதான் தருமேல் மிக நன்றே' என்றாற்போலே இது தன்னையும் இவன் பெருமையாக நினைத்திடுவனாகையாலே இவன் முகம்பார்த்து நாம் வார்த்தை சொன்னதாக இருக்கவொண்ணாது என்[illegible]றி $ "த்ருணமந்தரதஃ க்ருத்வா = த்ருணமந்தரதஃ க்ருத்வா" என்ற கணக்கிலே தோழியின் முகத்தை நோக்கிக் குறை வார்த்தையையும் கூறினளாயிற்று என்று அழகிய மணவாளச் சீயர் உபந்யஸித்தருளும்படி. .... (க)

அல்லிக்கமலக் கண்ணனை அங்கோராய்ச்சி *
எல்லிப்போழுதூடிய ஊடற்றிறத்தை *
கல்லின்மலிதோள் கலியன் சொன்னமாலை *
சொல்லித் துதிப்பாரவர் துக்கமிலரே. (க0)

அல்லி கமலம் கண்ணனை	தாதுகளையுடைய தாமரைப் பூப்போன்ற திருக் கண்களையுடைய கண்ணபிரானைக்குறித்து
அங்கு	திருவாய்ப்பாடியில்
ஓர் ஆய்ச்சி	ஓரிடைச்சி
எல்லி பொழுது	இராப்பொழுதிலே
ஊடிய	ப்ரணயரோஷத் தோற்றப்பேசின
ஊடல் திறத்தை	வெறுப்புவார்த்தை விஷயமாக,
கல்லில் மலி	மலையைக்காட்டிலும் அதிசயித்த (வலிமை கொண்ட)
தோள்	திருத்தோள்களையுடையரான
கலியன்	திருமங்கையாழ்வார்
சொன்ன	அருளிச்செய்த
மாலை	இச் சொல்மாலையை
சொல்லி	வாயாரச்சொல்லி
துதிப்பார் அவர்	எம்பெருமானை ஏத்துமவர்கள்
துக்கம் இலர்	துன்பமற்று வாழப் பெறுவர்கள்.

1. நாச்சியார் திருமொழி 13—9.

$ அசோகவனத்தில் பிராட்டி இராவணனோடே நேரில் பேசாமல் ஒரு துரும்பை நடுவிலிட்டுப் பேசினமை.

http://acharya.org

* * *—ஆய்ச்சி இங்ஙனே ப்ரணயரோஷம் தோற்றப் பேசின பேச்சுக்களும் கண்ணபிரானுடைய திருவுள்ளத்திற்குப் பரமாநந்தத்தை விளைவிப்பனவாயிருந்தன என்பதைத் தோற்றுவிக்கவேண்டி ‘அல்லிக் கமலக்கண்ணனே’ எனப்பட்டது; திருவள்ளுவர் குறளில்—“புலத்தலில் புத்தேள் நாடுண்டோ நிலத்தொடு, நீர் இயைந்தன்னாரகத்து” [நிலத்துடன் நீர் கலந்தாற்போன்ற கணவரிடம் ஊடுவதைப்போல நமக்கு இன்பந்தருவதொரு வான்நாடுண்டோ? இல்லை.] என்றும், “உணலினும் உண்டதறல் இனிது, காமம் புணர்தலின் ஊடல் இனிது” [உண்பதிலும் உண்ட உணவு அறுதல் இனிது; அதுபோலக் காமத்திற்கு, புணர்ச்சியைக் காட்டிலும் ஊடுவது இனிது] என்றும் சொல்லுகிறபடியே புணர்ச்சியைக் காட்டிலும் ஊடல் இன்பம் பயக்குமாதலால் நெஞ்சிலுண்டான மகிழ்ச்சி திருக்கண்களில் புறவெள்ளமிட்டமைபற்றி அல்லிக் கமலக் கண்ணனெனப்பட்டானென்க.

அவ்வூடல் திறத்தை பெடுத்துரைக்குமிந்தத் திருமொழியைக் கற்பவர்கள் ஒரு துக்கமுமின்றி இன்பமாக வாழப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று. .... (௧௰)

அடிவரவு:—காதில் தவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனையர் மல்லை புக்கு ஆடி அல்லி புள்ளூரு.

எட்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—ஒன்பதாந்திருமொழி,

புள்ளுருவாகி நள்ளிருள் வந்த.

உரையவதாரிகை:— திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகிறது இத்திருமொழி. ஸர்வேச்வரனுகிற நாயகனோடே கலந்து பிரிந்து பிரிவாற்றுதாளான பரகாலநாயகியின் கடலில் மிக்க காதலையும், அக்காதலுக்குத் தக்கபடி அவன் றான் வந்து கலவி செய்யாதே உபேக்ஷித்திருக்கிறபடியையும் நோக்கின திருத்தாயார் எம்பெருமானை நோக்கி 'பிரானே! இவளை நீ இங்ஙனே நோவுபடவிட்டிருப்பது தகுதியோ? பரத்வத்தின்மேலெல்லையிலே நிற்கிற நமக்கு இப்பெண்பிள்ளை ஒரு பொருளோ? என்று அலக்ஷியமாக இவளை நினைத்திருக்கிறாய் போலும்; இதுதானோ உன் பெருமைக்குத் தகுவது? என்று ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு பழமொழியை யெடுத்துரைத்துப் பேசுகிற முகத்தாலே ஆழ்வார் தம்முடைய காதலின் மிகுதியையும், உபேக்ஷியாமல் கடுகக் கைப்பற்றியாகவேணுமென்பதையும் விண்ணப்பம் செய்கிறாராயிருக்கிறது.

திருவிருத்தத்தில் (33) "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும், இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர், ஈங்கோர் பெண்பால் பொருளோவெனு மிகழ்வோ இவற்றின் புறத்தாளென்றெண்ணோ தெருளோமரவணையீர்! இவள் மாமை சிதைக்கின்றதே." [எம்பெருமானே! நீரோ ஸாமாந்யமானவரல்லீர்; திருவாழியைக் கருவியாகக் கொண்டு எல்லாவுலகங்களிலும் துஷ்டர்களை நிரஸித்து சிஷ்டர்களை வாழ்விப்பதையே விரதமாகக் கொண்டிருக்கிறீர்; இப்படி ஸர்வ ரக்ஷகரான நீர் இவளையும் ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருந்தும் இவளொருத்தியை மாத்திரம் பாதுகாவாது கைவிட்டிருக்கிறீர்; 'இவள் நம்மால் அவசியம் காக்கப்பட வேண்டியவளல்லள்; அப்படிப்பட்ட தகுதி இவளிடத்து ஒன்றுமில்லை' என்றிகழ்ந்து கைவிட்டீரோ? அன்றி நம்மால் காக்கப்படும் உலகங்களுக்கு இவள் உட்பட்டவளல்லள்; வெளிப்பட்டவள்' என்று கருதிக் கைவிட்டீரோ?] என்ற பாசுரம் இத்திருமொழிக்கு ஒருபுடை ஒப்புநோக்கத்தக்கது. .... *

புள்ளுருவாகி நள்ளிருள்வந்த பூதனைமாள * இலங்கை
ஒள்ளெரிமண்டி யுண்ணப்பணித்த ஊக்கமதனை நினைந்தோ? *
கள்ளவிழ்கோதை காதலுமெங்கள் காரிகைமாதர் கருத்தும் *
பிள்ளைதன்கையிற் கிண்ணமேயோக்கப் பேசுவதெந்தை பிரானே! (க)

http://acharya.org

எந்தை பிரானே	எம்பெருமானே!
எங்கள் கள் அவிழ் கோதை காதலும்	தேனொழுகுகின்ற மயிர் முடியையுடையளான என் மகளின் ஆசையையும்
காரிகை மாதர் கருத்தும்	(அவ்வாசையைப் பழிக்கின்ற) அழகியாருடைய கருத்தையும்
பிள்ளை தன் கையில் கிண்ணமே ஒக்க பேசுவது	சிறுபிள்ளையின் கையிலுள்ள கிண்ணத்தை உபேக்ஷித்திருக்குமா போலே உபேக்ஷித்திருப்பதானது,
புள் உரு ஆகி	(சிறுகுழந்தைகளை அணுகச் செய்யவல்ல) பறவையினுருவத்தையுடையவளாகி
நள் இருள்	நடுநிசியிலே
வந்த	(முலைகொடுத்துக் கொல்ல) வந்த
பூதனை	பூதனை
மாள	மாளும்படியாகவும்
இலங்கை	லங்காபுரியை
ஒள் எரி மண்டி உண்ண	ஜ்வலிக்கிற அக்னியாபித்து புஜிக்கும்படியாகவும்
பணித்த	செய்தருளப்பான
ஊக்கம் அதனை	பிடிக்கை
நினைந்தோ	திருவுள்ளம்பற்றியோ?

* * *—"பிள்ளை கையிற் கிண்ணம் மெள்ளவே கொள்ளலாம்" என்ற பழமொழி இப்பாசுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மிக்க வலிமையுள்ளவர்கள் பொற்கிண்ணமொன்றைக் கவர்ந்தால் அதை மீட்டுக் கைப்பற்றுவதற்கு ப்ரயாஸங் கொள்ளவேணும்; அங்ஙனல்லாமல் சிறு பிள்ளை கவர்ந்த கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேணுமானால் அதற்காக ப்ரயாஸப்படவேண்டுவதில்லை; நினைத்தபோது எளிதாக வாங்கிக்கொள்ளுகிறோமென்று ஆறியிருக்கும்படியாக இருக்குமேயன்றிப் பதறவேண்டியிராது; அதுபோல இப்பரகாலநாயகி விஷயத்தில் நீ நினைத்திருக்கிறாயென்றது, இவளை அவ்விதமாக அலக்ஷியம் செய்திருக்கிறாயென்றபடி.

எங்கள் கள்ளவிழ்கோதை காதலையும் அலக்ஷியம் செய்கிறாய், காரிகை மாதர் கருத்தையும் அலக்ஷியம் செய்கிறாய் என்று பின்னடிகளிற் கூறப்படுகின்றது. அதாவது, இவளுடைய கரைபுரண்ட காதலை நோக்கி நீ பதறியோடி வந்து இவளைக் கைப்பற்றவேணும்; அது செய்கின்றிலை; வகுத்த விஷயத்தில் காதல் கொண்டவிது நன்றே என்று உகந்திடாமல் இதனைப் பழிக்கின்ற ஊரவர் பழிச்சொற்களை நோக்கியாகிலும் பதறியோடிவந்து இவளைக் கைப்பற்றி; பழிப்பவர்களின் முகத்தைப் பங்கம் செய்திடவேணும்; அதுவும் செய்கின்றிலை; இரண்டையும் அலக்ஷியம் செய்திருக்கிறாய் என்றவாறு.

இப்படி இவளை உபேக்ஷித்திருப்பதற்குக் காரணம் யாது? 1. "நல்ல வென்தோழீ! நாகணை மிசை நம்பரர், செல்வர் பெரியர், சிறுமானிடவர் நாம் செய்வதென்?" என்னும்படியான உன்னுடைய பெருமைகளைப் பாராட்டியோ

1. நாச்சியார் திருமொழி—10—10.

இவளை இங்ஙனே அலக்ஷியஞ் செய்திருக்கிறது? என்கிறாள் முன்னடிகளில். பூதனையை முலையுண்டு முடித்த பெருமிடுக்குடைய நமக்கு இவள் ஈடோ? இராவணனை முடித்த மஹாவீரனான எனக்கு இவள் ஏற்றிருப்பளோ? என்று திருவுள்ளம்பற்றியிருக்கிறாய் போலும். க்ருஷ்ணாவதாரத்திலும் ராமாவதாரத்திலும் காட்டின பராக்கிரமங்களை நினைத்துச் செருக்கியிருக்கிறாய் போலும் என்றவாறு.

புள்ளுருவாகிவந்த பூதனை=பூதனையானவன் பகாஸுரனைப்போலே பறவையினுருவங் கொண்டு வந்தாளென்று சொல்லுகிறதன்று; மேலே ஸஞ்சரித்துக் குழந்தைகளை அலுங்கப்பண்ணும் சில பறவைகளுண்டு; அப்படிப்பட்டவளாய் வந்தாளென்று இவளுடைய கொடுமையைக் குறிப்பிட்டவாறு.

புள்ளுருவாகி நள்ளிருள் வந்த பூதனை மாளப்பணித்த ஊக்கமதனை நினைந்தோ? இலங்கை யொள்ளெரி மண்டியுண்ணப் பணித்த ஊக்கமதனை நினைந்தோ? என்று இரண்டு வாக்யார்த்தமாக விவக்ஷிதம். இனி, 'புள்ளுருவாகி' என்பதைப் பூதனைக்கு விசேஷணமாக்காதே எம்பெருமானுக்கே விசேஷணமாக்கி, புள்ளுருவாகிப் பணித்த ஊக்கமதனை நினைந்தோ? நள்ளிருள் வந்த பூதனை மாளப்பணித்த ஊக்கமதனை நினைந்தோ? இலங்கை யொள்ளெரி மண்டியுண்ணப்பணித்த ஊக்கமதனை நினைந்தோ? என்று மூன்று வாக்யார்த்தமாக நிர்வஹித்தலுமாம். இப்பக்ஷத்தில் புள்ளுருவாகி என்று ஹம்ஸாவதாரம் செய்தருளினபடியைச் சொல்லுகிறது. ஹம்ஸாவதாரமும் க்ருஷ்ணாவதாரமும் ராமாவதாரமும் செய்தோமென்கிற செருக்குக் கொண்டோ இவளை உபேக்ஷிக்கிறாய் என்றதாயிற்று.

ஊக்கம்—பராக்ரமம், அஹங்காரம், மிடுக்கு.

இலங்கை ஒள்ளெரி மண்டி உண்ண=இராமபிரான் இலங்கை வந்து சேர்வதற்கு முன்பு அக்நி லங்கையில் ஸ்வேச்சையாகப் புகுந்தறியான்; சோறு சமைப்பது, வெந்நீர் காய்ச்சுவது முதலிய காரியங்களுக்கு வேண்டியமட்டுமே இராவணனது கட்டளைக்குப் பணிந்து புகுந்திடுவன்; இராமபிரானுடைய திருத்தோள்களை அண்டைகொண்ட பின்பே அந்த அக்நி இலங்கையில் ஸ்வேச்சையாகத் திரிய வல்லவனாயின னென்க.

[பிள்ளை தன்கையில் கிண்ணமே யொக்கப் பேசுவது] "வலுவான்கள் கையில் கிண்ணியிறே வாங்க அரிது; வாலராயிருப்பார் கையிலது நினைத்த போது வாங்குகிறோமென்று அறியிருக்கிறாப்போலே அறியிருக்கிறாயோ?" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

ஈற்றடியில் **பேசுவது** என்றது, வாய்விட்டுச் சொல்லுகிறபடியைக் கூறுவதன்று; நெஞ்சில் நினைக்கிறபடியைக் கூறுவதாமத்தனை; இலக்கணையால். சிறிய திருமடலில் "கையாதுவும் சோரர் வலம்புரியே யென்றாள்" என்றவிடத்து 'என்றாள்' என்பதற்கு 'என்று நெஞ்சால் நினைத்தாள்' எனப்பொருள் கொள்வது

http://acharya.org

போல. இங்ஙனே மற்றும் பல பிரயோகங்களுமுண்டு. "உய்யவுமாங் கொலோ வென்று சொல்லி" இத்யாதிகள் காண்க. ... . (க)

மன்றின்மலிந்து கூத்துவந்தாடி மால்விடை யேழுமடர்த்தாயர் *
அன்றுநடுங்க வாநிரைகாத்த ஆண்மைகொலோ! வறியேனான் *
நின்றபிரானே! நீள்கடல்வண்ணா! நீயிவள் தன்னை நின்கோயில் *
முன்றிலெழுந்த முருங்கையிற்றேனா முன்கைவளை கவர்ந்தாயே. (உ)

நின்ற பிரானே	திருமலையில் நின்றருளும் பிரானே!
நீள் கடல் வண்ணா	பெரியகடல்போன்ற வடிவையுடையவனே!
நீ	நீ
நின் கோயில் முன்றில் எழுந்த முருங்கையில் தேன் ஆ	தன் கோயில் முற்றத்திலுண்டான முருங்கை மரத்தின் தேனை எளிதாகக் கவருமாபோலே
இவள் தன்னை	இப்பெண்மகளினுடைய
முன் கை வளை	முன்கையிலுள்ள வளைகளை
கவர்ந்தாயே	கைக்கொண்டாயே,

(இ-த)

மன்றில் மலிந்து	நாற்சந்தியிலே பொருந்தி நின்று.
உவந்து	திருவுள்ளமுகந்து
கூத்து ஆடி	(குடக்கூத்து முதலிய) கூத்துகளையாடியும்
மால் விடை ஏழும் அடர்த்து	கரியகாளைகளேழையும் வலியடக்கியும்,
அன்று	(இந்திரன் கல்மாரி பொழிந்த) அக்காலத்திலே
ஆயர் நடுங்க	இடையர்கள் நடுங்கிநிற்க
ஆநிரை	பசுக்கூட்டங்களை
காத்த	ரக்ஷித்தோமென்கிற
ஆண்மை கொலோ	மேனாணிப்பினாலோ?
நான் அறியேன்	என்னகாரணமென்று நான் அறிகின்றிலேன்.

* * *—நாற் சந்திகளிலே பெண்கள் கண்குளிர நின்று குடக்கூத்தாடி ஸ்த்ரீ ரத்னங்கள் பலவற்றையும் மயக்கி ஆண்டுகொண்ட நமக்கு இந்தப் பரகால நாயகி யொருத்தி ஒரு சரக்கோ? என்று நினைக்கிறாய் போலும்; கொழுத்துச் செருக்கியிருந்த ஏழு ரிஷபங்களையும் வலியடக்கி நப்பின்னைப் பிராட்டியை மணந்துகொண்ட நமக்கு இவள் ஈடோ? என்று நினைக்கிறாய் போலும். கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்தி நின்று கோவலரையும் கோநிரையையும் காத்தருளின பெருமை வாய்ந்த நமக்கு இவளொருத்தியை உபேக்ஷிக்குமளவால் என்ன குணக்கேடு வந்திடப்போகிறது! என்று நினைக்கிறாய் போலும், என்றாள் முன்னடிகளில் இருந்தாய்; அதைக் கேட்ட எம்பெருமான் 'இவளை நான் உபேக்ஷித்ததாகச் சொல்லுதற்கு யாதுகாரணம்? எதைக் கொண்டு நான் இவளை உபேக்ஷித்தேனாகச் சொல்லுகிறாய்?' என்று கேட்க, இவள் தன்னை முன் கைவளை கவர்ந்தாயே! என்கிறாள். கையில் வளை நிற்கமாட்டாதபடி இவளை ஒரு துரும்புபோலே இளைக்கச் செய்துவிட்டாயே!, இது கொண்டு சொல்லுகிறேனென்றபடி.

நின்கோயில் முன்றிலெழுந்த முருங்கையில் தேனா=நெடுந்தூரத்திலிருப்பதன்றியே ஸமீபத்தில் வாசலிலே உள்ளதான ஒரு மரத்தில் தேன் இருந்தால்

அதனை எப்படி எளிதாகக் கவரலாகுமோ, அப்படி எளிதாக இவளது கைவளைகளைக் கவர்ந்து கொண்டாயே! என்றவாறு.

மன்றில் மலிந்து கூத்தாடின ஆண்மையை நினைந்தோ, மால்விடை யேழுமடர்த்த ஆண்மையை நினைந்தோ, ஆநிரை காத்த ஆண்மையை நினைந்தோ நீ இவள் தன்னை முன் கைவளை கவர்ந்தாய்? என விரிக்க. .... (உ)

ஆர்மலியாழி சங்கொடுபற்றி ஆற்றலை யாற்றல் மிகுத்து *
கார்முகில்வண்ணா! கஞ்சனைமுன்னங்கடந்த நின்கடுந்திறல் தானோ *
நேரிழைமாதை நித்திலத்தொத்தை நெடுங்கடலமுதனையாளை *
ஆரெழில்வண்ணா! அங்கையில்வட்டாம் இவளெனக் கருதுகின்றாயே.

கார் முகில் வண்ணா	காளமேகநிறத்தனே!
ஆர் எழில் வண்ணா	மிக்க அழகுடையவடிவு படைத்தவனே!,
நேர் இழை	நேர்மையான ஆபரணங்களை யுடையவளாய்
நித்திலம் தொத்தை	முத்துமாலை போன்றவளான
நெடு கடல் அமுது அனையாளை	பெரியகடலில் தோன்றிய அம்ருதம் போன்றவளான
மாதை	இப்பெண்பிள்ளை விஷயத்திலே
இவள் அங்கையில் வட்டு ஆம் என கருதுகின்றாய்	'உள்ளங்கையிலுள்ள கருப்புக்கட்டிபோன்றவளாயிவள்' என்று நினைத்திருக்கிறாய்;

(இப்படி நினைத்திருப்பதானது)

முன்னம்	முன்பு
ஆர் மலி	கூர்மை மிக்க
ஆழி	திருவாழியையும்
சங்கொடு	திருச்சங்கையும்
பற்றி	கையிலேந்தி, (அவதரித்து)
ஆற்றலை	மிடுக்கை
ஆற்றல் மிகுத்து	ஆறுதல் மிகும்படியாக்கி [அடக்கி]
கஞ்சனை	கம்ஸனை
கடந்த	தொலைப்பதற் குறுப்பாயிருந்த
நின் கடு திறல் தானோ	உன்னுடைய வலியதான பராக்ரமத்தை நினைத்தோ?

* * *—விலக்ஷணமான ஆபரணங்களை யணிந்துள்ளவளும், அணைத்தால் தாபமெல்லாம் ஆறும்படியாக முத்துக்கொத்து போல் குளிர்ந்த வடிவுடையவளும், கடலில் தோன்றிய அமுதம்போல இனியளுமான இப்பரகால நாயகியை ஒரு சரக்காகவே மதிக்கின்றாயில்லையே!, இஃது ஏன்? நாம் சங்கு சக்கரங்களைக் கையிலேந்தியுள்ளோம் என்கிற பெருமையைப் பாராட்டியோ? கம்ஸனை முடித்த மிடுக்குடைய நமக்கு இவள் ஒரு சரக்கோ! என்று நினைத்தோ? சொல்லாய் பிரானே! என்கிறாள்.

ஆர்மலியாழி = ஆர்—கூர்மை. இனி, ஆர் என்று அரங்களுக்கும் பெயருண்டாதலால் அரங்கள் நிரம்பிய சக்கரம் என்றுமாம். [ஆற்றலை ஆற்றல் மிகுத்து] முதலிலுள்ள 'ஆற்றல்' என்பதற்குப் பராக்ரமமென்று பொருள். அதற்குமேல், ஆற்றலாவது—ஆறுதல். ஆற்றல் மிகுத்து—ஆறுதல் மிகும்படி

http://acharya.org

யாகச் செய்து; பராக்ரமத்தை ஆறுதல் மிகும்படியாகச் செய்தலாவது—உலகத்தையெல்லாம் ஸம்ஹரிக்கவல்லதான பராக்ரமத்தை ஒரு புழுவான கம்ஸனளவிலே அடக்கி உபயோகப்படுத்தின படியைச் சொன்னவாறு. தனக்குள்ள பராக்ரமத்தை முழுவதும் செலுத்தாமல் அதில் ஸ்வல்ப பாகங்கொண்டே கம்ஸனைக் கடிந்தமை கூறியவாறு. இங்கே வியாக்யான வாக்யங் காண்மின்;—“(ஆற்றல் மிகுத்து) ஒரு ஜகத்ஸம்ஹாரத்துக்குப் போந்திருக்கச் செய்தே கம்ஸனளவிலே யாம்படி அமைத்து.” என்பதாம்.

[அங்கையில்வட்டாம் இவளெனக் கருதுகின்றாய்] “கையிலிருந்த கரும்புக் கட்டி தின்னவுமாய்ப் போகடவுமாயிருக்குமிறே; அப்படியே நினைத்திருக்கிறாயோ இவளையும்” என்பது வியாக்யானம். உலகத்தில் எல்லார்க்கும் கைப்படாத பொருள்களில் விருப்பம் பெருகிச் செல்லுமேயன்றி, அப்பொருள் தானே கைப்பட்டுவிட்டால்பிறகு அதில் உபேக்ஷையே உண்டாகும். அதுபோல இப்பரகாலநாயகியும் கைப்பட்ட சரக்காதலால் இவளை அலக்ஷியம் செய்கிறாய் போலும் என்கை.

இப்பாட்டில் எம்பெருமானுக்கு ‘கார்முகில்வண்ணா!’ என்றும் ‘ஆசெழில் வண்ணா!’ என்றும் இரண்டு ஸம்போதநங்கள் உள்ளன; பரகாலநாயகியைப்பற்றிச் சொல்லும்போது மூன்றாமடியில் மூன்று விசேஷணங்கள் இடப்பட்டன; இந்த வாசியினால் தெரிவதாவது, ‘உன்னைக் காட்டிலும் இவள் மிக்க வீறுபெற்றவளாதலால் இவளை நீ அலக்ஷியம் செய்யலாகாது’ என்பதாம்.

இராமபிரானையும் பிராட்டியையும் திருமணப்பந்தலிலே கண்டவர்கள் “𑌤𑍁𑌲𑍍𑌯𑌶𑍀𑌲𑌵𑌯𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌂 𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌭𑌿𑌜𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂। 𑌰𑌾𑌘𑌵𑍋𑌽𑌰𑍍𑌹𑌤𑌿 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌤𑌂 𑌚𑍇𑌯𑌮𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾—துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம், ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா” என்றார்களாம். அதாவது, இந்த திவ்ய தம்பதிகள் பரஸ்பரம் எல்லா லக்ஷணங்களும் ஒத்திருக்கப் பெற்றிருக்கிறார்கள்; இராகவனுக்கு ஏற்ற மனைவி ஸீதை வாய்த்தாள்; ஸீதைக்கு ஏற்ற கணவன் இராகவன் வாய்த்தான் என்று சொல்லும்போது ஒரு விசேஷார்த்தம் மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; பிராட்டிக்கு ‘அஸிதேக்ஷணா’ என்றொரு விசேஷணம் அதிகப்படியாக இட்டமையாலும் வைஷம்யம் பண்ணினமையாலும், “இராகவனுக்கு மாத்திரம் நல்ல பாக்கியமே சிறந்த மனைவி கிடைக்கப்பெற்றான்; ஆனால் ஸீதைக்கு அவ்வளவு பாக்கியமில்லை; இவளுடைய கண்ணழகுக்கு ஏற்றவாறு இன்னமும் சிறந்த அழகுவாய்ந்த கணவன் கிடைத்திருக்கலாம்; ஆனாலும் குற்றமில்லை; கூடியமட்டும் ஏற்ற கணவனே” என்பதான அபிப்ராயம் தோற்றுகின்றது. கம்பராமாயணத்திலும் இங்ஙனே யுள்ளது; மிதிலாபுரியில் திவ்ய தம்பதிகள் ஊர்வலம் வரக்கண்டவர்கள் “நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரநயனம் வேண்டும்” என்று சிலர் சொன்னார்கள்; (அதாவது—இராமபிரானழகைக் காண்பதற்குப் பிராட்டிக்கு இவ்விரண்டு கண்

http://acharya.org

சன் போராது; ஆயிரங் கண்கள் வேணும் என்கை.) அதைக்கேட்ட மற்றுள்ளவர்கள் "கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கு மன்னமே நயாம்" என்றார்கள்; (அதாவது—வஞ்சிக் கொம்புபோன்ற பிராட்டியினழகைக் காணவேண்டில், காண்கிற ஒவ்வொரு நிமிஷத்துக்கும் இராமபிரான் ஆயிரங்கண் படைக்கவேணும் என்கை.)

அவ்விதமாகவே, உன்னிலும் அழகு மிக்கவளான இவளை நீ உபேக்ஷித்தல் தகாதென்கிறாள் திருத்தாய். .... (ரு)

மல்கியதோளும் மானுரியதளு முடையவர் தமக்குமோர்பாகம் *
நல்கியநலமோ? நரகனைத்தொலைத்த கரதலத்தமைதியின் கருத்தோ *
அல்லியங்கோதை யணிநிறங்கொண்டுவந்து முன்னேநின்று போகாய் *
சொல்லியென்? நம்பி! யிவளைநீயுங்கள் தொண்டர்கைத் தண்டென்றவாறே.

நம்பீ	ஸ்வாமிந்!,
அல்லி அம் கோதை	செல்விமாலையினாலே அழகு பெற்ற மயிர் முடியையுடையளான இப்பெண்பிள்ளையினுடைய
அணி	விலக்ஷணமான
நிறம்	மேனி நிறத்தை
கொண்டு	அபஹரித்தது மன்றி
முன்னே, வந்து நின்று போகாய்	உருவெளிப்பாட்டாலே எப்போதும் இவள் கண்ணெதிரே தோற்றிப் புறம்பு போகிறாயில்லை;
நீ	நீ
இவளை	இப்பெண்பிள்ளையை
உங்கள் தொண்டர் கை தண்டு என்ற ஆறு	அடியார் கையிலுள்ள தடியைப்போலே நினைத்திருக்கும் விதம் என்னே!;
சொல்லி என்	(இவள் திறத்திலே உனக்கு உள்ள உபேக்ஷையைப்பற்றி விரிவாகச்) சொல்வதனால் என்ன பயன்?

(இப்படி உபேக்ஷித்திருப்பதானது)

மல்கிய தோளும்	பணைத்த தோள்களையும்
மான் உரி அதளும்	மானின் உரிக்கப்பட்ட தோலையும்
உடையவர் தமக்கும்	உடையவரான சிவபிரானுக்கும்
ஓர் பாகம்	திருமேனியில் ஒரு பகுதியை
நல்கிய	(இடமாகக்) கொடுத்திருக்கிறோமென்கிற
நலமோ	பெருமையை நினைத்தோ? (அன்றி)
நரகனை	நரகாஸுரனை
தொலைத்த	கொன்றொழிப்பதற்கிடான
கரதலத்து	கையிலுள்ள
அமைதியின் கருத்தோ	பிடிக்கை நினைத்தோ?

* * *—அஹங்காரியான ருத்ரனுக்கும் நாம் உடம்பிலே ஒருகூறு கொடுத்திருக்கிறோமென்கிற சீலகுணத்தை நினைத்தோ, நரகாசுரனை முடித்த பிடுக்குடையோமென்று கையில் பிடிக்கை நினைத்தோ இவளை நீ உபேக்ஷித்திருக்கிறாய் என்கிறாள்.

http://acharya.org

எம்பெருமான் வராஹாவதாரஞ் செய்து பூமியைக் கோட்டாற்குத்தியெடுத்த பொழுது, எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமிதேவிக்குக் குமாரனாய்ப் பிறந்தவனும், அஸமயத்தில் சேர்ந்து பெறப்பட்டதனால் அஸுரத்தன்மை பூண்டவனுமான நரகனென்பவன் ப்ராக்ஜோதிஷமென்னும் பட்டணத்திலிருந்துகொண்டு ஸகல ப்ராணிகளையும் நலிந்து, தேவஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் ராஜாக்களுடைய கன்னிகைகளையும் பற்பலரைப் பலாத்காரமாய் அபஹரித்துக்கொண்டு போய்த் தான் மணம் புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து, வருணனது குடையையும் மந்தரகிரி சிகரமான ரத்ந பர்வதத்தையும், தேவமாதாவான அதிதி தேவியின் குண்டலங்களையுங் கவர்ந்து போனதுமன்றி, இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக்கொண்டு போகச் சமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரனது வேண்டுகோளால், கண்ணபிரான் கருடனை வரவழைத்து, பூமிதேவியின் அம்சமான ஸத்யபாமையுடனே தான் கருடன் மேலேறி அந்நகரத்தை யடைந்து சக்ராயுதத்தைப் பிரயோகித்து, அவனது மந்திரியான முரன் முதலிய பல அஸுரர்களையும் இறுதியில் அந்த நரகாஸுரனையும் அறுத்துத்தள்ளி யழித்து, அவன் பல திசைகளிலிருந்து கொண்டுவந்து சிறைப்படுத்தியிருந்த பதினாறாயிரத்தொருநூறு கன்னிகைகளையும் த்வாரகையிற் கொண்டுசேர்த்து மணஞ்செய்து கொண்டாரென்பது நரகனைத் தொலைத்த வரலாறு.

சிவபிரானுக்குத் திருமேனியில் கூறு கொடுத்ததையும் நரகனைத் தொலைத்ததையும் இங்கு எடுத்துக் கூறுவதன் கருத்து. யாதெனில்; இப்பரகால நாயகியை உபேக்ஷித்ததனால் நமக்கு யாதொரு அபகீர்த்தியும் விளைந்திடாது; அஹங்காரியான ருத்ரனுக்கு உடம்பில் இடங்கொடுத்த சீலகுணம் உலகமெங்கும் பரவியிருக்கும்போது இதுவொரு அபகீர்த்தியாகுமோ நமக்கு? என்று நினைக்கிறாயோ; நரகனைத்தொலைத்துக் கவர்ந்த பதினாறு பல்லாயிரம் பெண்ணிறந்த பெருந்தேவிமார் இருக்க இவள் ஒரு பொருளோ என்று நினைக்கிறாயோ? என்பதாம்.

[அல்லியங்கோதை யணிநிறங்கொண்டு வந்து முன்னே நின்று போகாய்] அல்லியங்கோதையென்பது பரகால நாயகியை; இவளுடைய அழகிய மேனிநிறம் விரஹ வேதனையினால் அழிந்துபோனது பற்றி 'அணிநிறங் கொண்டு' எனப்பட்டது. "முன்னே வந்து நின்று போகாய்" என்றது உருவெளிப்பாட்டைச் சொன்னபடி. அதாவது, ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாக உருவம் கண்ணுக்குத் தோற்றுகை. "வ்ருக்ஷேவ்ருக்ஷேச பச்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் = வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம்" என்று மாரீசனுக்கு இராமபிரானுடைய உருவம் எங்கும் தோற்றினதுபோல அன்பர்கட்கும் தோற்றுமென்க. திருவாய்மொழியில் (௫—5) "எங்ஙனேயோ வன்னைமீர்காள்!" என்னுந் திருவாய்மொழியில் இதனைக்காண்க. "எங்ஙனே நீர் முனிவது என்னையினி நம்பியழகு, இங்ஙனே தோன்றுகின்றதென் முன்னே—அங்ஙனுருவெளிப்பாடா வுரைத்த தமிழ்மாறன்" என்ற திருவாய்மொழி நூற்றந்தாதியுங் காண்க.

http://acharya.org

இவளை அலக்ஷியம் செய்கிற நீ உருவெளிப்பாட்டாலே இவளை நோவுபடுத்துவது எதுக்கு? உன்னை மறந்தும் வாழவொட்டாதே இப்படி ஹிம்ஸிப்பாயோ என்றாளாயிற்று.

இவளை நீ உங்கள் தொண்டர்கைத் தண்டென்றவாறே—"வாஞ்சாநய வௌவிநெது! என்று நினைத்தபோது வாங்கிக் காரியங் கொள்ளலாம்படி உரிய அடியார்கையில் ஆயுதத்தோபாதி நினைத்திரா நின்றாய்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. அடியவர்களின் கையிலுள்ள ஆயுதத்தை வாங்குதல் எப்படி அலக்ஷியமோ, அப்படி இவளையும் அலக்ஷியம் செய்கிறாயே! என்றவாறு. .... (௪)

செருவழியாத மன்னர்கள் மாளத் தேர்வலங்கொண்டவர் செல்லும் *
அருவழிவான மதர்படக்கண்ட ஆண்மைகொலோ வறியேனான் *
திருமொழியெங்கள் தேமலர்க்கோதை சீர்மையை நினைந்திலையந்தோ!
பெருவழிநாவற் கனியினுமெளியள் இவளெனப் பேசுகின்றாயே. (௫)

எங்கள்	எங்களுடையவளாய்
திருமொழி	சிறந்த [மதுரமான] பேச்சையுடையவளாய்
	தேனொழுகும் மலர்களணிந்த மயிர் முடியையுடையளான இப் பெண்பிள்ளையினுடைய
சீர்மையை	சிறப்பை
நினைந்திலை	அறிகின்றிலை;
அந்தோ	ஐயோ!;
இவள் பெரு வழி நாவல் கனியினும் எளியள் என பேசுகின்றாய்	பெரிய வழியில் விழுந்து கிடக்கிற நாவற் பழத்தைக்காட்டிலும் இவள் எளியவள் என்று நினைத்திருக்கிறாயே!,

(இது)

செரு	போர்க்களத்திலே
அழியாத	ஒருநாளும் தோற்றறியாத
மன்னர்கள்	அரசர்கள்
மாள	மாண்டுபோகும்படியாக
தேர் வலம் கொண்டு	தேரின் வலிமையையே கொண்டு
அவர் செல்லும்	அவ்வரசர்கள் போகக்கூடிய
அரு வழி வானம்	அருமையான வழியையுடைய வீரஸ்வர்க்கத்தை
அதர்பட கண்ட	பெருவழியாக்கின
ஆண்மை கொலோ	ஆண்பிள்ளைத்தனத்தை நினைத்தோ?
நான் அறியேன்	எனக்குத் தெரியவில்லை.

* * *—பிரானே! பேச்சினிமையாலே உனது நெஞ்சையும் கவரவல்லளாய், தலையில் பூவணிந்திருக்குமழகாலே உன்னைப் பிச்சேற்றவல்லளான இப்பரகாலநாயகியின் சிறப்பைச் சிறிதும் நினைக்கின்றிலையே!, இவளிடத்தில் மிகவும் அலக்ஷியம் பாராட்டுகின்றனையே!, இதற்கு என்ன காரணம்? * பார்த்தன் செல்வனையத் திண்டேர்மேல் முன்னின்று, மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர்குலைய நூற்றுவரும் பட்டழியச் செய்த பெருக்கை நினைத்தோ இவளை இங்ஙனே அலக்ஷியஞ் செய்கிறாய் என்கிறாள்.

http://acharya.org

செருவழியாத மன்னர்கள் = பாரத யுத்தத்திற்கு முன்பு ஒருகாலும் ஓரிடத்திலும் தோல்வி பெற்றறியாத (அதிரதமஹாரதர்களான) பீஷ்மத்ரோணாதிகள். [தேர்வலங்கொண்டு] தான் ஆயுதமெடுப்பதில்லை யென்று பிரதிஜ்ஞை பண்ணி வைத்திருந்தமையாலே தேர்க்காலாலே பிரதிபக்ஷங்களை உழக்கினானாயிற்று. போர்க்களத்தில் மாண்டொழிந்தவர்கள் வீரஸ்வர்க்கம் புகுவதாக சாஸ்த்ரங்களின் கொள்கையாதலால் "அவர் செல்லுமாருவழி வானம்" எனப்பட்டது. பாரத யுத்தத்துக்கு முன்பு நெடுநாளாகவே வீரஸ்வர்க்கத்துக்குப் போவாரில்லாமையாலே புல்லெழுந்து கிடந்த அவ்வழியைப் பெருவழியாம்படி செய்தனன் கண்ணபிரானென்க. அப்படிப்பட்ட ஆண்பிள்ளைத் தனத்தை நினைத்தோ இவனை அபதார்த்தமாக நினைக்கிறாய்?.

பெருவழிநாவற்கனியினும் மெளியளிவள் = பெரியதொரு வழியிலே காவற்பழம் விழுந்துகிடந்தால் அதைக் குனிந்தெடுக்கவுமாய்த் தவிரவுமாயிருக்குமன்றோ; அதுவே எட்டாத நிலத்திலே யிருக்குமாகில் அபேக்ஷை விஞ்சியிருக்கும்; ஸர்வஸாதாரணமான வழியிலே வீழ்ந்து கிடந்ததாகில் ஒரு பொருளாகத் தோற்றாதிறே. அதுபோலவே இவளையும் கருதுகின்றாய் போலும். பேசுகின்றாயே என்றது — கருதுகின்றாயே என்றபடி. (முதற்பாட்டினுரை காண்க.) (ரு)

அரக்கியராகம் புல்லெனவில்லால் அணிமதிளிலங்கையர் கோனை *
செருக்கழித்தமரர் பணியமுன்னின்ற சேவகமோ செய்ததின்று *
முருக்கிதழ்வாய்ச்சி முன்கைவெண் சங்கங்கொண்டு முன்னே நின்று போகாய் *
எருக்கிலைக்காக வெறிமழுவோச்சல் என்செய்வதெந்தை பிரானே. (சு)

எந்தை பிரானே } எம்பெருமானே !

முன் — முன்பொருகால்

அரக்கியர் — ராக்ஷஸ ஸ்த்ரீகளினுடைய

ஆகம் — மார்பு

புல்லென — சூன்யமாம்படியாக,

அணி மதிள் இலங்கையர் கோனை { அழகிய மதிள்களையுடைய இலங்காபுரியிலுள்ளார்க்குத் தலைவனான இராவணனை

வில்லால் — ஒரு வில்லாலே

செருக்கு அழித்து } கொழுப்படக்கி

அமரர் பணிய நின்ற { தேவர்கள் வணங்குமாறு நின்ற

சேவகமோ — பராக்ரமத்தை நினைத்தோ

இன்று செய்தது { இன்று (இவள் திறத்திலே உபேக்ஷை) செய்வது? (என்ன செய்கிறேனென்னை)

முருக்கு இதழ் வாய்ச்சி { முருக்கம்பூப்போன்ற அதரத்தையுடையளான இப்பெண்பிள்ளையினுடைய

முன் கை — முன்கையிலுள்ள

வெண் சங்கம் — அழகிய வளைகளை

கொண்டு — பறித்துக்கொண்டு மன்றி

முன்னே நின்று போகாய் { உருவெளிப்பாட்டாலே எப்போதும் இவள் கண்ணெதிரே தோன்றிப் புறம் போகிறாயில்லை;

எருக்கு இலைக்கு ஆக { எருக்கிலையை உதிர்ப்பதற்காக

எறி மழு ஓச்சல் என் செய்வது { வீசுகோடாலியைக் கொண்டு ஓங்கியடிப்பது ஏதுக்கு?

http://acharya.org

* * *—பிரானே! இவளுடைய ஆதரத்தின் வைலக்ஷண்யத்தைச் சிறிதும் நினைக்கிறாயில்லையே; இவளது உடலை ஈர்க்குப்போல இளைக்கச்செய்து கைவளைகளைக் கழலச் செய்தாயே! உன்னை மறந்தாவது இவள் பிழைக்கலாமென்று பார்த்தால் அதுதனக்கும் இடமறும்படி உருவெளிப்பாட்டாலே நலிகின்றாயே; அபலையான இவளைக் கொலைசெய்வதற்கு நீ இத்தனை ப்ரயாஸங்கொள்ள வேணுமோ? நன்னடையே பழுத்து நெகிழ்ந்து விழக்கடவதான எருக்கிலையை உதிர்ப்பதற்கு மழுப்படைகொண்டு வியாபரிப்பாருண்டோ? இராவணனை ஸம்ஹாரம்பண்ணி, தேவர்களால் வணங்கப்பெற்று நின்ற அந்த வீரச்செயலை இன்று நீ இவள் திறத்திலே காட்டுகின்றாய்போலும் என்கிறாள்.

அரக்கியராகம் புல்லென=ராக்ஷஸ மாதர்களெல்லாரும் தாலியிழக்கும்படி என்றவாறு. 'செருக்கழித்து' என்றதை செருக்கு அழித்து என்றும், செரு கழித்து என்றும் பிரிக்கலாம். (செரு—போர்க்களத்திலே, கழித்து-நிரஸித்து என்றபடி.) அமரர்பணிய முன்னின்ற=ஸ்ரீராமாயண யுத்தகாண்டத்தில் நூற்றிருபதாம் ஸர்க்கத்தில் இவ்விஷயம் விசதமாகக் காணத்தக்கது. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி பரமபோக்யமாக வுள்ளது; அதாவது—"ராவணவதாநந்தரம் பிராட்டி எழுந்தருளிவர, பெருமாள் முகங்கொடாதே யொழிய, தேவஜாதி வந்து 'பவாந்நாராயணோதேவ:' என்றும் 'ஸீதாலக்ஷ்மீர்ப்பவாந் விஷ்ணு:' என்றும் உணர்த்த, முகங்கொடாதே நின்ற அச்சேவகம்போலே யிருந்ததீ! இச் சேவகமும்." என்று. .... (௩)

ஆழியந்திண்டே ரரசர்வந்திறைஞ்ச அலைகடலுலக முன்னாண்ட*
பாழியந்தோளோராயிரம்வீழப் படைமழுப்பற்றிய வலியோ *
மாழைமென்னோக்கி மணிநிறங்கொண்டுவந்து முன்னேநின்று போகாய் *
கோழிவெண்முட்டைக் கென்செய்வதெந்தாய்! குறுங்குடி நெடுங்கடல்வண்ணா!

நெடுங்கடல்வண்ணா எந்தாய்!-;

- முன் — முற்காலத்து,
- திண் — வலிமைபொருந்திய
- ஆழி — உருளையோடு கூடின
- அம் தேர் — அழகிய தேரையுடையரான
- அரசர் — ராஜாக்கள்
- வந்து இறைஞ்ச — வந்து வணங்கும்படியாக
- அலை கடல் உலகம் — அலைகடல் சூழ்ந்த உலகங்களை
- ஆண்ட — ஆட்சிபுரிந்த
- ஓர் ஆயிரம் பாழி அம் தோள் வீழ — (கார்த்தவீரியனுடைய) வலிமிக்க ஓராயிரம் தோள்கள் இற்று விழும்படியாக
- படை மழு பற்றிய வலியோ — கோடாலிப்படையை ஏந்திய மிடுக்கை நினைத்தோ
- மாழை மென் நோக்கி — மானினுடைய அழகிய நோக்குப் போன்ற நோக்கையுடையளான பெண்பிள்ளையினுடைய
- மணி நிறம் கொண்டு — அழகிய மேனி நிறத்தைக் கொள்ளை கொண்டதுமன்றி
- முன்னே வந்து நின்று போகாய் — உருவெளிப்பாட்டாலே இவள் கண்ணெதிரே தோற்றி நின்று புறப்பட்டு போகிறாயில்லை;

கோழி வெண் முட்டைக்கு	(தன்னடையே உடைந்து போகக்கூடியதான) கோழி முட்டையை உடைப்பதற்கு
குறு தடி	சிறிய தடிதானும்
என் செய்வது	எதுக்கு?

* * *—கடல் வண்ணனே! மாதுர்யமான மடநோக்கியான இப் பரகால நாயகியின் மேனி நிறத்தைக் கவர்ந்துகொண்டாய்; இதுசெய்த நீ இவளை அடியோடு முடித்துவிடலாமே; இவளைச் சித்திரவதம் பண்ணவேணுமென்று கருதியோ உரு வெளிப்பாட்டாலே நலிகின்றாய்! கார்த்தவீர்யார்ஜுநனுடைய ஆயிரந் தோள்களையும் (பரசுராமாவதாரத்தில்) கோடாலிப்படையினால் அறுத்துத் தள்ளின வீரத்தை நீ இவள் திறத்திலே காட்டுகின்றாய்போலும்; இவளை மாய்ப்பதற்கு இத்தனை ப்ரயாஸங்கொள்ள வேணுமோ! தன்னடையே உடைந்துபோகக் கூடியதான கோழிமுட்டையைத் தகர்ப்பதற்குச் சிறியதடி தானும் வேணுமோ! எதுக்கு இவ்வளவு வீண் ப்ரயாஸம் கொள்ளுகிறாய் என்கிறாள்.

கார்த்தவீரியார்ஜுநனுடைய பெருமையைக் கூறுவது முதலடி; அரசர்களனைவராலும் வணங்கப்பட்டுக் கடல் சூழ்ந்த வுலகம் முழுவதையும் ஆண்டு வந்தவனும் அவன். .... (௭)

பொருந்தலனாகம் புள்ளுவந்தேற வள்ளுகிராற் பிளந்தன்று *
பெருந்தகைக்கிரங்கி வாலியைமுனிந்த பெருமைகொலோ? செய்ததின்று *
பெருந்தடங்கண்ணி சுரும்புறுகோதை பெருமையைநினைந்திலை பேசில் *
கருங்கடல்வண்ணா! கவுட்கொண்டநீராம் இவளெனக்கருதுகின்றாயே.

அன்று	முன்பொருகால்
பொருந்தலன்	பகைவனான இரணியனுடைய
ஆகம்	சரீரத்திலே
புள்	(கழுகு பருந்து முதலிய) பறவைகள்
உவந்து ஏற	மகிழ்ந்து ஏறியுண்ணும்படியாக
வள் உகிரால்	கூர்மையான நகங்களாலே
பிளந்து	(அவ்வுடலைப்) பங்கஞ் செய்து
பெருந்தகைக்கு	பெருந்தன்மை வாய்ந்தவனான ஸுக்ரீவனுக்கு
இரங்கி	அருள் கூர்ந்து
வாலியை முனிந்த	வாலியைச் சீறி முடித்தோமென்கிற
பெருமை கொலோ	பெருமையை நினைத்தோ

இன்று செய்தது	இப்போது இவள் திறத்திலே உபேக்ஷை) செய்வது?
	கருங் கடல் வண்ணா!—;
பெரு தடம் கண்ணி	மிகப் பரந்த கண்களையுடையளாய்
சுரும்பு உறு கோதை	(மதுபான விருப்பத்தினால்) வண்டுகள் மாறாத கூந்தலையுடையளான இப் பெண் பிள்ளையினுடைய
பெருமையை	வைலக்ஷண்யத்தை
நினைந்திலை	ஆராய்கின்றிலை;
பேசில்	(இவள் திறத்தில் நீ கொண்டிருக்குமெண்ணத்தைப்) பேசப் புகுந்தால்
இவள் கவுள் கொண்ட நீர் ஆம் என கருதுகின்றாய்	வாயினுட் கொள்ளப்பட்ட நீர்போலே இவளை நினைத்திருக்கின்றாயத்தனை.

* * *—கடல்வண்ணனே! இப்பாகால நாயகியின் வைலக்ஷண்யத்தை நீ அறிந்தும் நினைக்கின்றிலை; இவள் எப்படிப்பட்டவள் தெரியுமோ? [பெருந்தடங்கண்ணி] "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய்" என்னும்படியான விஸ்தாரவடிவுகொண்டு இவளை நீ அநுபவிக்கப் புக்காலும் உன்னுடைய அந்தத் திருமேனிப் பரப்பை யெல்லாம் இவள் தன் கடைக்கண் நோக்கத்தின் ஒரு மூலையிலே அடங்காதபடுத்திக் கொள்ள வல்லள்காண் என்கை. "[illegible] [illegible] [illegible] [illegible]." என்ற ஸ்ரீ குணரத்நகோச ஸ்ரீஸூக்தியை நினைப்பது. இப்படிப் பட்டவளையோ நீ உபேக்ஷிப்பது? இரணியனை வென்றதனால் கீர்த்தொழிக்க நம் முடைய பெருமைக்கும் வாலியை முடித்த நம்முடைய மிடுக்குக்கும் இவள் ஈடோ? என்று நினைக்கிறாய் போலும். ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள் செய்வதற்காக இரணியனை முடித்தாயென்றும், ஸுக்ரீவனுக்கு அருள் செய்வதற்காக வாலியை முடித்தாயென்றும் கேள்விப்படுகிறோம்; இதனால் ஆச்ரிதவாத்ஸல்ய முடையவன் நீ என்று தெரிகிறது. அக்குணம் இவள் திறத்திலே இங்ஙனேயோ பலித்தது? [கவுள் கொண்ட நீராமிவளெனக் கருதுகின்றாயே] கபோலமென்னும் வடசொல் கவுள் எனச் சிதைந்தது; வாய்க்குள் கொள்ளப்பட்ட நீர் உள்ளே இழிச்சுகைக்கும் வெளியில் கொப்பளிக்கைக்கும் உரியதாயிருக்குமாபோலே 'இவளைக் கைப்பற்றினாலும் பற்றுவோம், விட்டாலும் விட்டிடுவோம்' என்று நினைத்திருக்கிறாயேயன்றி, * பெருந்தடங்கண்ணி கரும்புது கோதையாகிய இவளையோ நாம் உபேக்ஷிப்பது என்று திருவுள்ளம்பற்றுகிறாயில்லையே! என்கிறாள்.

பொருந்தலன்—மனப்பொருத்தமற்றவன்; பகைவன் என்றபடி; பிரகரணபலத்தினால் இரணியனைக் குறித்தது. புள் உவந்தேற=ப்ரேத சரீரத்தைக் கழுகு முதலிய பறவைகள் உகந்து உண்ணும். (பிணமாம்படியாக என்றவாறு.)

பெருந்தகை=கம்பீரஸ்வபாவமுள்ளவனென்று ஸுக்ரீவனைச்சொல்லுகிறது இங்கு. .... (அ)

நீரழல்வானாய் நெடுநிலங்காலாய் நின்றநின்னீர்மையை நினைந்தோ ?*
சீர்கெழுகோதை யென்னலதிலளென் றன்னதோர் தேற்றன்மைதானோ ?*
பார்கெழுபவ்வத்தாரமுதனைய பாவையைப் பாவஞ்செய்தேனுக்கு *
ஆரழலோம்புமந்தணன் தோட்டமாக நின்மனத்துவைத்தாயே. (கூ)

பாவம் செய்தேனுக்கு } பாவியான என்னுடைய

பார் கெழு } பூமியைச் சூழ்ந்திருக்கிற
பௌவத்து } கடலிலுண்டான
ஆர் அமுது } அருமையான அம்ருதம்போன்ற
அனைய பாவையை } கட்டழகியை

http://acharya.org

ஆர் அழல் ஓம்பும் அந்தணன் தோட்டம் ஆக நின் மனத்து வைத்தாய்	அக்நிஹோத்ரியான அந்தணனுடைய தோட்டமாகத் திருவுள்ளம் பற்றியிருக்கின்றாய்;

(இது)

நிலம்நீர் அழல் வான் நெடு நிலம்கால் ஆய் நின்ற நின் நீர்மையை நினைந்தோ	பஞ்சபூதங்களும் நாமேயாயிருக்கிறோ மென்கிற பெருமையை நினைத்தோ?

(அன்றி)

சீர் கெழு கோதை	சிறந்த மயிர்முடியை யுடையளான இவள்
என் அலது இலள் என்று	என்னைத் தவிர்த்து வேறொருகதியை யுடையவளல்லள் என்றுகண்டான
அன்னது ஓர் தேற்றன்மை தானோ	அப்படிப்பட்ட தைர்யத்தினாலோ?

* * *—பிரானே! இப்பரகாலநாயகியை [ஆரழலோம்புமந்தணன் தோட்டமாக நின்மனத்து வைத்தாயே.] இதற்குச் சிலர் கருத்துக் கூறுவதாவது—நித்தியம் தீ வளர்த்து ஹோமம் செய்கிற அந்தணனானவன் தன்னுடைய தோட்டத்திலுள்ள மரங்களையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாக வெட்டி வெட்டி நெருப்புக்கு இரையாக்கி அழித்துவிடுவதுபோல இவளை நீ சிறிது சிறிதாக அழித்துவிடப் பார்க்கிறாயே! என்றும்; இது சுவையற்ற கருத்து; "அக்நி பரிசர்யை பண்ணவே காலம் போந்திருக்கிற ப்ராஹ்மணன் தோட்டமாக நினைத்தாயே" என்ற பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் காட்டப்பட்ட கருத்தே சுவையுடையதாம். அல்லும் பகலும் அயர்விலன்றி உழைக்கக்கூடியவனுடைய தோட்டம் செழிப்புற்றோங்கிவளருமேயல்லது அக்நிஹோத்ரம் பண்ணிப் பொழுது போக்குமவனுடைய தோட்டம் செழித்து வளரமாட்டாது; கவனிப்புக்குறைவினால் பாழாய்ப்போய்விடும். ஆகவே, அக்நிஹோத்ரியானவனுக்குத் தோட்டத்திலே எப்படி அலக்ஷ்யதாபுத்தி இருக்குமோ அப்படி உனக்கும் இவளிடத்திலே அலக்ஷியம் உண்டாய்விட்டதே! என்பதாகவே கருத்தாகும்.

இப்படி நீ இவளை அலக்ஷியம் செய்வது [நீரழல்வானாய் நெடுநிலங்காலாய் நின்ற நின்னீர்மையை நினைந்தோ?] பஞ்சபூதங்களும் நாமிட்ட வழக்காக இருக்கும்படியான பெருமைவாய்ந்த நமக்கு இப்பெண்பிள்ளை ஒரு சரக்கோ? என்று கருதுகின்றாயோ? அன்றி இவளுக்கு நம்மைத் தவிர வேறு புகலாவார் இல்லாமையாலே நம் கையையே எதிர்பார்த்துக் கதறித்துடிக்கட்டும் என்று நினைவோ? என்கிறாள். .... (௯)

வேட்டத்தைக்கருதா தடியிணைவணங்கி மெய்ம்மைநின் றெம்பெருமானை *
வாட்டிறற்றானை மங்கையர்தலைவன் மானவேற்கலியன் வாயொலிகள் *
தோட்டலர் பைந்தார்சுடர்முடியானைப் பழமொழியாற்பணிந்துரைத்த *
பாட்டிவைபாடப் பத்திமைபெருகிச் சித்தமுந் திருவொடு மிகுமே. (௧௦)

http://acharya.org

வேட்டத்தை கருதாது	மேன்மேலே பெருகி வருகிற காமனைகளைக் கொள்ளாமல்
அடி இணை வணங்கி	தன் திருவடியிணைகளையே (பரமப்ரயோஜனமாகக் கொண்டு) வணங்கியிருக்க
மெய்ம்மை நின்ற	(அப்படிப்பட்ட பரமை காந்திகளுக்கு) உண்மையாகத் தன்னைக்காட்டிக் கொடுக்குமவனும்
தோடு அலர் பைந் தார் சுடர் முடியானை	இதழ்களானவை விரிந்து விகஸிக்கப்பெற்ற பசுமைதங்கிய (திருத்துழாய்) மாலையை ஒளிமிக்க திருமுடியிலே அணிந்துள்ளவனுமான
எம்பெருமானை	எம்பெருமானை நோக்கி,
வாள் திறல் தானை	வாள்வலி கொண்ட சேனையையுடையவரும்
மங்கையர் தலைவன்	திருமங்கைநாட்டிலுள்ளார்க்குத் தலைவரும்
மானம் வேல்	பெருமைதங்கிய வேற்படையையுடையவருமான
கலியன்	திருமங்கையாழ்வாருடைய
வாய் ஒலிகள்	ஸ்ரீஸூக்தியாய்
பழமொழியால் பணிந்து உரைத்த	பழமொழிகளைக் கொண்டு வியப்புடன் அருளிச் செய்தவையான
பாட்டு இவை பாட	இப்பாசுரங்களைப் பாடவே
சித்தம்	(பாடுமவர்களது) நெஞ்சானது
பத்திமை பெருகி	பரமபக்தி தலையெடுக்கப் பெற்று
திருவோங்கும்	(எம்பெருமானது திருவடிகளில் நித்ய கைங்கரிய விருப்பமாகிற) செல்வமும் விஞ்சிவளரப்பெறும்.

* * * — இத்திருமொழியை அதிகரிப்பவர்கள் பரமபக்தி தலையெடுக்கப் பெற்று நித்யகைங்கர்ய ஸாம்ராஜ்ய லக்ஷ்மியையும் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

வேட்டமாவது ஆசைப்பெருக்கம். இஹலோகத்து ஐச்வரியம் ஸ்வர்க்க லோகத்து ஐச்வரியம் கைவல்ய மோக்ஷம் முதலானவற்றை விரும்பாமல் ஸ்வயம் ப்ரயோஜனமாகத் திருவடி பணியுமவர்கள் பக்கலிலே உண்மையாகக் கடாக்ஷித்தருள்பவன் எம்பெருமான் என்கிறது முதலடி. வணங்கி—எச்சத்திரிபு; வணங்க என்றபடி. நின்ற + எம்பெருமான், நின்றெம்பெருமான்; தொகுத்தல் விகாரம். மெய்ம்மைநிற்றலாவது—விரைவில் அழியக்கூடியவைகளும் அற்பங்களுமான பலன்களைக்கொடுத்துவிடாதே சாச்வதமாய்ச் சிறந்ததான பரம புருஷார்த்தத்தை அளிப்பவனாக அமைதல்.

இத்திருமொழியில் பாசுரந்தோறும் ஒவ்வொரு பழமொழியையிட்டு அருளிச்செய்திருக்கையாலே பழமொழியால் பணிந்துரைத்த பாட்டிவை எனப்பட்டது.

திருவோங்கும்—கைங்கரிய விருப்பமே திருவெனப்படும். இலங்கைச் செல்வமனைத்தையும் விட்டொழிட்டுப் புகலற்று வானத்திலே வந்துநின்ற விபீஷணனும்

http://acharya.org

வானை "லக்ஷ்மிஸம்பந்நஃ ஸ்ரீமாந் = அந்தரிக்ஷகதஃ ஸ்ரீமாந்" என்றார் வால்மீகி முனிவர்; அப்போது அவ்விபீஷணனிடத்து இருந்த ஸ்ரீயாவது ஸ்ரீராமபாரணை விந்த கைங்கர்யோத்ஸாஹலக்ஷ்மியேயன்றோ. அப்போதைச் செல்வமனைத்தையும் உபேக்ஷித்து இராமபிரான் பின்னே காட்டுக்குப்புறப்பட்ட இளையபெருமாள் "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ = லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ" எனப்பட்டார்; அப்போது லக்ஷ்மணனுக்கிருந்த லக்ஷ்மியாவது ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டு நாமென்கிற கைங்கரியக் காதற்செல்வமேயன்றோ. முதலையின் வாயிலே அகப்பட்டுத் துடியாநின்ற ஸ்ரீகஜேந்திராழ்வான் "ஸ து நாகவரஃ ஸ்ரீமாந்—ஸ து நாகவரஃ ஸ்ரீமாந்" எனப்பட்டான்; அப்போது கஜேந்திராழ்வானுக்கிருந்த ஸ்ரீயாவது, கையில் பறித்த தாமரைப்பூக்களை எம்பெருமான் திருவடிகளிலே ஸமர்ப்பித்து அடிமை செய்யப் பெறவேணுமென்றுகொண்ட காதலேயன்றோ. இப்படிப்பட்ட கைங்கர்யஸ்ரீ ஸம்ருத்தி இத்திருமொழி கற்பார்பெறும் பேறாக இதில் சொல்லப்பட்டதாயிற்று.

அடிவரவு:—புள் மன் நில் ஆர் மங்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை திருத்தாய்.

ஒன்பதாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்து—பத்தாந்திருமொழி,

திருத்தாய் செம்போத்தே.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழி பரகாலநாயகியின் திருத்தாயார் பாசுரமாகச்சென்றது; இத்திருமொழி பரகாலநாயகியின் பாசுரமாகச் செல்லுகிறது. செம்போத்து, காக்கை, குயில், கிளி முதலிய பறவைகள் தங்கள் வழக்கத்தின்படி ஒலிசெய்துகொண்டிருக்கையில் அவற்றையழைத்து 'எம்பெருமான் இங்கேவந்து சேரும்படியாகக்கூவவேணும்' என்று வேண்டிக்கொள்ளுகிற பாசுரமாயிருக்கிறது இத்திருமொழி. .... *

திருத்தாய் செம்போத்தே!
திருமாமகள்தன் கணவன் *
மருத்தார்தொல்புகழ் மாதவனைவர *
திருத்தாய் செம்போத்தே! (க)

செம் போத்தே	ஓ செம்போத்துப் பட்சியே!
திரு மா மகள் தன் கணவன்	பெரியபிராட்டியார்க்குக் கொழுநனாய்
மரு தார்	மணம்மிக்க மாலையை யணிந்துள்ளவனாய்
தொல் புகழ்	நித்யஸித்தமான கீர்த்தியை யுடையவனான
மாதவனை	எம்பெருமானை
வர திருந்தாய்	இங்கேவருமாறு நீதிருத்த வேணும்;

செம்போத்தே! திருத்தாய்—.

* * *—செம்போத்து என்னும் பறவை வலமானால் அபீஷ்டமான காரியம் கடிதஸித்திக்குமென்பது சகுந சாஸ்திரிகளின் கொள்கையாதலால் அதைத்தழுவி பராங்குசநாயகி செம்போத்தை நோக்கி 'எம்பெருமான் இங்கே வந்து சேருகையாகிற என்னுடைய உத்தேச்யம் கை புகும்படி நீ வலமாகவேணும்' என்று வேண்டுகிறாள். 'திருத்தாய்' என்ற வினைமுற்றின் கருத்து இதுவே.

அது, தன்னடையே வலமானால் நல்ல சகுன மெனப்படுமேயன்றி அதனை நோக்கி நீ வலமாகவேணுமென்பது தகுதியோ? பூர்ண கும்பத்துடனே ஸுமங்கலி எதிர்வரப் புறப்படுகை நல்ல சகுனமென்றால் இது தைவாதீனமாக நேர்ந்தால் சகுனமாகுமேயல்லது நாமாகவே ஒரு ஸுமங்கலியைப் பூர்ணகும்பத்துடனே வரச்சொல்லிவிட்டுப் புறப்படுதல் தகுதியன்றே: இப்பராங்குசநாயகி "திருத்தாய் செம்போத்தே!" என்றும் "கரையாய் காக்கைப்பிள்ளாய்!" என்றும் "கொட்டாய் பல்லிக்குட்டி!" என்றும் சகுனங்களை ஸ்வப்ரயத்நத்தாலே எதுக்காக உண்டாக்கப் பார்க்கிறாள்? என்று சங்கை பிறக்கக்கூடும். கேண்மின்: செம்போத்து வலம் வருதல், காக்கை கூவுதல், பல்லி கொட்டுதல் முதலியவை இஷ்டஸித்திக்கு ஸூசகங்கள்மாத்திரமேயன்றி இவைதாமே இஷ்டங்களைப் பெறுவிப்பனவல்ல என்பது உண்மையேயாயினும், வ்யாமோஹாதிசயத்தினால் அதனை மறந்து, இவைதாமே எம்பெருமானை இங்குக்கொண்டுவந்து சேர்க்கும்படியான சக்திவாய்ந்தவை என்று ப்ரமித்து இங்ஙனே அருளிச்செய்வதாகக்கொள்க. * மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்க்கும் ப்ரமமுண்டாகலாமோவென்னில்; இந்த ப்ரமம் கர்மநிபந்தனமானதன்று; ஒப்புயர்வற்ற பகவத்ப்ராவண்யாதிசயத்தினால் உண்டாவதாதலால் உத்தேச்யமாகவேயிருக்கும். "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவை யெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீவசநபூஷண ஸூக்தியும் ஸ்மரிக்கத்தக்கது.

[திருமாமகள்தன்கணவன்.] செம்போத்தே! எம்பெருமானை இங்குவரத் திருத்துதல் உனக்கு அருமையன்றுகாண்; புருஷகாரம் செய்யவல்ல பிராட்டி அருகேயுண்டுகாண்; நீ கூசாதே யென்று காரியம் பார்க்கலாம் என்றவாறு. [மருத்தார் தொல்புகழ்] ஆச்ரிதரக்ஷணத்துக்கென்றே தனிமாலையிட்டுக்கொண்டு அப்படியே ஆச்ரிதர்களையும் ரக்ஷித்துப் புகழ்படைத்திருப்பவன்காண் என்கிறது. [மாதவனை.] கீழே 'திருமாமகள்தன்கணவன்' என்று சொல்லியிருக்கச்செய்தேயும் மீண்டும் மாதவனென்றது திருநாமப்ரீதியால்.

இத்திருமொழியில் பாசுரந்தோறும் முதலடியும் ஈற்றடியும் ஒன்றேயாயிருக்கும்; ஆதராதிசயத்தினால் இரட்டித்துச் சொல்லுகிறபடி. .... (௪)

கரையாய் காக்கைப்பிள்ளாய்! *
கருமாமுகில்போல் நிறத்தன் *
உரையார்தொல்புகழுத்தமனைவர *
கரையாய் காக்கைப்பிள்ளாய்! (௨)

- காக்கைப் பிள்ளாய் — காக்கைக்குட்டியே!,
- கரு மா முகில் போல் நிறத்தன் — காளமேகநிறத்தனாய்
- உரை ஆர் தொல் புகழ் — சொற்களில் நிரம்பியநித்ய கீர்த்தியையுடையனான
- உத்தமனை — புருஷோத்தமனை
- வர கரையாய் — வருமாறு கூப்பிடவேணும்;

காக்கைப் பிள்ளாய்! கரையாய் —.

* * *—வீட்டின் முற்றத்திலே காக்கை வந்திருந்துகொண்டு கத்தினால் இஷ்ட ஜநத்தின் வருகை நேருமென்று சகுன சாஸ்திரிகள் சொல்லுவதுண்டு; அதையறிந்து 'கரையாய் காக்கைப்பிள்ளாய்!' என்கிறாள். "காக்கை வாயிலும் கட்டுரைகொள்வர் ~~காரணா கருள~~க்கொடியானே!" (5—1—1.) என்ற பெரியாழ்வார் திருமொழி இங்கு உணரத்தக்கது.

'காக்காய்!' என்னாதே 'காக்கைப்பிள்ளாய்! என்றது கௌரவப்பேச்சு; பகவத்விஷயத்தில் உபகாரஞ்செய்பவர்களை மரியாதையுடனே துதித்துச்சொல்ல வேண்டுதல் மரபு என்பது இதனால் ஸூசிப்பிக்கப்படுமென்ப.

[கருமாமுகில்போல்நிறத்தன்.] எம்பெருமானுடைய திருவுருவத்தை நினைத்துக்கொண்டால் இப்பிரிவு பொறுக்கக்கூடியதாயில்லையே! நினைத்தமாத்திரத்திலே தாபமெல்லாம் தீரும்படியான வடிவுடைத்தவனன்றோ அப்பெருமான். உன்னுடைய உருவம்போலே வெறுங்கறுப்பேயென்று நினைத்திருக்கிறாயோ? கண்டார் கண்களும் கருநெஞ்சும் குளிரும்படியான வடிவுதான் அவனது. [உரையார் தொல்புகழ்.] ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் முதலிய நூல்களிலே நிரம்பிய திருப்புகழ்கள் பலவுமுடையவன்காண். ஆச்ரிதர்களை ஒருகாலும் கைவிடமாட்டாதவன் என்கை.

[உத்தமனை.] அதமாதமன், அதமன், மத்தியமன் உத்தமன் என்று உலகில் பிராணிகள் நால்வகைப்பட்டிருப்பார்கள். பிறரை நலிந்து தன் வயிற்றை வளர்ப்பவன் அதமாதமன்; 'நாம் வாழவேண்டியதே முக்கியம்; பிறரும் வாழ்ந்தால் வாழட்டும்' என்றிருப்பவன் அதமன்; பிறரும் வாழ்ந்து நாமும் வாழவேணுமென்றிருப்பவன் மத்யமன்; தான் கெட்டும் பிறரை வாழ்விக்குமவன் உத்தமன். (தானுங்கெட்டுப் பிறரையுங்கெடுப்பவனுடைய வகுப்பு அறிவரிது.) எம்பெருமான் 1. "காட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய், நாட்டை நலியு

1. திருவாய்மொழி 7-5-2.

"மரக்கலைமாடிந் தடிந்திட்டு" என்கிறபடியே தான் பல கஷ்டங்கள்பட்டாகிலும் அடியாரை வாழ்விக்குமவனாதலால் உத்தமனானவன். காக்கை கத்தினமாத்திரத்திலே எம்பெருமான் பதறி ஓடிவந்திடுவனென்ற கருத்தினால் "உத்தமனைவரக் கரையாய் காக்கைப்பிள்ளாய்!" என்கிறாள். கரைதல்—ஒலிசெய்தல். (உ)

கூவாய் பூங்குயிலே!*
குளிர்மாரிதடுத் துகந்த *
மாவாய்கீண்ட மணிவண்ணனைவர *
கூவாய் பூங்குயிலே!. (௩)

பூ குயிலே	அழகிய குயிலே!	மா வாய் கீண்ட	கேசியென்னுங்குதிரையின் வாயைக்கீண்டவனும்
குளிர் மாரி	(இந்திரனால் பெய்விக்கப்பட்ட) குளிர்மழையை	மணி வண்ணனை	நீலமணி நிறத்தனுமான எம்பெருமானை
தடுத்து	(கோவர்த்தன மலையைக் கொற்றக்குடையிலால்) தடைசெய்து	வர கூவாய்	வருமாறு கூவவேணும்
உகந்த	திருவுள்ளமுவந்தவனும்		பூங் குயிலே! கூவாய்—.

* * *—ஒரு மரத்தின் கிளையிலே குயில் உட்கார்ந்துகொண்டு கூவிக்கொண்டிருந்தது; அதனை நோக்கிக் 'குளிர்மாரிதடுத்துகந்த மாவாய்கீண்ட மணிவண்ணனை வரக்கூவாய்' என்கிறாள். நாச்சியார் திருமொழியில் * மன்னுபெரும்புகழ் மாதவன் என்னும் திருமொழி இங்கு நினைக்கத் தக்கது. குயில் கூவினால் எம்பெருமான் கடுகவந்திடுவனென்று நினைவு போலும். குயில் கூவினபின்பும் எம்பெருமான் வாராதொழியில் வருத்த மிகுதியினால் 1. "பாடுங் குயில்காள்! ஈதென்ன பாடல்? நல் வேங்கட நாடர் நமக்கொருவாழ்வு தந்தால் வந்து பாடுமின், ஆடும் கருளக்கொடியுடையார் வந்தருள் செய்து, கூடுவராயிடில் கூவி நும்பாட்டுக்கள் கேட்டுமே" என்று சீறிச் சொல்லுவதுமுண்டு; இப்போது பரகாலநாயகி குயிலை இதுவே முதல் நடையாக வேண்டுகிறாளாதலால், குயில் கூவினால் எம்பெருமான் வருகை நிச்சயமென்றிருக்கிறாள்.

[குளிர்மாரிதடுத்துகந்த.] குயிலே! பரஸ்மாத் பரனான எம்பெருமானை நாம் கூவினால் அவன் எழுந்தருள்வானோ என்று நினையாதேகொள்; திருக்குணம் அறியாயோ? பசுக்களும் கன்றுகளும் இடையரும் பெருமழையிலே தொலையப்புக, கைக்கெட்டினதொருமலையை யெடுத்துக் குடையாகப்பிடித்து அவற்றை ரக்ஷித்து 'இவை நோவுபடா தொழியப் பெற்றோமே!' என்று திருவுள்ளமுவந்தவன்காண். ஆச்ரிதரக்ஷணத்திலே அத்தனை கருத்துடையானைக் கூவவோ நீ இருப்பது.

1. நாச்சியார் திருமொழி 10—5.

http://acharya.org

"மாவாய் பிளந்த" என்பதற்குப் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் "பகாஸுரனுடைய வாயைக்கிழித்த" என்று பொருள்காண்கிறது. இஃது அச்சுப்பிழையாயிருக்கலாமோ வென்று ஸந்தேகிக்கவுரியது; அருளிச் செயலிற் பலபலவிடங்களில் "மாவாய் பிளந்த" என்றும் "மாவாய்பிளந்த" என்றும் வருவதுண்டு; இங்ஙனே வருமிடங்களிலெல்லாம் [குதிரைவடிவுகொண்டு நலியவந்த கேசியென்னுமஸுரனுடைய வாயைக் கிழித்த] என்றே பொருளுரைக்கப் பட்டுள்ளது. மா—குதிரை. .... (

கோட்டாய் பல்லிக்குட்டி!
குடமாடி யுலகளந்த*
மட்டார்பூங்குழல் மாதவனைவர
கோட்டாய் பல்லிக்குட்டி!

பல்லிக் குட்டி	ஓ பல்லிக்குட்டீ!
குடம் ஆடி	குடக்கூத்தாடினவனும்
உலகு அளந்த	(திரிவிக்கிரமனுமாகி) உலகங்களை அளந்து கொண்டவனும்
மட்டு ஆர் பூ குழல்	தேன் பொருந்திய பூக்களணிந்த திருக்குழற்கற்றையை யுடையவனும்

மாதவனை	திருமகள் கொழுநனான எம்பெருமானை
வர	இங்கேவருமாறு
கொட்டாய்	ஒலிசெய்;

பல்லிக்குட்டி! கொட்டாய்—.

* * *—உலகவழக்கில் பல்லிசொல்லுக்குப் பலன் சொல்வதன்றி; "பல்லியின் சொல்லும் சொல்லாக் கொள்வதோவுண்டுபண்டே" என்ற திருவிருத்தமுங் காண்க. பல்லிக்குட்டி தன்னுடையே ஒலிசெய்யுமதைக் கொண்டு இஷ்டஸித்தியை ஸூசிக்க வேண்டியிருக்க, இவள் தாயாகில் 'கொட்டாய் பல்லிக் குட்டீ!' என்றது வியாமோஹத்தினாலென்க.

[குட மாடி] பெண்களை யெல்லாம் வசப்படுத்திக்கொள்ளவேண்டிக் குடக்கூத்தாடினவன் எனக்காக வாராமற் போகான்; அவன் வரும்படி நீ ஒலி செய்யாமையே குறை; அக்குறைதீர ஒலி செய்திடாய் என்கிறாள். [உலகளந்த.] தானாகவே எல்லார்தலையிலும் திருவடியை வைத்து ஸத்தை பெறுவிக்குமவன் நம்மை உபேக்ஷிக்கமாட்டான் என்று ஸூசிப்பிக்கிறபடி. [மட்டார் பூங்குழல்.] தேன்மாறாத பூமலரையுடைத்தான திருக்குழலையுடையவன் என்று அவனுடைய போக்யதையைச் சொல்லுகிறபடி.

'மாதவனை' என்பதில் ஏகதேசமான 'மா' என்பதற்குப் பெரிய பிராட்டியார் பொருளாதலால் * மட்டார் பூங்குழல் என்ற விசேஷணத்தை அப்பிராட்டிக்கு ஆக்கியுரைத்தலுமாம். ... . (௪)

http://acharya.org

சொல்லாய் பைங்கிளியே!
சுடராழி வலனுயர்த்த *
மல்லார்தோள்வட வேங்கடவனைவர *
சொல்லாய் பைங்கிளியே! (௫)

பைங்கிளியே — பசுமைதங்கிய கிளியே!
சுடர் ஆழி — ஒளிமிக்க திருவாழிப் படையை
வலன் — வலத்திருக்கையிலே
உயர்த்த — உயரத் தாங்கியிருக்கின்ற [illegible]
மல் ஆர் தோள் — மிடுக்குடைய திருத்தோள்களையுடையவனும்
வட வேங்கடவனை — வடதிருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமானை
வர சொல்லாய் — இங்குவரச் சொல்லவேணும்;
பைங்கிளியே! சொல்லாய்—.

* * *—பைங்கிளியை நோக்கிக் கூறுகின்றாள்—கிளியே! நீ ஏதேனுஞ் சில சொற்களைச் சொல்லிக்கொண்டிருப்பதனால் என்ன பயனுண்டு? எம்பெருமானை இங்கு வரச்சொல்லு என்கிறாள். ப்ராப்திப்ரதிபந்தகங்கள் பல கிடக்கும்போது எளிதாக அப்பெருமான் இங்கு வந்திடுவானோ என்று அக்கிளி நினைக்க, அப்படி நினைக்கலாமோ? விரோதிகளை இருதுண்டமாக்குதற்குப் பாங்கான திருவாழியாழ்வானை வலத்திருக்கையில் ஏந்தியுள்ளான் காண்; அவ்வாயுதந் தானும் மிகையாம்படி மிடுக்கில் குறைபற்ற திருத்தோள்களையுடையவன் காண்; என்னை அணைவதற்கென்றே பயணமெடுத்துவிட்டுத் திருவேங்கட மலையிலே நிற்கிறான் காண்; அன்னவனை இங்கு வரச்சொல்லாய் என்கிறாள். .... (௫)

கோழி கூவென்னுமால் *
தோழி! நானென்செய்கேன்? *
ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று *
கோழி கூவென்னுமால். (௬)

தோழி — வாராய் தோழீ!
கோழி கூ என்னும் — கோழியானது கூவென்று கத்துகிறது;
ஆழி வண்ணர் வரும் பொழுது ஆயிற்று — கடல்வண்ணனான எம்பெருமான் இங்குவந்து சேருகிறவேளையாயிற்று;
ஆல் — ஸந்தோஷம்;
(மறுபடியும்)
கோழி கூ என்னும் — கோழியானது கூவென்று கூப்பிடப்போகிறதே! (எம்பெருமான் பிரிந்து போய்விடப் போகிறானே)
நான் என் செய்கேன் — நான் என்னபண்ணுவேன்!;
ஆல் — கஷ்டம்!.

* * *—'கோழி கூவென்னுமால், ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று; கோழி கூவென்னுமால்! தோழி நான் என் செய்கேன்' என்று அந்வயித்துக் கொள்க. கண்ணபிரான் முதலில் § சாமக்கோழி கூவினதும் தான் குறித்த

§ சாமக்கோழி—யாமந்தோறுங் கூவுகிற கோழி.

http://acharya.org

பெண்ணுடன் கலவி செய்யச் சென்று, மீண்டும் அக்கோழி கூவினவாறே அவளை விட்டுப் பிரிவது என்று ஒரு நியதியுண்டு. இந்த நியதியையறிந்த பரகாலநாயகி, தன் தோழியை நோக்கி 'கோழி கூவென்னுமால் ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று' என்றாள்; கோழியானது கூவென்று கூவாநின்றபடியால் கடல்வண்ணனை கண்ணபிரான் என்னோடு கலவிசெய்தற்கு வருங்காலமாயிற்று என்று மகிழ்ந்து சொன்னபடி. "பலபலவூழிகளாயிடும் அன்றியோர் நாழிகையைப் பலபல கூறிட்ட கூறாயிடும்..." (திருவிருத்தம்.) என்கிறபடியே விச்லேஷகாலம் அநேக கல்பங்களாகவும் ஸம்ச்லேஷகாலம் அதிஸ்வல்ப காலமாகவும் தோற்றுவது இயல்வாதலால் இவள் க்ருஷ்ணஸம்ச்லேஷம் நிகழ்ந்து முடிவதாகக் கொண்டு வருந்தித் 'தோழி! நான் என் செய்கேன்! கோழி கூவென்னுமால்' என்கிறாள். ஐயோ தோழி! நான் என் செய்வது! மறுபடியும் கோழி கூவென்னப் போகிறதே! கோழி கூவினால் கண்ணன் ஓடிப்போய்விடுவனே! என்றபடி.

இப்பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில்—"க்ருஷ்ணன் கோழியை மடியிலே இட்டுக்கொண்டுவரும் போலே காணும் என்று பட்டர் அருளிச்செய்தாரென்று ப்ரஸித்தமிறே." என்றுள்ள ஸ்ரீஸூக்தி குறிக்கொள்ளத்தக்கது. ஸம்ச்லேஷஸமயத்தை ஸூசிப்பிக்கின்ற கோழியும் விச்லேஷஸமயத்தை ஸூசிப்பிக்கின்ற கோழியும் இப்பாட்டில் ஒருங்கே ப்ரஸ்தாவிக்கப் பட்டமையால் பட்டர் இங்ஙனே ரஸோக்தியாக அருளிச்செய்வரென்க.

ஆல்—மகிழ்ச்சியும் வருத்தமும் தோன்றநின்ற இடைச்சொல். (முதலடியில் மகிழ்ச்சி; ஈற்றடியில் வருத்தம்.) .... (௬)

காமற் கேன்கடவேன்? *
கருமாமுகில் வண்ணற்கல்லால் *
பூமேலைங்கணை கோத்துப்புகுந்தெய்ய *
காமற் கேன்கடவேன்? (௭)

கரு மா முகில் வண்ணற்கு அல்லால்	கறுத்துப் பெருத்தமேகம் போன்ற திருநிறத்தை யுடையரான பெருமானுக்குக் கடமைப் பட்டிருப்பதல்லாமல்
மேல்	அதற்குமேலே
பூ	புஷ்பங்களாகிற
ஐ கணை	பஞ்சபாணங்களை
கோத்து	(கருப்புவில்லிலே) தொடுத்து
புகுந்து	உள்ளேபுகுந்து
எய்ய	ப்ரயோகித்து ஹிம்ஸிக்கும்படியாக
காமற்கு	(என்வயிற்றிற் பிறந்த பிள்ளையான) மன்மதனுக்கு
என் கடவேன்	கடமைப்பட்டவளோ நான்?

காமற்கு என் கடவேன்?—.

* * *—'தாலிகட்டின கணவன் வருத்தப்படுத்துவது ஸஹஜம்; வயிற்றிற் பிறந்தபிள்ளை வருத்தப்படுத்துவதற்கு என்ன ப்ராப்தியுண்டு' என்கிறது இப்பாசுரம்.

ருக்மிணிப் பிராட்டியினிடத்து மன்மதனுடைய அம்சமாக ப்ரத்யும்நன் பிறந்தனனாதலால், மன்மதன் கண்ணபிரானுடைய புத்திரனென்றும் கண்ணன் 'காமன்றன்தாதை' என்றும் வழங்கப்படுவதுண்டு; இப்பரகாலநாயகியும் கண்ணபிரானுடைய தேவியாதலால் இவள் மன்மதனைத் தன் புதல்வனாகப் பாவித்துப் பகர்தல் தகுதியே. இப்பாட்டில் மன்மதனைப் புத்திரனாகப் பாவித்துக் கூறுதல் ஸ்பஷ்டமாக இல்லையாயினும், மேலே(11-3-7) "காமன்றனக்கு முறையல்லேன்.... எனக்குத் தானும் மகன் சொல்லில்" என்றபாட்டில் இது ஸ்பஷ்டமாயிருப்பதால் அக்கருத்தே இங்கும் உள்ளுறையுமென்க. "வயிற்றிற் பிறந்த காமனுக்கு என் கடவேன்" என்பர் பெரியவாச்சான் பிள்ளையும்.

நல்லதோ கெட்டதோ கருமாமுகில் வண்ணனை நமது நாயகனாலே நமக்கு நேருவதாயிருந்தால் ப்ராப்தமென்று ஒருவாறு ஸஹிக்கலாம்; நம் வயிற்றில் பிறந்த ஒரு சிறுபயல் நம்மை அம்பு தொடுத்து நலியும்படியாகவோ நம் கதியாயிற்று! என வருந்துகின்றாள்.

1, "போரமர்காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்கிறபடியே காதலை வளர்த்த கார்முகில் வண்ணர் வாளாவிருக்க இந்தச் சிறுபயல் எதுக்காக அதிகப்ரஸங்கம் பண்ணுகிறானென்கிறாள். [ஐங்கணை] 'பஞ்சபாணன்' என்பது மன்மதனுக்கு வழங்கும் பெயர். "மதனன் பஞ்ச பாணமாவன, முல்லை யசோகு முழுநீலம் சூதப்பூ, அல்லிமுளரியோடைந்தென மொழிப" என்ற திவாகர நிகண்டினால் பஞ்சபாணவகைப் பெயர் உணர்க. ஆசை அதிகரித்துச் செல்லுவதையும், அது கைகூடாமையாலே கஷ்டம் மீதூர்ந்து செல்லுவதையும் காமனுடைய ஹிம்ஸையாகச் சொல்லுவது மரபு. (எ)

இங்கே போதுங்கொலோ?*
இனவேல்நெடுங் கண்களிப்ப *
கொங்கார்சோலைக் குடந்தைக்கிடந்தமால் *
இங்கே போதுங்கொலோ? (அ)

கொங்கு ஆர்	தேன்நிறைந்த
சோலை	சோலைகளையுடைய
குடந்தை	திருக்குடந்தையிலே
கிடந்த	திருக்கண்வளர்ந்தருளாநின்ற
மால்	எம்பெருமான்,
இனம் வேல் நெடு கண் களிப்ப	ஒன்றுக்கொன்று ஒப்பாய் வேல்போன்ற நீண்ட (எனது) கண்களானவை கண்டுகளிக்கும்படியாக
இங்கே	இவ்விடத்தே
போதும் கொலோ	எழுந்தருளக் கூடுமோ?

இங்கே போதும் கொலோ!—.

* * *—ஸ்வாமியானவன் அடியானுள்ளவிடத்தே தானே எழுந்தருளிக் கைக்கொள்ளுதல் முறைமையேயன்றி ஸ்வாமியைத்தேடி அடியான் செல்லுதல் இரண்டு தலைக்கும் அவத்யம் என்பது அபிப்ராயம். அபிஷேகாணத்தில்

1. திருவாய்மொழி 5—3—4.

http://acharya.org

பிராட்டி பொறுக்க வொண்ணாத துன்பங்களை அநுபவித்து வருந்தியிருக்கும் அளவில் திருவடி சென்று 'ஸீதே! என் தோளின் மேல் வீற்றிரும்; ஒரு நொடிப் பொழுதிலே உம்மை இராமபிரான் ஸந்நிதானத்திலே கொண்டு சேர்த்திடுவேன்' என்ன, அதற்குப் பிராட்டி சொல்லுகிற வார்த்தை காண்மின்;—"ஸஶைலவந காநநாம் ஸஸாகரவநாம் ... லங்காம் ... நயேத் யதி காகுத்ஸ்த: தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்." என்றாள். சக்ரவர்த்தி திருமகனார்தாமே எழுந்தருளி இலங்கையைப் பொடிபடுத்தி என்னை மீட்டுக்கொண்டு போவராகில் அதுவன்றோ தகுதி யென்றாள். ஸொத்தைப் பெற்று மகிழவேணுமென்னுமாவல் ஸ்வாமிக்கு இருப்பதே தகுதியாகும்; அந்த முறைமைப்படியே இப்பாட்டில் "கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால் இங்கே போதுங்கொலோ" என்கிறாள். எதுக்காக அவர் இங்கு எழுந்தருள வேணுமென்ன, இனவேல் நெடுங்கண்களிப்ப என்கிறாள். கண்ணாரக்காண்பதற்குமேலே வேறொரு ப்ரயோஜனமில்லை யென்றிருப்பர்கள் முந்துறமுன்னம்; காணப்பெற்ற பின்பு அணைய வேணுமென்றிருப்பார்கள்; அணையவும் பெற்றால் இதற்கு ஒருகாலும் இடையூறுவாராமே இவ்விருப்பு நித்யமாய்ச் செல்ல வேணுமென்றிருப்பார்கள். ["... ..."]

போதும்—போதரும். ... . (அ)

இன்னாரென்றறியேன் *
அன்னேயாழியொடும் *
பொன்னார்சார்ங்க முடையவடிகளை *
இன்னாரென்றறியேன். (கூ)

அன்னே	அம்மே!,	அடிகளை	ஸ்வாமியை
ஆழியொடும்	திருவாழியாழ்வானையும்	இன்னார் என்று அறியேன்	இன்னாரென்று தெரிந்துகொள்ளமாட்டுகின்றிலேன்
பொன் ஆர் சார்ங்கம்	அழகுபொருந்திய சார்ங்கவில்லையும்		
உடைய	(திருக்கையிலே) உடையவரான		

இன்னார் என்று அறியேன்—.

* * *—"கொங்கார்சோலைக் குடந்தைக் கிடந்தமால் இங்கேபோதுங்கொலோ" என்று கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய வருகையைப் பிரார்த்தித்து மநோரதித்த பரகாலநாயகிக்கு உருவெளிப்பாட்டாலே காட்சி தந்தருளினான் எம்பெருமான்; ஆழியும் சார்ங்கமு மேந்திவந்து ஸேவை ஸாதித்தான்; அஸாதாரண லக்ஷணங்களைக் காணநேர்க்கச் செய்தேயும் இன்னாரென்று அறியிடக் கூடாமலிருக்கிறதாயிற்று அத்தலையில் வைலக்ஷண்யம். பெருமையைப்

பார்க்குமிடத்தில் தேவனென்னலாயிருந்தது; எளிமையைப் பார்க்குமிடத்தில் மனிதரிலே ஒருவனென்னலாயிருந்தது; ஆகவே 'இன்னானென்றறியேன்' என்கிறாள்.

அன்னே!—வியப்புக்குறிப்பிடைச் சொல். அடிகள்—ஸ்வாமி. .... (௧)

தொண்டீர்! பாடுமினோ *
சுரும்பார்பொழில் மங்கையர்கோன் *
ஒண்டார் வேற்கலியனொலிமாலைகள் *
தொண்டீர்! பாடுமினே. (௧௦)

தொண்டீர்	பாகவதர்களே!,	கலியன்	ஆழ்வார்
சுரும்பு ஆர் பொழில்	வண்டுகள் நிறைப்பப்படிந்த சோலைகளையுடைய	ஒலி	அருளிச்செய்த
மங்கையர் கோன்	திருமங்கை நாட்டில் உள்ளவர்கட்குத் தலைவரும்	மாலைகள்	இச்சொல்மாலையை
ஒண் தார் வேல்	அழகிய மாலையையும் வேற்படையையுமுடைய வருமான	பாடுமின்	பாடுங்கள்;
			தொண்டீர்! பாடுமின்—.

* * *—உண்டியே உடையே உகந்தோடுமிந்த ஸம்ஸாரிகள் தங்கள் ஜீவனத்துக்கு வேண்டிய பாட்டுக்களைப் பாடிப் போதுபோக்கித் திரிகிறார்கள்; அவர்கள் அப்படியே தொலையட்டும்; அப்படியல்லாமல், பகவத் குணங்களிலே யீடுபட்டுத் தொண்டர் என்று புகழ்பெற்றிருக்குமவர்களே! நீங்கள் உங்கள் ஸ்வரூபத்துக்குத் தகுதியாக இத்திருமொழியைப் பாடித் திரியுங்கோள் என்கிறாராயிற்று. இத்திருமொழிகற்கைக்கு வேறொரு பலன் அருளிச்செய்யாதொழிந்தது, இதனைப் பாடுகைதானே ஸ்வயம் ப்ரயோஜநமென்று காட்டுதற்காக. (௧௦)

அடிவரவு:—இருந்தாய் கரையாய் கூவாய் சொட்டாய் சொல்லாய் கோழி காமற்கு இங்கே இன்னார் தொண்டீர் குன்றமொன்று.

பத்தாந்திருமொழி உரை முற்றிற்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரிய திருமொழி பத்தாம்பத்து
முற்றுப்பெற்றது.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org